3 - 2003 Issued : 12 - 3 - 2003

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT


புதன்கிழமை, மே 8, 2002 – தொகுதி 28 – எண் 2

**Wednesday the 8th May, 2002 – Volume 28 – No. 2**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

**Assembly Secretariat, Fort St. George,**
**Chennai - 600 009**

**[Price Rs. 3.00**

8-5-2002

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள்-விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 283-322 |
| **2. தகவல் கோரல்—** | |
| (அ) செய்யாறு கூட்டுறவு கரும்பு விவசாயிகள் பிரச்சினை | 322 |
| (ஆ) நாகப்பட்டினம் கீச்சாங்குப்பம் மீனவர் கிராம மக்கள் பிரச்சினை | 322 |
| (இ) வாணியம்பாடி காவல் நிலையத்தில் குறவர் சமுதாயத்தினர் | 322 |
| (ஈ) 209 டி.எம்.சி. தண்ணீர் அளித்துவிட்டதாக கர்நாடக முதல்வர், கடிதம் எழுதியதாக வந்த செய்தி | 323,346-347 |
| (உ) சட்டமன்றப் பேரவைக் குழுக்கள் அமைப்பது | 425-426 |
| **3. சிறப்புக் கவன ஈர்ப்பு—** | |
| தமிழகத்தில் அடிக்கடி மின்வெட்டு ஏற்படுதல் | 323-332 |
| திரு. எ.வ. வேலு | 323-325 |
| திரு. சி. ஞானசேகரன் | 325-326 |
| திரு. ஜி.கே. மணி | 326-327 |
| திரு. டி. மணி | 327 |
| திரு. ஜி. பழனிசாமி | 327-328 |
| *திரு. ப. அரசன் | 328-330 |
| திரு. வி. ஜெயராமன் | 330 |
| மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன் | 331-332 |


53-139—1

பக்கங்கள்

**4. கவன ஈர்ப்பு—**

(அ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி, ஸ்ரீபவ ஔஷதீஸ்வரர் சுவாமி கோயில் திருக்குளங்களில் தூர் வாருதல். 333-337

(ஆ) சென்னை, அசோக் நகர், அம்பேத்கர் குடிசைப் பகுதியில் தீ விபத்து 337-346

**5. அறிக்கைகள் அளித்தல்—**

(அ) பொதுக் கணக்குக் குழு 347-348

(ஆ) பொது நிறுவனங்கள் குழு 348

(இ) மனுக்கள் குழு 348

**6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—**

(அ) குற்றவழக்கு விசாரணமுறைத் தொகுப்பு (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 348-351

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் 348-349,351

திரு. துரைமுருகன் 349

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் 349

திரு. ஜி.கே. மணி 349

திரு. ஜே. ஹேமச்சந்திரன் 349-350

*மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா 350

திரு. ஜி. பழனிசாமி 350

திருமதி டி. யசோதா 350

(ஆ) சென்னைப் பெருநகர்ப் பரப்பிட நிலத்தடி நீர் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2002. 351-352

மாண்புமிகு திரு. சி. துரைராஜ் 351,352

*திரு. வி.கே. லட்சுமணன் 351

திரு. ஜி.கே. மணி 351

*திரு. ப. ரங்கநாதன் 352



பக்கங்கள்

**6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)**—தொடர்ச்சி.

(இ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 353

*மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி 353

(ஈ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 354

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி 354

(உ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 355

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி 355

(ஊ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2002 462

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் 462

**7. அறிவிப்புகள்—**

(அ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 (ஆஇ) 352

(ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 (ஆஇ) 353

(இ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 (ஆஇ) 354

(ஈ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண்2) சட்ட முன்வடிவு, 2002 (ஆஇ) 461

225166
நூலகம்




| | பக்கங்கள் |
|---|---|
| **8. மானியக் கோரிக்கைகள் 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்—** தொடர்ச்சி— | |
| (அ) கோரிக்கை எண் 15 - நிதித் துறை | |
| (ஆ) கோரிக்கை எண் 35 - திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை | |
| (இ) கோரிக்கை எண் 1 - மாநில சட்டமன்றம் | |
| (ஈ) கோரிக்கை எண் 30 - தகவல் தொழில்நுட்பவியல் துறை | 356-424 427-461 |
| (உ) கோரிக்கை எண் 48 - ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் | |
| (ஊ) கோரிக்கை எண் 2 - ஆளுநர் மற்றும் அமைச்சரவை | |
| *மாண்புமிகு திரு. சி. பொன்னையன் | |
| | 362,369,377 384,391, |
| திரு. மீ.அ. வைதியலிங்கம் | 397-398 427-438 |
| *திரு. பெ. பழனியப்பன் | 390,398-405 |
| திரு. சோ. பாலகிருஷ்ணன் | 405-410 |
| திரு. ஐ. கணேசன் | 411-414 |
| திருமதி டி. யசோதா | 414-419 |
| மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா | 420-423 |
| **9. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—** | 423-424 |
| (அ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 | |
| *மாண்புமிகு திரு. ப. தனபால் | 463-489 |
| திரு. கு. பிச்சாண்டி | 463, 467, 481-487, 489 |
| | 463-468 |





| | பக்கங்கள் |
|---|---|
| **9 அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)**—தொடர்ச்சி. | |
| (அ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002—தொடர்ச்சி. | |
| திரு. சி. ஞானசேகரன் | |
| திரு. ஜி.கே. மணி | 468-472 |
| *திரு. கே. மகேந்திரன் | 472-474 |
| *திருமதி எஸ். மகேஸ்வரி | 474-476 |
| திரு. ஜி. பழனிசாமி | 476-477 |
| திரு. ப. அரசன் | 477-479 |
| *திரு. துரைமுருகன் | 479-481 |
| (ஆ) தமிழ்நாடு சங்கங்கள் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 | 482,483,487-488 |
| மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம் | 489-497 490,494-495,496 |
| திரு. சி. ஞானசேகரன் | 490 |
| திரு. ஜி.கே. மணி | 492-493 |
| திரு. ஜே. ஹேமச்சந்திரன் | 491-492,495 |
| *திரு. எச்.எம். ராஜு | 492-493 |
| திரு. வை. சிவபுண்ணியம் | 493-494 |
| (இ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 | 497-516 |
| *மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி | 497 |
| *திரு. எ.வ. வேலு | 497-502 |
| திரு. சி. ஞானசேகரன் | 502-505 |
| திரு. ஜி.கே. மணி. | 505-507 |
| திரு. என். நன்மாறன் | 507 |
| திரு. கு. ஜெயக்குமார் | 508-512 |
| திரு. வை. சிவபுண்ணியம் | 511-512 |
| *திரு. ப. அரசன் | 512-514 |

பக்கங்கள்

9. **அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)**—தொடர்ச்சி

(ஈ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 — 517-518

*மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி — 517,518

(உ) தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் கொணரும் பொருட்கள் மீதான நுழைவு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 — 519,520

*மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி — 519,520

(ஊ) தமிழ்நாடு விற்பனை வரி (பூசல்களைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவு, 2002 — 520-522

*மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி — 521,522

(எ) தமிழ்நாடு பிளாஸ்டிக் பொருட்கள் (விற்பதனை, சேமித்து வைப்பதனை, ஏற்றிச் செல்வதனை மற்றும் பயன்படுத்துவதனை தடை செய்தல்) சட்டமுன்வடிவு, 2002 — 522-545

மாண்புமிகு திரு. ப. மோகன் — 523,545

*திரு. ப. ரங்கநாதன் — 523-525

டாக்டர் க. பொன்முடி — 526-528

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் — 528-532

*திரு. எச்.எம். ராஜு — 532-533

செல்வி க. பாலபாரதி — 534-535

*திரு. ஏ.எஸ். கண்ணன் — 535-536

திரு. ப. அரசன் — 536

டாக்டர் ஆர். கோவிந்தசாமி — 536-537

திரு. ஜி. பழனிசாமி — 537-538

*மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா — 538-545

10. **பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்**— 546-549


# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**சித்திரை 25, சித்ரபானு-திருவள்ளுவர் ஆண்டு 2033**

**2002 மே 8, புதன்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"அறனறிந்து ஆன்றமைந்த சொல்லான்எஞ் ஞான்றும்*
*திறனறிந்தான் தேர்ச்சித் துணை"*

அறநெறி உணர்ந்தவராகவும், சொல்லாற்றல் கொண்டவராகவும், செயல்திறன் படைத்தவராகவும் இருப்பவரே ஆலோசனைகள் கூறக்கூடிய துணையாக விளங்க முடியும்.

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 305, திரு. மு. அப்பாவு, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்.

**305—**

### சாலையை அகலப்படுத்துதல்

**•2328—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், காஷ்மீர்-கன்னியாகுமரி என்.எச்.7-இல் இருந்து விஸ்வநாதபுரம் அருகில் பிரிந்து இராமேஸ்வரம் செல்லும் கிழக்குக் கடற்கரைச் சாலையினை (செட்டிக்குளம், கூடங்குளம், உவரி வழியாக) அகலப்படுத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2002 மே 8

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சாலை நம்முடைய தமிழகத்திற்கே மிக முக்கியமான சாலை. திருவனந்தபுரம் - நாகர்கோவில் வழியாக தூத்துக்குடி செல்கின்றவர்கள். நாகர்கோவில் - திருநெல்வேலி 85 கிலோ மீட்டர், திருநெல்வேலி - தூத்துக்குடி 55 கிலோ மீட்டர், ஆக 140 கிலோ மீட்டர் தூரம் இந்த வழியாக தற்போது சென்று கொண்டிருக்கின்றார்கள். ஆனால் என்.கே.கே. சாலை முதல், மதுரை - கன்னியாகுமரி சாலையிலிருந்து ஐந்து கிராமம், விஸ்வநாதபுரம் விலக்கு வழியாக, செட்டிகுளம், கூடங்குளம், உவரி, திருச்செந்தூர் ஆகிய புண்ணியஸ்தலங்கள் வழியாக தூத்துக்குடி சென்றால், மொத்தமே 95 கிலோ மீட்டர் தூரம்தான் இருக்கின்றது. 45 கிலோ மீட்டர் தூரம் அதிகமாக ஒவ்வொரு நாளும் நாகர்கோவில் - திருவனந்தபுரம் பகுதியிலிருந்து செல்கின்றவர்கள் கடந்துகொண்டிருக்கின்றார்கள். ஏற்கெனவே கடந்த கால ஆட்சியில் முன்னாள் நெடுஞ்சாலைத் துறை அமைச்சராக இருந்தவர் கிழக்குக் கடற்கரைச் சாலையில் 2-வது Phase-ஐ கன்னியாகுமரியிலிருந்து ஆரம்பித்து, தூத்துக்குடி வரை செல்லவேண்டும் என்று சொன்னார்கள். அதன் பின்பு, ECR-ல் 2ஆம் Phase ஆரம்பிப்பது கடலூரிலிருந்து தூத்துக்குடி வரை என்று சொல்லி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** கேள்விக்கு வந்து விடுகின்றேன். ECR-ல் இருப்பதாகச் சொல்லி, 2-வது திட்டம் கைவிடப்பட்டு RSP-ல் Road Sector Project-ல் இது சேர்க்கப்பட்டிருக்கின்றது. விரைவிலேயே Road Sector Project மூலம் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்று சொன்னார்கள். ஆனால் எந்தத் திட்டத்திலும் இது சேர்க்கப்படாமல் இருக்கிறது. தற்பொழுது உலகமே உற்று நோக்கியிருக்கின்ற கூடங்குளம் அணு மின் திட்டம் இந்தப் பகுதியிலேதான் ஆரம்பித்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. (மணியடிக்கப்பெற்றது.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்விக்கு வாருங்கள்.

**திரு. மு. அப்பாவு:** ஆகவே சிறப்புமிக்க சாலையாக இருப்பதால், இந்தச் சாலையை உடனடியாக அரசு செய்து தருமா என்று கேட்பதோடு,



2002 மே 8]

எப்பொழுது செய்து முடிப்பீர்கள் என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சாலையானது திருச்செந்தூர் - கன்னியாகுமரி சாலையாகும். இது, கிலோ மீட்டர் 0/0 -- 79/6 நீளம் கொண்ட மாவட்ட முக்கியச் சாலையாகும். இச்சாலையில் 58.50 கிலோமீட்டர் நீளத்திற்கு ஒருவழித் தடமாகவும் 21.10 கிலோமீட்டர் நீளத்திற்கு இருவழித் தடமாகவும் உள்ளது. இச்சாலை முக்கிய வழிபாட்டுத் தலங்களான கன்னியாகுமரி, உவரி, திருச்செந்தூர் ஆகிய நகரங்களை இணைப்பதுடன் மூன்று மாவட்டங்களையும் இணைக்கிறது. மேலும், இச்சாலையில் அமைந்துள்ள கூடங்குளம் கிராமத்தில் அணு மின் நிலையம் செயல்பட உள்ளது. எனவே, இச்சாலையை இருவழித் தடமாக அகலப்படுத்தி மேம்படுத்துவது அவசியமாகும். இதற்குத் தோராயமாக ரூ.915 இலட்சம் தேவைப்படும். தற்போது உலக வங்கி நிதி உதவியுடன் தமிழ்நாடு சாலைத் தொகுப்புத் திட்டத்தின்கீழ் நாகப்பட்டினம் முதல் தூத்துக்குடி வரை (கடற்கரைப் பகுதி) படி நிலை-1 ஆக செயல்படுத்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூ.915 இலட்சம் என்றால் இது மிகக் குறைந்த பணம். ஏற்கெனவே கூடங்குளம் அணு மின் திட்டம் 13 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் ஆரம்பிக்கப்பட இருக்கின்றது. ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவரும் நாங்களும்--தூத்துக்குடியிலிருந்து அவர்களுக்கு கொதிகலன்களெல்லாம் தூத்துக்குடி துறைமுகம் வழியாக வர இருக்கின்றது--இப்பொழுது அந்தச் சாலையை நீங்கள்தான் அதிகமாகப் பயன்படுத்துகிறீர்கள் என்று கூறி, இந்தச் சாலையை முழுமையாகச் செய்வதற்கு நீங்கள் நிதி வழங்கவேண்டுமென்று கேட்டு இருக்கின்றோம். அதற்கு அவர்கள் தருவதாக உறுதியளித்திருக்கின்றார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு Nuclear Power Corporation of India Limited-ன் Project Director-க்கு நீங்கள் இந்த மதிப்பீட்டை அனுப்பி உடனடியாக இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்க வேண்டும் என்று அன்போடு கேட்டு, அவ்வாறு கேட்டு முயற்சி செய்து தருவீர்களா என்று கேட்பதோடு, எங்கள் நெல்லை மாவட்டத்தில்........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதோடு முடியுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அதை அவர்களிடம் கேட்க முடியுமா என்று கேட்கிறார்கள்.

[2002 மே 8

முற்பகல் 10-05

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல், இந்தத் திட்டப் பணிக்கு எவ்வளவு நிதி தேவைப்படுகிறதோ, அந்த நிதியைப் பெற்று, இந்தச் சாலையை அமைப்பதற்கு ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 306, திரு. க. பாரமலை, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்.

**306—**

## அணைக்கட்டு

***6050—திரு. க. பாரமலை:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை வட்டம், கிருதுமால் நதியின் குறுக்கே, கீழராங்கியன்-பூம்பீடாகை சாலையின் அருகில், ஓடாத்தூர் அணைக்கட்டு கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது தொடங்கப்படும்?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஓடாத்தூர் அணைக்கட்டுத் திட்டம் குறித்து தலைமைப் பொறியாளர் (திட்டம்) ஆய்வு செய்து வருகிறார்.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆய்வு பல வருடங்களாக தொடர்ந்து நீடித்துக் கொண்டிருக்கிறது. அதை விரைவுபடுத்திச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே—நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பில்—அத்திக்குளம் என்று ஓர் அணைக்கட்டு 3.47 கோடி ரூபாயில் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது என்று என்று தெரிவித்திருக்கிறார்கள். கிருதுமால் நதியில் 3 கோட்டங்கள், வைபபாறு வடிநிலக் கோட்டம், குண்டாறு வடிநிலக் கோட்டம்,



2002 மே 8]

சிவகங்கை வடிநிலக் கோட்டம் என்று மூன்று பகுதிகள் இருக்கின்றன. இத்திட்டம் கடைசியிலே வைப்பாறு வடிநிலக் கோட்டத்தில்தான் கட்டப்பட்டிருக்கிறது. மற்ற இரண்டு வடிநிலக் கோட்டப் பகுதிகளில் வருகிற கிருதுமால் ஆறு முழுமையாகச் சீரமைக்கப்படவில்லை. பல இடங்களிலே ஆறே இல்லாமல் இருக்கிறது. அந்த இரண்டையும் சீர்த்திருத்தம் செய்தாலொழிய, இவ்வளவு பணம் செலவழித்து கட்டப்பட்டு முடிக்கப்பட்டிருக்கிற அத்திக்குளம் அணை பயன்படுத்தப்படாமல் போய்விடும். ஆகவே, அந்த வேலையைச் செய்யவேண்டுமென்றும் அதற்குத் தகுந்த ஆணையைப் பிறப்பிக்க வேண்டுமென்றும் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, கிருதுமால் நதியிலே, ஓடாத்தூர் அணையைக் கட்டுவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரை தொகுதி, மானாமதுரை வட்டம், கிருதுமால் நதியின் குறுக்கே கீழராங்கியன் — பூம்பீடாகை சாலையின் அருகில் ஓடாத்தூர் அணைக்கட்டு கட்டும் திட்டத்திற்கு 2000-2001 விலை விகிதப்படி ரூ.90.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அது திட்ட உருவாக்கத் தலைமைப் பொறியாளர் மட்டத்தில் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்தினைச் செயலாக்குவதன் மூலம் 1,258.40 ஏக்கர் நிலம் பாசன உறுதி பெறுவதோடு, 607.80 ஏக்கர் தரிசு நிலம் பாசன நிலமாக மாறும் வாய்ப்புள்ளது. இத்திட்டத்தைச் செயலாக்க நில எடுப்பு செய்ய வேண்டிய தேவையில்லை. இத்திட்டத்தின் மூலம் 1,857.64 டன் கூடுதல் உணவு உற்பத்தி கிடைக்கும். மாவட்ட ஆட்சியரின் ஒத்திசைவைப் பெறுவதற்கு நடவடிக்கையும் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒத்திசைவு கிடைத்தவுடன் திட்டத்தைச் செயல்படுத்துவதற்குண்டான ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்த அறிவிப்பிலேயே 2000-2001-லே, ரூ.90.00 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார். 2001-2002 முடிந்துவிட்டது. 2002-2003-ல் நாம் இருந்து கொண்டிருக்கிறோம். இந்த வருடத்திலாவது அதை முடிப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[2002 மே 8

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *2000-2001* விலை விகிதப்படிதான் ரூ.*90.00* இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னேன். இந்த வருடம், *2002-2003* விலை விகிதப்படி திட்ட மதிப்பீடு தயார் செய்து, ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *307*, திருமதி சி.எம். சூரியகலா, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**307—**

**மகளிர் கலைக் கல்லூரி**

***1561—திருமதி சி.எம். சூரியகலா:**

*மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*குடியாத்தத்தில் மகளிர் கலைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போதைய அரசின் நிதி நிலைமையின் காரணமாக, புதிய அரசுக் கலைக் கல்லூரிகளைத் தொடங்குவது இல்லையென அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது. எனவே, குடியாத்தத்தில் மகளிர் கலைக் கல்லூரி தொடங்கும் உத்தேசம் இந்த ஆண்டில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி சி.எம். சூரியகலா:** அடுப்பு ஊதும் பெண்களுக்கு கல்வி எதற்கு என்றிருந்த நாட்டில், பெண்கள் ஆள வந்தால் நாட்டினிலே சாக்காடு இல்லை, போர் இல்லை என்ற பாரதிதாசன் வரிகளை உண்மையாக்கி, ஆளவும் தெரியும் அரசியலில் அயோக்கியர்களை அடக்கவும் தெரியும் என்று நிரூபித்த தாய்க்குலத்தின் விடிவெள்ளி, போயஸ் கார்டன் தந்த பொது அறிவுப் பெட்டகம் (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் பயில்கின்ற பல்கலைக்கழகம் அம்மா அவர்களை வணங்குகின்றேன்.

*முற்பகல் 10-10*



2002 மே 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட,
பிற்படுத்தப்பட்ட மாணவிகளுக்கு பட்ட மேற்படிப்பு, இலவசக் கல்வி
அளிக்கும் திட்டம் கொண்டு வந்துள்ள அம்மாவின் அரசுக்கு நன்றி
தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலுள்ள *477* கல்லூரிகளில், *120* கல்லூரிகள்
பெண்களுக்காக உள்ளது. வேலூர் மாவட்டத்தில் பெண்களுக்கென்று
ஒரேயொரு கல்லூரிதான் உள்ளது. வேலூர் மாவட்டம், குடியாத்தத்தில்
உள்ள பெண்கள், மாவட்டத்திலுள்ள ஏழைகள், பின்தங்கியவர்கள்,
தாழ்த்தப்பட்டவர்கள், பட்டப்படிப்பு படிக்க, இந்த சமூகத்தைச் சார்ந்த
பெண்கள் உலக அளவில் போட்டியிட, வாய்ப்புத் தர மாநில சராசரியை
எட்டிப்பிடிக்க அரசு சார்பாக இந்த நிதியாண்டில் இல்லாவிட்டாலும்,
அடுத்த நிதியாண்டிலாவது குடியாத்தத்தில் மகளிர் கலைக் கல்லூரி
ஒன்றைத் தொடங்கிட அம்மாவின் அரசு ஆவன செய்யுமா என்று தங்கள்
வாயிலாகக் கேட்டுக்கொண்டு, இந்த வருடம் இல்லையென்றாலும் அடுத்த
வருடத்தில் தொடங்கவும்— குடியாத்தத்தில் திருமகள் அரசு கலைக்
கல்லூரி ஒன்று உள்ளது. சுற்றி *30* கிலோ மீட்டர் தூரத்தில் வேறு எந்தக்
கல்லூரியும் இல்லை—இருக்கின்ற கல்லூரியில் எம்.ஏ., பி.எஸ்.ஸி
(கம்ப்யூட்டர் சயின்ஸ்), பி.எஸ்.ஸி. (விலங்கியல்), கெமிஸ்ட்ரி, ஃபிசிக்ஸ்
ஆகிய படிப்புகளும் இல்லை. இந்த படிப்புத் திட்டங்களைத் தொடங்கிட
வேண்டுமாய் அம்மாவின் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பெண்களுக்கு நல்ல
கல்வியைத் தரவேண்டும், அதற்காக வேலூர் மாவட்டத்தில் குறிப்பாக
குடியாத்தத்தில் மகளிர் கல்லூரி வேண்டுமென்று வேண்டுகோள்
வைத்திருக்கின்றார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரை, பெண்களுக்கு நல்ல
கல்வியைத் தருவதற்காக, நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் பல்வேறு
திட்டங்களை வகுத்து, அதன் மூலமாக, குறிப்பாக ஆதிதிராவிடப்
பெண்களுக்கு இலவசமாக கல்லூரியிலே முதுகலை வரையில் படிப்பதற்கு
அனைத்துச் சலுகைகளையும் இந்த அரசு தந்திருக்கிறது.
அதுமட்டுமல்லாமல் பெண்களுக்காக ஒரு பல்கலைக் கழகத்தையே
உருவாக்கியது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்
கழகம்தான் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். (மேசையைத் தட்டும்
ஒலி) அதோடு அவர் சொல்கின்ற, அவருடைய வேலூர் மாவட்டத்தின்
தலைநகராக உள்ள வேலூரில் நடப்பு ஆண்டிலிருந்தே ஒரு புதிய
பல்கலைக்கழகத்தை உருவாக்கி, அதிலே குறிப்பாக தாழ்த்தப்பட்ட
மக்களும், பின்தங்கிய மக்களும் ஏழை மக்களும் முன்னேறுவதற்காக,

[2002 மே 8

கல்வியிலே பல மாறுதல்களைக் கொண்டு வந்து அந்தப் பல்கலைக்கழகம், அதற்காகப் பாடுபடுவதற்காக நம்முடைய திருவள்ளுவர் பெயரால் ஒரு பல்கலைக்கழகத்தை புரட்சித் தலைவி அவர்கள் இந்த ஆண்டு உருவாக்கியிருக்கிறார்கள். ஆகவே, அத்தகைய பல்வேறு திட்டங்களைச் செய்திருக்கும் புரட்சித் தலைவி அவர்கள்—மாண்புமிகு உறுப்பினர் பெண்களுக்காக ஒரு கல்லூரியை குடியாத்தத்தில் வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்—இந்த ஆண்டு முடியாவிட்டாலும் அடுத்த ஆண்டாவது நிதிநிலைக்கு ஏற்ப இதைப்பற்றிச் சிந்திப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 308, திரு. துரை. கி. சரவணன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.*

**308—**

**மகளிர் கலைக் கல்லூரி**

***7971—திரு. துரை. கி. சரவணன்:**

*மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சிதம்பரம் பகுதியில் மகளிர் கலைக் கல்லூரி தொடங்கி மக்களின் கோரிக்கையை அரசு நிறைவேற்றுமா?*

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

முன்பு கேட்ட கேள்விக்கு ஏற்றாற்போல, இதுவும் உள்ளது. அரசினுடைய நிதிநிலையின் காரணமாக, இந்த ஆண்டில், அதாவது இப்போது நடைபெறுகின்ற கல்வியாண்டில் இத்தகைய ஒரு பெண்கள் மகளிர் கல்லூரியைத் தொடங்கும் உத்தேசம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. துரை. கி. சரவணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் மற்றும் காட்டுமன்னார்குடி தாலுகாவில் உள்ள மேல்நிலைப் பள்ளிகளில் 12 ஆம் வகுப்பு படிக்கும் மாணவிகள் அதிக அளவில் தேர்ச்சி பெறுகிறார்கள். அந்த மாணவிகள், மகளிர் கல்லூரியில் சேர்ந்து படிக்க நினைக்கும்போது அங்கிருந்து சுமார் 50 கிலோமீட்டருக்கு அப்பால் உள்ள கடலூருக்குச் செல்ல வேண்டிய நிலை உள்ளது. சிதம்பரத்திலிருந்து



2002 மே 8]

10 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள அரசு கலைக் கல்லூரியில் போதிய இடம் இல்லை. அதாவது, இங்கேயிருந்து தேர்ச்சி பெறும் மாணவிகள் அங்கே சேரும் அளவிற்கு, அங்கே வாய்ப்பு இல்லை. அந்த அளவிற்கு அங்கே சீட் இல்லை. ஆகவே, இந்த ஆண்டில் அமைச்சர் அவர்கள் கூறியதுபோல இல்லையென்றாலும் அடுத்த ஆண்டிலாவது—அந்தப் பகுதி மக்கள், முக்கியமாக பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் பெரும்பாலும் வாழ்கிறார்கள் — அவர்கள் நலன் காத்திட மறுபரிசீலனை செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம், கல்விக்குப் பெயர்போன ஓர் இடமாகும். சிதம்பரத்தில் அரசின் சார்பாக ஒரு கல்லூரியானது செயல்பட்டு வருகிறது. அதில் ஆண்களும் பெண்களும் சேர்ந்து படிக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அங்கே இடம் கிடைப்பது மிக அரிதாக இருக்கிறது; ஆகவே அங்கேயிருக்கும் மாணவிகளும், மாணவர்களும் கடலூர் போன்ற பல்வேறு இடங்களுக்குச் செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். ஆகவே மாணவர்களுடைய வேண்டுகோளுக்கு ஏற்ப, பெற்றோர்களுடைய வேண்டுதலுக்கு ஏற்ப இட வசதியினை, இருக்கும் கல்லூரியிலேயே, அதிகமாக உருவாக்குவதற்கு அரசு முயற்சி செய்யும். புதிய கல்லூரி வேண்டுமென்பதை நிதிநிலைமை காரணமாக செயல்படுத்த முடியாமல் இந்த அரசு இருக்கிறது. ஆகவே நிதிநிலைமையானது சீர்பட்டவுடன் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையானது பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 309, திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.*

**309—**

**கூடுதல் நீதிபதிகள்**

***19811—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**

*மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2002 மே 8

(அ) விரைவு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டவுடன் முடிக்கப்பட்ட வழக்குகள் எத்தனை?

(ஆ) விரைவு நீதிமன்றங்களில் முடிக்கப்பட்ட வழக்குகள் உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யும்பொழுது உயர் நீதிமன்றத்தில் மீண்டும் வழக்குகள் தேங்கி விடுவதால், இதனைத் தடுப்பதற்கு கூடுதல் நீதிபதிகளை நியமிக்க அரசு வலியுறுத்துமா?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) 2001 நவம்பர் மாதம், 30 விரைவு நீதிமன்றங்களும், 2002 பிப்ரவரி மாதத்தில் 19 விரைவு நீதிமன்றங்களும் ஆரம்பிக்கப்பட்டன. இந்நீதிமன்றங்களில், 2002 பிப்ரவரி வரை மொத்தம் 2,744 வழக்குகள் முடிவு செய்யப்பட்டுள்ளன.

(ஆ) இதுகுறித்து உயர் நீதிமன்றமே முடிவு செய்யும்.

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 19 விரைவு நீதிமன்றங்களுக்கு விரைவாக வழக்குகளை விசாரிக்க அனுமதியளித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு முதற்கண் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, தமிழகத்தில் விரைவு நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ள வழக்குகள் எத்தனை என்பதையும் விரைவு நீதிமன்றங்களில் அளிக்கப்பட்டுள்ள தீர்ப்புகளை எதிர்த்து மேல்முறையீடு எத்தனை தாக்கல் செய்யப்பட்டு இருக்கிறது என்பதையும் இவ்வாறு வழக்குகள் உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடுகளாக வரும்போது வழக்குகளின் தேக்கத்தைத் தடுப்பதற்கு அரசியல் சட்டம் 224-இன்படி தற்காலிக நீதிபதிகள் நம்முடைய விரைவு நீதிமன்றங்களைப்போலவே, உயர் நீதிமன்றங்களுக்கு நியமிக்க வழிவகையுள்ளது என்பதைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அரசு தற்காலிக நீதிபதிகளை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, number of cases pending as on *31-3-2002—31-3-2002* வரை விரைவு நீதிமன்றங்களில் 9,667 வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன. விரைவு நீதிமன்றம் ஆரம்பிக்கப்பட்ட நோக்கமே விரைவாக நீதி வழங்கவேண்டுமென்பதுதான். இன்றைக்கு உள்ள சூழ்நிலையில்



2002 மே 8]

ஆரம்பிக்கப்பட்ட இந்த நீதிமன்றங்களில் ஒரு வருடத்தில் ஏறக்குறைய 2,744 வழக்குகள் முடிவு செய்யப்பட்டிருக்கின்ற நிலையில், இந்த வேகத்தோடு போகின்ற நிலை ஏற்படுகிறபோது இன்னும் 3 ஆண்டுகளில் இந்த வழக்குகள் அத்தனையும் தீர்க்கப்பட்டுவிடும் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன். தற்காலிக நீதிபதிகளைப் பற்றி நம்முடைய உறுப்பினர் அவர்கள் இங்கே சொன்னார்கள். இதுகுறித்து அரசின் சார்பிலே உயர் நீதிமன்றத்திற்கு கருத்துகள் தெரிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விரைவு நீதிமன்றங்களில் குறிப்பாக சென்னையிலுள்ள விரைவு நீதிமன்றங்களில் வழக்குகள் தாமதிக்கும் வகையில் வழக்குகளுக்குத் தேவைப்படும் சான்றாவணங்களை சென்னை உயர்நீதிமன்ற வளாகத்திலிருந்து விரைவு நீதிமன்றங்கள் இருக்கும் சிங்காரவேலர் மாளிகைக்கு எடுத்து வருகின்றார்கள். சிங்காரவேலர் மாளிகையில் சான்றாவணங்கள் வைக்கும் கிடங்கு இல்லை. நகல்கள் கொடுக்கும் பிரிவும் இல்லை. மிகவும் சிரமமான நிலையுள்ளது. அதேபோன்று விரைவு நீதிமன்றத்திலும், சென்னை உரிமையியல் நீதிமன்றத்திலும், உயர் நீதிமன்றத்திலும் போதிய கழிப்பறை வசதிகள் இல்லை என்பதால் இந்தச் சிரமங்களைக் கருதி சென்னையிலுள்ள விரைவு நீதிமன்றங்களை உயர் நீதிமன்ற வளாகத்திற்கு மாற்ற நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிங்காரவேலர் மாளிகையில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற விரைவு நீதிமன்றத்திலே, அடிப்படைத் தேவைகள் Infrastructure facilities create செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுக்கும். அதே சூழ்நிலையில் பாதுகாப்பு கருதி—மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்துகள் — அங்கே 'இந்த Exhibits கொண்டு செல்வதற்குப் பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை இருக்குமானால் செயல்படுகின்ற அந்த நீதிமன்றத்தைக்கூட, உயர் நீதிமன்றத்தினுடைய கருத்துகளைப் பெற்று, சிங்காரவேலர் மாளிகையில் செயலாற்றிக் கொண்டு வருகின்ற Fast Track Court-ஐ உயர் நீதிமன்றத்தை மாற்றுவதற்கு உயர் நீதிமன்றத்திற்கு கருத்துகள் தெரிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

[2002 மே 8

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலம் தாழ்த்தப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதியாகும் என்ற நிலையை முற்றிலுமாக மாற்றி அமைக்க வேண்டுமென்று மத்திய அரசு இந்த Fast Track Court என்ற விரைவு நீதிமன்றத்தை அறிமுகப்படுத்தியிருக்கிறது. நம்முடைய தமிழகத்திலே 49 நீதிமன்றங்கள் தொடங்கப்பட்டதாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். இந்த 49-ம் எல்லா மாவட்டங்களுக்கும் வழங்கப்பட்டு இருக்கின்றனவா? மாவட்டங்களுக்கு எத்தனை வழங்கப்பட்டு இருக்கின்றன? அதேநேரத்திலே இதிலேகூட 9,067 வழக்குகள் தேங்கியிருப்பதாகச் சொன்னார்கள். இதனால் நடைமுறையிலே பொது மக்களுக்குப் பலன் கிட்டியிருக்கின்றதா? நடைமுறையிலே எந்த அளவிற்குச் சாத்தியமாக இருக்கின்றது என்பதை அறிய விரும்புவதோடு ஓர் ஆண்டிற்கு இதனாலே எவ்வளவு செலவு ஏற்படுகிறது என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. குற்றவியல் வழக்குகள்தான் பெரும்பான்மையான அளவிற்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு விரைவு நீதிமன்றங்களிலே எடுக்கப்படுகின்றன. எனவே சமூக நலன் இதிலே முழுமையான அளவிற்குப் பாதுகாக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இரண்டாவதாக, ஒவ்வொரு நீதிமன்றத்திற்கும் எவ்வளவு செலவு என்பதைக் கேட்டார்கள். தற்போது அந்த விவரம் இல்லை. விவரம் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம். சக்திவேல் முருகன்.

*முற்பகல் 10-20*

**திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதயதெய்வம் அம்மா அவர்களுடைய ஆட்சியில் 49 விரைவு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதிலே ஒரு விரைவு நீதிமன்றம் என்னுடைய அம்பாசமுத்திரம் தொகுதிக்கு முதலில் அறிவிக்கப்பட்டு, அதற்கு வேண்டிய அத்தியாவசிய கட்டடப் பணிகளும் P.W.D. மூலம் கட்டி முடிக்கப்பட்டு அதைத் திறக்கின்ற வேளையில் அந்த விரைவு நீதிமன்றம்—அம்மாவினுடைய



2002 மே 8]

ஆட்சி கட்சிப் பாகுபாடு இல்லை என்று நிரூபிக்கின்ற வகையில் அந்த விரைவு நீதிமன்றம்—பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதிக்கு மாற்றப்பட்டுவிட்டது. ஏற்கெனவே, பாளையங்கோட்டையில் ஒரு விரைவு நீதிமன்றம் இருக்கிறது. கூடுதலாக இந்த விரைவு நீதிமன்றம் பாளையங்கோட்டைக்குச் சென்று அங்கே சைக்கிள் ஷெட்டிலே செயல்பட்டு வருவதாக அறிகின்றேன். எங்களுடைய அம்பாசமுத்திரத்தைச் சேர்ந்த வழக்கறிஞர் சங்கத் தலைவர்களும், நானும் சட்ட அமைச்சரை ஏற்கெனவே சந்தித்து இதுபற்றி கோரிக்கை மனு கொடுத்திருக்கின்றோம். ஏற்கெனவே முதலில் அனுமதிக்கப்பட்ட அந்த விரைவு நீதிமன்றம் மீண்டும் என்னுடைய அம்பாசமுத்திரம் தொகுதியில் அமைப்பதற்கு இதயதெய்வம் அம்மா அவர்களுடைய அரசு மீண்டும் அறிவிக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அமைச்சரிடம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட சூழ்நிலை உயர் நீதிமன்றத்தினுடைய கருத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாவட்ட அளவிலே பல Fast Track Court-கள் அமைக்கப்பட்டது குறித்து தெரிவித்தார்கள். அங்கெல்லாம் இப்பொழுது அதிக ஆண்டுகள் வழக்குகள் நிலுவையில் இருப்பதில்லை. உயர் நீதிமன்றத்தில் ஒரு Writ மனுவை நீங்கள் தாக்கல் செய்வீர்கள் என்று சொன்னால், 12 ஆண்டுகள், 13 ஆண்டுகள் ஆகின்றன, அது லிஸ்டில் வருவதற்கே. அந்த அளவிற்கு உயர் நீதிமன்றத்திலே தேங்கிக்கிடக்கக்கூடிய இந்த வழக்குகளை முதலில் உயர் நீதிமன்றம் உடனே clear செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆகவே, High Court-க்குத்தான் Fast Track Courts முதலில் தேவைப்பட வேண்டுமேயொழிய மாவட்ட அளவிலே ஒரு கொலை வழக்கு நடந்தது என்று சொன்னால், ஓர் ஆண்டுக்குள் அது Trial முடிந்து Judgement எல்லாம் வந்துவிடுகிறது இப்பொழுதெல்லாம். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நம்முடைய உயர் நீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதி மற்றும் ரிஜிஸ்திரார் மூலமாக நீங்கள் பேசி Fast Track Court-ஐ உயர் நீதிமன்ற அளவில் அமைத்து, அங்கு இருக்கக்கூடிய வழக்குகளை, 2 ஆண்டுக்குள் அல்லது 1-1/2 ஆண்டுக்குள் முடிப்பதற்கு—ஒரு Writ மனு தாக்கல் பண்ணினோம் என்றால் 1-1/2 ஆண்டுகளில் it should be cleared என்கின்ற

[2002 மே 8

நிலையை வகுப்பதற்கு—அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறை சம்பந்தமான மானியக் கோரிக்கை விவாதத்தின்போது நான் தெளிவாகச் சொல்லியிருக்கின்றேன். அகில இந்திய ரீதியில் ஒப்பிடும்போது இந்தியாவிலேயே அலகாபாத் உயர் நீதிமன்றத்தில் 12 இலட்சம் வழக்குகள் நிலுவையில் உள்ளன, தேக்கமாக உள்ளன; உயர்நீதிமன்றத்தில் மட்டும். நம்முடைய தமிழ்நாட்டில் ஒட்டுமொத்தமாக 11 இலட்சம் வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன. உயர் நீதிமன்றம் என்று சொல்லும்போது, ஏறக்குறைய 3-1/2 இலட்சம் வழக்குகள் தேக்கம் அடைந்து இருக்கின்ற நிலைமை. இதுகூட விரைவாக முடிக்கப்பட வேண்டும் என்கின்ற வகையில் அரசு சார்பிலே கடிதம் எழுதப்படும்; எழுதியிருக்கிறது. எனவே நம்முடைய மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து உயர் நீதிமன்றத்தினுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி மகேஸ்வரி.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலம் தாழ்த்தப்பட்ட நீதி, மறுக்கப்பட்ட நீதி, மறைக்கப்பட்ட நீதி ஆகும். அதனால்தான் justice delayed is justice denied என்று சொல்லப்படுகிறது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு விரைவாய் நீதி கிட்ட வேண்டும், நிறைவாயும் நீதி கிட்டவேண்டும் என்ற அடிப்படை நோக்கத்தோடுதான் இந்த விரைவு நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் இந்த விரைவு நீதிமன்றங்களிலேகூட வழக்குகள் சற்று காலதாமதமாகத்தான் விசாரிக்கப்படுவதாகவும், அதுபோன்று தீர்ப்புகள்கூட தேவையின்றி காலதாமதமாக தரப்படுவதாகவும் ஒரு பரவலான கருத்து நிலவி வருகிறது. ஆகவே விரைவு நீதிமன்றங்கள், அதன் தோற்றத்தின் அடிப்படை நோக்கத்திலிருந்து விலகிச் சென்று விடாமல் கண்காணிக்க நீதித் துறை உரிய நடவடிக்கைகள் எடுக்குமா? அதைப்போன்று உரிமையியல் வழக்குகளையும் விரைவு நீதிமன்றத்திலே விசாரிப்பதற்கான நடவடிக்கைகளை இவ்வரசு மேற்கொள்ளுமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தம் விரைவு நீதிமன்றத்தில் 9,667 வழக்குகள் நிலுவையில் இருக்கின்ற சூழ்நிலையில், தீர்க்கப்பட்ட வழக்குகள் என்று



2002 மே 8]

சொல்லும்போது, 2,744 வழக்குகள். இதிலே சதவிகிதம் என்று பார்க்கும்போது ஏறக்குறைய 25 சதவிகிதம் அளவிற்கு இந்த ஓராண்டு காலத்திலே வழக்குகள் தீர்க்கப்பட்டிருக்கின்றன. இது, விரைவாக நீதிமன்றம் செயல்படுவதற்கு ஓர் உதாரணமாக இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர்கள் Specific-ஆக எந்த இடத்திலே எந்த Court-இல் இதுபோன்ற சூழ்நிலை இருக்கின்றது என்று சொன்னால் உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியினுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, அந்தக் குறையும் இல்லாத அளவிற்கு தீர்க்கப்பட்டுவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலுவையில் இருக்கின்ற வழக்குகளுடைய எண்ணிக்கையைப் பற்றியும், முடிக்கப்பட்ட விதத்தைப் பற்றியும் அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். இப்போது விரைவு நீதிமன்றங்களைப் பொறுத்தவரையில், இந்தியாவிலேயே உத்தரப் பிரதேசத்தில் 200-க்கும் மேற்பட்ட நீதிமன்றங்கள் இருக்கின்றன. அதைப்போல மகாராஷ்டிரா மாநிலத்தில் 183-க்கும் மேற்பட்ட நீதிமன்றங்களும், பிகார் மாநிலத்திலே 183-க்கும் மேற்பட்ட நீதிமன்றங்களும் இருக்கின்றன. நமது மாநிலத்திற்கு மட்டும் 49 என்ற அளவில் இருப்பதாலேயே இப்படிப்பட்ட தேக்கம் இருக்கிறதோ என்று நான் கருதுகிறேன். ஆகவே விரைவு நீதிமன்றங்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்கான முயற்சியை இந்த அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ தொகுதிக்கு ஒரு ஹாஸ்டல், பள்ளிக்கூடம் கொண்டுவருவதைப்போல ஒவ்வொரு தொகுதிக்கும் ஒரு நீதிமன்றம் வேண்டும் என்பதைப்போல மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து இருக்கிறது. வடநாட்டில் குற்றங்கள் அதிகம். அங்கே கொலை, கொள்ளைகள் அதிகமாக நடைபெறுகிற காரணத்தால் அங்கே விரைவு நீதிமன்றங்கள் அதிகமாக ஏற்படுத்தப்படுகின்றன. தமிழ்நாடு அமைதிப் பூங்காவாக இருக்கிற சூழ்நிலையில் (மேசையைத் தட்டும் ஒலி) அதிகமான நீதிமன்றங்கள் ஏற்படுகிற வாய்ப்பு இல்லை. குற்றங்கள் இங்கே நடக்காது. நடக்கின்ற சூழ்நிலை வராது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி.வி. சண்முகம்.

**திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனத்தில் இரண்டு விரைவு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே இடவசதியில்லாமல் இருக்கிற அந்த நீதிமன்றக்கட்டடத்திலே இரண்டு புதிய நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டு, வழக்கறிஞர்கள் தங்கி ஓய்வு எடுக்கும் அறை அந்த நீதிமன்றத்திற்குக் கொடுக்கப்பட்டு, இன்று வழக்கறிஞர்கள் இடம் இல்லாமல் வெளியிலே தெருவிலே நின்றுகொண்டிருக்கிறார்கள். ஆகவே விரைவு நீதிமன்றங்களுக்குக் கூடுதல் கட்டடம் கட்டித்தரப்படுமா என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மானியக் கோரிக்கை விவாதத்தில் நான் சொல்லியிருக்கிறேன். கட்டடம் கட்டுவதற்கு நமது அரசின் சார்பில் நமது தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு Master Plan தயாரித்து ஏறக்குறைய 140 கோடி ரூபாய் செலவில் ஒரு முன்மொழிவை மத்திய அரசுக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். எனவே அதை கொஞ்சம் கொஞ்சமாக மத்திய அரசு, release செய்கிற பட்சத்தில் முன்னுரிமை கொடுத்து அடிப்படை வசதிகளை நிறைவேற்றுவதற்கு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச். ராஜா.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டில் மொத்தம் 2 கோடிக்கும் மேலான வழக்குகள் தேங்கிக் கிடக்கின்றன என்ற ஒரு தகவல் இருக்கிறது. அதிலே தமிழகத்திலே உள்ள வழக்குகளைப் பற்றி அமைச்சர் சொல்கிறபோது 9,000 வழக்குகள் இந்த விரைவு நீதிமன்றங்களுக்கு ஒதுக்கப்பட்டிருப்பது பற்றியும் அதிலே எவ்வளவு தீர்ப்பு வந்திருக்கிறது என்பதைப் பற்றியும் சொன்னார்கள். ஆனால் தேங்கிக்கிடக்கிற இரண்டு கோடி வழக்குகளில் தமிழகத்தில் எவ்வளவு வழக்குகள் தேங்கிக் கிடக்கின்றன என்பதைத் தங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நான் இங்கே குறிப்பிட்டதைக் கவனிக்கவில்லை என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ்நாட்டிலே மொத்தம் 11 இலட்சம் வழக்குகள் தேங்கியிருக்கின்றன. அதிலே உயர் நீதிமன்றத்திலே மட்டும் 3-1/2 இலட்சம் வழக்குகள் இருக்கின்றன. ஒட்டுமொத்தமாக அகில இந்திய ரீதியில் ஒப்பிடும்போது உதாரணத்திற்கு உயர் நீதிமன்றங்களை எடுத்துக் கொண்டாலே, அலகாபாத் உயர்நீதிமன்றத்திலே மட்டும் 12 இலட்சம் வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன, தேக்கமடைந்திருக்கின்றன. நம்முடைய உயர் நீதிமன்றத்தில் 3-1/2 இலட்சம் வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன. எனவே மற்ற மாநிலங்களைக் காட்டிலும் நமது மாநிலத்தில் குறைவாகத்தான் வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்ற புதிய தலைமை நீதிபதி திரு. B.N. கிர்பால் அவர்கள் விரைவு நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பது சரி என்று அறிவித்திருக்கிறார்கள். இந்த நிலையில் தேங்கிக்கிடக்கிற வழக்குகளைப் பொறுத்தவரையில் வயது முதிர்ந்தவர்கள் போட்ட வழக்குகள் நிலுவையில் அதிகமாக இருக்கின்றன. அந்த வழக்குகளில் தீர்ப்பு வருவதற்கு முன்பு இயற்கை எய்தும் சூழ்நிலையிலும் அவர்கள் இருக்கிறார்கள். ஆகவே அவர்களின் வயது அடிப்படையில் வழக்குகளை விசாரிக்க, வயது முதிர்ந்தவர்களின் வழக்குகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து உயர் நீதிமன்றத்திற்குத் தெரிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 310, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**310—**

**கோயிலைப் புதுப்பித்தல்**

***12390—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001 ஆம் ஆண்டு ஸ்ரீரங்கம் அருள்மிகு ரங்கநாதர் திருக்கோயிலைப் புதுப்பிக்க அரசு ஏதேனும் நிதி ஒதுக்கியதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரசு நிதி ஏதும் ஒதுக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீரங்கம் கோயில் குடமுழுக்கு 15-3-2001 அன்று நடத்தப்பட்டது. அப்போது கோயிலிலே சின்னச் சின்ன வேலைகள் புதுப்பிக்கப்பட்டன. ஆனால் அந்தக் கோயிலுக்கு மிக முக்கியமான மதிற்சுவர்கள் உடைந்து மரங்கள் எல்லாம் சாய்ந்து அந்த வழியாக, விரும்பத்தகாத மிருகங்கள் எல்லாம் உள்ளே சென்று, கோயிலை அசிங்கப்படுத்துவது என்பது அரசுக்குத் தெரியுமா? அது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா? அப்படியிருந்தால், கோயிலின் சுற்றுப்புறத்தைச் சுகாதாரமான முறையில் வைத்துக்கொள்ள அரசு தகுந்த நடவடிக்கை எடுக்குமா? உடைந்த மதிற்சுவரைப் புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீரங்கம் அருள்மிகு ஸ்ரீரங்கநாதர் திருக்கோயிலில் பல ஆண்டுகளாக முழுமையான திருப்பணி நடைபெறாமல் இருந்தது. ஒரு கோடியே 38 இலட்சத்து 55 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் முழுமையான திருப்பணிகள் செய்யப்பட்டுள்ளன: இத்தொகையில் திருக்கோயில் நிதியாக 84 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான திருப்பணியும் உபயதாரர்கள் மூலம் 44 இலட்சத்து 55 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள திருப்பணியும் செய்து முடிக்கப்பட்டன. இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை மூலம், பொதுநல நிதியிலிருந்து 9 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் விடுவிக்கப்பட்டு, திருப்பணிகள் அனைத்தும் முடிவடைந்து, 15-3-2001 அன்று ஆன்றோர்கள், சான்றோர்கள் முன்னிலையில் குடமுழுக்கு சீரிய முறையில் நடைபெற்றது. எனவே நிதியுதவி செய்ய வேண்டியதில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு, மதிற்சுவர்கள் எல்லாம் உடைந்துள்ளதாகச் சொன்னார்கள். தமிழ்நாட்டிலே இருக்கின்ற ஆலயங்களில் எங்கெங்கு மதிற்சுவர்கள் உடைந்து இருக்கின்றனவோ, அவற்றுக்கெல்லாம் இப்போதுகூட பணிகள் தொடங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அங்கு அப்படி மதிற்சுவர்கள் உடைந்ததாகத் தெரியவில்லை. இருந்தாலும், அதை உடனடியாகப் புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கோயிலுக்குள் மிருகங்கள் செல்வதாகச் சொன்னார்கள். அறநிலையத் துறைக்குச் சொந்தமான ஆலயத்திற்கு, அங்கே எடுக்கப்படும் மாடுகள், பசு மாடுகள், ஆலயத்திற்கு உள்ளே சென்று பாதுகாப்பாகக் கட்டி வைக்கப்படுகின்றன. அந்த மிருகங்கள்தான் செல்லுமே தவிர, தெருவிலே திரிகின்ற மிருகங்கள் செல்லாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வேண்டுமென்று சொன்னதாக, மாண்புமிகு அமைச்சர் கருதுகிறாரோ என்னவோ தெரியவில்லை. நண்பர் ஞானசேகரன் அவர்கள் குழுவிலே சென்று நேரிலே பார்த்திருக்கிறார். என்னிடத்திலேயும் சொல்லியிருக்கிறார். மதிற்சுவர் உடைந்து, மாடுகள்—அங்கே இருக்கக்கூடிய மாடுகள்—சென்று வருவது புண்ணியம்; நான் மாடுகள் எனச் சொல்லவில்லை; விரும்பத்தகாத மிருகம் என்பது பன்றி. அதைத்தான் நான் சொன்னேன். அங்கு அதிகமாக மேய்கிறது. ஆகையால் கோயிலைப் புனிதத் தலமாக நினைத்து ஆசியா கண்டத்திலேயே மிக உயரமான, பல கோடி ரூபாய் செலவு செய்து, நம்முடைய முன்னோர்களும், சான்றோர்களும், நல்ல அறிஞர்களும், ஆன்மீகவாதிகளும் கட்டிக் கொடுத்த கோயிலைக் காப்பாற்ற வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது என்பதை உணர்ந்து, அந்தக் கோயில் மதிற்சுவரைக் கட்டுவீர்களா என்பதை உங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கட்டுவேன் என்று சொல்லிவிட்டார்களே!

(குறுக்கீடு)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பன்றி மேயாது; பன்றி மேய்வது கிடையாது. (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பல்வேறு ஆலயங்களில் மதிற்சுவர்கள் உடைந்துள்ளதாகச் சொன்னார்கள். ஸ்ரீரங்கத்திலே இருக்கின்ற ஸ்ரீரங்கநாதர் ஆலயத்தில், மதிற்சுவர் உடைந்து இருப்பதாகச் சொல்கிறார்கள். அப்படி ஏதாவது ஒரு பகுதியில் இப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்பட்டு இருக்குமேயானால், உடனடியாக அந்த மதிற்சுவர்களைக் கட்டுவதற்கு இந்து சமய அறநிலையத் துறை நடவடிக்கை

எடுக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். அங்கே பன்றிகள்—இங்கே மட்டுமல்ல—நிச்சயமாக, ஸ்ரீரங்கநாதர் ஆலயத்திற்குச் சென்று இருக்காது. ஆனால் அங்கே, வெளியிலே, எல்லா ஆலயங்களின் பக்கத்திலேயும் அப்படிப்பட்ட பன்றிகள் சுற்றித் திரிந்து கொண்டுதான் இருக்கின்றன. எனவே அங்கே, ஆலயத்திற்குள் நிச்சயமாக அவை செல்லாது என்பதை நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *311*, திரு. மா. இராஜசேகர், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**311—**

**குடிநீர்**

**•7374—திரு. மா. இராஜசேகர்:**

*மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*இராஜபாளையம், மலையடிப்பட்டி பகுதியில், குடிநீர்க் குழாய் பதிக்கப்படாத இடங்களுக்கு மேல்நிலைத் தொட்டிகள் கட்டி குடிநீர் வழங்கப்படுமா?*

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இராஜபாளையம் நகராட்சிக்குட்பட்ட மலையடிப்பட்டி பகுதிக்கு, புதிய குடிநீர் அபிவிருத்தித் திட்டத்தின்மூலம், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டவும், புதிய பகிர்மானக் குழாய்கள் அமைக்கின்ற பணியும், துறையின் மூலமாகத் தயாரிக்கப்பட்டு வருகிறது. திட்டம் நிறைவுற்றதற்குப் பின்பு, குடிநீர் வழங்கப்படும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மா. இராஜசேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு திருப்திகரமான பதிலைத் தந்தார்கள். அதற்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் எனது இராஜபாளையம் தொகுதியில், குடிநீர்ப் பிரச்சினையை முழுமையாகத் தீர்க்கும்வகையில், நகரின் மேற்கே, அய்யனார் கோயில் செல்லும் சாலையில், ஆறாவது மைலில் *30*



ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டது. அப்போது இராஜபாளையம் நகரில் *30* ஆயிரம் பேர்கள் இருந்தார்கள். தற்போது மக்கள் தொகை *2* இலட்சம் பேர்களாக உயர்ந்திருக்கிறது. கோடைக் காலங்களில் தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டு வருகிறது. ஆகவே குடிநீர்ப் பிரச்சினையை முழுவதுமாகத் தீர்த்து வைத்திட அந்த நீர்த்தேக்கத்திற்குப் பக்கத்திலே ஒரு கூடுதல் நீர்த்தேக்கம் அமைத்துத்தர அரசு முன்வருமா என்பதனைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *312*, திரு. எஸ். நடராஜன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**312—**

**திட்டப் பணிகள்**

***11348—திரு. எஸ். நடராஜன்:**

*மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*நாட்றாம்பள்ளி தொகுதி, கந்திலி ஒன்றியம், பேராம்பட்டு ஊராட்சியை அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் சேர்த்து இந்த ஆண்டு பணியைத் துவக்க அரசு திட்டம் தீட்டியுள்ளதா?*

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட ஊராட்சி *2001-2002* ஆம் நிதி ஆண்டில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராம்பட்டு ஊராட்சியை அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் எடுத்து அந்தப் பணிகள் நடந்து வருகின்றன. இந்தத் திட்டத்தில் *20*

தெரு விளக்குகளுக்குத் திட்டம் தீட்டி 1.7 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மின்சாரத் துறைக்கு அனுப்பப்பட்டு, மின்சாரத் துறை இந்த போரம்பட்டு ஊராட்சியில் மின்கட்டணப் பாக்கி உள்ளதால், அந்தப் பணி துவங்காமல் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த ஊராட்சிக்கு ரூ.31 இலட்சம் ஒதுக்கீடு செய்து சில பணிகள்—சின்ன பேராம்பட்டு—கூாதன் கொட்டாய் சாலை, கொய்யாலி வட்டம்— கீழ்மத்தூர் சாலை, சின்ன பேராம்பட்டு-காடயாம்பள்ளம் சாலை—பாதியிலேயே நிற்கின்றமையால் மேற்படி சாலைகளின் பணிகளை முழுமையாக முடிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்து இந்த நிதி ஆண்டிலேயே முடித்துக் கொடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அறிந்து அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 313, திருமதி வி. சிவகாமி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**313—**

**தனி மாவட்டம்**

***8066—திருமதி வி. சிவகாமி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தாராபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு தாராபுரம், பழனி, உடுமலைப்பேட்டை மற்றும் காங்கேயம் வட்டங்களை உள்ளடக்கி தனி மாவட்டம் அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவாம் என்ன?*

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

**திருமதி வி. சிவகாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,





இன்றைய மன்றக் குறிப்பேடு நாளைய வரலாறு. என்னுடைய தொகுதி தாராபுரம், கொங்கு நாட்டைத் தலைநகரமாகக் கொண்டு ஒரு காலத்திலே செயல்பட்டு வந்த நகரம். அந்த தலைநகரத்திலே காங்கேயம், பழனி, உடுமலைப்பேட்டை, தாராபுரம் போன்ற 4 தாலுகாக்களையும் கொண்டு ஒரு மாவட்டம் அமைக்க வேண்டும் என்ற நோக்கம் பல ஆண்டு காலமாகப் பேசப்பட்டு வருகிறது. கொன்று குவித்திடும் கொடுமுடிகூட அன்னையின் பார்வை பட்டால் பச்சிளம் குழந்தையாகிவிடும். (மேசையைத் தட்டும் ஒலி) அன்புமிகு அன்னை அவர்களுடைய ஆட்சியிலே—நாளை ஆயிரம் காலத்துக்குப் பின்புகூட நாட்டை ஆளும் தமிழ்கூறும் நல்லோர்கள், அம்மாவினுடைய கரத்தில் பதிந்த அந்த எழுத்தாணியும், கண்ணில் அணிந்திருக்கும் அந்தக் கண்ணாடியும், ஆடை, அணிகலன் அத்தனையையும் துறந்தார் என்று ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்புகூட இந்த நாட்டை ஆளுவோர்கள்-- தாராபுரத்தை ஒரு மாவட்டமாக அமைத்தால், நம்முடைய தமிழகத்தில் உள்ளவர்கள் என்னுடைய தொகுதி சார்பாக இருக்கும் எனது தொகுதி மக்கள் மட்டுமல்லாமல் மாவட்டத்தில் இருக்கும் 4 தாலுகா மக்களும் நாளைக்கு, ஆயிரம் காலத்துக்குப் பின்புகூட பாராட்டுவார்கள். அம்மா அவர்கள் அணிகலன்கள் அணிவதில்லை; ஒரு பெண் அணிகலனை துறப்பது என்றால், அது சாதாரண விஷயமல்ல; அவர்கள் அத்தனையையும் துறந்து இன்றைக்கு புத்தர் போல காட்சி அளிக்கும் அன்னையின் ஆட்சியிலே இந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படுமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

*முற்பகல் 10-40*

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாராபுரத்தை தலைநகரமாகக் கொண்டு ஒரு புது மாவட்டம், தனி மாவட்டம் அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்தார்கள். உங்களுடைய கோரிக்கையிலே தாராபுரம், ஈரோடு மாவட்டத்திலும், பழனி, திண்டுக்கல் மாவட்டத்திலும், உடுமலைப்பேட்டை, கோயம்புத்தூர் மாவட்டத்திலும், காங்கேயம், ஈரோடு மாவட்டத்திலும் உள்ளது. ஒரு மாவட்டத்தைப் பிரிப்பது என்றால் குறைந்தது 20 இலட்சம் மக்கள் தொகை இருக்க வேண்டும். ஆனால் மூன்று மாவட்டங்களிலிருந்து தனித்தனி வட்டங்களை எடுத்து, புதிதாக ஒரு மாவட்டம் ஆரம்பிக்க வேண்டுமென்று நீங்கள் கூறுகிறீர்கள். இதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக நீங்கள் கூறிய மூன்று

[2002 மே 8

மாவட்டங்களிலிருந்தும் 3 தாலுகாக்களை பிரிக்க முடியாது என்று சொல்லி, மேலும் உங்களுடைய கோரிக்கையை பரிந்துரை செய்ய வேண்டுமென்றால், மக்கள் தொகை அடிப்படையிலே 20 இலட்சம் மக்கள் தொகை அங்கே இல்லை என்று சொல்லி, சாத்தியக்கூறுகள் இல்லை என்று சொல்லி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஊருக்குப் போகிறீர்களா? வினா எண் 311. திரு. த. ஆறுமுகம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**314—**

**வாகனப் போக்குவரத்து**

**•18876—திரு. த. ஆறுமுகம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை முத்தமிழ் நகர், கண்ணதாசன் நகர், திருவொற்றியூர் (வட சென்னை) நகரப்பகுதிகளில் துறைமுகம் மற்றும் பல இடங்களுக்குச் செல்லும் கனரக வாகனங்களால் போக்குவரத்து பாதிப்பு நிகழ்வதால் அதனைத் தடுப்பதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னை முத்தமிழ் நகர், கண்ணதாசன் நகர், திருவொற்றியூர் ஆகிய வடசென்னை நகரப் பகுதிகளில் துறைமுகம் மற்றும் பல இடங்களிலிருந்து செல்லும் கனரக வாகனங்களினால் போக்குவரத்து பாதிப்பு நிகழ்வதை அரசு கவனத்தில் கொண்டு, காவல் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறைகளின் உதவியுடன் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஜி.எஸ்.டி.. சாலையையும் எண்ணூர் எக்ஸ்பிரஸ் சாலையையும் இணைக்கும் 100 அடி உள்வட்ட சாலைப் பணிகள் முடிவடைந்து பயன்படுத்தப்படும்போது மேற்கூறப்பட்ட இடங்களில் போக்குவரத்து பாதிப்பு ஏற்படாமல் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடசென்னை பகுதியில் அமைந்துள்ள இராயபுரம், ஆர்.கே.நகர் பகுதியிலுள்ள, குறிப்பாக திருவொற்றியூர் பகுதியில் அமைந்துள்ள



2002 மே 8]

எண்ணூர் விரைவு சாலை, எர்ணாவூர் மேம்பாலம், மணலி-மாத்தூர் நெடுஞ்சாலை மற்றும் சென்னை துறைமுகத்தினுடைய இருபுறங்களிலும் கனரக வாகனங்கள் பல ஆண்டுகளாக நிறுத்தப்பட்டு வருவதால் அந்தப் பகுதியில் இருக்கிற ஏழை மக்கள், நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள், பள்ளி மாணவர்கள் மற்றும் தொழிலாளர்கள் குறித்த நேரத்தில் அலுவலகம் மற்றும் பள்ளிக்குச் செல்ல முடியாத நிலைமையிருக்கிறது. அதைத் தவிர்க்கும்பொருட்டு கனரக வாகனங்கள் முன்பிருந்தது போன்று சென்னை துறைமுகத்தினுடைய உள் கட்டடங்களில் நிறுத்தப்படவேண்டும். ஏழை மக்களைக் காப்பாற்றுகின்ற வகையிலும், பாதுகாக்கின்ற வகையிலும் இதைச் செய்வதோடு மட்டுமல்லாமல், கல்கத்தா செல்லும் தேசிய நெடுஞ்சாலை எருக்கஞ்சேரி வழியாகச் செல்கின்ற அந்தப் பாதை--பல ஆண்டுகளாக கனரக வாகனங்களுடைய போக்குவரத்தால்--முத்தமிழ் நகர், மற்றும் கண்ணதாசன் நகர் வழியாகச் செல்கின்ற அந்தப்பாதை—முழுமையான வகையில் பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படுகின்ற வகையில் இருக்கிறது. பேசின் பிரிட்ஜ் வழியாகச் செல்கிற அந்தப் பா[illegible]ய --பேசின் பிரிட்ஜ் இரயில்வே மேம்பாலத்தை அகலப்படுத்துவதோ[illegible]ட்டுமல்லாமல்—அகலப்படுத்துவதன் மூலமாக அந்தப் பகுதி மக்களுடைய வசதிகளுக்கேற்ப அவற்றைச் செயல்படுத்த முடியுமா என்பதை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களை பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு [illegible]ப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் சொல்வதுபோல அந்தப் ப[illegible]ல் போக்குவரத்து பாதிப்பு இருக்கிறது என்பது உண்மைதான். அ[illegible]ரசு உணர்ந்திருக்கிறது. எனவேதான் சில நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. நாட்டின் பல பகுதிகளிலிருந்து வரும் கனரக வாகனங்களும், கன்டெய்னர்களும், ஆயில் டாங்கர்களும் மூலக்கடைச் சந்திப்பு, தண்டையார்பேட்டை நெடுஞ்சாலை, கத்திவாக்கம் நெடுஞ்சாலை, எண்ணூர் நெடுஞ்சாலை, வைத்தியநாதன் பாலம், திருவொற்றியூர் நெடுஞ்சாலை, குப்பம் சாலை மற்றும் எஸ்.என். செட்டி சாலை வழியாக சென்னை துறைமுகத்தை அடைகின்றன. இப்பாதை அபாயகரமானதாக இருப்பினும் வேறு மாற்றுப் பாதையான மாதவரம் பால் பண்ணை சாலை, மணலி ரோடு, பேசின்பிரிட்ஜ் ரோடு, திருவொற்றியூர் நெடுஞ்சாலை, எல்லையம்மன் கோயில் தெரு, எண்ணூர் எக்ஸ்பிரஸ் ரோடு பாதை இதைவிட மோசமானதாக, அபாயகரமானதாக இருப்பதால் தற்போது இப்பாதையைத்தான் பயன்படுத்த வேண்டியுள்ளது. இதனைக் கருத்தில்கொண்டு ஜி.எஸ்.டி. சாலையையும், எண்ணூர்

எக்ஸ்பிரஸ் சாலையையும் இணைக்கும் வண்ணம் 100 அடி உள்வட்டச் சாலையை அமைக்க அரசு உத்தேசித்துள்ளது. இவ்வகையில் இந்த உள்வட்டச் சாலை, கே.கே.நகர், அசோக் நகர், வடபழனி, கோயம்பேடு, அண்ணா நகர் மேற்கு, குளத்தூர், மாதவரம், மணலி புதிய நகரம், எண்ணூர் வழியாக துறைமுகம் சென்று அடையும் வகையில் நெடுஞ்சாலைத் துறையால் அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டு உள்ளது. இப்பாதையில் சுமார் 100 மீட்டர் அளவிற்கான பாதை நீதிமன்றத்தின் வழக்கில் இருந்ததால் முடிவடையாமல் இருந்தது. ஆனால் தற்போது வழக்கு முடிவுற்று இந்தக் குறை நீக்கப்பட்டு, மீண்டும் இந்தப் பாதை அமைப்பதற்கான வேலைகள் தொடங்கப்பட்டு உள்ளன. எனவே இப்பாதை இன்னும் 6 மாதங்களில் முடிவடைந்துவிடும். இப்பாதை அமைக்கும் பணி முடிவடைந்தவுடன், கனரக வாகனங்கள் இப்பாதை வழியாக சென்னை துறைமுகத்தை அடையலாம். அப்போது—தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் முத்தமிழ் நகர், கண்ணதாசன் நகர், எழில் நகர், வைத்தியநாதன் மேம்பாலம் வழியாக--கன ரக வாகனங்கள் மற்றும் கன்டெய்னர்களை முழுமையாகத் தடை செய்யலாம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.கே. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கம் எடுத்து இருக்கிற பல்வேறு நடவடிக்கைகளை இங்கே குறிப்பிட்டார்கள். துறைமுகத்தில் இருந்து சரக்குகளை ஏற்றிச் செல்வதும், சரக்கு இறக்குவதும் தவிர்க்க முடியாத ஒன்று. இந்தப் பகுதியிலே சூரியநாராயண செட்டி தெரு, டி.எச். ரோடு, கத்திவாக்கம், போன்ற நெடுஞ்சாலைகளில் அதிகமான போக்குவரத்து நெரிசல் காணப்படுவதால், பள்ளிக்குச் செல்கின்ற குழந்தைகள் முதல் பணிக்குச் செல்கின்ற பெரியவர்கள் வரை மிகுந்த சிரமத்திற்கு உள்ளாவதை கருத்திற்கொண்டு, அண்ணா சாலை, காமராஜர் சாலை போன்ற இடங்களில் கனரக வாகனங்கள், சரக்கை ஏற்றிச் செல்லும் லாரிகள் போன்றவை காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை போகக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டு உள்ளது. அதைப்போன்று போக்குவரத்து நெரிசல் மிகுதியாக உள்ள சூரியநாராயண செட்டி தெரு,



டி.எச். ரோடு மற்றும் கத்திவாக்கம் நெடுஞ்சாலைகளிலும் இப்படி தடையைக் கொண்டு வர அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சேகர்பாபு அவர்கள் சொன்ன கருத்தினை நமது போக்குவரத்து காவல் துறையினிடமும், நெடுஞ்சாலைத் துறையினிடமும் தெரிவித்து அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று உரிய நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. மகேந்திரன்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியதுபோல இன்றைக்கு சென்னை-கொல்கத்தா நெடுஞ்சாலையில் காலையிலே கனரக வாகனங்கள் கூடுதலாக செல்லக்கூடிய காரணத்தினால், போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு, 2, 3 மணி நேரம் தடை ஏற்படுகிறது. எனவே வியாசர்பாடியிலே இருக்கக்கூடிய இரயில்வே கடவுப் பாலத்தை, கீழ்ப்பாலத்தை அகலப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோன்று கனரக வாகனங்கள் குடிசை மாற்று வாரியப் பகுதியில், சற்று கூடுதலாக இருக்கக்கூடிய சத்தியமூர்த்தி நகர் வழியாகச் செல்வதால் அங்கேயுள்ள கட்டடங்களுக்குச் சேதம் ஏற்படக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, மாற்றுப் பாதையில் செல்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட மாற்றுப்பாதை ஏற்படுத்துவது குறித்து நான் நமது காவல் துறையிடமும் நெடுஞ்சாலைத் துறையிடமும் கருத்துகளைக் கேட்டுப் பெற்று அவர்களுடைய ஆலோசனைகளைப் பெற்று அதைப்பற்றி நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 315, திரு. கோவை தங்கம், மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

[2002 மே 8

**315—**

**நிவாரணம்**

***7309—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் அடங்கிய எஸ்டேட் பகுதியில் யானைகள் புகுந்து வீடுகளை இடித்துத் தள்ளியது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) வீடு இழந்துள்ள தொழிலாளர்களின் குடும்பத்திற்கு உடனடி நிவாரணம் தரவும், வீடுகளைக் கட்டித் தரவும் அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, எஸ்டேட் பகுதியிலே யானைகள் புகுந்து வீடுகளைத் தாக்குவது குறித்து அரசினுடைய கவனத்திற்கு வரப்பெற்றிருக்கிறது. அப்படிப்பட்ட தாக்குதலுக்கு உள்ளான அந்த வீடுகளுக்கு ரூ.5,000/- வரை இழப்பீட்டுத் தொகை வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை High Forest-ல் குடியிருக்கின்ற மாரியப்பன் வீடு, சாலமன் வீடு, கருமலை, வெள்ளமலை, காஞ்சமலை, உருளிக்கல் போன்ற பல்வேறு எஸ்டேட்டுகளில் பணி புரிகின்ற தொழிலாளர்களுடைய வீடுகள் எல்லாம், யானைகளால் தாக்கப்பட்டு இருக்கின்றன. மேலும், நல்லகாத்து, சிங்கோனா, தாய்முடி போன்ற பள்ளிகளையும், அங்கே இருக்கின்ற சத்துணவுக் கூடங்களையும் யானைகள் இடித்து நொறுக்கிவிட்டன. அதற்கு அருகில் இருக்கின்ற High Forest-லே மருத்துவமனையும் இடிக்கப்பட்டுவிட்டது. மேலும் High Forest-லே கடந்த 1-½ ஆண்டுகளுக்கு முன்பாக கதிர்வேல் என்பவர் யானையால் அடித்து, மிதித்து கொலை செய்யப்பட்டார்.....

முற்பகல் 10-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொல்லப்பட்டார். அவ்வளவுதான்.

**திரு. கோவை தங்கம்:** அதேபோல் தாய்முடி எம்.சி. எஸ்டேட்டில் மாரியப்பன் என்பவர் யானையால் கொல்லப்பட்டார். மாண்புமிகு



2002 மே 8]

பேரவைத் தலைவர் அவர்களே, 1½ ஆண்டு காலமாகியும் அந்த High Forest-லே இறந்த கதிர்வேல் என்பவருக்கு மத்திய மாநில அரசுகளுடைய உதவிப் பணம் கிடைக்கவில்லை. ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நான் கேட்டுக்கொள்வதெல்லாம், உடனடியாக மத்திய அரசை வற்புறுத்தி, யானையால் தாக்கப்பட்டு இறந்தவர் குடும்பத்திற்கு உடனடியாக நிவாரணத்தொகை கிடைப்பதற்கு, துரித நடவடிக்கை எடுப்பதற்கு மாநில அரசு வற்புறுத்துமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட சம்பவங்களுக்காக மத்திய அரசிடமிருந்து ரூ.20 இலட்சம் இதுவரை பெறப்பட்டு, தரப்பட்டிருக்கிறது. மேலும் இப்படிப்பட்ட சம்பவங்களில், தாக்கப்பட்டவர்களுக்கு உதவிட, மத்திய அரசிடம் மாநில அரசு பல்வேறு நிலையிலே வற்புறுத்தி வந்திருக்கிறது. இன்னும் சில காலங்களிலே அந்தத் தொகை வரவிருக்கிறது. வந்தவுடன் அத்தனை பேர்களுக்கும், பாதிக்கப்பட்ட மற்ற அத்தனை பேர்களுக்கும் தரப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குடும்பத் தலைவன் யானையால் மிதிபட்டு, இறந்து, அந்தக் குடும்பம் பாழடைந்த பிறகு 1½ ஆண்டு காலமாகியும் அந்தக் குடும்பத்திற்கு மத்திய அரசு உதவி வழங்க முன்வரவில்லை என்று சொன்னால் இனி எப்பொழுதுதான் மத்திய அரசு அந்த நிவாரணத் தொகையை வழங்க முன்வரும் என்பதைக் கேட்க விரும்புகிறேன். அதுவரையில் அந்தக் குடும்பத்தினுடைய நிலை என்ன என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உணர்ந்து, உடனடியாக மத்திய அரசு காலதாமதம் செய்யாமல், குடும்பச் சூழலை உணர்ந்து—காடுகளிலே இறக்கின்றவர்கள் சாதாரண ஏழை எளிய தொழிலாளிகள். அவர்கள் இறந்துவிட்டால் அவர்களுடைய குடும்பத்திற்கு வேறு வழியில்லை என்பதை உணர்ந்து—மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மத்திய அரசிடம் உடனடியாக நிவாரணத் தொகையைப் பெற்று வழங்குவதற்கு உதவிபுரிய முன்வருவாரா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கூற்று உண்மையாகத்தான் இருக்கும் என்றாலும், மத்திய அரசிடத்திலேதான் இதை வலியுறுத்திட வேண்டும். இதற்கு முன்னால் 50 ஆயிரம் ரூபாயாக இருந்த அந்தத் தொகை, நம்முடைய முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களுடைய

சீரிய பரிசீலனைக்குப் பின்னால், 1 இலட்சம் ரூபாயாக ஆக்கப்பட்டிருக்கிறது. அது அந்தக் குடும்பத்தினருக்கும் கிடைக்கக் கூடிய வகையில் இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 316, திரு. எ.வ. வேலு, மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

**316—**

**பயிர் பாதுகாப்பு**

**•19864—திரு. எ.வ. வேலு:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாத்தனூர் காட்டுப் பகுதியில் பயிரை அழிக்கும் காட்டுப் பன்றிகளிடமிருந்து விவசாயிகளின் பயிரைப் பாதுகாக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சாத்தனூர் காட்டுப் பகுதியில் பயிரை அழிக்கும் காட்டுப்பன்றிகளிடமிருந்து விவசாயப் பயிர்களைக் காக்க வேண்டுமென்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்விக்கு நல்ல நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எ.வ.வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தனூரை உள்ளடக்கி சாத்தனூர் காட்டுப்பகுதி, Forest Range, மூமலை Forest கல்லமடை Forest என்று 3 Forests Range-லே இருக்கின்றன. கிட்டத்தட்ட சாத்தனூர், வீராணம், சிறுப்பாக்கம், சேர்ப்பாபட்டு, கூடலூர், வானாபுரம், தென்கரும்பூர், கொட்டையூர் ஆகிய கிராம விவசாயிகள் 1,500 ஏக்கராவிலே பயிர் வைக்கிறார்கள். ஆனால் காட்டுப் பன்றிகள் அடிக்கடி வந்து 1500 ஏக்கரா பயிரையும் வீண் செய்துவிட்டு, போய்விடுகின்றன. விவசாயிகளால் அதைத் தடுக்க முடியவில்லை. அப்படித் தடுத்தால், வனப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் அவர்கள்மீது





வழக்குப் போடப்படுகிறது. எனவே அரசிடம் இதற்கு முள்வேலி அமைக்கிற திட்டம் இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-55

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முள்வேலி அமைக்கப்படவேண்டுமென்று சொன்னார்கள். காடு முழுவதையும் சுற்றி முள்வேலி அமைப்பது என்பது இயலாத காரியம். என்றாலும், அங்கேயிருக்கிற கிராமப் பொதுமக்களுடைய ஒத்துழைப்போடு, விளைநிலங்களில் காட்டுப் பன்றிகள் நுழைந்து பயிர்களுக்குச் சேதம் ஏற்படுத்தாவண்ணம் தடுக்க, தீப்பந்தங்களைக் கொளுத்தியும், பட்டாசுகளை வெடித்தும் அந்த வனவிலங்குகளைக் காட்டுக்குள் அனுப்புகிற ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. கம்பி வேலிகள் ஒரு சில இடங்களிலே அமைக்கப்பட்டிருக்கின்றன. என்றாலும், நிதிநிலை சீர்கெட்டு இருக்கிற நேரத்தில் முழுமையாக அதைச் செய்ய இயலாது. நிதிநிலை அதிகமாகும் சூழ்நிலை இருக்குமேயானால், அதற்குப் பின்னாலே அது பரிசீலிக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.கே. செல்வராஜ்.

**திரு. ஏ.கே. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுப் பகுதிகளிலே விவசாயம் செய்கின்ற பயிர்களுக்கும், காட்டுப் பகுதிகளை ஒட்டியிருக்கிற விவசாயப் பகுதிகளுக்கும் காட்டு விலங்குகளான பன்றிகள், யானைகள் மிகப் பெரிய சேதத்தை ஏற்படுத்துகின்றன. என்னுடைய தொகுதியைச் சார்ந்த, மேட்டுப்பாளையம் பகுதியிலே கோபனாரி, பெத்திக் குட்டை போன்ற கிராமங்களில் யானைகளாலே மிகப் பெரிய அளவிலே சேதம் ஏற்பட்டு, அரசாங்கத்திடம் நட்டஈடு பெறுவதற்கு வருவாய்த் துறை மற்றும் வனத் துறையின் மூலமாக அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன. நாளது வரையிலே பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்டஈடு கிடைக்கவில்லை. ஆகவே அரசு அந்தப் பணத்தை விரைவாக வழங்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும் கோபனாரி, பில்லூர் போன்ற மலைவாழ் மக்கள் வசிக்கிற பகுதிகளிலே ஒரே காட்டு யானை 4 பேரை அடித்துக் கொன்றிருக்கிறது. இதுசம்பந்தமாக நம்முடைய வனத் துறையின் மூலமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டும்கூட, அந்த யானையை அந்தப் பகுதியிலிருந்து விரட்ட முடியாத சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. அந்த யானையாலே கொல்லப்பட்டவர்களுக்கு அரசாங்கத்திடமிருந்து

நிதியும் வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த யானை ஒரே பகுதியிலே 1 பேரைக் கொன்றிருக்கிறது. ஆகவே அந்தப் பகுதியிலேயிருந்து அந்த யானையை விரட்டுவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யானைகளுடைய கேள்வி முடிந்து, காட்டுப்பன்றிகளுடைய கேள்விக்கு வந்துவிட்டாலும்கூட, நம்முடைய உறுப்பினரவர்கள் சொல்லிட்ட இவற்றுக்கெல்லாம் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ.வ. வேலு.

**திரு. எ.வ.வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுப் பன்றிகளை விரட்டுவதற்கு தீப்பந்தங்களைக் கொளுத்திக்கொண்டு போகவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். பொதுவாக இந்தத் தீப்பந்தங்களையெல்லாம் கண்டு யானைதான் ஓடுமே ஒழிய, காட்டுப் பன்றிகள் ஓடுவதில்லை. நான் சொன்ன சாத்தனூர் ரேஞ்சிலே 15 கிராமங்கள் இருக்கின்றன--ஆயிரக்கணக்கான ஏக்கரில் தொடர்ந்து பயிர் செய்கிற பகுதிகள். அந்தப் பகுதியிலே இரவு நேரங்களிலே தினமும் விவசாயி படுத்துக் கொண்டிருக்க முடியாது. ஒரு திட்டத்தின் மூலம் அரசு முள்வேலி போடவேண்டும். அப்படி விவசாயிகள் பயிர்களை காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்று மின்சார வேலி அமைத்தால், அதற்கு அரசாங்கம் மின்சார வேலி அமைப்பது தவறு என்ற சட்டத்தின்கீழ் கொண்டு வந்து அவர்களைக் கைது செய்கிறார்கள். பன்றிகளை அடித்துத் துரத்தலாம் என்றால், வனப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் அவர்களைக் கைது செய்கிறார்கள். இந்த நிலை இருந்து கொண்டிருக்கிறது. எனவே காட்டிலாகாவைப் பொறுத்தவரையில்-- தமிழக அரசாங்கத்திற்கு, பராமரிக்கிற அதிகாரம் இருக்கிறது—அது மத்திய அரசின் கையிலே முழுமையாக இருந்து கொண்டிருக்கிறது. எனவே தமிழ்நாட்டிலேயுள்ள அனைத்து காட்டுப் பகுதிகளிலும், குறிப்பாக திருவண்ணாமலை மாவட்டத்தில் என்னுடைய தொகுதியில் இருக்கிற அந்தக் காட்டுப் பகுதிகளிலே முள்வேலி அமைக்கிற திட்டத்திற்கு இந்த அரசு பரிந்துரை செய்து மைய அரசுக்கு எழுதி பெரும் நிதியைப் பெறுவதற்கு முயற்சி செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,





காட்டுப் பன்றிகளைப் பற்றி மிகச் சிறப்பாக மாண்புமிகு உறுப்பினரவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அந்தக் காட்டுப் பன்றிகளைத் துரத்துகிற வகையில் வேலி போடுவதற்கு என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதைத் துறையின் மூலமாக ஆய்ந்தும், வனத் துறை அலுவலர்களுக்கு என்னென்ன கட்டளைகளை இடவேண்டுமோ அவற்றையெல்லாம் செய்தும் உறுப்பினருடைய கோரிக்கைகள் சிறப்பாகச் செய்து முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வன விலங்குகளைப் பாதுகாப்பதற்கு மத்திய அரசு முன்னுரிமை கொடுத்து பல திட்டங்களை உருவாக்கியிருக்கிறது. ஆனால் இப்போது நாம் என்ன பார்க்கிறோம் என்றால், யானைகளும், காட்டுப் பன்றிகளும் குடிப்பதற்கு போதுமான அளவுக்கு காட்டிலே அவற்றுக்கு தண்ணீர் கிடைக்கவில்லை என்ற காரணத்தால் கிராமப் பகுதிகளுக்கு தண்ணீரைத் தேடி வருகிற நேரத்திலே, அங்கே இருக்கிற பயிர்களை அழிப்பதும், அந்த வழியிலே சந்திக்கக் கூடியவர்களைக் கொல்வதும் போன்ற நடவடிக்கைகள் நடந்துகொண்டிருக்கின்றன. *(மணியடிக்கப்பெற்றது)*

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையின் முன்அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அந்த மாதிரி நேரங்களிலே பாதிக்கப் பட்டவர்களுக்கு அரசு நிவாரணம் கொடுக்க முடியவில்லை. ஆகவே மத்திய அரசோடு கலந்து கொண்டு இந்த வன விலங்குகளுக்குத் தேவையான குடிதண்ணீர் காடுகளிலே கிடைப்பதற்கும், அவை தண்ணீர் தேடி கிராமங்களுக்கு வந்து மக்களைத் தாக்கக்கூடிய நிலையைத் தவிர்ப்பதற்கும் அரசு தகுந்த நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றுகூட ஒரு வினாவுக்குப் பதிலளிக்கும்போது குறிப்பிட்டேன். அதே பதிலைத்தான் இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். யானைகளுக்கும் இப்போது தண்ணீர்ப் பிரச்சினை அங்கே ஏற்பட்டிருக்கிறது என்று உறுப்பினர்கள் எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அந்த உணர்வோடு இந்தப் பகுதியிலே

[2002 மே 8

தடுப்பணைகள் கட்டி, வனத் துறையின் மூலமாக குட்டைகள் வெட்டப்பட்டு, தண்ணீர் நிறுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும். அதற்காக ஒரு தனித் திட்டமே இப்போது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் செய்யப்பட இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி மல்லிகா சின்னசாமி.

**திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் புலிவலம், ஓமாந்தூர் பகுதிகளில் காட்டு மாடுகள் விவசாயம் செய்யக்கூடிய மக்களின் விவசாயத்தை அழித்து வருகின்றன. பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை ஏற்று, மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனுக்கள் கொடுத்தேன். அவர் இந்தத் துறைக்குக் கொடுத்தார். அவர்கள் இதற்கு நிதி எங்களிடம் இல்லை என்று என்னிடம் கூறினார்கள். ஆகவே அப்பகுதியில் விவசாயிகளின் நெற்பயிர்களை அழித்துவரும் காட்டு மாடுகளை தடுப்பதற்குக் கிடங்குகள் வெட்டவேண்டும். அதற்கு எங்களிடம் நிதி இல்லையென்று கூறினார்கள். ஆகவே அமைச்சர் அவர்கள் இந்தக் காட்டு மாடுகளை தடுப்பதற்குக் கிடங்குகளை வெட்டுவதற்காக நிதி ஒதுக்கித் தருவார்களா என்பதை அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கென்று தனி நிதி ஒதுக்கீடுகள் எல்லாம் இல்லை. வனத் துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற நிதியிலேயிருந்து பல்வேறு தடுப்பணைகள் கட்டப்படுகின்றன. அதேபோன்று நம்முடைய உறுப்பினர் அவர்கள் சொல்லிய பகுதியிலேயும் அப்படிப்பட்ட தடுப்பணைகள் மூலமாக தண்ணீர் வசதி செய்யப்பட்டு காட்டெருமைகள் வராதவகையிலே செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டு யானைகளும் பன்றிகளும் இன்றைக்கு நம் சட்டமன்றத்தையே ஆக்கிரமித்துக் கொண்டன. வினா நேரம் பூராவும் அந்தக் கேள்விக்குப் போய்விட்டது. இருந்தாலும் காட்டு யானைகளாலும் பன்றிகளாலும் மனிதர்கள் உயிரை இழக்கிறபோது நிவாரணம் வழங்கப்படுகிறது. ஆனால் உள்நாட்டிலே இருக்கிற நாய்க்கடி அதிகரித்துக்கொண்டே இருக்கிறது—



2002 மே 8]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. இது மூலக் கேள்விக்குத் தொடர்பற்றது.

**திரு.ஜி. பழனிசாமி:** இல்லை, இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 317, திரு. ப. பொன்னம்பலம், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**317—**

## இழப்பீட்டுத் திட்டம்

***7243—திரு. ப. பொன்னம்பலம்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் ஏழைகளின் பசுமாடு இறந்தால் இழப்பை ஈடுசெய்ய வருவாய்த் துறை மூலம் ரூ.5,000/- வழங்கப்பட்ட திட்டம் நடைமுறையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த வருடமும் வழங்கப்படுமா?

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் ஏழைகளின் பசுமாடு இறந்தால் இழப்பீடு செய்ய வருவாய்த் துறை மூலம் ரூ.5,000/- வழங்கும் திட்டம் எதுவும் இத்துறையில் நடைமுறையில் இல்லை.

(ஆ) எழாது.

**திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உழைப்பதற்கு உடம்பில் தெம்பு இல்லாத ஏழை விவசாயிகள் ஜீவனத்திற்காக மாடுகள் வாங்குவதற்குக்கூட பணம் இல்லாமல் கடன் பெற்று பசு, எருமை மாடுகளை வாங்குகிறார்கள். அவர்களது குடும்பம் முழுவதும் அந்த மாடு கறக்கும் பாலை விற்றுப் பிழைக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் அவர்களிடம் உள்ள மாடுகள் இறந்துவிட்டால் அவர்களுடைய குடும்பமே வாழ வழியில்லாமல் நிர்க்கதியாய் ஆகிவிடுகின்றன. எனவே தாயுள்ளம் கொண்ட தங்கமான தலைவி, ஏழைகள்மீது இரக்கம் கொண்ட ஏந்தல், புரட்சித்தலைவி அம்மா

அவர்கள் அரசு இதை மறுபரிசீலனை செய்து ரூபாய் ஐயாயிரம் வழங்க ஆவன செய்யுமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பரிவோடு கேட்ட கேள்விகளுக்கு, புயல் மழை வெள்ளம் போன்ற இயற்கை இன்னல்களால் இறந்துபோகும் கால்நடைகளுக்கு மட்டும்தான் கால்நடை உதவி மருத்துவர், உதவி இயக்குநர் மற்றும் மண்டல இணை இயக்குநர் பரிந்துரையின்பேரில் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களால் அரசு நிர்ணயித்தபடி நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது. வேறு எந்தச் சூழ்நிலையிலும் இறந்து போகும் கால்நடைக்கு நஷ்டயீடு எதுவும் இதுவரை இத்துறையினால் வழங்கப்படவில்லை என்பதையும் தங்களின் மூலம் இப்பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*முற்பகல் 11-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 318, திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்.

**318—**

## பட்டுச் சேலைகள்

***19116—திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆரணி தொகுதியிலுள்ள பெரும்பான்மையான ஊர்களில் பட்டுச் சேலைகள் அதிகமாக உற்பத்தியாகி விற்பனை குறைந்து சேலைகள் தேங்கிக் கிடப்பதைக் களைய பட்டுக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கொள்முதல் செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆரணி தொகுதியிலுள்ள பெரும்பான்மையான ஊர்களில் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை குறைந்து பட்டுச் சேலைகள் தேங்கிக்





கிடப்பதைப் பட்டுக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கொள்முதல் செய்ய வழிவகை இல்லை என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும்' என்பதைப் போல அம்மாவின் அரசிலே ஒரு மாதத்திற்கு முன்னால் போட்ட இந்தக் கேள்விக்கு இன்றைக்கு விடை கிடைத்திருந்தாலும் நேற்றைய முன்தினம் அம்மா அவர்களே தேங்கிக் கிடக்கின்ற சேலைகளை எல்லாம் அரசே கண்காட்சிகள் மூலமாகவும் அல்லது ஏலம் மூலமாகவும் விற்க பரிசீலிக்கப்படும் என்று உறுதி அளித்ததாலும் இன்றைக்குத் தேங்கிக் கிடக்கின்ற சேலைகளும் ஓரளவிற்குக் குறைந்து இருக்கின்ற காரணத்தினால் நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஒரே ஒரு துணைக் கேள்வி. நான் கேட்பது எல்லாம் ஆரணி தொகுதியில் தனியார் பட்டு நெசவாளர்கள் நிறைய இருக்கிறார்கள். அம்மாவின் ஆட்சி இருந்தபோதுதான் 1992 ஆம் ஆண்டு அன்றைக்குக் கூலி உயர்வு பெற்றுத் தரப்பட்டது. அதற்குப் பின்னால் 10 ஆண்டுகள் ஆகின்றன. இதுவரையிலும் தனியார்களிடம் நெய்கிற கூலி நெசவாளர்களுக்கு அந்தக் கூலி உயர்வைப் பெற்றுத் தர முடியவில்லை. ஆகவே அம்மாவினுடைய ஆட்சி மீண்டும் வந்திருப்பதால் தனியாரிடம் நெய்கிற நெசவாளர்களுக்கு மறுபடியும் கூலி உயர்த்தித் தரப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதற்காக ஒரு குழு அமைக்கப்படுமா? அல்லது தனியாக ஓர் உத்தரவு போடப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1948 ஆம் வருடத்திய குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின்கீழ் கைத்தறி நெசவுத் தொழிலுக்குக் குறைந்தபட்ச ஊதிய ஆணையை நடைமுறைப்படுத்த தற்போது தொழிலாளர் நலத் துறையிலுள்ள அலுவலருக்கு அதிகாரம் வழங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. கைத்தறித் தொழிலுக்குக் குறைந்தபட்ச ஊதியம் தொடர்பாக அவ்வப்போது வெளியிடப்படும் ஆணைகள் அடிப்படையில் கூட்டுறவு அமைப்புகளின்கீழ் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு அடிப்படைக் கூலி உயர்வும் ஒவ்வோர் ஆண்டும் அடிப்படைக் கூலியில் 10% அகவிலைப்படி உயர்வும் வழங்கப்பட்டு வருகிறது. கூட்டுறவு அமைப்பிலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு ஒவ்வொரு வருடமும் 10% அகவிலைப்படி வழங்கப்படுவதைப்போல தனியார் நெசவாளர்களுக்கு அகவிலைப்படி,

வழங்கப்படாததால் நெசவுக் கூலியில் இரண்டு பிரிவினருக்கும் இடையில் அதிக வித்தியாசம் உள்ளது. தனியார் நெசவாளர்கள், கூட்டுறவு நெசவாளர்களுக்கு இணையாக கூலி உயர்வு வழங்கக் கோரி அவ்வப்போது போராட்டம் செய்து வருகின்றனர். தனியார் நெசவாளர்களுக்கும் குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தினை கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் மூலம் செயல்படுத்தினால் மேற்கூறிய பிரச்சினையை நிவர்த்தி செய்ய இயலும். கூட்டுறவு நெசவாளர்களுக்கும் தனியார் நெசவாளர்களுக்கும் ஒரே அளவிலான நெசவுக் கூலியினை நடைமுறைப்படுத்த--ஏதுவாக குறைந்தபட்ச ஊதிய சட்டத்தினை--கைத்தறி மற்றும் துணிநூல் துறைக்கு அதிகாரம் வழங்க, தக்க ஆணைகள் வெளியிடக் கோரி அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பப்பட்டுள்ளது. அது அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதையும் தங்களின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 319, திரு. செ. வெங்கடாஜலம், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

**319—**

**மீன் விற்பனை**

***13170—திரு. செ. வெங்கடாஜலம்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாநகரில் தரமான மீன்களை நியாயமான விலையில் விற்பதற்குச் சில்லறை மீன் விற்பனை அங்காடிகள் அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேலம் மாநகரில் சில்லறை மீன் விற்பனை அங்காடி அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன் உணவை, தற்போது ஆட்டுக்கறி, கோழிக்கறியைவிட மக்கள் அதிகமாக





விரும்புகிறார்கள். ஏனெனில் கொழுப்புச் சத்துக் குறைவானது; விலையும் குறைவானது. மேலும் புரதச் சத்து அதிக அளவில் இருப்பதாக மருத்துவர்களும் கூறி வருகின்றனர். மேலும் நேற்று ஆளுநர் விருந்தில்கூட மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் மீனையே அதிகம் விரும்பிச் சாப்பிட்டார்கள் என்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்றேன். அதனால் மக்கள் விரும்புகின்ற மீனை, குறிப்பாக சேலம் மாநகரில், சுகாதாரமற்ற முறையில் சாலையோரங்களில் குறிப்பாக சந்தைப்பேட்டை, அம்மாப்பேட்டை, தாதகாபட்டி, அஸ்தம்பட்டி, கருவாட்டுமண்டிப் பாலம், ஐந்து ரோடு, நெத்திமேடு, சூரமங்கலம் போன்ற பகுதிகளில் மீன்களைக் கூறு போட்டு விற்பனை செய்து கொண்டிருக்கிறார்கள். மேலும் அந்த இடங்களில் செதில்களை செதுக்கி சுத்தப்படுத்தும்போது மாசு ஏற்படுகிறது; சுகாதாரக் கேடு ஏற்படுகின்றது. எனவே மீனவர் நலன் கருதியும், சேலம் மாநகர மக்களுக்கு சுகாதாரமான முறையில் நல்ல தரமான மீன்கள் நியாயமான விலையில் கிடைக்கின்ற வகையில் மீன் அங்காடிகளை வருமாண்டில் நடைமுறைப்படுத்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-10

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் அணை மீனவர் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் அங்காடி சேலத்தில் மீன் விற்பனைச் செய்து வருகிறது. சுகாதாரமான முறையில் மீன் விற்பனை செய்திட தமிழகத்தில் முதல் கட்டமாக கடலோர மாவட்டங்களில் 10 இடங்களில் நவீன வசதிகள் கொண்ட மீனவர் அங்காடிகள் கட்ட இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு 2001-2002-ல் ஆணையிட்டது. அந்த வகையிலே வேலைகள் நடைபெற்று வருகின்றன. தற்போது இந்த நிதியாண்டில் மீனவர் அங்காடி அமைக்கும் திட்டம் எதுவுமில்லை. வருகின்ற ஆண்டில் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று மீனவர் அங்காடி சேலத்தில் அமைப்பது பற்றி இந்த அரசு சிந்திக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

**[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி(*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]**

[2002 மே 8

## 2. தகவல் கோரல்

**(அ) செய்யாறு கூட்டுறவு கரும்பு விவசாயிகள் பிரச்சினை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழகத்தின் பல பகுதிகளில்...

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒவ்வொருவராகச் சொல்லுங்கள், திரு. ஜி.கே.மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்யாறு கூட்டுறவு விவசாயிகள் பிரச்சினை பற்றி, கரும்பு விவசாயிகள் பிரச்சினை பற்றி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னுடைய ஆய்வில் இருக்கிறது. எடுத்துக்கொள்ள முடியுமா என்று பார்க்கிறேன். (குறுக்கீடு) நாளை என்னுடைய அறைக்கு வாருங்கள், பார்க்கலாம். திரு. புகழேந்தி.

**(ஆ) நாகப்பட்டினம், கீச்சாங்குப்பம் மீனவர் கிராம மக்கள் பிரச்சினை**

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மாதம் 21 ஆம் தேதி நாகப்பட்டினம், கீச்சாங்குப்பம் மீனவர் கிராமத்திலே வசிக்கக்கூடிய மக்கள்மீது......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கவன ஈர்ப்புதான், அறைக்கு வாருங்கள், அதைப்பற்றி பேசுவோம். உட்காருங்கள். திரு. ஹேமச்சந்திரன்.

**(இ) வாணியம்பாடி காவல் நிலையத்தில் குறவர் சமுதாயத்தினர்**

**திரு. ஜே.ஹேமச்சந்திரன்:** Speaker Sir, வாணியம்பாடி காவல் நிலையத்திலே குறவர் சமுதாயத்தைச் சார்ந்த......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். என் ஆய்வில் இருக்கிறது. திரு. ஞானசேகரன்.



2002 மே 8]

**(ஈ) 209 டி.எம்.சி. தண்ணீர் அளித்துவிட்டதாக கர்நாடக முதல்வர் கடிதம் எழுதியதாக வந்த செய்தி.**

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய பத்திரிகையில் 209 டி.எம்.சி. தண்ணீரை ஏற்கெனவே விட்டுவிட்டதாக கர்நாடக முதல்வர் நம்முடைய முதல்வருக்கு ஏற்கெனவே கடிதம் எழுதியிருப்பதாகப் பரவலாக இப்போது செய்தி வந்திருக்கிறது. அது உண்மையா? நம்முடைய மாநிலத்திற்குக் குறைந்த தண்ணீர் கொடுத்த காரணத்தினால்தான் இப்போது மேட்டூர் அணை வற்றியிருக்கிறது. ஆகவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் மீண்டும் கர்நாடக முதல்வருக்குப் பதில் எழுதி உண்மை நிலையை விளக்கி இருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு

**தமிழகத்தில் அடிக்கடி மின்வெட்டு ஏற்படுதல்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழகத்தின் பல பகுதிகளில் அடிக்கடி மின்வெட்டு ஏற்படுவது குறித்து திரு. சி. ஞானசேகரன், திரு. ஜி. பழனிசாமி, திரு. பி.எஸ். உலகரட்சகன், திரு. அ.இரா. மலையப்பசாமி, திரு. எ.வ. வேலு, திரு. ஜி.கே. மணி, திரு. கா. கந்தசாமி, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், திரு. ப. அரசன், திரு. அ. வெங்கடாசலம், திரு. டி. மணி, திரு. ஜே. ஹேமச்சந்திரன், திரு. வி. ஜெயராமன், திரு. ஆ. ராஜகோபால், திரு. மு.பெ. சாமிநாதன், திரு. ஆர். சக்ரபாணி, திரு. கு. பிச்சாண்டி, திரு. கி. பாரிமோகன், திரு. க. முருகவேல் ராஜன், திரு. கோவை தங்கம், திரு. ஐ. கணேசன் ஆகியோர் கவன ஈர்ப்பிற்கு அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்வதற்கு அனுமதி அளிக்கிறேன்.

அறிவிப்பு குறித்து மட்டும் சுருக்கமாகப் பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன். முதலில் திரு. எ.வ. வேலு.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி பகுதியிலே இப்ப வருமோ அது எப்ப வருமோ என்கிற அடிப்படையிலே மின்சாரம் அவ்வப்பொழுது நின்றுவிடுகிறது. ஒரு குறிப்பு எடுத்துப் பார்க்கிறபோது 15-4-2002-லிருந்து 25-4-2002 வரை 11 தினங்கள். அதிலே 15 ஆம் தேதி பார்க்கிறபோது 4 முறை நின்றிருக்கிறது. கிட்டத்தட்ட 2 மணி 30 நிமிடம். அதேபோன்று

17-1-2002 அன்று 3 முறை நின்றிருக்கிறது. 2.5 அதாவது 2 மணி 5 நிமிடம். அதே போன்று 18-1-2002 அன்று 4 முறை, 19-4-2002 அன்று 3 முறை, 22-1-2002 அன்று 3 முறை, 2½ மணி நேரம். இப்படி தினமும் 2 முறை, 3 முறை என்று.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேலு, நீங்கள் அப்போது ஊரிலேயில்லை, இங்கேயல்லவா இருந்தீர்கள். (குறுக்கீடு) சரி.

**திரு. எ.வ. வேலு :** சம்சாரம் இல்லாமல் வாழலாம், மின்சாரம் இல்லாமல் வாழ முடியாது. ஏனென்றால் வெயில் நாள். நாங்கள் இரவில் போனால் current இல்லையென்றால் - Fan இல்லையென்றால் தூங்க முடியவில்லை. அதேநேரத்தில் இன்றைக்கு கொசுக்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் மின்சாரம் இல்லாமல் தூங்க முடியாது. இதைவிட இன்றைக்கு மின்சாரம் இல்லையென்று சொன்னால் திருட்டுகளும் கூட அதிகமாக நடைபெறுகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. மின்சாரம் இல்லாததினால் ஏற்படக்கூடிய விளைவுகளைப் பற்றியெல்லாம் விளக்க உரையாற்றக்கூடாது. மின்வெட்டு எங்கெங்கே ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பற்றிச் சொல்லுங்கள். அவ்வளவுதான்.

**திரு. எ.வ. வேலு:** எனவே இந்த 11 நாட்களுக்கு மட்டும், அதாவது 15 ஆம் தேதியிலிருந்து 25 ஆம் தேதி வரை 11 நாட்களுக்கு மட்டும் கணக்கெடுத்துப் பார்க்கிறபோது இந்த 11 நாட்களிலே 20 மணி நேரம் 55 நிமிடம். 10:1 என்ற அளவுக்கு 11 நாளில் 10 நாள் கழித்துப் பார்த்தால் 24 மணி நேரம் ஒரு நாளைக்கு 20.55 நிமிஷம் கரண்டே இல்லை என்று சொல்கிறபோது எதுவும் குறிப்பிட்ட முறையிலே செய்ய முடியவில்லை. வீட்டுக்குப் போனால்கூட காலையில் டிபன் போடுங்கள் என்று சொன்னால் கரண்ட் இல்லை இப்போது எதுவும் முடியாது என்று சொல்கிற நிலை இருக்கிறது.

முற்பகல் 11-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுருக்கமாகச் சொல்லுங்கள். ஏனென்றால் இன்னும் 6 பேர் இருக்கிறார்கள். (குறுக்கீடு)

**திரு. எ.வ. வேலு:** இன்றைக்கு அடிக்கடி மின்சாரம் போய் விடுகிறது. திருவண்ணாமலை ஓர் ஆன்மீக நகரம். அங்கே பௌர்ணமி அன்று பார்த்தால் கிட்டத்தட்ட 5 இலட்சம், 10 இலட்சம் பேர் வந்துகொண்டிருக்கிறார்கள். திடீரென்று மின்சாரம் நின்றுவிடுகிறது. அந்த



நேரத்தில் திருடுகள் நடைபெறுவதற்கு வாய்ப்பு வந்துவிடுகிறது. எனவே அறிவிக்காத மின்சாரத் தட்டுப்பாடு இருப்பது இந்த அரசின் கவனத்திற்குத் தெரியுமா? அதைத் தடுப்பதற்கு வேண்டிய முயற்சிகளை இந்த அரசாங்கம் எடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன ஜெமினி என்ன?

**திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:** திரு. எ.வ. வேலு அவர்கள் பேசும்போது, ஆரணி என்று ஆரம்பித்தார். ஆரணி தொகுதி சட்டமன்ற உறுப்பினரான நான் அடிக்கடி ஆரணியில் இருக்கிறேன். தண்டராம்பட்டில் இருப்பவர் ஆரணியைப் பற்றிக் கேட்கிறாரே? அவர் ஆரணியைப் பற்றிச் சொல்கிறாரா? அல்லது தண்டராம்பட்டைப் பற்றிச் சொல்கிறாரா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது கவன ஈர்ப்புத் தீர்மானம் உட்காருங்கள். திரு. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இன்று பல்வேறு பகுதிகளில் அடிக்கடி அறிவிக்கப்படாத மின்வெட்டு ஏற்பட்டு மக்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள். சென்ற வாரம் என்னுடைய வேலூர் பகுதியில், ராணிப்பேட்டை பகுதியில் 2 நாட்களில் 100 முறை கரண்ட் ஆஃப் ஆகிவிட்டது. பத்திரிகைகளில் எல்லாம் 2 நாட்களில் மின்சார வாரியம் செஞ்சுரி அடித்து விட்டது என்று கிரிக்கெட்டைப் போல் இன்று கமெண்ட்ரி எழுதக்கூடிய அளவுக்கு என்னுடைய பகுதியில் அடிக்கடி மின்வெட்டு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அதனால், டி.வி.-க்கள் எல்லாம் சில நேரங்களில் ரிப்பேர் ஆகிவிடுகிறது. மோட்டார் ரிப்பேர் ஆகிவிடுகிறது. விவசாயிகளைப் பொறுத்த அளவில் பகலில் 2 மணி நேரமும், இரவில் 4 மணி நேரமும் மட்டும் இப்போது மின்சாரம் கிடைக்கிறது. ஆகவே விவசாயிகள் எந்தவிதமான விவசாயத்திற்கும் தண்ணீரைப் பயன்படுத்த முடியவில்லை.

இப்போது மாணவர்கள் தேர்வுக்கு படித்துக் கொண்டிருக்கிறார்கள். அதேபோல் கோடை காலமாக இருக்கிற காரணத்தினாலே Fan இல்லாமல் தூங்கவே முடியவில்லை. விளக்கு இல்லாமல் இருக்க முடியவில்லை என்கிற நிலை இருக்கிற காரணத்தினாலே—ஏன் இப்படிப்பட்ட மின்வெட்டு ஏற்படுகிறது? ஒரு வேளை நமக்கு நெய்வேலியிலிருந்து கிடைப்பது குறைகிறதா? அல்லது மேட்டூரில்

குறைகிறதா? அல்லது ராமகுண்டம் போன்ற பகுதிகளிலிருந்து மின்சாரம் திருடப்படுகிறதா? Grid failure எங்கேயாவது ஆகிறதா? மின்சார வாரியத்திற்கு Phone செய்தோம் என்று சொன்னால் ரிசீவரையே எடுக்கமாட்டேன் என்கிறார்கள். எப்போது பார்த்தாலும் ரிசீவர் எங்கேஜ்டாகவே இருந்துகொண்டிருக்கும். அங்கே இருக்கக்கூடிய J.E. ஆபீசில் யாரும், எந்தவிதமான பதிலையும் கொடுக்காத காரணத்தினாலேயே-இன்று பெரிய அவஸ்தைக்கு ஆளாகி இருக்கிற தமிழ்நாட்டு மக்களுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்து தொடர்ந்து மின்சாரம் கிடைப்பதற்கு ஆவன செய்ய இருக்கிறார் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய சூழ்நிலையில் சம்சாரம் இல்லாமல் வாழக்கூடியவர்கள் ஏராளமானவர்கள். ஆனால் அவர்கள் மின்சாரம் இல்லாமல் வாழ முடியாத நிலை. இன்று ஒரு நாளைக்கு ஏறக்குறைய 10 முறை, 15 முறை மின்வெட்டு ஏற்படுகிறது. இப்படி மின்வெட்டு ஏற்படுகிற காரணத்தினாலே சென்னையினுடைய புறநகர்ப் பகுதி, சேலம், தருமபுரி, ஈரோடு, கோவை, வேலூர், மதுரை போன்ற பெரு நகரங்களிலே நீர் இறைப்பதற்கு ராட்சத மின் மோட்டார் பயன்படுத்தப்படுகிறது. மின் மோட்டார் ஒரு முறை off ஆகிவிட்டால் மீண்டும் அதை start பண்ணுவதற்குக் குறைந்தது 30 நிமிடமாவது தேவைப்படும். ஆனால் 10 நிமிடத்திற்கு ஒரு முறை மின் தட்டுப்பாடு ஏற்படுகிற காரணத்தினாலே கோடை காலத்திலே குடிநீர்ப் பற்றாக்குறை இருக்கிற இந்த நேரத்திலே மின் மோட்டாரை இயக்குவது கடினமாக இருக்கிறது.

இங்கே பல உறுப்பினர்கள் சொன்ன மாதிரி இரவு நேரங்களில் தூங்குவதற்கு முடியவில்லை. விவசாயிகள் மின்சாரம் வரக்கூடிய நேரத்தில் மின் மோட்டாரைப் பயன்படுத்துவதற்கு வழி இல்லாமல் போய்விடுகிறது. இப்படி எல்லா நிலைகளிலும் மின்சாரம் இல்லாமல் குடிநீர், விவசாயம், தூங்குவதற்கு, மாணவர்கள் படிப்பதற்கு என்று எல்லா வகையிலும் பாதிப்பாக இருக்கிறது. இதிலும் அதிகாரிகள் அக்கறை காட்டவில்லை என்பதையே இங்கே எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

இன்னொன்று. தமிழகத்திற்குத் தேவைப்படுவது 6,000 மெகாவாட் மின்சாரம். ஆனால் நமக்கு தற்போது கிடைத்துக் கொண்டிருப்பது 5,400 மெகாவாட் என்று சொல்லப்படுகிறது. 600 மெகாவாட் குறைவு இருக்கிறது. இதை எப்படி ஈடு செய்யப் போகிறீர்கள்? இப்போது கோடைகாலம்





தொடங்கிவிட்ட காரணத்தினாலே, எல்லா வகைகளிலும் மின்சாரத்திற்கு அவசிய, அத்தியாவசியம் இருக்கின்ற காரணத்தினாலே, அரசு மின் துறையை முடுக்கிவிடவேண்டும். இதில் என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது? இந்த நிலையை விரைவிலே போக்குவீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 11-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரப் பற்றாக்குறை நிலை என்பது நம்முடைய மாநிலத்தினுடைய எல்லா மாவட்டங்களிலேயும் நீடிக்கின்றது. ஏற்கெனவே மாண்புமிகு மின் துறை அமைச்சருடைய கவனத்திற்கு இதை நான் கொண்டு வந்தபோது, அப்படி ஒரு நிலை இருப்பதாகக் கூறினார்கள். இந்தப் பற்றாக்குறையைப் போக்குவதற்கு, பிற மாநிலங்களிலிருந்து மின்சாரம் பெறுவதற்கு ஏதாவது முயற்சியை இந்த அரசு எடுத்துக் கொண்டதா?

எங்களுடைய குமரி மாவட்டத்திலே, வியாபாரம், மாலை நேரத்திலே, அதிகமாக நடக்கின்ற நேரத்தில், அரை மணிக்கு, முக்கால் மணிக்கு, ஒரு தடவை மின்சாரம் நின்றுவிடுகிறது. இதுதான் பெரிய சிக்கலை ஏற்படுத்தி இருக்கின்றது.

இன்னொன்று குடிதண்ணீர் கிடைப்பதற்கு ஒரு மணிநேரம்கூட மின்சாரம் இல்லையென்று சொன்னால், அப்புறம் திரும்ப மின்சாரம் வந்து, அதைச் சரி பண்ணுவதற்கு நடைமுறைச் சாத்தியம் இல்லாத நிலை இருக்கின்றது. குடிதண்ணீரே இல்லாத அந்த அளவிற்குப் பற்றாக்குறை நிலை நீடிக்கின்றது. எனவே நமக்குப் பற்றாக்குறை இருக்கின்றது என்றால், பிற மாநிலங்களிலிருந்து அல்லது எங்கிருந்தாவது, இந்தக் கோடைகாலம் வரையிலும், மின்சாரத்தைப் பெற்று, இந்தச் சிரமத்தைப் போக்குவதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை மேற்கொள்ள உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரப் பற்றாக்குறை என்பது மாண்புமிகு உறுப்பினர்கள் நினைவுபடுத்தியது போன்று இன்றையதினம் தமிழகம் முழுவதும் ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக இன்றைக்கு கிராமப்புறங்களிலே பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவது என்பதிலே, மின்சாரத் தட்டுப்பாடு

ஏற்பட்டு. முழுமையாகக் குடிதண்ணீர் கிடைக்காமல், ஜனங்களுக்கு சிரமங்களை ஏற்படுத்தியிருக்கிறது. இதை அதிகாரிகளிடம் சொல்கிறபோது, ஒரு நேரத்திலே அவர்கள் மின்சாரத்தை ஒவ்வொரு பகுதிக்கு பை-பாஸ் பண்ணி, அதைத் திருப்பிவிடுகிறார்கள். தேவையான இடத்திற்கு, எங்கு நெருக்கடி இருக்கிறதோ அந்த இடத்திற்குத் திருப்பிவிடுகிறார்கள் ஆகவே மின்சாரப் பற்றாக்குறை என்பது கோடைகாலங்களிலே வருவது சமீபத்திலே வழக்கமாக இருந்துகொண்டிருக்கிறது. அந்த வகையிலே இதில், ஓர் அறிவிப்பையாவது அரசுத் தரப்பிலேயிருந்து வெளியிட வேண்டும். இந்த ஊருக்கு இத்தனை மணிநேரம் மின்சாரம் வரும். இத்தனை மணி நேரத்திற்குக் மின்சாரம் வராது என்பதை அதிகாரிகள் மூலமாக அறிவிக்க வேண்டும். அறிவிப்பு இல்லாத மின்சாரத் தட்டுப்பாடு என்பது இன்றைக்கு ஏற்பட்டுள்ளது. உள்ளாட்சி அமைப்புகளிலே இருக்கக்கூடிய ஊராட்சி மன்ற மோட்டார் பணியாளர்கள், எந்த நேரத்திலேயும் எல்லா காலத்திலேயும் மின்சாரம் இருக்கும் என்ற அந்தக் காரணத்தினாலே, தங்களுடைய மோட்டார்களைப் பயன்படுத்தி அந்த நீர்நிலைகளிலே தண்ணீரைத் தேக்குவதற்குத் தவறிவிடுகிறார்கள். அவர்கள் ஒரு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுப்பதற்கு அரசு ஒரு முன் அறிவிப்பை வழங்க வேண்டும்.

நான் சமீபத்திலே பத்திரிகையிலே பார்த்த ஒரு செய்தி இருக்கிறது. மத்திய அரசு மின்சாரத் துறை அமைச்சரோடு பேச்சு வார்த்தை நடத்தி, தமிழகத்திற்கு மின்சாரம் வழங்குவதாக அறிவித்தது. அப்படி அறிவிக்கப்பட்டிருக்கிற மின்சாரம் நமக்குக் கிடைக்கிறதா? இல்லை கிடைக்கவில்லையா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையிலே தெரிவிக்கவேண்டும். நான் அதை எதிர்பார்க்கிறேன். அந்த வகையிலே இந்த மின்சாரத் தட்டுப்பாட்டிற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே, குறிப்பாக எங்களுடைய புதுக்கோட்டை மாவட்டத்தில் மின் தடை மிக அதிகமாக இருக்கிறது என்பதை மாண்புமிகு மின் துறை அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன்.

எங்களுடைய பகுதியில், கார்த்திகை, மார்கழி மாதங்களில்



விற்பனைக்கு வருகிற அளவிற்குத் தங்களுடைய பணப் பயிர்களை இப்போதுதான் நடவு செய்து, அங்கே இருக்கிற விவசாயிகள் தங்களுடைய விவசாய வேலைகளைத் தொடங்குகிற காலம் இந்தக் காலம். இப்போது விவசாய வேலைகளைத் தொடங்கினால்தான், அவர்களுடைய பயிர்களை நல்ல விலைக்கு விற்கிற அந்தக் காலத்திற்குப் பயிர் செய்ய முடியும் என்கிற சூழ்நிலை இருக்கிறது.

*முற்பகல் 11-25*

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலேகூட, ஆலங்குடி தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இதுபோன்று மின் தடை ஏற்பட்ட காலத்தில், எங்களுடைய அறந்தாங்கி மாநகரிலே பல்லாயிரக்கணக்கான விவசாயிகளை ஒன்றுகூட்டி, திரட்டி ஓர் ஊர்வலத்தை நடத்தியபோது, அவர்களை அழைத்து, மாவட்ட அளவிலே உள்ள அதிகாரிகள் எல்லாம் பேசினார்கள். அவர்களிடத்திலே இதற்கு என்ன செய்ய வேண்டுமென்று கேட்டார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் சொன்னதுபோல, அதிகாரிகள் எந்த நேரத்திலே மின்சாரம் வரும், எந்த நேரத்திலே மின்சாரம் கிடைக்காது என்பதை விவசாயிகளுக்கும் மற்றவர்களுக்கும் தெரிவிக்க வேண்டும் என்கிற ஓர் அரிய யோசனையை நம்முடைய ஆலங்குடி தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் அப்போது சொன்னார்.

இன்றைக்குச் சொல்லப்படாத அளவுக்கு மின்வெட்டு செய்கிறார்கள். காலையிலே விவசாயி 6 மணிக்கு தன்னுடைய மோட்டாரிலே தண்ணீர் இறைக்கலாம் என்று சென்று பார்த்தால் மின்சாரம் இருப்பதில்லை. சரி, கடைத் தெருவுக்குப்போய்விட்டு வரலாம் என்று சொல்லி அவன் கடைத் தெருவுக்குப் போய்விட்டு வருகிறபோது ஏறத்தாழ ஒரு மணி நேரம், இரண்டு மணி நேரம் கழித்து திரும்பி வருகிறபோது அங்கே மின்சாரம் வந்திருக்கிறது. 7 மணிக்கு மின்சாரம் வரும் என்று அந்த விவசாயிக்குத் தெரிந்தால் தன்னுடைய மற்ற வேலைகளை எல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு அந்த விவசாயி 7 மணிக்கு தன்னுடைய மின் மோட்டாரை இயக்குவதற்கு அந்தப் பகுதிக்குச் சென்றுவிடுவார். ஆகவே இது அதிகாரிகளிடத்திலே இருக்கிற குறை. ஒவ்வொரு வருடமும் இதுபோன்ற குறைகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு வருடமும் இதுபோன்ற அனுபவங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில் ஏன் நம்முடைய மின் துறை அதிகாரிகள் அதை ஒழுங்கு

செய்யவில்லை என்பது தெரியவில்லை. ஆகவே, நம்முடைய மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் எங்கள் பகுதியிலே இருக்கிற விவசாயிகளுடைய கஷ்டத்தைப் போக்குகிற வகையிலே, அவர்களுடைய வாழ்க்கையில் ஒளியேற்றுகின்ற வகையிலே மின் தடை ஏற்படுவதைக் குறைத்து, அல்லது மின்சாரம் இத்தனை மணிக்குத்தான் தர முடியும், இத்தனை மணி நேரம்தான் தரமுடியும் என்கிற ஒரு குறிப்பையாவது எங்களுக்கு, விவசாயிகளுக்குத் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி. ஜெயராமன்.

**திரு. வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம் என்பது பெரும்பாலும் பம்ப் செட்டுகளையே நம்பி விவசாயம் செய்கிற ஒரு பகுதி. கடந்த ஒரு வார காலமாக மின்சாரமானது விவசாயத்திற்கு விட்டுவிட்டு வருகின்ற காரணத்தாலே தொடர்ந்து நீர் பாய்ச்சி, விவசாயத்தைப் பாதுகாக்கின்ற ஒரு சூழ்நிலை இல்லாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. விவசாயிகளுடைய காக்கும் கரமாக செயல்பட்டு வருகின்ற இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு கடந்த வாரம் வரை விவசாயத்திற்கு சீராக மின்சாரத்தை வழங்கிக்கொண்டிருந்தது. இப்போது ஓடிக்கொண்டிருக்கின்ற மோட்டார்களில் அடிக்கடி மின்சாரத் தடையின் காரணமாக தடங்கல் ஏற்படுவதனால், விவசாயிகளுடைய பம்ப்செட்டுகளிலே தண்ணீர் சென்று காட்டை அடைந்து பாசனம் நடைபெற்றுக் கொண்டிருக்கிற நேரத்திலே மின்சாரம் தடைப்பட்டுவிடுகிறது. ஆகவே சீராக பகலில் 6 மணி நேரமும், இரவில் 8 மணி நேரமும் விவசாயத்திற்குத் தொடர்ந்து மின்சாரம் கிடைப்பதற்கு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு விவசாயிகளுடைய தோழராக இருந்து செயல்படுகிற அம்மா அவர்களுடைய அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று வேண்டி விரும்பி கோவை மாவட்ட விவசாயிகளின் சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள்.





***மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மாதம் 14 ஆம் தேதி வடசென்னை அனல் மின் நிலையத்திலுள்ள 210 மெகாவாட் திறன் கொண்ட ஓர் இயந்திரம் பழுதடைந்துவிட்டதன் காரணமாக இப்போது வேலை நடந்துகொண்டிருக்கிறது. இன்னும் 10 தினங்களில் அந்த வேலை முடிந்துவிடும். இதற்கிடையில் இந்த இழப்பை சரிக்கட்டுவதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் மத்திய மின் துறை அமைச்சரை அழைத்துப் பேசியதன் விளைவாக 335 மெகாவாட் தருகிறேன் என்று ஒத்துக்கொண்டு சென்றார்கள். அந்த 335 மெகாவாட் மின் உற்பத்தியில் கர்நாடக மாநிலம் கைகாவிலிருந்து 115 மெகாவாட்டும், கேரள மாநிலம் காயல்குளத்திலிருந்து 150 மெகாவாட்டும் இப்போது பெறப்பட்டு வந்திருக்கிறது. 10 தினங்களுக்குள் இந்த நிலைமை சீரடைந்துவிடும். இன்னும் ஆந்திர மாநிலத்திலிருந்து 50 மெகாவாட் அடிஷனலாக நாங்கள் கேட்டிருக்கிறோம். அதையும் இன்னும் 2,3 தினங்களில் தருகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே மின்சார விநியோகம் சீராக நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11.30

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் வேலு அவர்கள் திருவண்ணாமலை பௌர்ணமி விழாவிற்கு மின்சாரம் வரவில்லை என்று சொன்னார்கள். சீரான முறையில் அங்கே மின்சாரம் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் 100 century அடித்தது என்று சொன்னார்கள். அது சரியான கருத்தல்ல. இரண்டு மணி நேரம் தடங்கல் ஏற்பட்டது உண்மைதான். இருந்தாலும் இது தற்காலிகமான ஒரு தடங்கல்தானே தவிர நிரந்தரமான ஒன்றல்ல. மின்சாரம் இன்னும் 10 தினங்களில் சீரடைந்து விட்டால் நமக்குத் தேவையான அளவுக்கு அதிகமாகவே மின்சாரம் உற்பத்தி ஆகும் சூழ்நிலை இருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் 5,400 மெகாவாட் தயாராகிறது என்று சொன்னார்கள். இப்போது நமக்கு 6,000 மெகாவாட்

[திரு. நயினார் நாகேந்திரன்] [2002 மே 8

மின்சாரம் உற்பத்தி ஆகிக்கொண்டிருக்கிறது. கடந்த ஆண்டுகளைவிட, கடந்த ஆண்டு—maximum மின் உற்பத்தியல்ல. Maximum மின்தேவை 6,500 மெகாவாட் ஆக இருந்தது. இப்போது நமக்கு 6,700 மெகாவாட், இந்த ஆண்டு தேவைப்படுகிறது. இதை எல்லாம் சரி செய்வதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தீவிரமான முறையில் முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல. மத்திய மின் துறை அமைச்சர் அவர்களை அழைத்துப் பேசியதன் விளைவாக, மாண்புமிகு அம்மா அவர்கள் 1,000 மெகாவாட் மின் உற்பத்தியை தமிழகத்திலே செய்ய வேண்டுமென்கிற திட்டத்தையும் வகுத்திருக்கின்றார்கள். ஆகவே கடந்த ஆண்டுகளையெல்லாம் விட, வருகின்ற ஆண்டுகளியெல்லாம் மாதிரியான பிரச்சினைகள் இல்லாமல் பார்ப்போம். அடுத்த 10 ஆண்டுகளில் நல்லதொரு மின் உற்பத்தியைத் தமிழகத்திலே ஏற்படுத்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தீவிரமாகச் செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு, விவசாயிகளுக்கு இரவு நேரங்களில் 8 மணி நேரமும், பகலில் 6 மணி நேரமும் இப்போது மின்சாரம் கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். பொள்ளாச்சி சட்டமன்ற உறுப்பினர் ப. ஜெயராமன் கேட்டுக்கொண்டபடி அது இனிமேல் தடங்கல் இல்லாமல் கிடைக்கும்படி பார்த்துக்கொள்வேன் என்பதையும் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் மின் தடை ஏற்படுகின்றபோது ஓர் அறிவிப்பு வெளியிட வேண்டுமென்று சொன்னார்கள். சில இடங்களில் பராமரிப்பு வேலைகளுக்காக-- இப்போது சென்னையிலே நீங்கள் பத்திரிகையிலே படித்திருக்கக்கூடும். தினசரி பத்திரிகைகளில் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. இன்றைக்கு எழும்பூரிலே மின் தடை, நாளைக்கு சைதாப்பேட்டையிலே மின் தடை என்று பத்திரிகைகளிலே செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இன்னும் அதில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமோ அதை எடுத்து, விவசாயப் பெருமக்களுக்கும், மாணவர்களுக்கும், பொதுமக்களுக்கும் இடைஞ்சல் இல்லாத வகையில் மின் துறையைச் சீரான முறையில் இயக்கி வைக்க, அதிகாரிகளும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசும் தயாரான முறையில் இருந்துகொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.



2002 மே 8]

## 4. கவன ஈர்ப்பு

### (அ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி, ஸ்ரீ பவ ஔஷதீஸ்வரர் சுவாமி கோயில் திருக்குளங்களில் தூர் வாருதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. ஜி. பழனிசாமி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வினை மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி ஸ்ரீ பவ ஔஷதீஸ்வரர் சுவாமி கோயிலுக்குச் சொந்தமான ஆறு திருக்குளங்களைத் தூர் வார வேண்டியதன் அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**அறிக்கை**

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம் மற்றும் நகர் அ/மி. ஸ்ரீ பவ ஔஷதீஸ்வரர் திருக்கோயில் சட்டப்பிரிவு 46 (ii)-ன் கீழ் விளம்புகை செய்யப்பட்ட திருக்கோயில். இத் திருக்கோயில், சட்டப் பிரிவு 45(1)-ன் கீழ் நியமிக்கப்பட்ட 2-ம் நிலை செயல் அலுவலரால் நிர்வகிக்கப்படுகிறது. இத் திருக்கோயிலுக்கு வெளியே திருக்கோயிலுக்குச் சொந்தமான பின்வரும் 6 திருக்குளங்கள் உள்ளன. இந்த ஆறு திருக் குளங்களும் ஆண்டுதோறும் மீன்பாசிக் குத்தகைக்கு பொது ஏலத்தில் விடப்பட்டு வருகின்றது.

| வ.எண். | திருக்குளம் பெயர். | சர்வே. | விஸ்தீர்ணம் எண் | பசலி 1411-க்கு ஏக்கர்/சென்ட். மீன்பாசிக் குத்தகை வருமானம் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | | | ரூ. |
| 1. | பெரியகுளம் (சன்னதி குளம்) | 184/4 | 4.44 | 25,000/- |

[திரு. பி.சி. இராமசாமி] [2002 மே 8

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 2. | தோட்டத்துக்குளம் | 180/11 | 0.44 | 1,050/- |
| 3. | ரொக்கக் குத்தகை குளம் (புதுக்குளம்) | 263/6 | 0.74 | 2,400/- |
| 4. | தேவடியாள் குட்டை | 183/7 | 0.22 | 1,025/- |
| 5. | அய்யனார் குட்டை | 159/10 | 0.10 | |
| 6. | ராமர் மடத்து குளம் | 183/2 | 1.70 | 8,100/- |

மேற்படி திருக்குளங்கள் ஆறும் பொதுமக்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த திருக்குளங்கள் ஆறினையும் தூர்வாரி ஆழப்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது. இத்திருக்கோயிலில் போதிய நிதிவசதி இல்லாத காரணத்தால் இத்திருக்குளங்களில் தூர்வாரும் பணியினை திருக்கோயில் நிதியில் செய்ய இயலாத நிலை இருந்து வருகிறது. எனவே, ஜவஹர் வேலைவாய்ப்பு திட்டத்தின்கீழ் இத்திருக்குளங்களை தூர்வாரி கொடுக்க வேண்டி திருவாரூர் மாவட்ட ஆட்சித்தலைவர், திட்ட அலுவலர் மற்றும் திருத்துறைப்பூண்டி வட்டார வளர்ச்சி அலுவலர் ஆகியோருக்கு மேற்படி திருக்கோயில் செயல் அலுவலரால் 9-7-2001-ல் எழுத்து மூலமாக வேண்டுகோள் விடுவிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து 28-4-2002 அன்று, தஞ்சை இணை ஆணையர் மற்றும் நாகை உதவி ஆணையர் ஆகியோருடன் மேற்படி திருக்கோயில் செயல் அலுவலர் திருவாரூர் மாவட்ட ஆட்சித்தலைவரை நேரில் சந்தித்து, மேற்படி திருக்குளங்களை பொதுமக்களின் பொது நன்மையைக் கருதி சிறப்பு இனமாக பாவித்து, உள்ளாட்சி அமைப்புகள் மூலமாகவோ, ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலமாகவோ, கிராம தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாகவோ தூர்வாரிக் கொடுக்க வேண்டும் என கேட்டுக்கொண்டதன் பேரில் மேற்கண்ட திட்டங்களின் நிதி வசதிக்கேற்ப நடவடிக்கை எடுப்பதாக மாவட்ட ஆட்சித்தலைவரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி திருக்குளங்கள் பொதுமக்களுக்கு பெரிதும் பயன்படுவதாக உள்ளதால் ஜவஹர் வேலைவாய்ப்பு திட்டம் அல்லது கிராம தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் மேற்படி திருக்குளங்களை முன்னுரிமை அடிப்படையில் தேர்வு செய்து, தூர்வாரி மராமத்து செய்திட தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



2002 மே 8]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் விவர அறிக்கையைப் படித்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையிலே ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இதிலே 6 குளங்கள், அந்தக் கோயிலுக்குச் சொந்தமான குளங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். 3 இடங்களில் குளமே இல்லாத அளவிற்கு பொதுமக்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு அனேகமாக அங்கே குளமே கிடையாது. அவையெல்லாம் மாடி வீடுகளாக மாறிவிட்டன. இருந்தாலும், இந்தப் பெரிய குளம் என்பது இந்தக் கோயிலுக்குச் சொந்தமான குளம். சுமார் 5 ஏக்கர் அளவு உள்ள குளம். ஒன்று, திருவாரூர்; அடுத்து மன்னார்குடி; அடுத்து திருத்துறைப்பூண்டியிலே ஒரு பெரிய குளம் இருக்கிறது. ஒரு நாளைக்குக் குறைந்தபட்சம் 5,000 மக்கள் தங்களுடைய புழக்கத்தில் இதை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். 50 ஆண்டுகளுக்கு மேலாக தூர் வாரப்படாமல் உள்ளது அந்தக் குளம். இது கோயில் நிருவாகத்தில் இருப்பதால் சுத்தமாகத் தூர் வாரப்படாமல் இந்தக் குளம் மாசுபட்ட ஒரு நிலைமையில் இன்றைய தினத்திலே இருந்து கொண்டிருக்கிறது. இந்தக் குளத்தைத் தூர் வாருவதன் மூலமாக ஓர் ஆண்டுக்கு குறைந்தபட்சம் 50,000-த்திலிருந்து 60,000 வரை மக்கள் பயனடையக்கூடிய நிலையுள்ளது. ஊராட்சி ஒன்றியத்தினுடைய ஆணையர் மூலமாக வேலைக்கு உணவுத் திட்டத்தின் மூலம் இது தூர் வாரப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அது ஒரு நகராட்சி. ஆகவே ஊராட்சி ஒன்றியத்திற்கும் நகராட்சிக்கும் சம்பந்தமே கிடையாது.

அதோடுமட்டுமல்லாமல் திருத்துறைப்பூண்டி நகரத்தின் முக்கியமான, மையப் பகுதியிலே இந்தக் குளம் இருக்கிறது. அந்த நகரத்திலே இருக்கின்ற சுமார் 40,000 மக்கள் இந்தக் குளத்தை நம்பித்தான் இருக்கிறார்கள்.

அதோடுமட்டுமல்லாமல் அங்கு ஏதாவதொரு தீ விபத்து ஏற்பட்டால் இந்தக் குளத்திலிருந்துதான் Fire சர்வீசுக்கு தண்ணீர் எடுக்க வேண்டிய அவசியமும் இருக்கிறது. ஆகையால் இந்தக் குளத்தைத் தூர் வாருகின்ற ஒரு சிறப்புத் திட்டத்தை நம்முடைய மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்து அதன் மூலமாக தூர் வாருவதற்கு உரிய முயற்சிகளை மேற்கொள்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

[2002 மே 8

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் ஆளுகையின்கீழ் சொந்தமாக 1,052 திருக்குளங்கள் உள்ளன. இவற்றில் 596 திருக்குளங்கள் பழுது பார்க்கப்பட வேண்டும். மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஒரு சிறப்புத் திட்டத்தின்கீழ் தூர் வார ஏற்பாடு செய்யப்படுமா என்று அவர் கேட்கிறார். அதற்கு ஏதாவது முயற்சி இருக்கிறதா என்பதை மட்டும் சொல்லுங்கள்

முற்பகல் 11-35

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** அறநிலையத் துறையின் மூலமாக அங்கங்கே இருக்கின்ற ஆலயங்களின் நிதியாதாரத்தை வைத்தும்—நம்முடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எங்களுக்கெல்லாம் அறிவுறுத்தியிருக்கிறார்கள்—மத்தியிலே இருக்கின்ற அரசிடமிருந்து அந்தந்தத் துறைக்கு நிதிகளைப் பெற்று உடனடியாக உங்களுடைய பணிகளைத் தொடங்க வேண்டுமென்று எங்களுக்கு தாக்கீது சொல்லி அனுப்பியிருக்கிறார்கள். அம்மா அவர்களுடைய ஆணைக்கிணங்க நாங்கள் மத்திய அரசிடமிருந்து நிதியைக் கேட்டிருக்கிறோம். அப்படி அந்த நிதியைப் பெற்று உடனடியாக அந்தக் குளங்களை தூர் வாருகின்ற பணிக்கு இந்தத் துறை நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி. (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசின் அறநிலையத் துறையினுடைய நிதியிலேயிருந்து அந்தக் குளங்களை தூர் வாருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை உங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை பழனிசாமி, இது கவன ஈர்ப்பு.

**திரு. ஜி. பழனிசாமி:** ஒன்றும் இல்லை, இரண்டாவது கேள்வியைக் கேட்கலாம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சிறப்புத் திட்டத்திலே எடுத்துக்கொள்வதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்



2002 மே 8] [திரு. ஜி. பழனிசாமி]

அறிவித்ததற்கு நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதோடுமட்டுமல்ல. அரசு கொடுக்கிற நிதி மட்டும் இல்லை, நானே என்னால் முடிந்தால் அந்த நகரத்து மக்களிடத்தில் குறைந்தபட்சம் பல இலட்சத்தை நான் வசூல் செய்து கொடுக்கக்கூட தயாராக இருக்கிறேன். அந்த வகையிலே குளங்களை தூர் வாருவதற்கு குறைந்தபட்சம் 10 இலட்சமாவது தேவைப்படும். தற்காலிகமாகச் செய்வதற்கு. அந்த நிதியை இன்னும் கொஞ்சம் அதிகப்படுத்தினால் அந்தப் பணியைச் செய்வதற்கு நான் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறநிலையத் துறைக்குச் சொந்தமான அனைத்து ஆலயங்களிலே இருக்கின்ற குளங்களையும் தூர் வாருவதாகச் சொல்லியிருக்கிறார்கள் என்பதை உங்களுக்கு அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. கவன ஈர்ப்பிலே இன்னொருவர் கேட்கக் கூடாது. (குறுக்கீடு) இல்லை, இல்லை. அந்த மாதிரி கேட்கக் கூடாது. அடுத்த கவன ஈர்ப்பு (குறுக்கீடு) மூத்த உறுப்பினர் சபையிலே விதிமுறைகளுக்குக் கட்டுப்படவேண்டும். விதிமுறைகளிலே அப்படி இடம் இல்லை.

### (ஆ) சென்னை, அசோக் நகர், அம்பேத்கர் குடிசைப் பகுதியில் தீ விபத்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த கவன ஈர்ப்பு. திரு. ஜே. ஹேமச்சந்திரன், திரு. டி. மணி, திரு. என். நன்மாறன், திரு. ஜி.கே. மணி, திரு. இரா. திருமாவளவன், திரு. கே. ஆறுமுகம் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. "சென்னை, அசோக் நகர், அம்பேத்கர் குடிசைப் பகுதியில் 1-4-2002 ஆம் நாளன்று ஏற்பட்ட தீ விபத்தில் குடிசைகள் எரிந்து சாம்பலானது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவா அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

சென்னை கே.கே. நகர் மாநகராட்சி வட்ட எண் 131 மாம்பலம் கிண்டி வட்டம், கோடம்பாக்கம் கிராமம் பிளாக் எண் 129 நகரளவை புல எண் 11-ல் உள்ள நிலத்தின் மொத்தப் பரப்பு 210 மனைகள் மற்றும் 2243 ச.அடி ஆகும். இந்நிலம் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திடமிருந்து பொதுப் பணித் துறையினருக்கு மருத்துவ வளாகம் மற்றும் வட்டாட்சியர் அலுவலகம் அமைக்க மாற்றம் செய்யப்பட்டது. இவற்றுள் 90 மனைகள் மற்றும் 1693 ச.அடி பரப்பளவு நிலத்தில் அரசு புறநகர் மருத்துவமனை பொதுப் பணித் துறையினரால் கட்டப்பட்டுள்ளது. மீதமுள்ள 120 மனைகள் மற்றும் 550 ச.அடி பரப்பளவு நிலத்தில், மாம்பலம் கிண்டி வட்டாட்சியர் அலுவலக வளாகம் அமைத்ததுபோக எஞ்சியுள்ள சுமார் 100 மனைகள் பரப்பளவு நிலத்தில் 750 குடும்பங்கள் குடிசைகள் அமைத்து வாழ்ந்துவருகின்றனர். இக்குடிசைப்பகுதியில் கடந்த 1-4-2002 அன்று ஏற்பட்ட தீ விபத்தில் 168 குடிசைகள் பாதிக்கப்பட்டன. இத் தீ விபத்தின்போது உயிர்ச்சேதங்கள் ஏதும் இல்லை. பாதிக்கப்பட்ட 168 குடும்பங்களுக்கும் நிவாரணமாக குடிசை ஒன்றுக்கு தலா ரூ.2000/- வீதம் ரூ.3,36,000/- ரொக்கமாகவும், மேலும், குடும்பம் ஒன்றுக்கு தலா 5 கிலோ அரிசி வீதம் 840 கிலோ அரிசியும், குடும்பம் ஒன்றுக்கு ஒரு வேட்டி, ஒரு சேலை வீதம் 168 வேட்டி மற்றும் 168 சேலையும் 2-1-2002 அன்று பிற்பகல் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் தலைமையில் மாவட்ட ஆட்சியர் முன்னிலையில் வழங்கப்பட்டுள்ளது.

2. அம்பேத்கர் குடிசைப்பகுதி அமைந்துள்ள இந்நிலம் கே.கே. நகர் அரசு புறநகர் மருத்துவமனையின் விரிவாக்கப் பணிகளுக்காக தேவைப்படுவதால் இப்பகுதியில் உள்ள குடிசைகளை அகற்ற அத்துறை கோருவதால் இவ்விடத்திலேயே குடிசைவாழ் மக்களுக்கு வீட்டுவசதி அமைக்க இந்நிலத்தினை தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு மாற்றம் செய்ய இயலாத நிலை உள்ளது. எனவே அம்பேத்கர் குடிசைவாழ் குடும்பங்களுக்கு அவர்கள் தற்போது வாழும் இடத்தில் தீப்பிடிக்காத கல்நார் ஓட்டுக்கூரைகள் அமைக்க இயலவில்லை.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய அறிக்கையிலே அவர் சில விவரங்களைக் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் இந்த இடத்திலே 1-4-2001 அன்றும்





இதேபோன்ற ஒரு தீ விபத்து நடந்திருப்பதாக பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. அதற்கு மேலாக 168 குடிசைகள் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், 2000க்கு அதிகமான குடிசைகள் அங்கே இருந்து, இந்த விபத்தினாலே பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று தகவல்கள் வருகின்றன. அரசினுடைய கடமையை அவர் அங்கு ஆற்றியிருக்கிறார். அதற்குப் பாராட்டுகிறேன்.

இந்த நேரத்திலே நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புவது, இந்த இடத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென்று பார்வையிடுகிற நேரத்திலே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களோடு கலந்து மாற்று இடம் அவர்களுக்குக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கலாம் என்று அந்த மக்களிடம் சொன்னதாகத் தெரிகிறது. ஆனால் இப்பொழுது விவர அறிக்கையிலே அப்படி அவர்களுக்கு மாற்று இடம் கொடுப்பதற்கோ அவர்களுக்கு மாற்று வீடுகள் கொடுப்பதற்கோ வழியில்லை என்ற முறையிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இன்று கடுமையாகப் பாதிக்கப்பட்டு இருக்கிற இந்த மக்களுக்கு தகுந்த நிவாரணமும் வழங்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஆகவே இவர்களுக்கு வீடுகளைக் கட்டி, சென்னை மாநகரத்திலே இவர்கள் வாழ்க்கை நடத்துவதற்கு வசதியாக ஏதாவது இடத்திலே வீடுகளைக் கட்டி, அவர்களைத் தங்க வைப்பதற்கான நடவடிக்கையை அரசு எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இடத்திலே தீ பிடித்தவுடனே மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சருடைய தொகுதி என்ற காரணத்தினால் அவர்களோடு நேரிடையாக தொலைபேசியில் தொடர்பு கொண்டு, உடனே நானும் அவரும் நேரடியாகச் சென்று மாவட்ட ஆட்சித் தலைவரிடம் ஆலோசனை நடத்தினோம். அங்கே இருக்கக்கூடிய வருவாய்த் துறை அலுவலர்கள் மூலமாகவும் மற்றும் அங்கே இருக்கக்கூடிய மாநகராட்சியினுடைய அதிகாரிகள் மூலமாகவும் நிவாரணங்கள் எல்லாம் சரியாக முறைப்படி கொடுக்கப்பட்டன. நீங்கள் கூறியதைப்போல மாவட்ட ஆட்சித் தலைவரிடம் இதைப் பற்றி நேரடியாகக் கேட்டபோது, இந்த இடம் அங்கே இருக்கக்கூடிய கே.கே. நகருடைய புறநகர் மருத்துவமனைக்கென ஒதுக்கப்பட்ட இடம், அங்கே இருக்கக்கூடிய மக்கள் இந்த இடத்தினை ஆக்கிரமிப்புச் செய்துள்ளார்கள். அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு பல முறை நடவடிக்கை எடுக்கப்பட்டது. இருந்தபோதிலும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால், செங்கல்பட்டு மாவட்டத்திலோ

[திரு. ந. தளவாய் சுந்தரம்] [2002 மே 8

அல்லது அதற்கு அருகில் உள்ள இடத்திலோ குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக அவர்களுக்கு வீடு கட்டித்தர தகுந்த இடம் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

முற்பகல் 11-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தீ விபத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு சுமார் 2,000 ரூபாய் என்ற அளவில் கொடுத்திருக்கிறார்கள். இது தற்காலிகமாக அவர்கள் அந்த இடத்திலே கூரைகளைப் போடுவதற்காக எனத் தோன்றுகிறது. ஆனால் இன்றைக்கு உள்ள விலைவாசி ஏற்றத்திலே தென்னங்கீற்று ஆனாலும் சரி, அதேபோன்று ஆஸ்பெஸ்டாஸ் ஆனாலும் சரி, 10 ஷீட்டுகளை வாங்கி ஒரு குடிசை போட வேண்டுமென்றால்கூட இந்தத் தொகையில் வாங்க முடியாது. ஆகவே முழுமையாகச் சொத்துக்களையெல்லாம் இழந்தவர்களுக்கு ஒரு மாற்று இடத்தைக் கண்டுபிடித்து குடிசைகளைச் சரிவர போடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்கின்ற வகையில் அரசு ஏதாவது நடவடிக்கை மேற்கொள்ளுமா? இல்லையென்றால் தற்காலிகமாக குடிசை போட்டுக் கொள்ள வழங்கப்படும் இந்த 2,000 ரூபாய் என்பதை இன்றைய சூழ்நிலையில் 5,000 ரூபாயாக உயர்த்திக் கொடுத்து, அதிலே தற்காலிகக் குடிசைகளை அமைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ரூ. 1,000/- என்றிருந்ததை ரூ.2,000/- ஆக உயர்த்தித் தந்திருக்கிறார்கள். அவர்களெல்லாம் ஆக்கிரமிப்பாளர்கள். ஆக்கிரமிப்பு செய்த இடத்திலிருந்து அவர்களை மாற்ற, வேறு இடம் தேர்வு செய்ய ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம். ஆக்கிரமிப்பாளர்களுக்கு, அந்த இடத்தினைக்காலி செய்யச் சொல்லி, பல முறை அறிவிப்பு அனுப்பப்பட்டும் அவர்கள் அந்த இடத்தைக் காலி செய்யவில்லை. இருந்தபோதிலும் இந்த தீ விபத்து ஏற்பட்டதன் காரணமாக அவர்களுக்கு நிவாரணமாக ரூ.2,000/- மட்டுமல்ல; அவர்களுக்கு வேட்டியும், சேலையும், அரிசியும் கொடுக்கப்பட்டிருக்கிறது.



2002 மே 8]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது விஷயமாக அமைச்சர் அறிவித்திருக்கிற அறிவிப்பு அதிகாரிகள் மூலம் கிடைத்த விவரங்களோடு மாத்திரம் அல்லாமல், அனைவருக்கும் நிவாரணத் தொகை கிடைத்துவிட்டதா என்பதையும் உறுதி செய்யக்கூடிய முறையில் அமைய வேண்டும். இந்த விபத்தில் வீடுகளை முற்றாக இழந்தவர்கள் சில பேர் இருக்கிறார்கள். அவர்களுக்கு விதிகளைத் தளர்த்தி, கொஞ்சம் கூடுதல் உதவி செய்வதற்கும் வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிகாரிகள் மூலமாக மட்டுமல்ல, நானே நேரில் சென்று, கலந்தாலோசித்து, கிட்டத்தட்ட 5 மணி நேரம் இதற்காக இருந்து நடவடிக்கை எடுத்திருக்கிறேன். அதிகாரிகளின் பேச்சை மட்டும் நான் கேட்கவில்லை. உரிய நடவடிக்கைகள் உரிய நேரத்தில் எடுக்கப்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, கே.கே. நகர், அம்பேத்கர் நகரைச் சேர்ந்த அந்தப் பகுதியிலே 1-4-2002 அன்று தீ விபத்து ஏற்பட்டு 200 குடிசைகளுக்கு மேலே தீப்பற்றி எரிந்ததாகச் சொல்லப்படுகிறது. ஆனால் விவர அறிக்கையிலே 168 குடிசைகள் தீப்பிடித்துச் சாம்பலானதாக அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். இதிலே முழுமையாக தீப் பிடித்து எரிந்த குடிசைகள் அவ்வளவாக இருந்தாலும்கூட, பாதி அளவு எரிந்த, இன்னும் பாதிக்கு மேலே எரிந்த குடிசைகள் எல்லாம் இதிலே சேர்க்கப்படவில்லை. அவர்களுக்கு நிவாரண உதவி வழங்கப்படவில்லை என்பது மிக முக்கியமான கோரிக்கையாக இருக்கிறது. ஆகவே பாதி எரிந்த குடிசைகள், அல்லது முக்கால் பாகம் எரிந்த குடிசைகளுக்கும் நிவாரணம் வழங்க வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன்.

அவர்களெல்லாம் சாதாரண மக்கள், ஏழையெளிய மக்கள், கூலித் தொழிலாளிகள். அவர்களுக்கு மாற்று இடம் கொடுப்பதற்கு வாய்ப்பு இல்லை என்று விவர அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. இதை விட்டால் அவர்களுக்கு வேறு வழியில்லை. அவர்கள் புதிதாக வீடு கட்டிக்கொள்வதற்கான வாய்ப்பு இல்லாத காரணத்தினாலே, பாதிக்கப்பட்ட அத்தனை பேருக்கும் புதிதாக ஓர் இடத்தைத் தேர்வு

[திரு. ஜி.கே. மணி] [2002 மே 8

செய்தாவது, அவர்களுக்குக் குடியிருப்புகளை அமைத்துக் கொடுக்க வேண்டியது நம்முடைய அரசினுடைய கடமை என்ற அடிப்படையிலே அந்த வேண்டுகோளை முன்வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு மனிதனுக்கு மிக முக்கியமானது உயிர், உடைமை-இவர்களுக்கு உடைமை முழுமையாகப் போய்விட்டது. வீடு, வீட்டிலே இருக்கக்கூடிய பொருள்கள், பாத்திரம், பண்டம் எல்லாம் போய்விட்டன. அவர்களுக்கு 2,000 ரூபாய் நிவாரணம் என்பது அவர்களுடைய வாழ்க்கையை மீண்டும் அமைத்துக்கொள்வதற்கு முடியாத தொகை என்ற காரணத்தினாலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதிலே சிறப்புக் கவனம் செலுத்தி, இந்தத் தொகையை கூடுதலாக வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல குடும்பத்திற்கு 5 கிலோ அரிசி, ஒரு வேட்டி, ஒரு சேலை வழங்கப்பட்டிருக்கிறது. ஒரு குடும்பத்தில் 4,5 பேர் இருப்பார்கள். அவர்களுக்கு மாற்றிக் கொள்வதற்குக்கூட உடை இல்லாத நிலையில் அந்தக் குடும்பத்தில் எவ்வளவு பேர் இருக்கிறார்களோ, அவ்வளவு பேருக்கும் ஒரு செட் துணியாவது வழங்க அரசு முன்வர வேண்டுமென்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

இன்னொன்று. இப்படி எங்கு பார்த்தாலும், தமிழ்நாட்டிலே சென்னை மாநகரமாக இருந்தாலும் சரி, பல்வேறு மாநகரங்கள், மாவட்டங்கள், கிராமப்புறங்களில் உள்ள குடிசை வீடுகள், கூரை வீடுகள் என்பது தீப்பற்றிக் கொள்வது அல்லது பழுது அடைந்துவிடுவது.... (மணியடிக்கப்பெற்றது)

முற்பகல் 11-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, கேள்வியை மட்டும் கேளுங்கள். நீங்களே 4,5 கேள்விகளை சங்கிலித் தொடராகக் கேட்டிருக்கிறீர்கள்.

**திரு. ஜி.கே. மணி:** இந்தக் குடிசை வீடுகளே நாட்டில் இருக்கக்கூடாது என்ற ஒரு சிறப்புத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு, தீப்பிடிப்பதால், அடிக்கடி கூரை வேய வேண்டிய சூழ்நிலைகள் எல்லாம் இருக்கின்ற காரணத்தினாலே, மானியத்துடன் கடன் கொடுத்து, குடிசை வீடுகள், கூரை வீடுகள் தமிழ்நாட்டிலே இல்லை என்ற ஒரு மாற்றுத் திட்டத்தை சிறப்புத் திட்டத்தின் அடிப்படையில் கொண்டுவர அரசு முன்வருமா என்பதை இந்த நேரத்திலே அறிய விரும்புகிறேன்.



2002 மே 8]

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இடமானது கே.கே. நகர் அரசு புறநகர் மருத்துவமனைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. இங்கே குடியேறியவர்கள் அத்து மீறி குடியேறியிருக்கிறார்கள். இருந்தபோதிலும், தீப்பிடித்து எரிந்ததன் காரணமாக மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் ரூ.2,000 நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் கூறியதுபோல 200 குடிசைகள் அல்ல. நானே நேரடியாகச் சென்று பார்த்திருக்கிறேன். நீங்கள் நேரடியாகச் சென்று பார்க்கவேயில்லை. அப்படி ஏதாவது உங்களுக்குத் தகவல் இருந்தால் அதை என்னிடம் கொடுக்கலாம். தீப்பிடித்த உடனே நான் நேரடியாகச் சென்று அங்கே இருக்கக்கூடிய மாவட்ட ஆட்சியாளரிடமும், அங்கே இருக்கக்கூடிய தாசில்தாரையும் அணுகி, எந்தெந்த இடங்கள் தீப்பிடித்தன, எந்தெந்த குடிசைகள் தீப்பிடித்தன, எத்தனை மக்கள் பாதிக்கப்பட்டனர் என்று நேரடியாக சென்று விசாரித்து வந்திருக்கிறேன். ஆகவே நீங்கள் 168 என்பதை 200 என்று சொல்லக்கூடாது. ஆகவே இதற்கான நடவடிக்கை உரிய நேரத்தில், உரிய முறையில் எடுக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. திருமாவளவன்.

**திரு. இரா. திருமாவளவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரண கூலித் தொழிலாளிகள் அந்தப் பகுதியிலே 30 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து வருகிறார்கள். அவர்களை ஆக்கிரமிப்பாளர்களாக அரசு கருதக்கூடாது. ஆக்கிரமிப்பு என்பது வேறு. தஞ்சம் அடைவது என்பது வேறு. அன்றாடங்காய்ச்சிகளாக வாழ்கிற அந்த மக்கள் அங்கே வந்து தஞ்சம் புகுந்து, 1983-லே அரசு அதிகாரிகள் அவர்களை அப்புறப்படுத்த முயற்சித்தபோது, மாண்புமிகு மறைந்த தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களிடத்திலே போய் முறையிட்டார்கள். டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய கருணையால் அந்த மக்கள் நீண்டகாலமாக அங்கே தங்கி இருக்கக்கூடிய ஒரு வாய்ப்பைப் பெற்றார்கள். ஆகவே அப்படிப்பட்ட மக்களை, அந்த வாய்ப்பைப் பெற்ற மக்களை அந்த இடத்திலிருந்து அப்புறப்படுத்த முயற்சிப்பது என்பது மறைந்த தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய விருப்பத்திற்கு மாறான செயல். ஆகவே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருணை உள்ளத்தோடு அந்த மக்களைப் பாதுகாக்க வேண்டும். அவர்களை அப்புறப்படுத்தினால் அவர்கள் எங்கே போவார்கள்? நம்முடைய அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது-

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. திருமாவளவன், வேறு இடமெல்லாம் கொடுத்திருக்கிறோம் என்று அமைச்சர் சொல்லியிருக்கிறார். கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திரு. இரா. திருமாவளவன்:** மொத்தம் 168 குடிசைகள் என்று மட்டுமே இங்கே பேசப்படுகிறது. ஏப்ரல் 1ஆம் தேதிக்கு அடுத்து 15 நாட்கள் கழித்து நம்முடைய மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் வந்து பார்வையிட்டுச் சென்ற பிறகு, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் வந்து பார்வையிட்டுச் சென்ற பிறகு, அடுத்த 15 நாளில் மிச்சமுள்ள 500 குடிசைகளும் எரிந்து சாம்பலாகிவிட்டன. அந்த குடிசைகளுக்கு, அதில் பாதிக்கப்பட்டவர்களுக்கு எந்தவிதமான இழப்பீடோ, நிவாரணமோ வழங்கப்படவில்லை. அந்த மக்கள் சாலை ஓரத்திலே படுத்துக் கிடக்கிறபோது, லாரி வந்து ஏறி சில ஆண்டுகளுக்கு முன்பு ஏறத்தாழ 8 பேர் உயிரிழந்து போனார்கள். ஆகவே அப்படிப்பட்ட அந்தத் கூலித் தொழிலாளிகள் மேல் கருணை கொண்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அவர்களை அப்புறப்படுத்தாமல் அடுக்குமாடிக் குடியிருப்பு திட்டத்தின்கீழ் அந்த இடத்திலே ஓர் அடுக்குமாடிக் குடியிருப்பைக் கட்டி அவர்களை வாழ வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. திருமாவளவன் அவர்கள் உண்மைக்குப் புறம்பான ஒரு கருத்தை இங்கே தெரிவித்தார். நீங்கள் கூறியது போல் அங்கே சாலை விபத்து ஏற்பட்டதேயொழிய, இதனால் எந்த விபத்தும் ஏற்படவில்லை என்று சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். சாலை விபத்து இதனால் வரவில்லை. அது மட்டுமல்லாமல், சாலை விபத்து என்பதற்கு ஆதாரம் நானே அந்த இடத்தில் விசாரித்தேன். இதற்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை. நீங்கள் தயவுசெய்து இதையும் அதையும் ஒப்பிட்டுப் பார்க்கக்கூடாது. சாலை விபத்து வேறு, தீப்பிடித்த விபத்து வேறு. நீங்கள் கூறியதுபோல், இந்த இடம் கே.கே. நகர் புறநகர் மருத்துவமனைக்கு என ஒதுக்கப்பட்ட இடம். அங்கே நோயாளிகள் சிகிச்சைப் பிரிவிற்கு வந்துகொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல. அங்கே சிகிச்சை நல்ல முறையில் நடைபெற வேண்டும், நல்ல சுகாதார முறையிலே இருக்க வேண்டும் என்ற எண்ணத்துடன்தான் இந்த இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த இடத்தை காலி செய்ய வேண்டும் என்று பலமுறை கோரிக்கை வைத்திருக்கிறோம். அந்தக்



கோரிக்கையின் அடிப்படையில் எவ்வளவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அந்த நடவடிக்கையின் மூலமாக மாவட்ட ஆட்சியாளரை நானே நேரடியாக அழைத்து இதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று கேட்டிருக்கிறேன். நீங்கள் கூறியதுபோல் மாற்று இடத்திற்கு, குறிப்பாக பக்கத்தில் இருக்கக்கூடிய செங்கற்பட்டிலோ, அருகில் இருக்கக்கூடிய ஏதாவது ஒரு மாவட்டத்திலோ குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டித்தர வேண்டும் என்று, உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நானே வேண்டுகோள் விடுத்துள்ளேன். அந்த இடம் மருத்துவமனைக்கு ஒதுக்கப்பட்டது என்பதை நீங்கள் மறந்து விடக்கூடாது. சுகாதாரம் நாட்டிற்குத் தேவை. ஆகவே இந்த மக்கள் எந்தவிதத்திலும் பாதிக்கப்படமாட்டார்கள் என்பதைச் சொல்லி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் இன்று ஊருக்குக் கிளம்பிப் போகிறாரா! (சிரிப்பு) திரு. கே. ஆறுமுகம்.

முற்பகல் 11-50

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கே.கே. நகர்ப் பகுதியிலே இருக்கிற, அசோக் நகரிலே நடைபெற்ற இந்தத் தீ விபத்து சம்பந்தமாக, நம்முடைய அமைச்சர் அவர்கள் ஓர் அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். அதிலே 168 வீடுகளுக்கு 2,000 ரூபாய் நிவாரணமும், இலவச வேட்டி, சேலைகள் எல்லாம் வழங்கப்பட்டிருக்கின்றன என்றும் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் இருக்கிற அந்த இடம் அரசு புறநகர் மருத்துவமனைக்குத் தேவைப்படுகிற இடம் என்றும், அதற்காக செங்கற்பட்டு மாவட்டப் பகுதியிலே இடம் ஒதுக்கலாம் என்றும் நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இவர்கள் எல்லாம், கே.கே. நகர், அசோக் நகர் பகுதிகளிலே உள்ள மக்களுக்குத் தேவையான கூலி ஆட்களாக வேலை செய்கிறவர்கள். சைக்கிள் ரிக்ஷா ஓட்டுபவர்கள், கட்டட வேலை செய்பவர்கள், மூட்டை தூக்குபவர்கள் போன்ற கூலி வேலைகளையெல்லாம் செய்பவர்கள். இவர்களை வெகுதூரத்திற்கு அனுப்பிவிட்டால், அவர்கள் நம்பியிருக்கிற தொழிலுக்கு வந்து செல்வது, மிகக் கடுமையாகிவிடும். எனவே, அந்தப் பகுதியையொட்டி இருக்கிற பகுதியிலேயே, சென்னை நகரை ஒட்டியிருக்கிற பகுதியிலேயே, அவர்களுக்கு வீடு கட்டித் தருவதற்கான முயற்சியை நம்முடைய அமைச்சர் அவர்கள் எடுத்துக் கொள்வாரா என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. கே. ஆறுமுகம்] [2002 மே 8

இப்போதுகூட தமிழ்நாடு வீட்டு வசதித் துறையின் மூலம் எல்.ஐ.ஜி-1, எல்.ஐ.ஜி-2 போன்ற மிகவும் கீழே இருப்பவர்களுக்கு வழங்கப்படுகின்ற அந்த வீடுகள், அந்த மனைகள் மட்டும் பல இடங்களில் விற்பனையாகாமல் இருக்கின்றன. அதிலே மாதத்திற்கு 200 ரூபாய், 300 ரூபாய் கட்டுகிற அளவிற்கு அவர்களுக்கு வாய்ப்புக் கிடைக்க...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வீடுகள் பக்கத்திலேயே கட்டிக் கொடுக்கப்படுமா? அதை மட்டும் கேளுங்கள்.

**திரு. கே. ஆறுமுகம்:** தலைவர் அவர்களே, அந்த வாய்ப்பை அவர்கள் விரும்பினால், அங்கே பாதிக்கப்பட்டிருக்கின்ற அவர்கள் விரும்பினால் மாதம் 200, 300 ரூபாய் கட்டுகிற அளவிற்கு மனைகளைக் கொடுப்பதற்கு ஏதாவது வாய்ப்பு இருக்குமா என்று தங்கள் மூலம் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இடம் மருத்துவமனைக்காக ஒதுக்கப்பட்டது என்று உங்களுக்கு நன்றாகத் தெரியும். அதுமட்டுமல்லாமல் அவர்கள் கூலித் தொழில் செய்கிறார்கள் என்று நீங்களே கூறிவிட்டீர்கள். எங்கேபோய் வேலை பார்த்துக்கொண்டு, தங்களுடைய பிழைப்பை நடத்துவார்கள் என்பது உங்களுடைய கருத்து. அந்தக் கருத்தை எடுத்துக்கொண்டால்கூட, அவர்களுக்கு மாற்று இடம் எங்கே கிடைக்கிறதோ, அங்கே அவர்கள் கூலித் தொழிலைச் செய்து அவர்களுடைய வேலையைச் சிறப்பாக கவனித்துக் கொள்வார்கள். எனவே அவர்களுக்கு மாற்று இடம் கொடுப்பதற்காக, தமிழக அரசு, மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆலோசனையின்பேரில் நடவடிக்கை எடுக்கப்படும்.

## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (ஈ) 209 டி.எம்.சி. தண்ணீர் அளித்துவிட்டதாக கர்நாடக முதல்வர், கடிதம் எழுதியதாக வந்த செய்தி—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன் அவர்கள், காவிரி நீர் தொடர்பாக எழுப்பிய கேள்விக்கு, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கம் தருவார்கள்.



2002 மே 8]

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள், இன்றைய செய்தித்தாளில், மாண்புமிகு கர்நாடக முதல்வர் அவர்கள், தமிழகத்திற்குத் தரவேண்டிய காவிரி நீரின் அளவைக் காட்டிலும், 209 டி.எம்.சி. நீர் தந்துவிட்டோம் என்றும், அதைப்பற்றி தமிழக அரசுக்கு கடிதம் மூலமாகத் தெரிவித்து இருக்கின்றோம் என்றும் செய்தி வந்திருப்பது குறித்து விவரங்களைக் கேட்டார்கள். நானும் அந்தச் செய்தித்தாளினுடைய செய்தியைப் பார்த்தேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போலவும், செய்தித்தாளில் வந்த அடிப்படையிலும், நம்முடைய பொதுப் பணித் துறைக்கோ, மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கோ எந்தவிதமான கடிதமும் இதுவரை வரவில்லை என்பதையும் தெரிவித்துக்கொண்டு, அவர்கள் ஒரு வருடத்திற்கு 205 டி.எம்.சி. நீர் தரவேண்டும். அதாவது. ஜுன் 1 ஆம் தேதியிலிருந்து, மே 31 ஆம் தேதி வரையில், 205 டி.எம்.சி. நீரை அவர்கள் தரவேண்டும். அந்த 205 டி.எம்.சி. நீரைம், நம்முடைய மேட்டூர் அணைக்கு entry point-ல் அவர்கள் தரவேண்டும் என்பதுதான், காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பு இருக்கிறது. 1-6-2001 முதல், 8-5-2002 வரை மேட்டூரில் கிடைத்திருக்க வேண்டிய நீரின் அளவு, 203.55 டி.எம்.சி. ஆகும். அதாவது, ஜுனிலிருந்து இன்று வரை, அவர்கள் தந்திருக்க வேண்டிய நீரின் அளவு 203.55 டி.எம்.சி. ஆகும். ஆனால் நமக்குக் கிடைத்திருப்பதோ 160.84 டி.எம்.சி. நீர் மட்டுமே. ஆக 42.71 டி.எம்.சி. நீர் குறைவாகத்தான் வந்திருக்கிறது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

## 5. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை, 2001-2002 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 100 முதல் 108 வரையிலான ஒன்பது

[திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்] [2002 மே 8

அறிக்கைகளைக் குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கின்றேன். நண்பர் ஞானசேகரன் அவர்கள் சொன்னதைப்போல, இந்த ஆண்டு பொதுக் கணக்குக் குழு, century அடித்திருக்கிறது.

*முற்பகல் 11-55*

### (ஆ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி.

**திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2002 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தி மூன்று முதல் ஐம்பது வரையிலான எட்டு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (இ) மனுக்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மனுக்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. பி.எம். நரசிம்மன்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2001-2002 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் ஏழு மற்றும் எட்டாவது அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) குற்ற வழக்கு விசாரணைமுறைத் தொகுப்பு (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 2002 ஆம் ஆண்டு குற்ற வழக்கு விசாரணைமுறைத் தொகுப்பு (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



2002 மே 8] [திரு. டி. ஜெயக்குமார்]

"2002 ஆம் ஆண்டு குற்ற வழக்கு விசாரணைமுறைத் தொகுப்புச் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது. (குறுக்கீடு)

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவை அறிமுக நிலையிலேயே திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கிறது. குற்றம் சாட்டப்பட்டவர்களெல்லாம் குற்றவாளிகள் அல்ல. குற்றம் சாட்டப்பட்டவர்களுக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான பரிகாரங்களும், அவர்கள் வாதாடுவதற்கு உரிமையும், நியாயத்தை எடுத்துச் சொல்ல வேண்டிய இடத்திலே மறுக்கின்ற சூழ்நிலையை இந்த மசோதா உருவாக்குகிற காரணத்தால், இது தேவையற்ற ஒன்று என்ற காரணத்தால், இதை அறிமுக நிலையிலேயே திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கிறது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை அறிமுக நிலையில் தமிழ் மாநில காங்கிரஸ் சார்பில் எதிர்க்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களாலே அறிமுகம் செய்யப்பட்ட இந்தச் சட்டமுன்வடிவு, மின்னணு காணொலி இணைப்பு ஊடகம் என்ற Electronic Video Linkage என்பது இப்போது தேவையில்லாத ஒன்று. ஆரம்ப நிலையிலேயே, குற்றவாளி இல்லை என்று நிரூபிக்கப்படாத நிலையிலே, குற்றம் சுமத்தப்பட்ட நிலையிலே அவர்கள் குற்றவாளிகள் இல்லை என்ற காரணத்தினாலே, இப்படிப்பட்ட சட்டத் திருத்தம், சட்டமுன்வடிவு என்பது தேவையில்லாத ஒன்று என்ற காரணத்தினாலே பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே இந்தச் சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, remand-க்கு கொண்டுபோகக்கூடிய நேரத்திலேதான் பாதிக்கப்பட்டவர்கள் நீதிபதியிடம் ஏதாவது புகார் கொடுப்பதற்கான சந்தர்ப்பம் உள்ளது. அது, இந்தமாதிரி புகைப்பட[illegible] வழியாக அவர்களைப் பார்ப்பதற்கான வாய்ப்பு கிடைக்கிறதே தவிர, accused ஆட்களைப் பொறுத்த அளவிலே,

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [2002 மே 8

அவருக்கு இருக்கிற குறைகளைச் சொல்வதற்கான வாய்ப்பு இல்லாமல் போகிறது. எனவே இச்சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Video Conferencing மூலமாகப் பேச முடியும். அது வெறும் புகைப்படம் அல்ல. Live-ஆகவே பேச முடியும்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. ஜி. பழனிசாமி:** நான் சொல்லிவிடுகிறேன். எஸ்.ஆர்.பி., நான் சொன்னதற்குப் பிறகு சொல்லுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஸ்.ஆர்.பி. அவர்களே, இது ஆய்வுக்கு இன்னும் வரவில்லை. அறிமுக நிலையில் எதிர்க்கிறீர்கள், அவ்வளவுதான். அதோடு இருக்கட்டும். திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவு என்பது, சிறையில் இருந்து கொண்டே நீதிபதியிடத்திலே தன்னுடைய வாக்குமூலங்களை அளிக்கக்கூடிய இந்தச் சட்டமுன்வடிவு என்பது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருப்பதும், சட்ட அமைச்சர் சொல்லியிருப்பதும் கைதிகளை அழைத்துச் செல்லும்போது பாதுகாப்பு இல்லை என்ற முறையில்தான் இதைக் கொண்டு வந்திருப்பார்கள் என்று நான் கருதுகிறேன். இருந்தபோதிலும்கூட, காவல் துறையிலே பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டுமே தவிர, அதற்காக இவர்கள் சிறையிலிருந்தே நீதிபதியிடத்திலே தங்களுடைய வாக்குமூலங்களை அளிப்பது என்பது சரியல்ல. ஆகையினாலே இந்தச் சட்டமுன்வடிவை நான் அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி டி. யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்படுகின்ற நிலையிலே எங்கள் எதிர்ப்பைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2002 மே 8]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஆ) சென்னைப் பெருநகர்ப் பரப்பிட நிலத்தடி நீர் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2002.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2002ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர்ப் பரப்பிட நிலத்தடி நீர் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு,* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2002ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர்ப் பரப்பிட நிலத்தடி நீர் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

***திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலே நான் எதிர்க்கிறேன். இது ஒரு தவறான முன்மாதிரியாகப் போய்விடும். எல்லா இடங்களிலேயும் ஒரே ஆழத்திலே நீர் கிடையாது. எனவே, இது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எனவே, எதிர்க்கிறோம் என்று சொன்னால் போதும்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களாலே கொண்டுவரப்பட்ட இந்த சட்டமுன்வடிவு தேவையில்லாத ஒன்று என்ற காரணத்தினாலே, இந்தச் நிலத்தடி நீர் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டத்தைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன்.

[2002 மே 8

நண்பகல் 12-00

***திரு. ப. ரங்கநாதன்:** தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ரங்கநாதனா? எதிர்க்கின்றீர்களா?

**திரு. ப. ரங்கநாதன்:** ஆமாம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற நிலத்தடி நீர் சம்பந்தமான இந்தச் சட்டத்தினை அறிமுக நிலையிலேயே நான் எதிர்க்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 7. அறிவிப்புகள்

### (அ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.



## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (இ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல். 2002ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 7. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2002ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)— தொடர்ச்சி

### (ஈ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல். 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.*

***மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2002-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

*மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 7. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (இ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.





## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)— தொடர்ச்சி

### (உ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல். 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.*

***மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

*ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

*மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

[2002 மே 8

## 8. மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி.*

**(அ) கோரிக்கை எண் 15—நிதித் துறை**

**(ஆ) கோரிக்கை எண் 35—திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை**

**(இ) கோரிக்கை எண் 1—மாநில சட்டமன்றம்**

**(ஈ) கோரிக்கை எண் 30—தகவல் தொழில்நுட்பவியல் துறை**

**(உ) கோரிக்கை எண் 48—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்**

**(ஊ) கோரிக்கை எண் 2—ஆளுநர் மற்றும் அமைச்சரவை**

**(அ) கோரிக்கை எண் 15—நிதித் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2002-2003 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 15—நிதித் துறை, மாண்புமிகு நிதி மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள்.*

**•மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"நிதித் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.458,65,16,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.21,93,73,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்." எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 6362, திரு. ஆர். சக்ரபாணி.*

**திரு. ஆர். சக்ரபாணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

*"நிதித் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.458,65,16,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.21,93,73,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."*



2002 மே 8]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வெட்டுத் தீர்மானம் எண் 7683, திரு. பி.எஸ். உலகரட்சகன்.*

**திரு. பி.எஸ். உலகரட்சகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

*"நிதித் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.458,65,16,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.21,93,73,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வெட்டுத் தீர்மானம் எண் 7462, திரு. ஜி.கே. மணி.*

**திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்;*

*"நிதித் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.458,65,16,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.21,93,73,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வெட்டுத் தீர்மானம் எண்4432, திரு. என். நன்மாறன்;*

**திரு. என். நன்மாறன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

*"நிதித் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.458,65,16,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.21,93,73,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வெட்டுத் தீர்மானம் எண்4594, திரு. கே.சி. கருணாகரன்.*

**திரு. கே.சி. கருணாகரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நிதித் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.458,65,16,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.21,93,73,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3915, திரு. எச்.எம். ராஜு.

***திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.458,65,16,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.21,93,73,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5153, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அரசுப் பணியாளர்களுக்குப் பல ஆண்டுகளாக வழங்கப்பட்டுவந்த சலுகைகளை அவர்களுக்கு வழங்கவேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.458,65,16,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.21,93,73,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1345, திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.458,65,16,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.21,93,73,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8010, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.458,65,16,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.21,93,73,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4137, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.458,65,16,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.21,93,73,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1949, திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4970, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.458,65,16,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.21,93,73,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7563, திரு. க. முருகவேல் ராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6792, திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.458,65,16,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.21,93,73,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5407, திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.458,65,16,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.21,93,73,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 826, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்;

"நிதித் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.458,65,16,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.21,93,73,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2732, திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.458,65,16,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.21,93,73,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1888, திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"நிதித் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.458,65,16,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.21,93,73,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1009, திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.458,65,16,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.21,93,73,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6972, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்: "நிதித் துறை பற்றிய 15-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.458,65,16,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,93,73,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7022, டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்

"நிதித் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.458,65,16,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.21,93,73,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7779, திரு. ஜெக. வீரபாண்டியன்.

***திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. ஜெக. வீரபாண்டியன்] [2002 மே 8

"நிதித் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.458,65,16,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.21,93,73,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7925 திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்;

"நிதித் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.458,65,16,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.21,93,73,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7108, திரு. எச். ராஜா.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.458,65,16,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.21,93,73,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**(ஆ) கோரிக்கை எண் 35 - திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 35-திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை. மாண்புமிகு நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கை எண் 35-ன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.31,88,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.5,69,69,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 6363, திரு. ஆர். சக்ரபாணி.



2002 மே 8]

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,88,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,69,69,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 657, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்கள் தொகை பெருக்கத்தைக் கணக்கில் கொண்டும் நிலத்தடி நீர் நாளுக்கு நாள் வற்றிப் போவதை உணர்ந்தும் தமிழகத்திலுள்ள மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகளுக்கு எதிர்காலத்தில் குடிநீர் விநியோகம் போதுமான அளவு கிடைக்க திட்டமிட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,88,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,69,69,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7452, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,88,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,69,69,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4435, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. என். நன்மாறன்] [2002 மே 8

"திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை பற்றிய 35-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,88,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.5,69,69,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3930, திரு. எச்.எம். ராஜு:

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,88,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,69,69,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5207, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,88,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,69,69,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1367, திரு. தி. வேல் முருகன்:

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்;

"திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,88,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,69,69,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7756, திரு. கோ. இரவிராஜ்.



2002 மே 8]

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,88,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,69,69,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6617, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,88,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,69,69,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1968, திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5060, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்;

"திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,88,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,69,69,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7254, திரு. க. முருகவேல் ராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5769, திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' நான் விவாதிக்க கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. கி. பாரிமோகன்] [2002 மே 8

"திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,88,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,69,69,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7227, திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,88,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,69,69,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 847, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,88,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,69,69,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1868, திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,88,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,69,69,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



2002 மே 8]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1029, திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்;

"திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,88,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,69,69,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8277, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்;

"திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,88,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 5,69,69,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7043, டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,88,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,69,69,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7805, திரு. ஜெக. வீரபாண்டியன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. ஜெக. வீரபாண்டியன்.] [2002 மே 8

"திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,88,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,69,69,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6048, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,88,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,69,69,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6874, திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கன்னியாகுமரி மாவட்டம், கீரிப்பாறையில் உள்ள பாராமலை மலைப்பகுதிக்குச் செல்வதற்கு ஒரு பாலம் அமைப்பதற்கான திட்டம் ஒன்று தயாரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,88,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,69,69,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5221, திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,88,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,69,69,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



2002 மே 8]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2739, திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,88,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,69,69,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

பிற்பகல் 12-05

**(இ) கோரிக்கை எண் 1 - மாநில சட்டமன்றம்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 1-மாநில சட்டமன்றம். மாண்புமிகு நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மாநில சட்டமன்றம் மானியக் கோரிக்கை எண் 1-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.11,82,59,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 6364, திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,82,59,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 718, திரு. சி. ஞானசேகரன்.

[2002 மே 8

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சம்பளத்தை இரத்து செய்துவிட்டு மகாராஷ்டிரா மாநிலத்தில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் படிகள் (Allowances) சலுகைகளைப் போன்று மாதம் ரூ.35,000 அளவுக்கு அரசு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில சட்டமன்றம் பற்றிய 1ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,82,59,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4878, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில சட்டமன்றம் பற்றிய 1ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,82,59,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4438, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில சட்டமன்றம் பற்றிய 1ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,82,59,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3810, திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில சட்டமன்றம் பற்றிய 1ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,82,59,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



2002 மே 8]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3905, திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில சட்டமன்றம் பற்றிய 1ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,82,59,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4505, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில சட்டமன்றம் பற்றிய 1ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,82,59,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1363, திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில சட்டமன்றம் பற்றிய 1ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,82,59,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7988, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில சட்டமன்றம் பற்றிய 1ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,82,59,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4912, திரு.கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில சட்டமன்றம் பற்றிய 1ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,82,59,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1935, திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5287, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில சட்டமன்றம் பற்றிய 1ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,82,59,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7080, திரு. க. முருகவேல் ராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5550, திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில சட்டமன்றம் பற்றிய 1ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,82,59,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5919, திரு. அ. இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில சட்டமன்றம் பற்றிய 1ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,82,59,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 814, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில சட்டமன்றம் பற்றிய 1ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,82,59,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1902, திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில சட்டமன்றம் பற்றிய 1ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,82,59,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 995, திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில சட்டமன்றம் பற்றிய 1ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,82,59,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6948, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில சட்டமன்றம் பற்றிய 1ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,82,59,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7036, டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் அறைகளில் போதிய வசதிகள் செய்து தர வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில சட்டமன்றம் பற்றிய 1ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,82,59,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5953, திரு. வி.கே. லட்சுமணன்.

***திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்கள் பிரச்சினைகள் குறித்து விவாதிப்பதற்காக தமிழக சட்டமன்றத்தை ஆண்டொன்றுக்கு நூறு நாட்களாவது நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில சட்டமன்றம் பற்றிய 1ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,82,59,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1513, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சென்னையிலிருந்து நெல்லை, கன்னியாகுமரி, தூத்துக்குடிக்குச் செல்லும் விரைவு இரயில் வண்டியில் சட்டமன்ற உறுப்பினர் களுக்குக் கூடுதல் இரண்டாம் வகுப்பு இருக்கைகள் மற்றும் இரண்டாம் வகுப்பு குளிர்சாதன இருக்கைகளும் ஒதுக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்;

"மாநில சட்டமன்றம் பற்றிய 1ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,82,59,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7804, திரு. ஜெக. வீரபாண்டியன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"மாநில சட்டமன்றம் பற்றிய 1ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,82,59,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6125, திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில சட்டமன்றம் பற்றிய 1ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,82,59,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2220, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வால்பாறை மலைப்பகுதி என்பதால் சட்டமன்றத் தொகுதி அலுவலகம் கட்டுவதற்கு ஏற்படும் அதிக தொகையை அரசு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில சட்டமன்றம் பற்றிய 1ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,82,59,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5724, திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ரயில்வே கட்டணமாக பணம் கொடுப்பதற்கு பதிலாக பாராளுமன்ற உறுப்பினர்களைப் போன்று சட்டமன்ற உறுப்பினரும் அவரது உதவியாளரும் ரயிலில் இலவசமாக பயணம் செய்ய அரசு அனுமதி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில சட்டமன்றம் பற்றிய 1ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,82,59,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6898, திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அரசு அலுவல்களுக்கு அப்பாற்பட்டு மக்களின் பிரச்சினைகளை விவாதிப்பதற்கு ஏற்ப மாநில சட்டமன்றம் ஒரு வருடத்தில் குறைந்தபட்சம் 100 நாட்கள் நடைபெறுவதற்கு உரிய சட்டத் திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில சட்டமன்றம் பற்றிய 1ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,82,59,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6046, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில சட்டமன்றம் பற்றிய 1ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,82,59,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2717, திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி அலுவல்களையும் கணினி மூலம் தலைமைச் செயலக கணினி இணையதளத்துடன் இணைக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில சட்டமன்றம் பற்றிய 1ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,82,59,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2188, திரு. கு. ஜெயக்குமார்.



**திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில சட்டமன்றம் பற்றிய 1ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,82,59,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5542, திரு. கே.என். சேகரன்.

**திரு. கே.என். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு அனைத்து வசதிகளும் கொண்ட புதிய சட்டமன்றக் கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில சட்டமன்றம் பற்றிய 1ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,82,59,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**(ஈ) கோரிக்கை எண் 30—தகவல் தொழில்நுட்பவியல் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 30-தகவல் தொழில்நுட்பவியல் துறை, மாண்புமிகு நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தகவல் தொழில்நுட்பவியல் துறை மானியக் கோரிக்கை எண் 30-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.10,25,14,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண். 6365, திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 30ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,25,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 744, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'Computer, Information Technology' படித்த தமிழக இளைஞர்களுக்கு வெளிநாடுகளில் அரசே வேலைவாய்ப்பைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 30ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,25,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7371, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 30ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,25,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4437, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 30ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,25,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5679, திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 30ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,25,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3927, திரு. எச்.எம். ராஜூ.

**திரு. எச்.எம். ராஜூ:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 30ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,25,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5199, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 30ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,25,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1362, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 30ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,25,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7745, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. கோ. இரவிராஜ்] [2002 மே 8

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 30ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,25,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6621, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 30ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,25,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1964, திரு. மு. கார்த்தி. இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5054, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 30ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,25,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7053, திரு. க. முருகவேல் ராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5763, திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 30ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,25,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6698, திரு. அ.இரா. மலையப்பசாமி.



2002 மே 8]

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 30ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,25,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9841, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 30ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,25,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1873, திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 30ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,25,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1024, திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 30ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,25,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

[2002 மே 8

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8273, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,25,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7009, டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,25,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5914, திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'Tidel Park-II கோவை நகரில் துவக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,25,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1479, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,25,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



2002 மே 8]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6059, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,25,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6137, திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,25,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7114, திரு. எச். ராஜா.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,25,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2718, திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தொழிலில் பின்தங்கிய பகுதியான திருவண்ணாமலையில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா சென்னையில் உள்ள Tidel Park போல் அமைத்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,25,14,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

[2002 மே 8

### (உ) கோரிக்கை எண் 48 - ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 48 - ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும். மாண்புமிகு நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும் மானியக் கோரிக்கை எண் 48-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.3,191,36,90,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 6366, திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,191,36,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 619, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,191,36,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7433, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



2002 மே 8] [திரு. ஜி. கே. மணி]

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,191,36,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4439, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,191,36,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3935, திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,191,36,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5157, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,191,36,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1370, திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஒய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,191,36,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8058, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஒய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,191,36,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6613, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஒய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,191,36,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1981, திரு. பு. கார்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5101, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஒய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,191,36,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7246, திரு. க. முருகவேல் ராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5798, திரு. கி. பாரிமோகன்.





**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,191,36,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6724, திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,191,36,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 860, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,191,36,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1855, திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,191,36,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1042, திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,191,36,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8292, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,191,36,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7038, டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,191,36,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5792, திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சுதந்திரப் போராட்ட வீரர்கள் ஒருவர்கூட பாக்கியில்லாமல் அனைவருக்கும் ஓய்வூதியம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,191,36,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1435, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,191,36,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7801, திரு. ஜெக. வீரபாண்டியன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,191,36,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2683, திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,191,36,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3849, திரு. லா. சந்தானம்.

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'உண்மையான சுதந்திரப் போராட்டத் தியாகிகள் பலர் தங்களது முதுமைப் பருவத்தில் எந்த ஆதரவுமில்லாமல் கஷ்டப்படுகின்ற நிலையில் அவர்களுக்கு தியாகிகளுக்கான ஓய்வூதியம் வழங்க வேண்டியதன்

அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,191,36,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1049, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'முதியோர் ஓய்வுத் தொகைகள் மாதா மாதம் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,191,36,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6497, திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,191,36,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4479, திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'இரண்டாம் உலகப் போரில் பாதிக்கப்பட்ட வீரர்களது குடும்பத்திற்கு ஓய்வூதியத்தை உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,191,36,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6254, திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் ஓய்வூதியம் வேண்டி விண்ணப்பித்த சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கு ஓய்வூதியம் உடனடியாக வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,191,36,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6036, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,191,36,90,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

### (ண) கோரிக்கை எண் 2 - ஆளுநர் மற்றும் அமைச்சரவை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 2, ஆளுநர் மற்றும் அமைச்சரவை, மாண்புமிகு நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை மானியக் கோரிக்கை எண் 2-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.9,15,38,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

[2002 மே 8

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 6367, திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,15,38,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 714, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஆளுநர், முதல்வர், அமைச்சர்களை எம்.எல்.ஏக்கள் மாதத்தில் முதற் திங்கட்கிழமைகளில், திங்கட்கிழமை விடுமுறை நாள் எனில் அடுத்த வேலை நாளில் appointment இன்றி சந்திக்க அவர்கள் 2 மணி நேரம் ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,15,38,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4868, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,15,38,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4440, திரு. என். நன்மாறன்.



2002 மே 8]

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,15,38,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3808, திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,15,38,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3906, திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,15,38,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4495, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,15,38,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1381, திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,15,38,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7989, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,15,38,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4200, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,15,38,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1936, திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5298, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,15,38,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7275, திரு. க. முருகவேல் ராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5620, திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,15,38,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1901, திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,15,38,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 996, திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,15,38,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6951, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,15,38,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7035, டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,15,38,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2727, திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,15,38,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7802, திரு. ஜெக. வீரபாண்டியன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,15,38,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6559, திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,15,38,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7922, திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,15,38,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6043, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,15,38,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானிய கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதித் துறை திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை, தகவல் தொழில்நுட்பவியல் துறை, ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் மற்றும் ஆளுநர் மற்றும் அமைச்சரவை ஆகிய மானியக்

கோரிக்கைகள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பெற்று, உறுப்பினர்களுக்கு வழங்கப்பெற்றுள்ளன. அவற்றில் தமிழிலுள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பேரவைப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாநில சட்டமன்றம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு அவைக்கு அளிக்கப்படுவதில்லை. மாண்புமிகு உறுப்பினர்களுடைய அரிய கருத்தினைக் கேட்டு, இறுதியிலே என் பதிலுரையை அவைக்கு நான் அளிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தின் கடைசி நாள். பேரவை விதி 155 (3)-ன்படி விவாதமும், பதிலுரையும் பிற்பகல் 1-30 மணிக்கு முடித்து, மானியக் கோரிக்கைகள் வாக்கெடுப்புக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே இன்று விவாதத்தில் கலந்துகொள்ளும் உறுப்பினர்கள் மிகவும் சுருக்கமாகப் பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கு இன்று 12-45-க்கு விவாதத்தை முடித்துக்கொடுத்தால் பதிலுரை சொல்வதற்கு வசதியாக இருக்கும். 1-25-க்கு முடித்துக்கொள்ளலாம் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆக 12-45-க்குள்ளே விவாதத்தை முடித்துக்கொள்ள வேண்டும். ஆகவே உறுப்பினர்கள் சுருக்கமாகப் பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன். திரு. மீ.அ. வைதியலிங்கம்.

பிற்பகல் 12-10

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை எண் 15 — நிதித் துறை, கோரிக்கை எண் 35 — திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை, கோரிக்கை எண் 1 — மாநிலச் சட்டமன்றம், கோரிக்கை எண் 30 — தகவல் தொழில் நுட்பவியல் துறை, கோரிக்கை எண் 48 — ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும், கோரிக்கை எண் 2 — ஆளுநர் மற்றும் அமைச்சரவை என்கிற இந்த 6 மானியக் கோரிக்கைகள் மீது பேசுகின்ற வாய்ப்பினை அளித்தமைக்காக தங்களுக்கு முதலிலே என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, 6 மானியங்களுக்கும் ஒரு மானியத்திற்கு இரண்டு மணித்துளிகள்

@ 551 முதல் 641 வரையிலான பக்கங்களில் இணைப்பு I,II,III,IV மற்றும் V-ஆக அச்சிடப்பெற்றுள்ளன.



என்ற வீதத்தில் 12 மணித்துளிகளாவது அளிப்பீர்கள் என்ற நம்பிக்கையோடு நான் என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுசேமிப்பு என்பது மக்களிடம் சேமிக்கும் பழக்கத்தையும் அதன்மூலம் குறிப்பிட்ட காலங்களில், எதிர்கால வாழ்வில் பயன்பெறும் வகையில் பாதுகாப்பையும் அளிப்பதோடு மாநில அரசுக்கு மிக முக்கியமான வருவாய் ஆதாரமாகத் திகழ்கிறது. சிறுசேமிப்பு நிகர வருவாயை, மத்திய அரசு மாநில அரசுக்கு நீண்டகாலத் தவணைத் தொகையாக — அதாவது 25 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்துவதாகவும் இன்னுமுள்ள 5 ஆண்டுகளுக்கும் நீட்டிப்புக்கூட கொடுத்து தவணை முறையிலே அளிக்கிறது. ஆனால் அதற்கு 10.5 விழுக்காடு வட்டியை மத்திய அரசு நிர்ணயித்திருக்கிறது. அதை இன்னும் கொஞ்சம் குறைத்துக்கூட கேட்கவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏனென்றால் சிறுசேமிப்புத் திட்டங்களுக்கு வழங்கப்படும் வட்டி வீதம் பொதுமக்களுக்கு 1-3-2002 முதல் மத்திய அரசு ஓரளவுக்குக் குறைத்துள்ளது என்பதையும் அது சேமிக்கிற பழக்கத்தை, ஊக்கத்தை மக்களிடம் குறைத்துவிடும் என்பதையும் நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போல முகவர்களுக்கு, மகளிர் முகவர்களுக்கு அளிப்பதைப்போன்று 6 விழுக்காடு தரகுத் தொகை அளிக்கவில்லை என்று சொன்னாலும்கூட, குறைந்தபட்சம் 3 விழுக்காடாவது அனைத்து முகவர்களுக்கும் தரகுத் தொகையை அளித்து ஊக்கப்படுத்தினால்தான் நாம் எண்ணிய இலக்கை அடையமுடியும். இப்போதுகூட ரூ.2,400 கோடிக்கு இலக்கை எதிர்பார்த்து 1,850 கோடி ரூபாய்தான் இதுவரையிலே வசூல் செய்ய முடிந்திருக்கிறது. அதன் காரணமாக நம்முடைய முகவர்களை ஊக்கப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பரிசுச் சீட்டு. இதன்மூலம் அரசுக்குக் கிடைத்திருக்கிற வருவாய் ரூ.50.23 கோடிதான். இந்த வருவாயிலே ஆண்டுதோறும் டிசம்பர் மாதம் முதல் குலுக்கலிலே வரும் தொகை முன்னாள் இராணுவ வீரர்களின் நல நிதிக்கு ஒதுக்கப்படுகிறது. இது சிறப்பு வாய்ந்த அம்சம்தான். 2001-2002-ல் உடல் ஊனமுற்றவர்களுக்காக சிறப்புக் குலுக்கல் நடைபெற்றதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இந்தப் பரிசுச் சீட்டுத் திட்டத்தின் மூலமாக அரசுக்குக் கிடைத்திருக்கிற வருவாய் ரூ.50.23 கோடி. இது ஒரு சமுதாயச் சீரழிவுத் திட்டம் என்று சொன்னால் அது மிகையாகாது. இதன் மூலம் ரூ.50.23 கோடி வருவாய் வருகிறது என்று

சொன்னால்கூட, பல்வேறு குளறுபடிகள் இதிலே நடப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. நாட்டிலே நல்ல பணத்திற்கே கள்ள நோட்டாக அடிக்கிற வாய்ப்பு உள்ளவர்கள், நல்ல நாணயத்தையே கள்ள நாணயங்களாக அடிக்கிறவர்கள், இந்தப் பரிசுச் சீட்டுகளை கள்ளச் சீட்டுகளாக அடிப்பதற்கு ஒன்றும் கடினமாக இருக்காது என்பது என்னுடைய அபிப்பிராயம். இதனுடைய விளைவாகவும், சுரண்டல் பரிசுச் சீட்டுகள் மூலமாகவும், ஏழை எளிய மக்கள் கிட்டத்தட்ட குடிகாரர்களைப் போல இதிலே ஐக்கியமாகிறார்கள். இதனுடைய விளைவாக குடியைவிட மிக மோசமாக பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அன்றாடங் காய்ச்சிகள், அன்றாடம் உழைத்துச் சம்பாதிக்கிற சம்பளத்தை, வாரத்திற்கு ஒரு முறை இந்தப் பரிசுச் சீட்டுகளை முடிந்த அளவுக்கு வாங்கி தங்களுடைய குடும்பத்தைச் சீரழிக்கிறார்கள் என்பதையும் நான் இந்த நோத்தில் சுட்டிக்காட்டி, இந்த வருவாய் மிகப் பெரிய வருவாயாக அரசுக்கு இல்லாத காரணத்தால், இதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து அரசு அலுவலர்களைப் பொறுத்தமட்டில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது, ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரையை ஏற்று அதனுடைய விளைவாக தென்னகத்திலேயே முதன்முதலாக ஆண்டுக்கு ரூ.1,300 கோடி கூடுதல் செலவில் புதிய ஊதிய உயர்வை வழங்கினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அந்த ஊதியக் குழுவின் பரிந்துரைகளில்கூட சில குறைகள் இருப்பதாக வந்த கோரிக்கைகளை ஏற்று ஒரு நபர் ஆணையம் அமைத்து, அந்த ஆணையத்தின் பரிந்துரையை ஏற்று அதனுடைய விளைவாகப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு, இடைநிலை ஆசிரியர்களுக்கு, முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு 75 கோடி ரூபாய் கூடுதல் ஊதியமாக உயர்த்தி வழங்கப்பட்டது எங்களுடைய தலைவர் கலைஞருடைய ஆட்சியிலேதான்.

மைய அரசு ஆசிரியர்களுக்கு வழங்கிய ஊதிய விகிதங்களை தமிழக அரசும் தமிழகத்திலே உள்ள ஆசிரியர்களுக்கு வழங்கியதையொட்டி ஏற்பட்ட ஊதிய முரண்பாடுகளைக் களைவதற்காக, அமைச்சுப் பணியாளர்களுக்கும் அவர்களுக்கு இணையான மற்ற அலுவலர்களுக்கும் 5 விழுக்காடு தனி ஊதியம் கூடுதலாக வழங்கியதன் விளைவாக ரூ.83 கோடியை வழங்கியதும் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிதான்.



சத்துணவுப் பணியாளர்களுக்காகக் கூடுதல் ஊதியமாக ரூ. 60 கோடி உயர்த்தி அளித்தது தலைவர் கலைஞருடைய ஆட்சியிலேதான். ஆக ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரையை ஏற்று, கூடுதல் சம்பளமாக ரூ.1,448 கோடி வழங்கியது கலைஞர் அரசுதான் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அரசு ஊழியர்களுக்கு, தலைவர் கலைஞர் ஆட்சியில் 29 நாள் சம்பளம் போனஸாக வழங்கப்பட்டது.

*பிற்பகல் 12-15*

ஓய்வூதியத்தைப் பொறுத்த வரையில் மாநிலக் கணக்காய்வு அலுவலகத்திலே தொடர்பு கொண்டு, ஓய்வு பெறும் நாளன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியப் பயன்கள் தீர்வு செய்வதன் மூலம், அலுவலர்கள், ஊழியர்கள், தாமதமின்றி, ஓய்வூதியப் பயன் அடைய நடவடிக்கை எடுக்கப்படுவதாக கொள்கைக் குறிப்பிலே கூறியிருக்கிறீர்கள். ஆனால், உண்மை என்ன? மாதக் கணக்கில், ஏன், ஆண்டுக் கணக்கில்கூட, ஓய்வு பெற்றதற்குப் பின்னாலே, ஓய்வூதியம் பெற முடியாதவர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள் என்பதை இங்கே ஆதாரத்தோடு என்னால் சுட்டிக்காட்ட முடியும். இந்த அரசு, அதிலே தனிக் கவனம் செலுத்த வேண்டும். ஏனென்றால் அரசு அலுவலர்கள், ஊழியர்கள், பல்லாண்டு காலம் பணியாற்றிவிட்டு, ஓய்வு பெற்று வீட்டிற்குச் செல்கிறபோது, அவர்களுக்கு ஓய்வூதியம்கூட கிடைக்காத நிலை ஏற்படுமேயானால், அதனால் அந்தக் குடும்பம் எந்த அளவுக்கு நிர்கதியாக நிற்க வைக்கப்படும் என்பதை இந்த அரசு உணர வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல எல்லா ஆட்சியிலும் ஒரு கொடூரமான சம்பவம் என்னவென்றால் - அதை அமைச்சர்கள் செய்வதில்லை; அரசியல்வாதிகள் செய்வதில்லை — அதிகாரிகள், ஓய்வு பெறுவது 5 மணிக்கு என்று சொன்னால், 3 மணிக்கு அவர்களைத் தற்காலிகப் பணிநீக்கம் செய்வார்கள். அதனுடைய விளைவால், அந்தக் குடும்பம் எந்த அளவுக்குப் பாதிக்கப்படும் என்பதை எண்ணிப் பார்க்காத அவர்களுடைய மேலதிகாரிகள், தங்களுடைய விருப்பு வெறுப்புகளுக்கு ஆளாகிற, தங்கள்கீழ் பணியாற்றுகிற அதிகாரிகள்மீது, அப்படி நடவடிக்கை எடுப்பதன் விளைவாக, பலபேர் இன்றைக்கு நடு வீதியிலே நின்று கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அப்படிப்பட்ட நேர்வுகளை இந்த அரசு ஆய்ந்து, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் ஆய்ந்து, மாண்புமிகு முதல்வருடைய கவனத்திற்குக்

கொண்டு சென்று அவர்களுக்கெல்லாம் பரிகாரம் காண வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

ஓய்வூதியம், குடும்ப நல பாதுகாப்புத் திட்டம், தலைவர் கலைஞருடைய ஆட்சியில்தான், 1-1-1997 முதல் தொடங்கப்பட்டது. 1-1-1998 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஓராண்டு சந்தா செலுத்தி இருந்தால், 25 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டதன் மூலம், 18,362 நபர்கள் பயன் பெற்றார்கள் என்றும், நிலுவையிலுள்ள விண்ணப்பங்களைத் தீர்வு செய்வதற்காக 2001-2002 ஆம் நிதியாண்டில் 5 கோடி சிறப்பு மானியம் வழங்கப்பட்டு உள்ளதாகவும் கொள்கைக் குறிப்பிலே கூறப்பட்டுள்ளது. இதோடு சேர்த்துதான் அந்த 18,362 பேர்களா அல்லது தனியாக இந்த 5 கோடி வழங்கப்பட்டு இருக்கிறதா என்கிற விவரம் கொள்கை விளக்கக் குறிப்பிலே இல்லை. 1-7-1996-ல் தலைவர் கலைஞருடைய ஆட்சியில் முழு ஓய்வூதியம் பெற 33 ஆண்டுகள் பணி தேவை என்பதை மாற்றி, 30 ஆண்டுகள் போதும் என ஆணையிடப்பட்டது. தலைவர் கலைஞர் ஆட்சியில்தான், எந்த அரசாலும் நிறைவேற்றாத முன்னோடித் திட்டமாக ஓய்வு பெறும் நாள் அன்று பெறப்படும் அந்த ஊதியத்தில், 50 விழுக்காடு அல்லது அதற்கு முன் 10 மாதகால அளவில் பெற்ற சராசரி ஊதியத்தில் 50 விழுக்காடு என்று வரையறுத்து ஆணையிடப்பட்டது. தனிப்பட்ட அலுவல் சார்பாக வழங்கப்படும் அரை சம்பளத்துடன்கூடிய விடுப்பை ஒப்படைவு செய்வதை அரசு ஏற்றுக் கொண்டு, 90 நாட்களுக்கு மிகைப்படாமல், 50 விழுக்காடு விடுப்பை ஒப்படைவு செய்து, விடுப்புகால முழுச் சம்பளம் வழங்க, 1996-97-ல் ஆணையிட்டதும் எங்களுடைய தலைவர் கலைஞருடைய ஆட்சியில்தான். ஓய்வு பெறும்போது, ஒப்படைவு செய்யும் ஈட்டிய விடுப்பிலிருந்து 180 நாட்கள் வீட்டு வாடகைப் படி, நகர ஈட்டுப் படி போன்ற இதர படிகளையும் சேர்த்து, முழுச் சம்பளம் வழங்கும் ஆணையை, 240 நாட்களுக்கு ஈட்டிய விடுப்பினை ஒப்படைவு செய்து பணம் பெறும் திட்டத்தில் எஞ்சி இருக்கிற 60 நாட்களுக்கும் வாடகைப் படி, நகர ஈட்டுப் படி போன்ற படிகளையும் பெற, தலைவர் கலைஞர் ஆட்சியில்தான், 1996-97-ல் ஆணையிடப்பட்டது என்பதையும் நான் சுட்டிக்காட்டுகிறேன்.

அரசு அலுவலர்களைப் போல, உள்ளாட்சி அமைப்பு அலுவலர்களையும், மருத்துவ உதவிச் செலவில் 25 விழுக்காடு அல்லது ஒரு இலட்சம் ரூபாய் அறுவைச் சிகிச்சைக்கு வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டதும் தலைவர் கலைஞருடைய ஆட்சியிலேதான்.



ஓய்வூதியக்காரர்களுக்கு, மருத்துவ அறுவைச் சிகிச்சைக்கான செலவில் 75 விழுக்காடு அல்லது அதிகபட்சம் ரூ.50 ஆயிரம் வழங்கப்படுகிறது. இதற்காக ஆண்டுக்கு ரூ.8 இலட்சம் ஒதுக்கியதாகவும், நிலுவையிலுள்ள விண்ணப்பங்களைத் தீர்வு செய்ய ரூ. 2 கோடி சிறப்பு நிதி தரப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது. 31-3-2002 வரை 6,535 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, அதிலே 7.54 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டு உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தத் தொகை, சிறப்பு நிதி ரூ.2 கோடியைச் சேர்த்ததா, அல்லது இது தனிக் கணக்கா என்பது தெளிவுபடுத்தப்படவில்லை. தமிழ்நாடு அரசு ஊழியர்கள் சிறப்பு சேம நல நிதி மற்றும் பணிக் கொடைத் திட்டம். இது 1984 ஆம் ஆண்டு முதல் அமல்படுத்தப்பட்டுள்ளது. மாதம் ஒன்றுக்கு ரூ.20 வீதம், 148 மாதங்கள் பிடித்தம் செய்து, பணியிலிருந்து ஓய்வு பெறுகிறபோது, அத்தொகையும், அதற்கான வட்டியும், அதோடு அரசினுடைய பங்குத் தொகையாக ரூ.5 ஆயிரமும் சேர்த்து, ஓய்வு பெறுகிறபோது வழங்குகிற அந்தத் திட்டத்தை, 15-9-2000-இல் எங்களுடைய தலைவர் கலைஞருடைய ஆட்சியில். ரூ.10 ஆயிரமாக உயர்த்தப்பட்டது என்பதையும் நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 12-20

அரசுப் பணியாளர்களுக்கு உயர்த்தப்பட்டதுபோல் 40 விழுக்காடு ஓய்வூதியத்தை ஓய்வூதியதாரர்களுக்கும் உயர்த்தி, குடும்ப நல ஓய்வு ஊதியத்தை ரூ.375-லிருந்து, (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வைதியலிங்கம், 2 மணித் துளியிலே பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** இன்னும் ஆரம்பிக்கவே இல்லை; 6 மானியக் கோரிக்கைகள் இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கேட்ட நேரம் 12 மணித் துளிகள்தான். 12 மணித் துளிகள் கேட்டீர்கள்; இன்னும் 2 மணித்துளிகள் இருக்கின்றன.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** 10 மணித் துளிகள் இன்னும் ஆகவில்லை. சட்டமன்ற சட்டமன்றத்தைப் பொறுத்தவரையில் எடுத்துக்கொண்டால், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இந்தியாவிலேயே முதன்முதலாக தொகுதி மேம்பாட்டு நிதி என்று ஒதுக்கியது எங்களுடைய தலைவர் கலைஞர் ஆட்சியிலேதான். அது படிப்படியாக ரூ.77 இலட்சமாக உயர்த்தப்பட்டு, அதிலே

ரூ.12 இலட்சம் கம்ப்யூட்டர் அறைகள் கட்டுவதற்கு ஒதுக்கப்பட்டு, மீதி ரூ.65 இலட்சம் சட்டமன்ற உறுப்பினர்கள் விரும்புகிற பணியைச் செய்வதற்கு ஒதுக்கப்பட்டது. இந்த ஆட்சியிலே அது ரூ.82 இலட்சமாக உயர்த்தப்பட்டாலும்கூட, ரூ32 இலட்சம்தான் சட்டமன்ற உறுப்பினர்கள் விரும்பிய பணிகளைச் செய்யலாம் என்று இருப்பதை மீண்டும் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதுபோல அரசு அலுவலர்களுக்கு வழங்கப்பட்டு இருக்கிற சலுகைகள் எல்லாம்—பண்டிகை காலக் கடனாக இருந்தாலும், போனஸாக இருந்தாலும், அவர்களுடைய மக்களுக்கு கருணை அடிப்படையிலே வேலைவாய்ப்பு அளிப்பதாக இருந்தாலும், அப்படிப்பட்ட திட்டங்களை எல்லாம்—இந்த அரசு நிதிப் பற்றாக்குறை என்கிற முகமூடியை அணிந்துகொண்டு கடந்த ஓராண்டு காலமாக அதையே சொல்லி, அரசு அலுவலர்களுடைய மிக முக்கியப் பிரச்சினையான ஜீவாதாரப் பிரச்சினைகளான போனஸை நிறுத்தியாகிவிட்டது; பண்டிகை முன்பணம் 2,000 ரூபாய் வங்கியிலே பெற்றுக்கொண்டால் வட்டியை அரசு செலுத்தும் என்று சொன்னீர்கள்; ஆனால் பெற்றுக் கொண்டதற்குப் பின்னாலே, அந்த வட்டியைக்கூட அரசு பிடித்தம் செய்கிறது என்பது மிக மிக வருந்தத்தக்க விஷயமாக இருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல. அரசு அலுவலர்கள் கருணை அடிப்படையிலே அவர்களுடைய வாரிசுகளுக்கு வேலை கேட்டால் தரப்படுவது இல்லை. அவர்கள் இடமாற்றம் கேட்டால்கூட, வாடகைப் படி கேட்கக்கூடாது; பயணப் படி கேட்கக்கூடாது; அப்படி இருந்தால்தான் அவர்களுடைய விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும் என்று எழுதப்படாத சட்டம் அமல்படுத்தப்பட்டு இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமைகள் நீடிக்குமானால்,—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணித் துளியில் பேசி முடித்து விடுங்கள்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** நான் ஒன்றை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எவ்வளவு அறிவார்ந்த அமைச்சரவையாக இருந்தாலும்கூட அவர்கள் தீட்டுகிற திட்டங்கள் மக்கள் மத்தியிலே போய்ச் சேர வேண்டுமானால், அரசு அலுவலர்கள் தொய்வின்றி பணியாற்றினால்தான் அந்தத் திட்டங்கள் மக்கள் மத்தியிலே போய்ச்



சேர முடியுமே தவிர, நேராக போய்ச் சேர்ந்துவிட முடியாது என்கிற காரணத்தினால், அப்படிப்பட்ட அரசு ஊழியர்களை நீங்கள் மேலும் மேலும் துன்புறுத்தாமல் அவர்களுடைய உரிமைகளுக்குக் குரல் கொடுத்தால்கூட அதற்கு சிறைவாசம், அபராதம் என்பதையெல்லாம் நீங்கள் மீண்டும் மறுபரிசீலனை செய்து அரசு அலுவலர்களுடைய வாழ்விலே ஒளியேற்ற வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் உங்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெ. பழனியப்பன். (குறுக்கீடு)

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மணித் துளியில் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரம் இல்லை.

***திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்து, கழகத்தினுடைய கிளைச் செயலாளராக இருந்த என்னை ஒன்றியக் குழு உறுப்பினராக்கி, மாவட்ட இளைஞர் அணியினுடைய துணைத் தலைவராக்கி, ஒன்றியக் கழகத்தினுடைய செயலாளராக்கி அதற்குப் பின்பு எனக்கு மொரப்பூர் சட்டமன்றத் தேர்தலிலே போட்டியிடுவதற்கு வாய்ப்பினை நல்கி, எனக்காக இரவு என்றும் பாராமல், பகல் என்றும் பாராமல் சூறாவளி சுற்றுப் பயணம் செய்து என்னை வெற்றி பெறச் செய்து இன்றைக்கு ஆன்றோர்கள், சான்றோர்கள் வீற்றிருக்கிற இந்த அவையிலே பேசுவதற்கு வாய்ப்பினை உருவாக்கிக் கொடுத்த எங்களுடைய இதய தெய்வம், நாங்கள் வணங்குகிற இதய தெய்வம் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கிற திசை நோக்கி என்னுடைய பணிவான வணக்கத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதித் துறை, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை, தகவல் தொழில்நுட்பவியல் துறை, மாநில சட்டமன்றம் ஆகிய மானியக் கோரிக்கைகள்மீது பேசுகிற வாய்ப்பினை நல்கியதற்காக முதலில் தங்களுக்கு என்னுடைய மனமார்ந்த வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். அரசாங்கத்தினுடைய செயல் திட்டங்களை செயல்படுத்துவதற்கும், கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கும் நிதி அவசியம் எனக் கருதப்படுகிறது. அரசாங்கத்தினுடைய வருவாயைப் பெருக்குவது நிதித் துறையின் வேலையாகும். சிறு சேமிப்பு - Small Savings - பரிசுச் சீட்டு போன்றவை இதற்குப் பெரிதும் உதவுகின்றன. அகில இந்திய அளவில்

பொருளாதார, சமூகத் துறையில் மிகச் சிறந்த சாதனைகளுடன் சீரிய நிதி நிர்வாகம் உள்ள மாநிலமாக தமிழகம் திகழ்ந்து வருகிறது. எனினும் கடந்த சில ஆண்டுகளில் அரசின் நிதி நிலைமை படிப்படியாக சீரழிந்து வந்துள்ளதால், ஏற்கெனவே இருந்த கட்டுக்கோப்பான நிதிநிலை தகர்ந்துபோய்விடுமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. இவ்வாறான நிதிநிலைமையை படிப்படியாக உயர்த்த நடவடிக்கை மேற்கொண்டுவரும் எங்களுடைய இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிதிநிலையை சரிக்கட்டுவதற்காகத்தான், மாநிலங்கள் மீளும்வண்ணம் முழு அளவிலான ஒருகட்டத் திட்டமாக மாநிலங்கள் அனைத்திற்கும் நிதியை ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வேண்டுகோள் விடுத்து இருக்கிறார்கள். இதை அடிப்படையாக வைத்து அனைத்து மாநிலங்களும் பின்பற்றக்கூடிய வகையிலே இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு அவர்கள் ஆதரவாக இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12-25*

கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மத்திய அரசும் மாநில அரசுகளும், ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து தவறான கொள்கையால், தவறான போக்கினால் பல்வேறுபட்ட நலத் திட்டங்களை இங்கே செய்யத் தவறவிட்டிருக்கிறார்கள். குறிப்பாக, சமத்துவபுரம் என்றவொரு திட்டத்தைக் கொண்டுவந்து, அந்தத் திட்டத்தின் மூலமாக சாதாரணமாக கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய ஏழையெளிய மக்களுக்குக் கிடைக்கக்கூடிய இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தைக்கூட தன்னுடைய கழகத் தோழர்களுக்குக் கிடைப்பதற்காக சமத்துவபுரம் என்பது தி.மு.க.புரமாக இருந்தது என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தன்னுடைய கட்சிக்காரர்களுக்கு உதவுவதற்குக் கொண்டுவந்த திட்டம்தான் அந்த சமத்துவபுரத் திட்டம். ஏற்கெனவே நடைமுறையில் இருந்த திட்டம் அது. தன்னுடைய கட்சிக்காரர்களுக்கு உதவுவதற்காகவே அந்தத் திட்டத்தை சமத்துவபுரம் என்பதை திமுகபுரமாகக் கொண்டு வந்தார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமத்துவபுரத்தில் வீடுகள் ஒதுக்குவது என்பது, இஷ்டத்திற்கு இவருக்குக் கொடு, அவருக்குக் கொடு என்று அல்ல. கலெக்டர் அவர்கள் யார், யார் விண்ணப்பம் கொடுத்தார்களோ அவர்களை குலுக்குச் சீட்டின் மூலமாக



எடுத்திருக்கிறார்கள். அதிலே உண்மை என்னவென்று கேட்டால் எங்கள் கட்சிக்காரர்களுக்குக் கிடைக்கவில்லை என்று எங்கள் கட்சிக்காரர்களின் சாபம்தான் எங்களுக்கு அதிகம்.

**திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்சி உறுப்பினர் கார்டு கொடுத்தவர்களுக்குத்தான் ஒதுக்கப்பட்டது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட முன்னேற்றக் கழக கட்சி உறுப்பினர் கார்டு......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முழுக்க முழுக்க சமத்துவபுரம் என்பது கலெக்டருடைய செலக்ஷன் என்பது ஒரு போர்வையே தவிர என்னுடைய தொகுதியிலே — கரசங்கால் பகுதியிலும் சரி, சுங்குவார்சத்திரம் எங்கே இருக்கிறது, அங்கே இருக்கிறவர்களுக்கு கரசங்காலிலே கொடுத்திருக்கிறார்கள். அத்தனைபேரும் முழுக்க முழுக்க திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள்தான் என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. பெ. பழனியப்பன்:** மேலும் இந்தக் கருத்தைச் சொல்கிறபோது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர் அட்டை வைத்திருப்பவர்களுக்குக் கொடுத்தது மட்டுமல்லாமல், இன்றைக்கு தமிழகத்திலே இருக்கக்கூடிய அத்தனை சமத்துவபுரங்களிலும் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கொடி பறக்கிறது என்பதை யாரும் மறுத்துவிட முடியாது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடுமட்டுமல்ல கூட்டுறவுச் சங்கங்களிலே நிதியைப் பெறுகிறபோது, கடன்களை வழங்குகிறபோது, ஏழையெளியவர்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அந்தக் கடன்களை வழங்காமல் கூட்டுறவுச் சங்கத்தினுடைய தலைவருக்கு வேண்டிய உறவினர்களுக்கு அந்தக் கடன்கள் வழங்கப்பட்டதன் காரணமாக, இன்றைக்கு சரியான முறையிலே அந்த நிதியை, அந்தக் கடனை திருப்பிச் செலுத்தாத காரணத்தால் பல்வேறுபட்ட கூட்டுறவுச் சங்கங்களை இழுத்து மூடுகிற அவல நிலை ஏற்பட்டு இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. பெ. பழனியப்பன்] [2002 மே 8

அதோடுமட்டுமல்ல. பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களில் ஒரு கிராமத்திற்கு ஓர் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தில் 5 பேர்களுக்கு கடனைக் கொடுத்தார்கள். அந்த 5 பேரும் தனக்கு வேண்டியவர்களுக்கு பினாமி பெயரிலே கடனைப் பெற்றுக் கொண்டார்கள். கடனைக் கொடுக்கிறபோது, ஒரு நீதியை வைத்தார்கள். என்ன வைத்தார்கள் என்று சொன்னால், அந்தக் கடன்களை கடன் பெற்றவர்கள் திருப்பிச் செலுத்தவில்லை என்றால் பால் உற்பத்தியாளருக்கு தர வேண்டிய பணத்தில் அத்தனையும் பிடிக்கப்படும் என்று சொல்லியிருந்தார்கள். அதனுடைய அடிப்படையிலே இன்னும் அந்தக் கடனை இவர்கள் திருப்பிச் செலுத்தாமல் இருக்கிற காரணத்தால் அங்கே இருக்கக்கூடிய பால் உற்பத்தியாளர்களுக்கு மிகப் பெரிய நட்டம் ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் ஊற்றுகிற பாலுக்கான பணத்தில், அவர்கள் வழங்கிய கடனை இவர்கள் பிடித்துக்கொள்கிறார்கள். இப்பேர்ப்பட்ட முறை இன்று தமிழகமெங்கும் இருந்து கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறாக திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி நடைபெற்ற காரணத்தால் இன்றைக்கு கூட்டுறவுச் சங்கங்கள் நலிவடைந்த நிலையிலே, மூடப்படுகிற நிலையிலே இருக்கின்றன. அதைச் சீர்திருத்தம் செய்கிற வகையிலே, அதை நிலைநிறுத்துகிற வகையிலே இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறுபட்ட திட்டங்களைத் தீட்டி வருகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு நிதி ஆதாரங்களை சரி செய்வதற்காக ஆண்டுத் திட்டம், ஐந்தாண்டுத் திட்டம் தயாரித்து மாநில திட்டக் குழுவின் உதவியோடு — ஐந்தாண்டுத் திட்டம் மற்றும் ஆண்டுத் திட்டங்களைத் தயாரிப்பதன் மூலமாக இன்றைக்கு — பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டம் அமலில் இருந்தபோது இவ்வாறான தவறுகளையெல்லாம் செய்து காட்டியிருக்கிறார்கள்.

அதோடு மட்டுமல்ல. இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். நான் சமத்துவபுரம் பற்றிச் சொல்கிறபோது ஒரு சில கருத்தைச் சொன்னேன். அதனுடைய அடிப்படையிலே, ஏழையெளிய மக்களுக்கு, பெண்களுக்கு, குடும்பங்களுக்குத் தரப்படுகிற, 'Gas' வழங்க வேண்டுமென்று சொன்னாலும்கூட, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அட்டை



2002 மே 8] [திரு. பெ. பழனியப்பன்]

வைத்திருப்பவர்களுக்குத்தான் வழங்கினார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும், தி.மு.க. அரசின் இவ்வாறான தவறான போக்கின் காரணமாக இன்றைக்கு நம்முடைய தமிழகம் நிதி நெருக்கடியில் மாட்டிக்கொண்டிருக்கிறது. அந்த நெருக்கடியிலிருந்து மீளுவதற்காக நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறுபட்ட நலத் திட்டங்களை எடுத்து வைத்திருக்கிறார்கள். 10-வது ஐந்தாண்டுத் திட்டத்தினுடைய வளர்ச்சியாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற 15 அம்சத் திட்டம் நிச்சயமாக இன்றைக்கு தலைதூக்கி நிற்கும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-30

இன்றைக்கு இந்தத் திட்டத்தின் வாயிலாக உணவுப் பாதுகாப்பு; தொடர் பசுமைப் புரட்சி; சுகாதாரப் பாதுகாப்பு; நீர்வளப் பாதுகாப்பு; வாழ்வாதாரப் பாதுகாப்பு; உறைவிடப் பாதுகாப்பு; எரிசக்தி பாதுகாப்பு; வளர்ச்சிக்கான கட்டமைப்பு வசதி; எழுத்தறிவு மற்றும் தொழில்நுட்ப அறிவு; நாட்டுப்புற பாரம்பரிய மற்றும் நவீனக் கலை, பண்பாடு நாடகம்; மாணவர்களுக்கு புத்துயிர் ஊட்டுதல்; பாலின நேர்மை; ஒடுக்கப்பட்ட மக்களுக்கான புதிய அணுகுமுறை; மற்றும் அதிவிரைவு தொழில்நுட்ப முன்னேற்றம் போன்ற நல்ல பல திட்டங்களை, 15 அம்ச திட்டங்களை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே எடுத்துக்கூற விரும்புகிறேன்.

என்னுடைய மொரப்பூர் தொகுதியில் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1991 முதல் 1996 வரை முதல்வராக இருந்தபோது பல்வேறு திட்டங்கள் கொண்டு வரப்பட்டன. ஆனால் கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அம்மா அவர்கள் கொண்டு வந்த திட்டத்தை அப்படியே நிறுத்தியிருக்கிறார்கள்; மறைத்திருக்கிறார்கள்.

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதல்வராக இருந்தபோது, அரூர் வட்டத்திலிருந்து, பாப்பிரெட்டி பட்டியை தனி வட்டமாகப் பிரித்தார்கள். பாப்பிரெட்டிபட்டியை வட்டம் எனப் பிரித்ததோடு சரி. இன்றைக்கு அந்த வட்டத்திற்குரிய கருவூலமோ, ஒரு நீதிமன்றமோ, அல்லது அந்தப் பகுதிக்குரிய நிலவள வங்கியோ, வேளாண்மைத் துறை வங்கியோ எதுவும் அமைக்கப்படவில்லை. அடிப்படைத் தேவைகள் அங்கே

[திரு. பெ. பழனியப்பன்] [2002 மே 8

நிறைவேற்றப்படவில்லை. ஆகவே மீண்டும் மக்கள் சக்தியோடு, மக்களின் நம்பிக்கையைப் பெற்ற அம்மா அவர்கள், இங்கே மீண்டும் முதல்வராக வந்திருக்கின்றார்கள். ஆகவே விட்டுச் சென்ற பணியினைத் தொடர்கிற வகையிலே, மீண்டும் என்னுடைய தொகுதியில் அந்த வட்டத்திற்குரிய கருவூலம், தீயணைப்பு நிலையம், ஒரு சார்பு நீதிமன்றம் போன்றவற்றை நிறைவேற்றிக் கொடுக்குமாறு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய பொற்பாதங்களைத் தொட்டு பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய முதல்வர் அவர்கள் 1991-1996-லே முதல்வராக இருந்தபோது அங்கே இருக்கக்கூடிய விவசாயிகளின் நலன் கருதி, அந்தப் பகுதி விவசாயிகள் மேம்படுவதற்காக, பொதியம்பள்ளம் என்ற ஓர் அணைக்கட்டைக் கொண்டு வந்தார்கள். அந்த அணைக்கட்டில் நிறைந்து வரும் நீர் அந்தப் பகுதி மக்களுக்குச் சென்று அடையும் வகையிலே வாய்க்கால் அமைப்பதற்கான திட்டம் நிறைவேற்றப்படவில்லை. அது களிமண் நிறைந்த பகுதி; ஆகவே களிமண் நிறைந்த பகுதியை வெட்டி, தண்ணீர் செல்கிற வகையிலே ஒரு சிமெண்ட் slab அமைத்துக் கொடுத்து அங்கே இருக்கக்கூடிய 10,000 விவசாயப் பெருங்குடி மக்களைக் காப்பாற்ற வழி செய்ய வேண்டுமாய் நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஒரே ஒரு கருத்து. தருமபுரியிலே ஔவை மேல்நிலைப் பள்ளி என்ற ஒரு மகளிர் பள்ளி இருக்கிறது. அந்தப் பள்ளியிலே கிட்டத்தட்ட 4,500 மாணவிகள் படித்துக்கொண்டு இருக்கிறார்கள். அந்தப் பள்ளி மாணவிகள் கட்டட வசதி இல்லாமலும் இடவசதி இல்லாமலும் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே அந்தப் பள்ளி மாணவிகளுக்கு வேண்டியது - பக்கத்திலே சுகாதாரத் துறை மூலமாக பழைய கட்டடம் நிலம் ஒன்று இருக்கிறது. அந்தப் பழைய கட்டடம் இப்போது பயன்படாத நிலையில் உள்ளது. ஆகவே அதை மாற்றி அந்தப் பள்ளி மாணவிகளுக்கு உதவும் வகையிலே நிறைவேற்றிக் கொடுக்கவேண்டுமென்று என்னுடைய பணிவான அன்பான வேண்டுகோளை வைத்து, இவ்வளவு நேரம் இந்த அவையிலே பேசுவதற்கு வாய்ப்பளித்த நம்முடைய சபாநாயகர் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி), புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கிறபோது இந்த வாய்ப்பு பெற்றதற்கு பெரும் பாக்கியமாய்க் கருதி வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.



2002 மே 8]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. பாலகிருஷ்ணன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நம்முடைய அரசு மிகுந்த பொருளாதார நெருக்கடியிலே தவித்துக்கொண்டிருக்கிறது என்பதை ஓரளவு நாட்டு மக்கள் நன்றாக உணருகின்ற வகையில் நம்முடைய அரசு பல உண்மைகளை இந்த நாட்டிற்கு எடுத்துச் சொல்லியிருக்கிறது. ஆனாலும் கூட சில பிரச்சினைகள் — நாம் என்ன நெருக்கடியில் இருந்தாலும் — செய்ய வேண்டிய காரியங்கள் சில இருக்கின்றன. குறிப்பாக இந்த நாட்டிற்கு சுதந்திரம் வாங்கிக் கொடுத்த தியாகிகளினுடைய பிரச்சினையிலே கொஞ்சம் தாராளமான நிலையில் அவர்களுடைய கோரிக்கைகளை மட்டும் நான் படித்துக் காண்பிக்கிறேன். சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு, பல மாநிலங்களில், மத்திய அரசு வழங்கும் நிதி; மத்திய அரசு 3,000/- ரூபாய் கொடுக்கிறது. தமிழ்நாட்டில் மட்டும் 500/- ரூபாய் கொடுக்கப்படுவதுடன் அவர்களுக்கு 15 ரூபாய் மருத்துவப்படியாகக் கொடுக்கிறார்கள். இதை 3,000 ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தியாகிகளின் வாரிசுகளுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை என்று அரசு ஆணை இருந்தும் அதை அமல்படுத்தாததை இந்த அரசு கவனித்து உடனடியாக அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து அரசு பஸ் பாஸ். ஒரு பாஸ் கொடுக்கிறார்கள். அதை அவர்களுடைய வயதைக் கருதி இரண்டு பாஸாக கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அரசு வீடுகளில் தியாகிகளுக்கு 1 சதவிகிதம் ஒதுக்கீடு இருந்தும் அதை அமல்படுத்த இந்த அரசு தவறிவிட்டது. ஆகவே அதை அமல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதுதான் அவர்களுடைய கோரிக்கைகள்.

பிறகு ஓய்வூதியம் பெறுகின்ற அரசு ஊழியர்கள் கிட்டத்தட்ட 2 இலட்சம் பேர் இருக்கிறார்கள். அதிலே ஆறுமுகம், ஆட்சி அலுவலர் (ஓய்வு), பொதுப் பணித் துறை, ஆசாத் வீதி, உடுமலை, கோவை மாவட்டம், ஒரு லெட்டர் எழுதியிருக்கிறார். அவருடைய ஓய்வூதியத்தில், அரசு

மருத்துவமனைகளில் அவர்கள் அறுவைச் சிகிச்சை போன்ற பெரிய சிகிச்சை செய்வதற்காக அவருடைய நிதியிலிருந்து பிடித்தம் செய்கிற பணத்தில் ரூ.15,500 அவருக்கு வரவேண்டிய பணம், கடந்த 6, 7 ஆண்டுகளாகத் தனக்கு வரவில்லை என்று ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். நம்முடைய முதலமைச்சர் அவர்கள், நிதியமைச்சர் அவர்களுக்கெல்லாம் எழுதி, எனக்கும் ஒரு copy போட்டிருக்கிறார். அதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-35*

நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்று ஓர் அலுவலகம் இருக்கிறது. அதற்கான சொத்து வரி, மின் கட்டணம், தண்ணீர் வரி போன்ற வரிகள் எல்லாம் பொதுப் பணித் துறையிலிருந்து கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். டெலிபோன் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆண்டுக்கு ஒரு முறை வெள்ளை அடிக்க வேண்டும். இவற்றையெல்லாம் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய சட்டமன்ற நூலகத்தில் Intercom இல்லை என்ற ஒரு குறை இருக்கிறது. Intercom Telephone கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். Internet வசதியுடன் Web-site கொண்டு, அதன் மூலம் Web-site-ல் பார்க்க, படி எடுக்க வசதி செய்து கொடுக்கவேண்டும். ஏற்கெனவே நீங்கள் அறிவித்ததுபோல், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு Computer வாங்கிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய பாராளுமன்றத்தில் ஏற்கெனவே வந்திருக்கின்ற உள்ளாட்சித் தேர்தல் சம்பந்தமாக இப்பொழுது புதிய சீர்திருத்தச் சட்டம் ஒன்று தாக்கலாகி இருப்பதாக பத்திரிகையிலே படித்தேன். நம்முடைய அரசு, அருமைத் தலைவர் காமராஜர் அவர்கள் காலத்தில் இருந்த இரண்டு அடுக்கு முறையை உள்ளாட்சித் துறையில் கொண்டுவருவதற்கு மத்திய அரசை வலியுறுத்த வேண்டும். அந்தச் சட்டத்தைத் திருத்த வேண்டும்.

அதற்கு முன்பு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் உள்ள தொடர்புகளை அதிகப்படுத்துவதற்காக D.D.C.



முறையைக் கொண்டுவந்து, அத்தனை அதிகாரிகளையும் குறைந்தபட்சம் மாதம் ஒருமுறையாவது நாங்கள் எல்லாம் சந்தித்துப் பேசுகின்ற ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும்.

நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்காக உள்ள விடுதியில் ஏராளமான டீக்கடைகள் முளைத்துவிட்டன. டீக்கடைகள் என்றால் அவை அளவுக்கு மீறிப் போய்க் கொண்டிருக்கின்றன. ஆகவே அந்த டீக்கடைகளை எல்லாம் ஒழித்து, உண்மையான சட்டமன்ற உறுப்பினர்களுடைய இல்லங்களாக அதை மாற்ற வேண்டும்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சட்டமன்ற வளாகத்திலேயே ஒரு நல்ல சிற்றுண்டி வசதியை ஏற்படுத்தி, குறைந்த செலவில், நிறைந்த முறையில் உணவுகளை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கடனுக்குத்தான் கார் கேட்டோம். அதைக்கூட நீங்கள் தருகிறேன் என்று சொன்னீர்கள். அது இன்னும் அமல்படுத்தப்படவில்லை. அதையும் உடனடியாகக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக Rail Pass என்பது பற்றிக் கூறிவிடுகிறேன். எங்களுடைய உறுப்பினர் திரு. சுதர்சனம் இருக்கிறார் என்றால், அவர் திருவள்ளூர் தொகுதி. நம்முடைய டாக்டர் குமாரதாஸ் இருக்கிறார் என்றால், அவர் கன்னியாகுமரி. இரண்டு பேருக்கும் 15 ஆயிரம் ரூபாய் Rail Pass கொடுப்பது சரியாக இல்லை. அதனால் நீண்டதூரம் போகிறவர்களுக்கு—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாலகிருஷ்ணன், சுதர்சனத்திற்கு வேண்டுமென்றால் குறைத்துவிடுவோம்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** அதைக் குறைக்க வேண்டியதில்லை. அவருக்குக் குறைக்க வேண்டாம். எங்களுக்கு, நீண்டதூரம் செல்பவர்களுக்கு Rail Pass கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். A.C. 2 tier கொடுத்தீர்கள் என்றால் போதும். அதற்கு மேல் மற்றவற்றை எல்லாம் நம்முடைய அரசுக்கு இருக்கின்ற நிதி நெருக்கடியில், எந்தவிதமான சம்பள உயர்வும் நாங்கள் கேட்கவில்லை. ஆகவே நீங்கள் இந்த மாதிரி வசதிகளை மட்டும் செய்து கொடுத்தால் போதும்.

லாட்டரி டிக்கெட் பற்றி நம்முடைய தி.மு.க. உறுப்பினர் மிகச் சிறப்பாகப் பேசினார். அதிலேயும் சுரண்டல் என்ற ஒரு லாட்டரி இந்த

[திரு. சோ. பாலகிருஷ்ணன்] [2002 மே 8

நாட்டு மக்களைச் சுரண்டிக் கொண்டிருக்கிறது. அதையும் முழுமையாக ஒழிக்க வேண்டுமென்று கேட்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்கள், திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் வழியைப் பின்பற்றி, திருக்குறள் போல், சுருக்கமாக 5 மணித் துளிகளில் பேசி முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-40*

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு'

என்று பாவேந்தர் முழங்கிய தமிழ் மண்ணின்மீது இந்த மாமன்றம் பல்வேறு கட்சிகளையும், காட்சிகளையும் கண்டுவிட்டது; காணப் போகிறது. பெருமைமிக்க மாமன்றம் இது. நாம் பேசுகின்ற இந்த மாமன்றம் மட்டும் பேசும் வாய் இருந்தால், விக்கிரமாதித்தன் சிம்மாசனத்தில் படிக்கட்டுப் பதுமைகள் சொன்ன கதைகளைப் போல ஆயிரமாயிரம் வரலாறுகளை இந்த மாமன்றம் சொல்லும். மக்கள் நம்பியுள்ள இந்த மாமன்றம் நம்மை ஏற்றுக்கொண்டது ஒரு பூர்வீகப் புண்ணியம். இந்தக் கோட்டையிலே கொடி உயரவேண்டும், ஆனால் ஏழை மக்களை வாட்டும் வரி உயரக் கூடாது, ஏழைகளின் நிலை உயரவேண்டும் என்று எங்கள் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் என்ன விதியோ, வருடமே, ஜனவரி, பிப்ரவரி என்று வரியிலே ஆரம்பிக்கிறது. இதை மாற்ற ஈஸ்வரிதான் வரவேண்டும். 'அரியும் சிவனும் ஒன்று, அறியாதவன் வாயிலே மண்ணு' என்ற பழமொழி உண்டு. இந்த அரிசி என்ற சொல்லில் அரியும் உண்டு, சிவனும் உண்டு. இதற்குப் போய் வரி என்பது வணிகர்கள் மட்டுமல்ல, வயிறு உள்ள அத்தனை மனிதர்களும் ஏற்கத் தயங்குகிறார்கள். தயவுசெய்து இந்த அரசு, அரிசிக்கு விதித்த அந்த வரியைத் திருத்தினால் போதாது, அடியோடு இரத்து செய்யவேண்டுமென்று எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறன்.

நிலத்தில் விவசாயம் செய்யும் விவசாயி நெல்லை விளைவிப்பதற்கு நாய்படாத பாடு படுகிறான். அப்படிப் பட்டு, அவன் உற்பத்தி செய்யக்கூடிய நெல்லை அவன் விற்பதற்கு எவ்வளவு கஷ்டப்படுகிறான்



2002 மே 8] [திரு. ஐ. கணேசன்]

என்பதை அருமை நண்பர் ஜி.பி., அதைப்போல திரு. சிவபுண்ணியம் எங்களுடைய குரு அவர்களைக் கேட்டால் தெரியும். தயவுசெய்து விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய நெல்லை அரசு கொள்முதல் செய்யவேண்டும்.

விவசாயிகளைப் பற்றி புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள் பாடிய பாடல் ஒன்று எனக்கு நினைவுக்கு வருகிறது. ஆனால் பாடத்தான் எனக்கு நேரமில்லை, இருந்தாலும் ஒரே ஒரு வரி,

'காடு விளைஞ்சென்ன மச்சான்', நமக்கு கையும் காலும் தானே மிச்சம்'

என்று. அதைப்போல பாவேந்தர், பாடிய பாடல், பட்டுக்கோட்டையார் பாடிய பாடல் என் நினைவுக்கு வருகின்றன.

'தேனாறு பாயுது, செங்கதிர் சாயுது,
ஆனாலும் மக்களின் வயிறு காயுது'

என்பதனைப் போன்று அழியாத இன்றும் நிலைக்கக்கூடிய அற்புதமான பாடல்கள் உள்ளன. எனவே விவசாயிகளுடைய நிலையை அரசு சிந்தித்து அவர்களுடைய நெல்லை நிச்சயமாக இந்த அரசு கொள்முதல் செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

'காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது'

என்றார் வள்ளுவர்.

ஓய்வூதியக் கொடுமையைப் பற்றி இங்கே இருக்கிற அருமை நண்பர்கள் பேசினார்கள். அதைச் சொல்லித் தீர முடியாது. அதைப் பற்றி நம்முடைய நாட்டிலே கன்னடத்திலே ஒரு படமே எடுத்து வெளியிட்டார்கள். "தபரண கதா" என்று அந்த திரைப்படத்திலே, கமலஹாசனுடைய அண்ணன் சாருஹாசன் மிக அற்புதமாக நடித்து, வயது முதிர்ந்த அரசு ஊழியன் எப்படியெல்லாம் சித்ரவதைப்படுகிறான் என்பதை உணர்வுபூர்வமாக நடித்துக் காட்டியதன் மூலம் மத்திய அரசு பல்வேறு பரிசுகளையும் பாராட்டுக்களையும் அளித்தது. அப்படியிருக்கும் அதைப் பற்றி முன்னாள் நிதியமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்கள் குறிப்பிடும்போது, இந்தப் படத்தைப் பார்த்துதான் அரசு ஊழியன் எப்படி சித்ரவதைப்படுகிறான் என்பதை உணர்ந்தேன், திருந்தினேன் அவர்கள் வேலையை விட்டு ஓய்வு பெற்றதற்குப் பின்னாலே ஓய்வூதியம் கிடைக்க வழிவகை

செய்யவேண்டுமென்று ஆணித்தரமாகச் சொன்னார். ஆனால் இன்னும் அந்த நிலைதான் நீடிக்கிறது என்பதனை நான் இங்கே சொல்லிக்கொள்கிறேன்.

அருமை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்டமன்றம் என்பது நூறு நாட்கள் கூடிக் கொண்டிருந்த மாமன்றம் இந்த மாமன்றம். ஆண்டுக்கு நூறு நாட்கள் கூடிக் கொண்டிருந்தது இந்த மாமன்றம். ஆனால் தற்பொழுது இது 60 நாட்களாகக் குறைந்து கொண்டே வந்து கொண்டிருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலே நூறு நாட்களுக்கு மேல் கூடியது. இதனுடைய விவரம் வேண்டுமானால் நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களது அறையில் உள்ள அந்த அட்டவணையிலே பார்த்துக்கொள்ளலாம். பேரறிஞர் அண்ணாவின் காலத்திலே கிட்டத்தட்ட 120 பேர்களுக்கு மேலே பட்ஜெட் கூட்டத்திலே, மானியக் கோரிக்கைகளின்மீது பேசக்கூடிய வாய்ப்பு இருந்தது. ஆனால் இன்று கட்சிக்கு ஒருவர், அதுவும் நேரம் ஆகிவிட்டது, எப்பொழுது மணி அடித்துவிடுவாரோ என்று பயந்து பயந்து பேசுவதற்கு என்னாலே முடியவில்லை. இருந்தாலும் முயற்சிக்கிறேன்.

அருமை பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுக்குத் தெரியும், இந்தச் சட்டமன்றத்திலே பல்வேறு பிரச்சினைகளை, நாட்டு மக்களுடைய உணர்வுகளை, உண்மையான பிரச்சினைகளை எடுத்துச் சொல்லவேண்டும். அதற்குப் போதிய அவகாசம் இல்லை என்பதனை இந்த மாமன்றத்தில் உங்கள் மூலமாகச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-45

இன்னொன்றும் சொல்லவேண்டும். நீங்கள் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்திருக்கிறீர்கள். கல்வி அமைச்சர் அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்திருக்கிறார். வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்திருக்கிறார். உங்களுக்கு நாடாளுமன்ற மரபு தெரியும். அங்கே ஒவ்வொரு சட்டமன்றக் கட்சிக்கும் ஓர் அலுவலகம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த மாமன்றத்திலே மூன்றாவது பெரிய கட்சியாக இருக்கக்கூடிய எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சிக்கு ஏன் அலுவலகம் கொடுக்கப்படவில்லை? இதை நீங்கள் சிந்திக்க வேண்டும். இந்த வராண்டாவிலே மூன்று அறைகள் பூட்டப்பட்டிருக்கின்றன. காலியாக உள்ளவை பூட்டப்பட்டிருக்கின்றன. அதிலே ஓர் அறையைக் கொடுக்க உங்களுக்கு மனமில்லையா?



தயவுசெய்து சிந்தித்துப் பாருங்கள். எங்களுடைய உணர்வுகளைப் புரிந்துகொள்ளுங்கள். எங்களால் எத்தனையோ எடுத்துச் சொல்லமுடியும். அறைகளைப் பூட்டிவைத்துவிட்டு எங்களுக்கு இல்லை என்கிறீர்கள். இது நியாயமா என்பதை மட்டும் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல சட்டமன்றம் கூடக்கூடிய நாட்களிலே, இரவு நேரத்திலே—மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள்—இரவு நேரத்திலே அதுவும் இரண்டு நாட்களுக்கு முன்னால்-முதலமைச்சர் அவர்கள் அமர்ந்திருந்தார்கள். 9 மணி 15 நிமிடத்திற்கு இந்த அவை முடிந்தது இரவு, அப்போது இங்கே பணியாற்றக்கூடிய பணியாட்கள் இரயில் நிலையத்திற்குச் செல்லும்போது அங்கே அரசுப் பெண் ஊழியர் ஒருவருடைய செயின் அறுக்கப்பட்டிருக்கிறது. பிறகு அந்தத் திருடனைப் பிடித்து அதை வாங்கியிருக்கிறார்கள். அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை. அரசு ஊழியர்கள், இங்கே பணியாற்றி விட்டுச் செல்லக்கூடியவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை. சட்டமன்றம் முடிந்தபிறகு, ஒரு குறிப்பட்ட நேரத்திற்குப் பிறகு, ஊழியர்கள் இரயில் நிலையத்திற்கும் பஸ் நிலையத்திற்கும் பாதுகாப்பாகச் செல்ல பஸ் வசதி செய்துதரவேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல நாங்கள் பேசக்கூடிய பேச்சுக்களை தட்டச்சு மூலம் அடித்துக் கொடுக்கிறார்கள். அதைப் படிப்பதற்குள் எங்களுக்கு ஜென்மம் முடிந்துவிடுகிறது. அதனாலே அதைக் கணினி மூலமாக நீங்கள் அடித்துக் கொடுக்க ஆவன செய்ய வேண்டும். சென்ற முறையே அதற்காக இங்கே பணம் ஒதுக்கி இருந்தார்கள். (மணியடிக்கப்பெற்றது) கிட்டத்தட்ட.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணித் துளியிலே முடித்துவிடுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** இரண்டு மணித் துளிகள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பதில் சொல்லவேண்டும். இன்னொருவர் பேசவேண்டும்.

**திரு. ஐ. கணேசன்:** அந்தக் கணினிக்காக பணம் ஒதுக்கியிருந்து அதைத் திருப்பிக் கொடுத்துவிட்டதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே கணினி மூலம் நீங்கள் அடித்துக் கொடுக்க ஆவண செய்ய வேண்டும்.

அதேபோல அலுவலக உதவியாளர் பாவம், நீண்டகாலமாக சட்டமன்றம் கூடுகிறபோது வந்து முடிந்தபிறகு போய்விடுகிறார்கள்.

அவர்களுக்கு நிரந்தரமாக நீங்கள் வேலை கிடைக்க ஆவன செய்யவேண்டும்.

அதேபோல ஒரு முக்கியப் பிரச்சினை. எங்களுடைய கட்சித் தலைவர் அவர்கள்—மணி அவர்கள் கொடுத்திருக்கிறார். "ஆட்டுக்கு தாடி, நாட்டுக்கு கவர்னர்" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் எடுத்துச் சொன்னார். அதே கதைதான் இன்றும் நிலவுகிறது. தயவுசெய்து கவர்னர் பதவி தேவையா என்பதனை இந்த மாமன்றம் சிந்திக்கவேண்டும். ஆளும் கட்சியினரால் தேவையில்லை என்பதைப் போன்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. தற்போது இந்தக் கட்சியினுடைய—ஆளும் கட்சியினுடைய முடிவு என்ன என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள் சென்ற முறை ஒரு கேள்வி கேட்டிருந்தார். மிக நிதி நெருக்கடியிலே இத்தனை அமைச்சர்கள் தேவையா என்று கேட்டிருந்தார். அதற்கு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பரிசுச் சீட்டிலே 166.16 கோடி ரூபாய்க்கு ஏழைகள் உழைத்த அந்தப் பணத்தைப் பரிசுச் சீட்டு மூலமாக விற்று பல குடும்பங்கள் நாசமாகியிருக்கின்றன. அதிலே வருமானம் 50 கோடிதான். அதைத் தயவு செய்து உணர்ந்து—இன்னும் புதிய புதிய பரிசுச் சீட்டுகள் அறிமுகப்படுத்தப்படுவதாகச் சொல்லப்படுகிறது. இது தேவையில்லை—ஏழைகள் இதனால் பாதிக்கப்படுகிறார்கள் என்று சொல்லிக்கொள்கிறேன். இத்துறைக்கு ரூ.506.82 கோடி சென்ற ஆண்டு ஒதுக்கீடு. இந்த ஆண்டு ரூ.480.58 கோடிதான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல உள்ளாட்சித் துறைக்கு நாம் தேர்தல் வைத்து அவர்களைத் தேர்ந்தெடுத்தபிறகு, அவர்களுக்கு ஒதுக்கக்கூடிய பணம் போதுமானதாக இல்லை. இந்த நாட்டினுடைய தலைவரை President (ஜனாதிபதி) என்று சொல்கிறோம்;

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துவிடுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** உள்ளாட்சியிலே தேர்ந்தெடுக்கப்பட்டவரையும் President என்றுதான் சொல்கிறோம். அவ்வளவு முக்கிய பதவிகளில் இருப்பவர்களுக்கு நல்லமுறையிலே நிர்வாகம் செய்ய அவர்களுக்குப் போதுமான அளவுக்கு வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும்.

நான் ஆண்டாண்டு காலமாகப் பேசிவருகிறேன். இரயில்வேயிலே எம்.எல்.ஏ-க்களுக்கு, எம்.எல்.ஏ. ஹாஸ்டலில் இருப்பவர்களுக்கு, ஒரு



இரயிலுக்கு இரண்டு டிக்கெட்தான் கொடுக்கிறார்கள். தயவுசெய்து அதை அதிகப்படுத்த வேண்டும் என்று செயலாளர் அவர்களுக்கும், உங்களுக்கும் கடிதம் அனுப்பி இருக்கின்றேன். அதை நீங்கள் அதிகப்படுத்த வேண்டும்.

ஆட்டோக்கள் முறையில்லாமல் பணம் வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள் எம்.எல்.ஏ. விடுதியிலேயே. தயவுசெய்து ஆட்டோக்களை முறைப்படுத்த போக்குவரத்துத் துறை அமைச்சர் சீரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோல மற்ற மாநிலங்களிலே இரயில்வேயில் எம்.எல்.ஏ.-க்களுக்கு பல்வேறு சலுகைகள்.. (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு நிமிடம்..

*பிற்பகல் 12-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன், முடித்துவிடுங்கள். திருமதி யசோதா.

**திரு. ஐ. கணேசன்:** ஒரே ஒரு நிமிடம்.. பல்வேறு சலுகைகள் அளிக்கப்படுகின்றன. உதாரணத்திற்கு அண்டை மாநிலமாகிய வறுமையிலே நம்மைவிட மிகவும் பின்தங்கி இருக்கக்கூடிய கேரளாவிலே ஓர் ஆண்டிற்கு 35 ஆயிரம் ரூபாய் இரயில்வே படி அளிக்கப்படுகிறது. அதேபோல ராஜஸ்தானிலே 50 ஆயிரம் ரூபாய், அதேபோல பஞ்சாபிலே 50 ஆயிரம் ரூபாய்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன், வேறு நேரங்களிலே பேசலாம்.

**திரு. ஐ. கணேசன்:** தயவுசெய்து எங்களுக்குச் சம்பளத்தில் சேர்த்துக் கொடுக்க வேண்டாம். தமிழ்நாடு நிதி நெருக்கடியில் சிக்கித் தவிக்கின்றது. சம்பளத்தில் சேர்க்காதீர்கள். இந்த இரயில்வே படியையாவது உயர்த்திக் கொடுங்கள் என்பதனைச் சொல்லிக்கொள்கிறேன்.

அதேபோல எம்எல்ஏ.-க்களுக்கு ஒரு P.A. போன ஆண்டு கொடுப்பதாக உத்தரவாதம் அளிக்கப்பட்டது. இன்னும் அவர் எங்களுக்கு வழங்கப்படவில்லை. தயவுசெய்து P.A. ஒருவரை அனுமதிக்க வேண்டும்.

அதேபோல ஒரு கார். B.D.O.-விற்கு உண்டு. தாசில்தாருக்கு உண்டு. எல்லோருக்கும் உண்டு. எம்.எல்.ஏ.-வாக இருக்கின்ற வரைக்கும் ஒரு காரைக் கொடுங்கள். எம்.எல்.ஏ. பதவி போனால் ஒரு மணி நேரத்திற்கு முன்னாலே வந்து எடுத்துக்கொண்டு போங்கள் என்று சொல்லி, பேச வாய்ப்பு கொடுத்த உங்களுக்கு நன்றி சொல்லி, விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

[2002 மே 8

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி டி. யசோதா, சுருக்கமாக முடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6 கோரிக்கைகள், இருந்தாலும் நேரமில்லாத காரணத்தினால், சுருக்கிக் கொள்ள விரும்புகிறேன். மூர்த்தி சிறியதென்றாலும் கீர்த்தி பெரியது என்பதுபோல புரட்சித் தலைவரால் தொழில் அமைச்சராக, சட்ட அமைச்சராக அறிமுகப்படுத்தப்பட்டு, புரட்சித் தலைவியால் நிதியமைச்சராக வருகை தந்து அமர்த்தப்பட்டு, இங்கே அவரிடம் தங்களுடைய கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். நாவலர் அவர்கள் நிதியமைச்சராக இருக்கின்றபோது இந்த மாமன்றத்திலே நான் இருந்திருக்கிறேன். நம்முடைய நிதி அமைச்சர் அவர்களுடைய காலத்திலேயும் இருக்கின்றேன். அவரைவிட இவர் மிகவும் சிக்கனமாக நடத்திக் கொண்டு போகிறமாதிரி எனக்குத் தோன்றுகிறது. இருந்தாலும் எங்களுடைய பிரச்சினைகளிலே கொஞ்சம் தாராள மனதோடு நடந்து கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கு முன்னால் பேசிய சகோதரர் அவர்கள்கூட சொன்னார்கள். கார் எங்களுக்குக் கொடுக்க வேண்டும் என்றும் அதேநேரத்தில் பதவி முடிந்தவுடன் அதை வாங்கிக்கொள்ள வேண்டும் என்றும் சொன்னார். ஆனால், அது சரிப்பட்டு வராது. கம்ப்யூட்டர், எம்.எல்.ஏ.-களுக்குத் தருவதாக சட்டமன்ற உறுப்பினர்களுடைய நிதியிலேயிருந்து கொடுப்பதாகச் சொன்னார்கள். ஆனால், Project Officer சொல்கிறார், Immovable Property-க்குத்தான் நாங்கள் கொடுக்க முடியும். Movable Property-க்கு கிடையாது. அதற்குச் சட்டத் திருத்தம் வேண்டும் என்று சொல்கிறார். எங்களுக்கு நீங்கள் வட்டியில்லாக் கடனாக கார் வாங்கிக் கொடுத்தால் சட்டமன்ற உறுப்பினர்கள் அதைச் சம்பளத்திலிருந்தே கொடுப்பதற்கு வசதியாக இருக்கும்.

அடுத்தாற்போல, தமிழ்நாடு இல்லம் டெல்லியிலே இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு Double room என்றால் 750 ரூபாய் என்று போடுகிறார்கள். நீங்கள் அதிலே கொஞ்சம் சலுகை காட்ட வேண்டும். இரண்டாவது, அங்கே தொலைபேசி இருக்கிறது. ஆனால், S.T.D. வசதி கிடையாது. சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கின்ற அந்த அறைகளுக்கு S.T.D. வசதி செய்து கொடுக்க வேண்டும். அதேபோல, தொலைக்காட்சிப் பெட்டிகள் இருக்கின்றன. First Floor-ல் மட்டும் இருக்கின்றது. அங்கே



2002 மே 8] [திருமதி டி. யசோதா]

கிட்டத்தட்ட 3 Floor-கள் இருக்கின்றன. அங்கே தொலைக்காட்சிப் பெட்டிகள் கிடையாது. அதேபோல, தமிழ்நாடு இல்லத்திலே சாப்பாடு நன்றாகவே இல்லை. அதனால் எல்லோரும் ஆந்திரா பவனுக்குப் போகிறார்கள். ஆந்திரா அரசு நடத்துகின்ற அந்த ஆந்திரா பவனுக்குப் போகிற நிலைமையைச் சீர் செய்ய வேண்டும்.

முன்னாள் எம்.எல்.ஏ.-க்ளுக்கு தமிழ்நாடு உறவுஸிலே சலுகைக் கட்டணத்தில் இடம் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, Medical Bill இருக்கின்றது. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஆயிரம் வேலைகள் உள்ளன. அந்த வேலைகளில் காலம் தாழ்த்தி Medical Bill கொடுத்தால் 15% பிடிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அதை மறுபடியும் நீங்கள் பரிசீலைனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முன்னாள் எம்.எல்.ஏ.-க்களுக்கு 2 ஆயிரம் ரூபாய் கொடுக்கிறீர்கள் வருடத்திற்கு. ஒரு வருடத்திற்கு நீங்கள் கொடுக்கின்ற அந்த 2 ஆயிரம் ரூபாய் நிச்சயமாக—அவர்கள் வயதானவர்கள்—அவர்களுக்கு மருத்துவச் செலவிற்கு அது போதாது. அதை நீங்கள் நிச்சயமாகக் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-55

நமக்கு வருமானம் வருகிற துறையை கொஞ்சம் நீங்கள் ஜாக்கிரதையாகப் பார்க்க வேண்டும். கனிம வளத்திலே நேற்றையதினம் பேசினார்கள். பேசுகின்றபோது என்ன சொன்னார்கள். அந்த மண் போகிறது. இந்த மண் போகிறது என்று சொல்கிறார்கள். அரசாங்கம் ஓர் இடத்தைத் தேர்வு செய்து டெண்டர் விட்டு பல கோடி ரூபாய் அதிலே வருமானம் வருகிறது. வருமானம் சம்பாதிக்கிற அவர்களைப் பற்றியும் நாம் நினைக்க வேண்டும். டெண்டர் எடுக்கிறவர்கள், டெண்டர் எடுக்கிறவர்களுடைய நிலைமை என்னவென்றால் அவன் டெண்டர் எடுத்து அந்த குவாரிக்குள் போகும்போது உள்ளூர்க்காரன் ஒரு கட்டணம் கேட்கிறான். கோயில் திருவிழாவிற்கு ஒரு கட்டணம் கொடுக்க வேண்டும். ஆட்சிக்காரன் ஒரு Sports Club-க்காக வந்துவிடுவார்கள். ஒருவன் Cricket என்று வருவான். ஒருவன் Hockey என்று வருவான். ஒருவன் Football என்று வருவான். இது இல்லாமல் கோயில் திருவிழாவிற்கு வேறு கொடுக்க

வேண்டும். போகிற வழியெல்லாம் அவன் கப்பம் கட்டிக்கொண்டு போக வேண்டுமென்ற நிலைமை வரும்போது அவர்களுக்கு ஒரு சோர்வு மனப்பான்மை ஏற்படுகிறது.

அடுத்தாற்போல இந்த இலாகா 1983 வரையிலே வருவாய்த் துறையிலே இருந்தது. அதை புரட்சித் தலைவர் அவர்கள்தான் தொழில் துறைக்கு மாற்றினார்கள். அப்படி தொழில் துறைக்கு மாற்றுகின்றபோது, இதனுடைய வருமானம் 4 கோடிதான். ஆனால் இன்றைக்கு இதனுடைய வருமானம் கிட்டத்தட்ட 200 கோடிக்குமேலே போய் இருக்கிறது. 200 கோடிக்குமேலே பணம் ஈட்டிக் கொடுக்கின்ற இந்த கனிம வளத் துறையில் உண்மையிலேயே அதிகாரிகள் இருக்கிறார்களா? Typist கூட கிடையாது. Revenue-விலிருந்து deputation-ல்தான் வருடத்திற்கு ஒரு Clerk போடுகிறார்கள். அவர் ஒரு வருடம்தான் இருப்பார். அவர் இருக்கிற வரைக்கும் என்ன ஆதாயம் என்று பார்த்துவிட்டுப் போவாரே தவிர, அவருக்கு responsibility கிடையாது; பொறுப்பு கிடையாது. ஆகவே பொறுப்பற்ற சூழ்நிலையிலே வருடத்திற்கு ஒருவரை நாம் deputation-னில் போடுவதைவிட பொறுப்பான அதிகாரிகளை நாம் நியமனம் செய்தால் நிச்சயமாக நல்ல வருமானத்தை நம்மாலே ஈட்டித்தர முடியும்.

இரண்டாவது, அவர்களுக்குப் பாதுகாப்பு கிடையாது. போலீஸ் ஜீப் பல District-களுக்குக் கிடையாது. மன்னிக்க வேண்டும். Mines and Minerals-லே இருக்கின்ற அதிகாரிகளுக்கு ஜீப் கிடையாது. ஜீப் இல்லாததால் அவர்களால் போய் தவறு செய்கிறவர்களை உடனடியாகப் பிடிக்க முடியவில்லை. அப்படி பிடிக்கக்கூடிய சூழ்நிலை வர வேண்டுமென்றால், நீங்கள் ஜீப் கொடுத்தாக வேண்டும். இருக்கின்ற ஒன்றிரண்டும் ஏதோ ஓட்டை ஜீப்புகளாக இருக்கின்றன. அந்த ஓட்டை ஜீப்புகளை சரிப்படுத்திக் கொடுக்க வேண்டும். பாவம், அதை repair செய்வதற்கே அவர்களுக்கு சரியாக இருக்கிறது.

போய்ப் பிடிக்கும்போது என்ன சொல்கிறார்கள், வரன்யா என்கிறார்கள். ஆனால் போலீசுக்கு அப்படியில்லை; இங்கே வாய்யா என்றால் வரவேண்டும். வரவில்லையென்றால் இரண்டு தட்டுத் தட்டி அவனை வண்டியில் ஏற்றுவதற்கு permission உள்ளது; அவர்களுக்கு அதிகாரம் உள்ளது. ஆனால், Mines-ல் இருக்கின்றவர்களுக்கு அதுபோன்ற அதிகாரம் இல்லாத காரணத்தினாலே அவர்களுக்கும் குறைந்தபட்ச அளவுக்கு இருக்கவேண்டும். திருட்டு மணல் எடுக்கிறவர்களை, திருட்டு குவாரி நடத்துகிறவர்களை, கல் குவாரி எடுக்கிறவர்களை இதுபோன்று



சூழ்நிலையிருக்கின்றபோது அந்தத் துறையிலே இருக்கின்றவர்களுக்கும் ஓரளவுக்கு நாம் அதிகாரம் கொடுத்தால் சிறப்பாக இருக்கும் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தாற்போல ஒரு சிறிய விவகாரத்தைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு இருக்கின்ற சட்டமன்றம், இது நமக்குச் சொந்தமா? நம்முடைய முதல்வர் அவர்களுடைய அறை நமக்குச் சொந்தமா? ஒரு ஆணிகூட யாரையும் கேட்காமல் நகர்த்த முடியாது. இது மத்திய அரசாங்கத்திற்கு, இராணுவத்திற்குச் சொந்தமான இடம். ஆக நமக்கு என்று ஒரு கட்டடம் வேண்டும். நமக்கு என்று ஒரு தலைமைச் செயலகம் வேண்டும். நமக்கு என்று ஒரு தலைநகரம் வேண்டும். உங்களுடைய காலத்திலே, அம்மையார் அவர்களுடைய காலத்திலேதான் உருவாக்க முடியும். 1971-லே 100 ஏக்கர் கிண்டியிலே எடுத்தார்கள் ராஜ் பவன் பக்கத்திலே. அதற்குப்பிறகு இராஜாஜி காமராஜருடைய நினைவு இல்லங்கள் அங்கே வந்துவிட்ட காரணத்தினாலே Frontage இல்லை என்பதாலே அது நிறுத்தப்பட்டது. அதற்குப்பிறகு 10 மாடிக் கட்டடம் வந்தது. அதுபோல நீங்கள் இப்போது ஏதாவது ஓரிடம் சென்னைக்கு அருகிலே (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன். சென்னைக்கு அருகிலே ஓரிடத்தை எடுத்து நமக்கு என்று நிச்சயமாக ஒரு மிகப் பெரிய சட்டமன்றம் நடத்துவதற்கும், தலைமைச் செயலகம் இருப்பதற்கும், ஒரு தலைநகரை, எப்படி புதுடெல்லியை மாற்றினார்களோ, அதுமாதிரி நாம் மாற்றியாக வேண்டும்.

1977-ல் புயல் வந்தது. புயல் வந்தபோது கிட்டத்தட்ட 19 அடிக்கு உயரத்திற்கு மேலே வெள்ளம் போனது. அது நம்முடைய ஊருக்குள் வந்திருந்தால் மெட்ராஸ் அழிந்திருக்கும். நல்ல வேளை அது தவறிப்போய் ஆந்திராவிலே திமி தாலுகாவிலே போய், திமி தாலுகாவே அழிந்து போன வரலாறு இருக்கிறது. ஆகவே அதுபோன்ற ஒரு சம்பவம் மறுபடியும் ஏற்பட்டால் சென்னை நகரம் அழியக்கூடிய சூழ்நிலை ஏற்படும். எனவே நமக்கு என்று ஒரு தலைநகரம் உருவாக்கப்பட வேண்டுமென்று கேட்டு....

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே இருக்கின்ற நெருக்கடியான சூழ்நிலை ஏற்கெனவே இந்த அரசு உணர்ந்ததுதான். தலைமைச் செயலகத்திலேயே எல்லா அமைச்சர்களுக்கும், எல்லாச் செயலாளர்களுக்கும், எல்லா அதிகாரிகளுக்கும் போதுமான இடமில்லை. இந்த வளாகமே மிகவும் சிறியது. இதில் மூன்றில் ஒரு பங்கு இடம் இராணுவத்திற்குச் சொந்தமானது. ஆகவே மகாபலிபுரத்திற்குச் செல்லும் வழியில் ஏறக்குறைய 2 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு புதிய Administrative City அமைக்கும் திட்டம் இந்த அரசிடம் உள்ளது. இதை உரிய நேரத்தில் அறிவிக்கலாம்

என்று இருந்தேன். (மேசையைத் தட்டும் ஒலி) இன்று மாண்புமிகு உறுப்பினர் யசோதா அவர்கள் இந்தப் பிரச்சினையை எழுப்பியதால் இன்றைக்கு அறிவித்துவிடுவது நல்லது என்று கருதுகிறேன். இந்தப் புதிய Administrative City-ல் தலைமைச் செயலகம், அதிகாரிகளுக்கான அலுவலகங்கள், அதிகாரிகள் தங்குவதற்கான வீடுகள், புதிய சட்டமன்ற வளாகம், சட்டமன்ற உறுப்பினர்கள் தங்குவதற்கான விடுதிகள் எல்லாமும் அங்கே அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி யசோதா, முதலமைச்சருக்கு நன்றி சொல்லி முடித்து விடுங்கள்.

பிற்பகல் 1-00

**திருமதி டி. யசோதா:** நேற்றைய தினமே அம்மா அவர்களுக்கு நான் நன்றி தெரிவிக்க வேண்டுமென்று இருந்தேன். எங்களுடைய துணைத் தலைவர் அவர்கள் நன்றி தெரிவித்தார். நேற்று வரியைக் குறைத்த காரணத்தினாலேயும் அம்மையார் அவர்களுக்கு நன்றி தெரிவிப்பதோடு நான் ஆற்றிய கருத்துக்கு துணை சேர்ப்பதுபோல, வலு சேர்ப்பதுபோல, அம்மையார் அவர்களுடைய எண்ணத்திலேகூட இதுபோன்ற ஒரு கட்டடத்தை உருவாக்க வேண்டும் என்கிற எண்ணத்திற்கு இங்கே அவர் தெரிவித்து இருக்கின்ற அறிவிப்புக்கு நான் முழுமையான நன்றியையும், வணக்கத்தையும் அவர்களுக்கு உரிதாக்கிக் கொள்கிறேன். எனது தொகுதியிலே ஒரே ஒரு விஷயத்தைச் சொல்லி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பதில் சொல்ல வேண்டும். நீங்கள் வேறு ஒரு நேரத்தில் பேசுங்கள்.

**திருமதி டி. யசோதா:** 2002 ஆம் கல்வியாண்டிலே கலர் டி.வி. தொடக்கப் பள்ளிக்கு வழங்குவதற்கு 3,750 ரூபாய் வசூல் செய்திருக்கிறார்கள். ஸ்ரீபெரும்புதூரில் கிட்டத்தட்ட 20 பள்ளிகளுக்கு இதுவரைக்கும் அது கிடைக்கவில்லை என்கிற காரணத்தினாலே அதையும் இங்கே சமர்ப்பித்து ஒன்றே ஒன்று.... (குறுக்கீடு) தியாகிகளுக்கு ஈமச்சடங்கு செய்வதற்காக.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. மற்றதையும் கோரிக்கைகளாகக் கொடுத்து விடுங்கள்.

**திருமதி டி. யசோதா:** ஒதுக்கியிருப்பதை நான் உண்மையிலே பாராட்டி, மற்றதையெல்லாம் நான் அம்மா அவர்களிடமே கொடுத்து விடுகிறேன். நேரம் இல்லாத காரணத்தினாலே அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதியமைச்சர் (குறுக்கீடு)



## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (உ) சட்டமன்றப் பேரவை குழுக்கள் அமைப்பது.

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்தினுடைய மானியக் கோரிக்கைகள் முடிவடைகின்றன. இன்னும் 2 நாட்கள்தான் சட்டமன்றம் இருக்கிறது. பொதுவாக சட்டமன்றத்தின் ஒவ்வொரு நிதியாண்டிலும் இந்தச் சட்டமன்றத்தின் உறுப்பினர்களைக் கொண்ட குழுக்கள், Estimates Committee, Public Accounts Committee போன்ற குழுக்களை அமைப்பது உண்டு. ஆனால், இந்த நிதியாண்டில் இதுவரையில் அப்படிப்பட்ட குழுக்கள் அமைவதற்கான எந்தவிதமான சாத்தியக்கூறுகளோ, அறிவிப்புகளோ எங்களுக்குத் தெரிவிக்கப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் 2 நாட்கள் இருக்கின்றன. இரண்டு நாட்களில் சொல்கிறேன்.

**திரு. துரைமுருகன்:** 2 நாட்களில் அமைத்துவிட முடியாது. எங்களுக்கு முதலிலே நீங்கள் தெரிவித்து இருக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. அதுபற்றி ஒரு முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் 2 நாட்களில் சொல்லிவிடுகிறேன். நாளைக்கோ அல்லது நாளை மறுநாளோ சொல்லிவிடுகிறேன்.

**திரு. துரைமுருகன்:** முடிந்த முடிவை நீங்கள் எதிர்க்கட்சிகள் உள்ள Business Advisory Committee-லே எடுக்க முடியுமே தவிர, அரசாங்கமே நேராக முடிவு எடுக்க முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. அதுபற்றி ஏற்கெனவே பேசி இருக்கிறேன்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருக்கின்ற குழுக்கள் 4, 5 மாத காலம்தான் செயல்பட்டுள்ளன. ஆகவே அந்த குழுக்களையே நீட்டிக்க வேண்டுமென்று கோரிக்கை வந்ததால் அந்த குழுக்களே நீட்டிக்கப்படும். அதற்கான அறிவிப்புகள் நாளை வெளியிடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[2002 மே 8

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு அதில் மாறுபட்ட கருத்து இல்லை. ஏற்கெனவே கொஞ்ச காலம் 4, 5 மாதங்கள்தான் இருந்திருக்கிறார்கள். அவர்களே தொடர்ந்து இருக்கட்டும். அதை நான் மறுக்கவில்லை. ஆனால் அதை இந்த மாமன்ற உறுப்பினர்களுக்கு, குறிப்பாக Business Advisory Committee-ல் இருப்பவர்களுக்கு தெரிவித்து அதற்கு ஒப்புதலைப் பெற்றிருக்க வேண்டும். அரசாங்கமே Suo-motu decision எடுக்க முடியாது. ஏனென்றால் இந்த மன்றத்தின் உரிமை அது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். உட்காருங்கள் சொல்கிறேன். இதைப்பற்றி தலைவர்களிடத்திலே கேட்டு இருக்கிறேன். (குறுக்கீடு) இல்லை. எல்லா தலைவர்களிடத்திலும் கேட்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** எங்களோடு நீங்கள் அதற்காக ஒரு கூட்டம் போடவில்லை என்றாலும்கூட unofficial ஆகக்கூட consult பண்ணியிருக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** காலையிலே புகழேந்தி இடத்திலே பேசியிருக்கிறேன். பேராசிரியர் அவர்களிடமும் பேசிவிட்டு தகவல் சொல்லிவிடுகிறேன் என்று சொல்லியிருக்கிறார். ஆக அதைப்பற்றி நாளை, நாளை மறுநாள் அறிவிப்பு வரும். மாண்புமிகு நிதியமைச்சர்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. துரைமுருகன் அவர்கள் கூறுவதுபோல் B.A., C., Extension of the existing Committee பற்றி முடிவெடுக்க வேண்டும் என்பது தேவையில்லை என்கிற கருத்து உள்ளது. இதுதான் உண்மை நிலை. எனவே இது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்த முடிவு மட்டும் அல்ல. இதுபற்றி ஏற்கெனவே பேராசிரியர் அவர்களுக்கும் கூறப்பட்டிருக்கிறது. உங்கள் கட்சிக்கும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.



2002 மே 8]

## 8. மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

**(அ) கோரிக்கை எண் 15—நிதித் துறை**
**(ஆ) கோரிக்கை எண் 35—திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை**
**(இ) கோரிக்கை எண் 1—மாநில சட்டமன்றம்**
**(ஈ) கோரிக்கை எண் 30—தகவல் தொழில்நுட்பவியல் துறை**
**(உ) கோரிக்கை எண் 48—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும்**
**(ஊ) கோரிக்கை எண் 2—ஆளுநர் மற்றும் அமைச்சரவை**

— *தொடர்ச்சி.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையைத் தொடரலாம்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வைதியலிங்கம் பேசுகின்றபோது நிதிநெருக்கடி என்ற முகமூடியைக் காட்டி பல சலுகைகள் தவிர்க்கப்படுவதாக எடுத்துச் சொன்னார். நிதி நெருக்கடி என்பது ஒரு முகமூடியல்ல. மாறாக, கடந்த கால ஆட்சியினுடைய தவறான நிர்வாக அணுகுமுறையால் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களது தலைமைமீது சுமத்தப்பட்ட நெருக்கடி என்பதனை நாடு அறியும். இந்த அவையும் அறியும் என்பதனை முதற்கண் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக இந்த ஆட்சி பொறுப்பேற்றபோது ஏற்கெனவே பலமுறை அவையிலே விளக்கிச் சொல்லியிருக்கிறேன். நேரம் இல்லாத காரணத்தால் இப்படிப்பட்ட பணச் சுமை கிட்டத்தட்ட 4,000 கோடிக்குமேல் உடனடியாக தீர்க்கப்பட வேண்டிய பணச் சுமை, இந்த ஆட்சி மீது, கடந்தகால ஆட்சி சுமத்தியது என்பதனையும் அவை அறியும் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் வைதியலிங்கம் அவர்களுக்கு நான் பதிலாகச் சொல்ல விரும்புகிறேன்.

*பிற்பகல் 1-05*

அதுமட்டுமல்ல. இந்த ஆட்சி பொறுப்புக்கு வந்தபிறகு இன்னும் ஒரு நிதி நெருக்கடி பேரிடியாக, மைய அரசு மேற்கொண்ட ஒரு தவறான

அணுகுமுறை, மாநிலத்திலிருந்து மைய அரசுக்குச் செல்லுகிற Corporate Tax அந்த sharable portion என்ற முறையிலே 29.5 சதவிகிதம் மாநிலங்களுக்கு ஒதுக்குகின்ற நிதியை அவர்கள் மேற்கொண்டும் குறைத்துவிட்ட காரணத்தால், 5.385 என தமிழகத்திற்குக் குறைத்துவிட்ட காரணத்தால், கிட்டத்தட்ட 590 கோடி ரூபாய் ஆண்டுக்கு அரசுக்கு இழப்பு ஏற்பட்டதையும் அவைக்கு நான் சொல்லியிருக்கிறேன். அப்படி, 590 கோடி ரூபாயை குறைத்ததோடு அல்லாமல், திடீரென இந்த ஆண்டு 532 கோடி ரூபாயை மேலும் குறைத்துவிட்ட காரணத்தால், அரசுக்கு எப்படிப்பட்ட பணச்சுமை ஏற்பட்டது என்பதனையும், 512 கோடி ரூபாயை குறைத்துவிட்ட காரணத்தால், ஒட்டுமொத்தமாக கிட்டத்தட்ட 1100 கோடி ரூபாய்க்கு மேல் இந்த ஆண்டு வழக்கமாகத் தருகின்ற பணத்தைக்கூட மைய அரசு தரத் தவறிவிட்ட காரணத்தால் ஏற்பட்ட பணச்சுமை பற்றியும் இந்த அவைக்கு ஏற்கெனவே நான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இப்படிப்பட்ட சூழலில், இன்னும் ஒன்றை நான் அவைக்குச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது அரசு ஊழியர்களுக்கு தி.மு.க. ஆட்சியிலே சலுகை தரப்பட்டது, இந்த ஆட்சியிலே ஒன்றும் இல்லையென்று எடுத்துச் சொன்னார்கள். எப்படி அரசு ஊழியர்களை கடந்த தி.மு.க. ஆட்சி ஏமாற்றியுள்ளது என்பதனை அவைக்கு நான் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். நீங்கள் ஒரு அறிவிப்பைச் செய்தீர்கள். மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக மாநில அரசு ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு என்ற ஓர் அறிவிப்பை நீங்கள் தந்தீர்கள். ஆனால் அந்த அறிவிப்பைத்தான் தந்தீர்களேயொழிய அந்தப் பணப் பொறுப்பு, பணச்சுமையை, உங்கள் ஆட்சிக்காலத்திலேயே கஜானா காலி என்ற நிலையிலே இருந்த காரணத்தால், அதை ஈடேற்ற முடியாமல் அந்தப் பணச்சுமையைக்கூட, கிட்டத்தட்ட 1823 கோடி ரூபாய் அரசு ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு என அறிவித்து அதைத் தராமல், எங்கள்மீது சுமத்திவிட்டீர்கள். அதுவும் எப்போது அறிவித்தீர்கள்? 1998-லே அறிவித்தீர்கள். அப்படி 1998-லே அறிவிக்கின்றபோது அதைப் பின்னோக்கி 1-1-1996-லிருந்து அந்த ஊதிய ஊயர்வு அவர்களுக்குக் கிட்டும் என்று சொன்னீர்கள். ஆக, 1-1-1996-லிருந்து அந்த ஊதிய உயர்வு அவர்களுக்குக் கிட்டும் என்று சொல்லிவிட்டு, அந்த 1823 கோடி ரூபாயை அரசு ஊழியர்களுக்கு பரிதாபம் காட்டுவதாகச் சொல்லிக் கொள்கின்ற நீங்கள் அரசு ஊழியர்களுக்குத் தந்தீர்களா என்றால் தரவில்லை. மாறாக, அந்தப் பணத்தை 2002, 2003, 2004-ல் தரப்படும் என்று சொல்லி, ஒரு வேளை 2001-க்குப் பிறகு அந்தப் பணச்சுமையை ஏற்க வேண்டிய





பொறுப்பு உங்களுக்கு வராது என்ற ஜோதிடம் ஏற்கெனவே தெரிந்துவிட்ட காரணத்தாலோ என்னவோ (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பொறுப்பைக்கூட எங்கள் தலைமீது நீங்கள் சுமத்திவிட்டுச் சென்றுவிட்டீர்கள். இதுதான் தற்போது நடைமுறையிலே இருக்கின்ற பிரச்சினை என்பதனை அவைக்கு நான் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல் கடந்தகால ஆட்சியிலே நிதிநெருக்கடி உருவாவதற்குப் பல்வேறு காரணங்களை நான் எடுத்துச்சொல்ல முடியும். ஆனால் நேரம் இல்லை. நிர்வாகத்தைப்பற்றி சொன்னார்கள். உதாரணமாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். தணிக்கைத் துறை, நிறுவனத் தணிக்கைத் துறையினுடைய ஓர் அறிவிப்பு அவைக்கு நாங்கள் தந்திருக்கிறோம். குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம், குன்றத்தூர் அரசினர் மேல்நிலைப் பள்ளி சத்துணவு மையம் உணவுப்பொருள் வழங்குதலில் கிட்டத்தட்ட 21 இலட்சம் ரூபாய் முறைகேடு நடந்திருக்கிறது என தணிக்கைத் துறையாலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது; குற்றம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது; நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அரசு நிர்வாகத்திலே சீர்கேடுகளும் முறைகேடுகளும் எந்த அளவிற்கு மலிந்து இருந்தன, நடவடிக்கை எடுக்காத காரணத்தால், அரசினுடைய பணம், மக்களுடைய வரிப் பணம் எப்படிப் பாழானது என்பதற்கு உதாரணமாக இதனை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போலவே சத்துணவுத் திட்டத்திலே, திருவள்ளூர் மாவட்டத்திலே மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் 12 பள்ளிகளுக்குச் சத்துணவு வழங்கியதிலே 2 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாய் முறைகேடு. அதைப்போலவே இன்னும் 2 இலட்சத்து 58 ஆயிரம் ரூபாய் கையாடல், மேலும் 2 இலட்சத்து 22 ஆயிரம் ரூபாய் என சுமார் 7 இலட்சத்து 44 ஆயிரம் ரூபாய் கையாடல் நடைபெற்று, இப்படிப்பட்ட முறைகேடுகள் எல்லாம் நிர்வாகத்திலே நடந்தன; அதைத் தட்டிக் கேட்காமல் இருந்தது கடந்தகால தி.மு.க. ஆட்சி.

தமிழகத்து மக்களுடைய உள்ளங்களில் இடம்பெற்று அனைவரையும் தன் வயிற்றுப் பிள்ளைகள் என பொது நோக்கோடு பார்க்கின்ற அன்னை, எங்களது புரட்சித் தலைவியை வழக்கிலே மாட்டுகின்ற பணியிலே நீங்கள் முழுநேரமும் ஈடுபட்ட காரணத்தால் உங்களுடைய கவனம் எல்லாம் நிர்வாகச் செம்மையை மறந்துவிட்ட நிலையில் ஆங்காங்கே குறைபாடுகள், குறைபாடுகளுக்கு அதிகாரிகள் உடந்தைகள்; அதிகாரிகளுக்கு

[திரு. சி. பொன்னையன்] [2002 மே 8

அரசியல்வாதிகள் உடந்தைகள் என்ற நிலையிலே இருந்தது. ஆட்சிக்கு ஏற்பட்ட நிதி நெருக்கடி மேன்மேலும் அதிகமாவதற்கு அதுவும் ஒரு காரணமாக ஆகிவிட்டது என்பதை அவைக்கு நான் சொல்ல விரும்புகிறேன்.

பிற்பகல் 1.10

அதுபோலவே உள்ளாட்சி நிறுவனங்களுக்கு எல்லாம் அதிக நிதி தர முடியாத ஒரு நிலை ஏன் உருவானது என்பதனையும் எண்ணிப்பார்க்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் வந்த பிறகு—உதாரணத்திற்கு சென்னை மாநகராட்சியைப் பற்றி மட்டும் சொல்ல விரும்புகிறேன்—மெரினா நீச்சல் குள கட்டண வசூலில் ஒரு இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் கையாடல் செய்யப்பட்டது. அதுமட்டுமல்ல 3 இலட்சத்து 43 ஆயிரம் ரூபாய் மயானத்திலே, பெசன்ட் நகரில் இருக்கிற மயானம்—அந்த சுடுகாட்டிலே பிணங்கள் எரிக்கின்ற இடத்திலே அங்குகூட இந்த மாநகராட்சி நிர்வாகத்திலே 3 இலட்சத்து 43 ஆயிரம் ரூபாய் கையாடல் செய்யப்பட்டது. இப்படிப்பட்ட நிர்வாகச் சீர்கேடுகளைக் களைந்து, நிர்வாகத் தூய்மையை நடைமுறைக்குக் கொண்டுவந்து, சிக்கனத்தைக் கடைப்பிடிப்பதற்கு பதிலாக, கடந்த கால ஆட்சியில் மேம்பாலம் போன்ற முறைகேடுகளுக்கு முக்கியத்துவம் காட்டப்பட்டதால் நிர்வாகச் செம்மை குறைந்தது. எப்படிப்பட்ட நிர்வாகக் கேடுகள் ஏற்பட்டன என்பதற்கு இதை எடுத்துக்காட்டாகச் சொல்லுகிறேன்.

அதைப்போல கூட்டுறவுத் துறையை அவை நன்கு அறியும். "The Co-operative movement is a movement for, by and of the People." என்று சொல்லுவார்கள். அதை விட்டுவிட்டு கூட்டுறவு இயக்கம் என்றால், This is a movement for D.M.K. men of D.M.K. men and by DMK men என்ற முறையில் தி.மு.க.-காரர்களுக்கு இந்த அமைப்பு என்ற முறையிலே ஜனநாயக முறையில் தேர்தலை நடத்தாமல், வன்முறையிலே தேர்தலை நடத்தி, கூட்டுறவு அமைப்புகளை எல்லாம் தி.மு.க.-காரர்களுடைய கூடாரமாக ஆக்கிவிட்ட காரணத்தால் நடந்த பல முறைகேடுகள், ஊழல்கள் சிலவற்றை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன்.

கொங்கணாபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலே, நாமக்கல் மாவட்டத்தில் 32 இலட்ச ரூபாய் கையாடல் செய்யப்பட்டிருக்கிறது. அதைப்போலவே வீராலிப்பட்டி தொடக்க



2002 மே 8] [திரு. சி. பொன்னையன்]

வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலே, திண்டுக்கல்லில் 68 இலட்ச ரூபாய் கையாடல் செய்யப்பட்டிருக்கிறது. சிங்கம்புணரி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலே 13 இலட்ச ரூபாய் கையாடல் செய்யப்பட்டிருக்கிறது. ஸ்ரீரங்கம் நகரக் கூட்டுறவு வங்கியிலே 16 இலட்ச ரூபாய் தவறு நடந்திருக்கிறது. அதைப்போல ஈரோடு கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிலே 20 இலட்சத்து 55 ஆயிரம் ரூபாய் முறைகேடு நடந்திருக்கிறது. கோவில்பட்டி நகரக் கூட்டுறவு வங்கியிலே 13 இலட்ச ரூபாய் தவறு நடந்திருக்கிறது. திருவண்ணாமலை மத்திய கூட்டுறவு வங்கியிலே 77 இலட்சத்து 44 ஆயிரம் ரூபாய் ஊழல் நடந்திருக்கிறது. அதைப்போலவே ஜார்ஜ் டவுன் கூட்டுறவு வங்கியிலே 33 இலட்சத்து 23 ஆயிரம் ரூபாய் தவறு நடந்திருக்கிறது. இவை எல்லாவற்றையும்விட முக்கியமாக சிம்சன் மற்றும் கூட்டுக் கம்பெனிகள் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திலே 3 கோடியே 92 இலட்ச ரூபாய் தவறு நடந்திருக்கிறது. அதில் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. அதைப்போலவே தூக்கநாயக்கன்பாளையம் வட்டார பொதுப் பணியாளர் கூட்டுறவு சிக்கன நாணயச் சங்கத்திலே 20 இலட்சத்து 46 ஆயிரம் ரூபாய் தவறு நடந்திருக்கிறது. சேலம் மாவட்டம் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலையிலே 26 இலட்சத்து 67 ஆயிரம் ரூபாய் முறைகேடுகள் நடந்திருக்கின்றன. நீலகிரி மாவட்டம் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைச் சங்கத்திலே 61 இலட்சத்து 88 ஆயிரம் ரூபாய் தவறு நடந்திருக்கிறது. ஸ்ரீவில்லிபுத்தூர் கூட்டுறவு நூற்பாலையிலே இருக்கிற கூட்டுறவுச் சங்கத்திலே ஒரு கோடியே 55 இலட்ச ரூபாய் முறைகேடு நடந்திருக்கிறது. தமிழ்நாடு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்திலே ஒரு கோடியே 9 இலட்ச ரூபாய் முறைகேடு நடந்திருக்கிறது. நேரம் இல்லாத காரணத்தால் எல்லாவற்றையும் நான் தற்போது சொல்ல முடியாது. இதைச் சொல்வதற்குக் காரணம், கடந்த 5 ஆண்டு கால ஊழல் ஆட்சியை நாடு அறியும், மக்கள் அறிவார்கள், அவையும் அறியும்.

பிற்பகல் 1-15

தமிழகத்திலே ஒரு நேர்மையான பொருளாதார அணுகுமுறையை மேற்கொண்டு நாட்டிலே இருக்கிற மக்களின் வறுமைப் பிணியைப் போக்குவதில் அக்கறை காட்ட வேண்டுமென்ற எண்ணம் இல்லாமல், அதற்கு மாறாக புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராக மீண்டும் வரக்கூடாது என்ற ஒரே எண்ணத்தில், காழ்ப்புணர்ச்சியோடு அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) 5 ஆண்டு

காலம் ஆட்சியை நடத்திக் கொண்டிருந்த காரணத்தினால் இப்படிப்பட்ட சீர்கேடுகளும், முறைகேடுகளும் நிர்வாகத்தில் மலிந்து தாண்டவமாடக்கூடிய ஒரு நிலை உருவானது என்பதனை இந்த அவைக்கு எடுத்துச் சொல்ல வேண்டுமென்பதற்காக இதனை நான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துகளைச் சொன்னார்கள். நான் தகவல் தொழில்நுட்பத் துறை பற்றி மாண்புமிகு அம்மா அவர்கள் கூறியிருக்கிற சில அறிவிப்புக்களை மட்டும் சொல்ல விரும்புகிறேன், நேரமில்லாத காரணத்தினால்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள், தமிழகத்து மக்களால் தமிழ்த்தாயின் ஆசிர்வாதத்தால், தமிழ் மண்ணை ஆளுகிற பொறுப்பைப் பெற்ற பிறகு தமிழ்நாட்டில் வறுமையில்லா வீடு, வளம் மிக்க நாடு என்ற முறையிலே இந்த நாட்டிலே பொருளாதாரத் திட்டங்கள் ஈடேற, நாடு ஒரு முன்னிலைக்கு வரவேண்டுமென்ற ஆதங்கத்தோடு, எண்ணக் கிடக்கையோடு எண்ணற்ற திட்டங்களைத் தீட்டி வருவது நாடறிந்த ஒன்று.

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களைப் பொறுத்தவரைக்கும் கிட்டத்தட்ட 70 சதவிகித மக்கள் வாழுகிற கிராமப்புறத்தில் 35 சதவிகிதத்திற்கும் மேற்பட்ட மக்கள் வறுமைக் கோட்டின் எல்லைக்குக் கீழே வாழ்கிறார்களே, கட்டிய சேலையை மாற்றுவதற்குக்கூட மாற்றுச் சேலை வாங்க வகையின்றி, வக்கின்றி வறுமைப் பிடியிலே வாடுகிறார்களே, ஒரு வேளை உணவுகூட உண்ண வழியின்றி தத்தளிக்கின்ற மக்களாக இருக்கிறார்களே, இவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டுமென்பதற்காக primary sector என்று சொல்லக்கூடிய Agriculture and Agro-based Industries, அதை அடுத்த secondary sector என்று சொல்லக்கூடிய தொழிற்சாலைகள் மற்றும் service sector ஆகியவற்றுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் முக்கியத்துவம் தருகிறார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் கடந்த ஓராண்டு காலமாக தமிழகத்தை இந்தியத் துணைக் கண்டத்தினுடைய முன்னிலை மாநிலமாக அனைத்துத் துறைகளிலும் கொண்டு வரவேண்டுமென்ற நோக்கோடு, பல்வேறு ஆக்கத் திட்டங்களை நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஒரு நாளைக்கு கிட்டத்தட்ட 18 மணிநேரம் பணியாற்றுகிறார்கள். அமைச்சர்களைச்



சந்தித்து, அமைச்சர்களை அழைத்து, அதிகாரிகளை அழைத்து, ஒவ்வொரு துறையாக எந்தத் துறையாக இருந்தாலும், அந்தத் துறை அதிகாரிகளை எல்லாம் அழைத்து, துறையிலே இருக்கின்ற பிரச்சினைகள் என்ன? எத்தகைய திட்டங்களை நாம் மேற்கொள்ள வேண்டும்? Plan expenditure என்றால் என்ன? Non-plan expenditure என்றால் என்ன? எப்படி இவற்றையெல்லாம் நடைமுறைப்படுத்த வேண்டுமென்பதை அமைச்சர்களுக்கும், அதிகாரிகளுக்கும் ஆலோசனைகளாக நல்கி, இந்த நாட்டை, தமிழகத்தை திட்டத்தில் நல்ல ஒரு மாநிலமாக, இந்தியத் துணைக் கண்டத்திலே உன்னத மாநிலமாகக் கொண்டுவர வேண்டுமென்ற முறையில் செயல்படுகிறார்கள்.

"Deputy Chairman for Planning Commission என்ற பதவிக்கு டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் எனும் உலக விவசாயப் பொருளாதார விஞ்ஞானியை நியமித்ததைக்கூட நாடு அறியும். அந்த அளவிற்குத் தமிழகத்தினுடைய தொழில் துறையில் முன்னேற்றத்தைக் கொண்டு வருவதற்காகப் பாடுபட்டுக்கொண்டிருக்கின்ற நமது அம்மா மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு தகவல் தொழில்நுட்பத் துறையிலே கடந்த ஓராண்டுகாலமாக அம்மாவினுடைய நேரடி மேற்பார்வையிலே பல்வேறு ஆக்கப் பணிகளை மேற்கொண்டது என்பதனை நான் அவைக்குச் சொல்ல விரும்புகிறேன்.

Tamil Nadu Information Technology Council என்று ஒன்று இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்குத் தலைவராக இருக்கிறார்கள். தகவல் தொழில்நுட்பத் துறையைப் பொறுத்தவரைக்கும் அது செம்மையாக்கப்படவேண்டும்; நகரத்திலேயிருந்து பட்டி தொட்டிகளிலெல்லாம் அதனுடைய பலன் கிட்ட வேண்டும்; அடிப்படை வசதிகளாக, மக்களுக்கு இன்று தேவையான Infrastructure facilities என்று சொல்லக்கூடிய சாலைப் போக்குவரத்து வசதி, தண்ணீர் வசதி, மின்சார வசதி ஆகிய தேவைகள் முழுமையாகக் கிடைத்தால்தான் விவசாயப் பொருளாதாரம், தொழில் பொருளாதாரம் முன்னுக்கு வரும் என்ற முறையிலே அதற்கான ஆணைகளை ஒருபுறம் இடுகிறார்.

அடுத்து இவை எல்லாவற்றையும்விட முக்கியமாக இன்று மென்பொருள் Technology Improvement ஒருபுறம், அதைப் போலவே Information Technology and Computer Application ஒருபுறம் என்று நவீன முறையிலே நடைமுறைப்படுத்துகிறபோது இது மக்களினுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் என்ற முறையிலே Tamil Nadu Informatin

[திரு. சி. பொன்னையன்] [2002 மே 8

Technology Council-னுடைய தலைவர் என்ற பொறுப்பிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் அடிக்கடி அதிகாரிகளையும், இதற்கான வல்லுநர்களையும் அழைத்து, தொழிலதிபர்களை அழைத்து, வெளிநாட்டிலேயிருந்து வருகின்ற தொழிலதிபர்களை அழைத்து அவர்களோடு கலந்துரையாடி பல்வேறு ஆக்கப் பணிகளை ஆக்கத் திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் அம்மா அவர்கள் மேற்கொண்ட சிறப்புப் பணியால் என்னென்ன நிகழ்வுகள் நடந்துள்ளன, என்னென்ன நிகழ்வுகள் நடக்க உள்ளன என்பதனைக் கூற விரும்புகிறேன்.

பிற்பகல் 1-20

2000-2001 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிலிருந்து மென்பொருட்கள் ஏற்றுமதி செய்யும் நிறுவனங்கள் 766-ஆக இருந்தன. அவற்றின் மூலம் ஏற்றுமதி மென்பொருட்களின் மதிப்பு 3116 கோடி ரூபாயாக இருந்தது. 2001-2002 ஆம் ஆண்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்ட முற்போக்குக் கொள்கையாலும், சீரிய செயல்திட்டங்களாலும், தமிழ்நாட்டிலிருந்து மென்பொருட்கள் ஏற்றுமதி செய்யும் தொழில் நிறுவனங்கள் 766-லிருந்து 866-ஆக உயர்ந்துள்ளன.

வெளிநாட்டிலிருந்து முதலீடு செய்ய தமிழகத்திற்கு வருகின்றவர்களை பிற மாநிலங்களுக்குச் செல்வதைவிட தமிழகத்திற்கு வாருங்கள், தங்குதடையற்ற மின்சாரம் மென் பொருட்களுக்குத் தரப்படும், தண்ணீர் வசதி தரப்படும், சாலை வசதிகள் உண்டு, Single Window Clearance Concept-லே உங்களுக்குத் தரப்படும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் கொடுத்த ஊக்கத்தின் காரணமாக 766-ஆக இருந்த அந்தத் தொழில் நிறுவனங்கள் இந்த ஓராண்டு காலத்திலே 866-ஆக உயர்ந்துள்ளன என்பதனை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும் தமிழ்நாட்டிலிருந்து மென்பொருட்கள் ஏற்றுமதியை 3,116 கோடி ரூபாயிலிருந்து 5,223 கோடி ரூபாயாக உயர்த்தி (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அரசு சாதனை படைத்துள்ளது என்பதனை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஒரே ஆண்டில் நமது மாநிலத்திலிருந்து மென்பொருட்களின் ஏற்றுமதியின் அளவு மட்டும் 2,107 கோடி ரூபாய் அதிகரித்துள்ளது என்பதும், ஒரே ஆண்டில் 67.6 சதவிகித வளர்ச்சி என்பதும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஒரு மாபெரும் சாதனை (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை அவைக்கு நான் அறிவிக்க விரும்புகிறேன்.



2002 மே 8] [திரு. சி. பொன்னையன்]

இந்த ஓராண்டு காலத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அரசு அடைந்திருக்கின்ற இந்தப் பெருமைமிக்க சாதனையால் மென்பொருட்கள் ஏற்றுமதியில் மூன்றாவது நிலையில் இருந்த தமிழகம் தற்பொழுது கர்நாடகத்திற்கு அடுத்தபடியாக அகில இந்திய அளவில் இரண்டாவது இடத்தை எட்டியுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தலைசிறந்த தகவல் தொடர்பு வசதிகள், திறமையும் நம்பகமும் மிக்க தொழில்நுட்ப மனித ஆற்றல், தரமான தடையற்ற மின்வசதி ஆகியவற்றால் அடுத்த ஆண்டில் தமிழகம் இந்தியாவில் இத்துறையில் முதலிடத்தைப் பெற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சூளுரைத்து செயல்படுகிறார்கள் என்ற மகிழ்ச்சியை அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தை அனைத்துத் துறைகளிலும் முன்னிலை மாநிலமாக உயர்த்திடும் கொள்கை அடிப்படையில் தகவல் தொழிநுட்ப முதலீடுகளுக்கு உகந்த இடமாக தமிழ்நாட்டினை உருவாக்குதல் E-Governance மற்றும் Information Technology Applications மூலம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல், ஊரகப் பகுதிகளுக்கு இணையதளம் வசதி பெறுவதில் உள்ள இடைவெளியைக் குறைத்தல், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு முயற்சிகளை அதிகரித்தல், தகவல் தொழில் நுட்பத் துறைகளில் தமிழ்மொழியைப் பரவலாகப் பயன்படுத்த தீவிர நடவடிக்கை எடுத்தல் ஆகியவை உள்ளடங்கிய ஒரு புதிய தகவல் தொழில்நுட்பச் செயல் திட்டத்தை நடைமுறைப்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இந்தச் செயல் திட்டங்கள் மூலம் எல்லா அரசுத் துறைகளும் மின்னிணையம் மூலம் இணைக்கப்படும். இது தனியார் துறைகளிலும் மின்னிணையம் தாராளமாகப் பயன்படுத்த வழிவகுக்கும். இதனால் நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறம் ஆகிய அனைத்துப் பகுதிகளிலும் வாழும் தமிழக மக்களுக்கு மின்னிணையத்தின் பயன் அன்றாட வாழ்க்கை மேம்பாட்டிற்குக் கிடைத்திடும் வாய்ப்பை உருவாக்கும்.

முதற்கட்டமாக தமிழ்நாடு மின் வாரியம், மாநகரக் குடிநீர் வழங்கும் துறை மற்றும் சென்னை மாநகராட்சி ஆகியவற்றிற்குச் செலுத்த வேண்டிய தொகையை மின்னிணைய சேவை மையங்களில், Electronic Delivery Services எந்த இடத்திலும் மற்றும் எந்த நேரத்திலும் செலுத்தும் வகையில், மக்கள் நலன் கருதி மின்னிணைய சேவைத் திட்டங்கள் தொடங்கிட மாண்புமிகு

அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதனை நான் அவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வெளிநாட்டவர்களை ஈர்த்து, தமிழ்நாட்டில் தொழில் திட்டங்களை அமைத்து அதன்மூலம் வேலைவாய்ப்பு மற்றும் ஒட்டுமொத்தப் பொருளாதாரத்தை உயர்த்தும் வகையில் பழைய மகாபலிபுரம் சாலையில் பொது மற்றும் தனியார் பங்கேற்புடன் உலகத் தரம் வாய்ந்த வசதிகளுடன் அறிவுசார் தொழில் நகரியங்கள் Knowledge Industry Townships அமைக்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை அறிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 15 அம்சத் திட்டத்தின் ஒரு பகுதியாக சென்னையிலுள்ள Indian Institute of Technology சென்னை மற்றும் International Research and Development Park பன்னாட்டுத் தகவல் தொழில் நுட்ப ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பூங்கா ஒன்று அமைக்கப்படும். இது தகவல் தொழில் நுட்பம் மற்றும் கணினி சம்பந்தமான உலகத் தரம் வாய்ந்த ஆராய்ச்சியில் தமிழகத்தை முதலிடமாக உயர்த்திடவும், அதனையொட்டி கணினித் தொழில் வேலைவாய்ப்புகள் மிகவும் பெருகிடவும் வழி வகுக்கும்.

*பிற்பகல் 1-25*

தமிழகம் இந்தியாவிலேயே முன்னிலை மாநிலமாக உயரும் வகையில் மைய அரசின் தகவல் தொழில் நுட்ப அமைச்சகம் மற்றும் அமெரிக்காவினுடைய மசாசூட்ஸ் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜியின் கூட்டு முயற்சியான மீடியா லேப் ஏசியாவுடன் இணைந்து தமிழக அரசு ஒரு சோதனைக்கூடத்தை சென்னையில் அமைக்கும். இம்மையம் தகவல் தொடர்பு மற்றும் கணினி ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு (Advanced Research and Development areas in Communication and Computing) இவற்றில் செயல்பட மாண்புமிகு அம்மா புரட்சித் தலைவி அவர்களுடைய ஆலோசனையின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களினுடைய ஆணையையொட்டி, தமிழகத்தில் கணினி தொடர்பான தொழில்களை பிற மாநிலங்களைவிட அதிக அளவில் மேம்படுத்தவும், தமிழக இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை அதிக அளவில் உருவாக்கவும் உதவும் வகையில் தமிழக



அரசு மற்றும் இந்தியத் தொழில்கள் கூட்டமைப்பு Confederation of Indian Industry இணைந்து செப்டம்பர் 2002-ல் Connect 2002 என்ற பன்னாட்டு மாநாடு மற்றும் பொருட்காட்சி சென்னையில் நடத்தப்படும் என்பதனையும் நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பொருட்காட்சி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த தொழில்களுக்கு IT enabled service-க்கு உகந்த இடமாக தமிழ்நாட்டினை முன்னிலைப்படுத்தி அதன் மூலம் தமிழகத்தில் நமது இளைஞர்களுக்கு அதிக வேலைவாய்ப்பையும் பொருளாதார உயர்வையும் ஏற்படுத்த வேண்டும் என்பதுதான் மாண்புமிகு அம்மா அவர்களினுடைய அணுகுமுறை என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் கணினி தொழில்களை மாவட்டப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்திட வேண்டும் என்ற மாண்புமிகு அம்மா அவர்களுடைய கொள்கையையொட்டி, இந்தியத் தொழில்கள் கூட்டமைப்பு Confederation of Indian Industry மற்றும் தமிழக அரசும் இணைந்து, நவம்பர் 2002-ல் coimbatore IT.com என்ற கருத்தரங்கு மற்றும் பொருட்காட்சி நிகழ்ச்சியினை முதற்கட்டமாக கோயம்புத்தூரில் நடத்தி அதன் மூலம் தமிழகத்தில் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி, மாவட்டப் பகுதிகளுக்குச் செல்ல வழிவகுக்கும். கோயம்புத்தூர் மற்றும் சுற்றுப்புறங்களில் தகவல் தொழில் நுட்பம் சார்ந்த தொழில்களும் பணிகளும் தொடங்குவதற்கான வாய்ப்பு வசதிகளை இது உருவாக்கும் என்பதே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அணுகுமுறை.

இரண்டாம் கட்டமாக, பொது-தனியார் கூட்டமைப்பில் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த பணிகளுக்கு உகந்த இடங்களான திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி மற்றும் சேலம் ஆகிய இடங்களிலும் இதுபோன்ற கருத்தரங்குகள் மற்றும் பொருட்காட்சிகள் நடத்தப்பட வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள்.

மாணவ, மாணவியர்களின் நலன் கருதி, அரசு மேல்நிலைப் பள்ளிகளில், தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் கணினி கல்வித் திட்டம், அனைத்துக் கணினி அறிவியல் விருப்பப் பாடம் அல்லாத மாணவர்களுக்கும் இந்த மேல்நிலைப் பள்ளிகளில் விரிவுபடுத்த மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் கல்லூரி மையங்களுக்கு கணினி பயிற்சி அளிப்பதற்கு தமிழ்நாடு அரசு தொடர்ந்து முழு அளவில் ஊக்குவிக்கும்.

[திரு. சி. பொன்னையன்] [2002 மே 8

தகவல் தொழில்நுட்பத்தில் தமிழைப் பயன்படுத்தி, தமிழ்நாட்டின் ஒவ்வொரு மூலையிலும் தகவல் தொழில்நுட்பத்தை விரிவுபடுத்திட மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். தமிழ் இணையப் பல்கலைக்கழகம் Tamil Virtual University மற்றும் தமிழ்நாடு மின்னணு நிறுவனம்-ELCOT இணைந்து, அனைத்து தமிழக அரசு நிறுவனங்களின் வலைத் தளத்தை இருமொழி இணைய தளமாக்கவும், உலகின் பல்வேறு பகுதிகளிலுள்ள தமிழர்களுக்கு அறிவியல் மற்றும் பொறியியல் தமிழ்ப் பாடங்களை தமிழ் இணையப் பல்கலைக்கழகம் இணையம் மூலம் வழங்கிடும் திட்டத்தையும் விரைவில் நடைமுறைப் படுத்த மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். தமிழ் மென்பொருள் வளர்ச்சி மற்றும் உபயோகத்தை பெருமளவில் ஆதரிக்கவும், உலக மக்களுக்காக தமிழ் இணைய பல்கலைக்கழகத்தின் மின் நூலகத்தை மேம்படுத்தவும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெறக் கோருங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் பல கருத்துகளைச் சொல்லியிருக்கிறார்கள். நியாயத்தின் அடிப்படையிலான கருத்துகளையும் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களும் அவற்றைக் கவனித்திருக்கிறார்கள். அவற்றையெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்கள் பரிவுடன் பரிசீலித்து, நிதிநிலைக்கேற்ப உறுப்பினர்களுக்கு என்னென்ன செய்ய வேண்டுமோ அவற்றை இந்த அரசு செய்யும் என்பதனை எடுத்துச் சொல்லி, வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று, அவை எனது கோரிக்கைகளையெல்லாம் ஏற்குமாறு வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

**(அ) கோரிக்கை எண்—15 நிதித் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 15, நிதித் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. ஆர் சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** இல்லை.



2002 மே 8]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சக்ரபாணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி.எஸ். உலகரட்சகன்.

**திரு. பி.எஸ். உலகரட்சகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.எஸ். உலகரட்சகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல் முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி பாரிமோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரா. ஈஸ்வரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜெக. வீரபாண்டியன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெக. வீரபாண்டியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. சுதர்சனம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச். ராஜா.

**திரு. எச். ராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச். ராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"நிதித் துறை மானியக் கோரிக்கை எண் 15-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 4,58,65,16,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ. 21,93,73,000/-க்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

**(ஆ) கோரிக்கை எண் 35—திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 35, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சக்ரபாணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.



**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல் முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரா. ஈஸ்வரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜெக. வீரபாண்டியன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெக. வீரபாண்டியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கை எண் 35-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 31,88,85,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ. 5,69,69,000/-க்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

[2002 மே 8

**(இ) கோரிக்கை எண் 1—மாநில சட்டமன்றம்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 1, மாநில சட்டமன்றம். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சக்ரபாணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என் நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.



2002 மே 8]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல் முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரா. ஈஸ்வரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜெக. வீரபாண்டியன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** இல்லை.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெக. வீரபாண்டியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கு. ஜெயக்குமார்.

**திரு. கு. ஜெயக்குமார்:** இல்லை.

[2002 மே 8

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. ஜெயக்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.என். சேகரன்.

**திரு. கே.என். சேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.என். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"மாநில சட்டமன்றம் மானியக் கோரிக்கை எண் 1-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 11,82,59,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க.(ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

**(ஈ) கோரிக்கை எண் 30—தகவல் தொழில்நுட்பவியல் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 30, தகவல் தொழில்நுட்பவியல் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப் படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. ஆர். சக்ரபாணி

**திரு. ஆர். சக்ரபாணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சக்ரபாணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.



2002 மே 8]

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி. வேல் முருகன்

**திரு. தி. வேல் முருகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல் முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** இல்லை.

[2002 மே 8

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரா. ஈஸ்வரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.



2002 மே 8]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச். ராஜா.

**திரு. எச். ராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச். ராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** இல்லை.

53-139--12

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"தகவல் தொழில்நுட்பவியல் துறை மானியக் கோரிக்கை எண் 30-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 10,25,14,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

**(உ) கோரிக்கை எண் 48—ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 48—ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சக்ரபாணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.



**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல் முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரா. ஈஸ்வரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர். தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜெக. வீரபாண்டியன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெக. வீரபாண்டியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மீ.அ. வைதியலிங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும் மானியக் கோரிக்கை எண் 48-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 3191,36,90,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

**(ஊ) கோரிக்கை எண் 2 —ஆளுநர் மற்றும் அமைச்சரவை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 2, ஆளுநர் மற்றும் அமைச்சரவை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சக்ரபாணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல் முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரா. ஈஸ்வரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜெக. வீரபாண்டியன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெக. வீரபாண்டியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. சுதர்சனம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை மானியக் கோரிக்கை எண் 2-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 9,15,38,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க.(ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## 7. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஈ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2002 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும் ஆய்வு செய்யவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

[2002 மே 8

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)— தொடர்ச்சி

### (ஊ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2002.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் மாலை 4-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-33 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.



2002 மே 8] [திரு. கு. பிச்சாண்டி]

பிற்பகல் 4-30

பிற்பகல் 4-30 மணியளவில், மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர். கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

## 9. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

### (அ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு. (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/2002), மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/2002) @ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி. கொஞ்சம் சுருக்கமாகச் சொல்லுங்கள். நிறைய பேர் பேச வேண்டியிருக்கிறது.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சட்டமன்றக் கூட்டத்திலே, இதே சட்டமுன்வடிவிலே இந்தத் தேர்தலை நீங்கள் நடத்த முடியாது என்று நான் பேசிய நேரத்திலே, நவம்பரிலே இந்தக் கூட்டுறவுச் சங்கத் தேர்தலை நடத்தி விடுவோம் என்று அமைச்சர் சொன்னார். ஆனால் இன்றைக்கு மீண்டும் ஓர் ஆண்டுக் காலம் தனி அலுவலர் நீட்டிப்பை இந்தச் சட்டமுன்வடிவின்மூலம் செய்திருக்கிறார்கள். இது கூட்டுறவுச் சித்தாந்தத்தின் அடிப்படைத் தத்துவத்தையே தகர்த்தெறியக்கூடியதாக உள்ளது. கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்குத் தேவையான கடன்களை, மற்றவற்றை வழங்குவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட சங்கத் தலைவர்கள், இயக்குநர்கள் இருந்தால்தான் சிறப்பான முறையிலே கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படமுடியும். ஆனால் இன்றைக்குத் தொடர்ந்து இந்தத் தேர்தலை நடத்தாமல் நீட்டிப்புச்

---

@26-4-2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

செய்வது, கூட்டுறவுச் சித்தாந்தத்தின் தத்துவத்தை தகர்க்கக்கூடியதாக இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் 1976-லேயிருந்து, 13 ஆண்டுக் காலம் தேர்தல் நடை பெறவேயில்லை. 1989-லே தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றபோதுதான் தேர்தல் நடத்தப்பட்டது. 2 ஆண்டு காலத்தில் ஆட்சி கலைக்கப்பட்டவுடன், 1991-லே ஆட்சிக்கு வந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம், அன்றைக்கு கூட்டுறவுச் சங்கங்களைக் கலைத்தது. 1996-லே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, கூட்டுறவுச் சங்கத் தேர்தல்கள் நடத்தப்பட்டு, தலைவர்கள் சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். ஆனால் மீண்டும் 2001 மே மாதம், இந்த ஆட்சி பொறுப்பேற்றவுடன் கூட்டுறவுச் சங்கத்தைக் கலைத்தீர்கள். உடனடியாகத் தேர்தலை நடத்துவோம் என்று சொன்னீர்கள். ஆனால் இன்றைக்கு ஓர் ஆண்டுக்காலமாக இந்தத் தேர்தல் நடத்தப்படாமல் இருக்கிறது. அண்மையில்கூட நீதிமன்றத்திலே இதற்கு stay கொடுத்திருக்கிறார்கள். பழைய உறுப்பினர்களை வைத்துத்தான் தேர்தலை நடத்த வேண்டுமென்று சொல்லியிருக்கின்ற காரணத்தால், இந்தத் தேர்தலை தள்ளி வைக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு, தள்ளி வைத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பதுதான் இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமை என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதிலும் குறிப்பாக தனி அலுவலர் நியமனம் என்பது அதிக அளவிலே அவர்களுக்காக செலவாகக் கூடியது. தலைவர்கள் எல்லாம் Honorary-ஆக அந்தப் பணியில் இருக்கிறார்கள். ஆனால் தனி அலுவலர்களுக்கு அதிக அளவில் சம்பளம், அவர்களுக்கான படிகள் எல்லாம் வழங்கப்படுகின்றன.

அதுமட்டுமல்லாமல் தனி அலுவலர் காலங்களிலேதான் கூட்டுறவுத் துறை மிக அதிக அளவு நட்டத்திலே இயங்கி வந்தது. ஜனநாயக முறையிலே தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் இருந்த காலங்களிலே எல்லாம், எல்லா கூட்டுறவுச் சங்கங்களும் சிறப்பாகச் செயலாற்றின. அண்மையிலேகூட கூட்டுறவுத் துறையிலே அதிக அளவு டெபாசிட்டுகள் போடப்பட்டு இருக்கின்றன என்றால், கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள் பொறுப்பேற்றிருந்த காரணத்தால்தான், இப்படி கூட்டுறவுத் துறை ஒரு ஜனநாயக முறையிலே, மக்களுக்காக, அதிக அளவு விவசாய மக்களுக்காக, கடன்களை வழங்குவதாக இருந்தாலும், கூட்டுறவுத் துறையிலே,





கடன்களை வழங்குவதாக இருந்தாலும், பல்வேறு துறைகளிலே சிறப்பாக மக்களோடு இணைந்து, சிறப்பாகப் பணியாற்றக் கூடிய அந்த நிலைமை மாற்றப்பட்டு, இன்றைக்கு தனி அலுவலர்...

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது, கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாம், தேர்ந்தெடுக்கப்பட்ட பொறுப்பாளர்கள் இருக்கின்றபோது, வளமாக இருந்ததாகச் சொல்லியிருக்கிறார். நிறைய டெபாசிட் வந்ததாகச் சொல்லி இருக்கிறார். டெபாசிட் வந்தது பொது மக்களுடைய பணம். ஆனால், கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சொந்தமான பணம் எல்லாம் காலியாகிவிட்டது; காலியாக்கப்பட்டு விட்டது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) காலையிலே பலப்பல உதாரணங்களுடன் நான் எடுத்துச் சொன்னேன். எங்கெங்கு கையாடல் நடந்திருக்கிறது என்பதை எடுத்துச் சொன்னேன். உங்கள் ஆட்சிக் காலத்திலே—தி.மு.க. வினுடைய கடந்த கால ஆட்சியிலே—கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் நடந்து, தேர்தல் என்ற போர்வையிலே தி.மு.க.காரர்களே கூட்டுறவுச் சங்கங்களை ஆக்கிரமித்துக் கொள்ளக்கூடிய ஒரு கொடும் செயல் நடந்த காரணத்தால், (மேசையைத் தட்டும் ஒலி) கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சொந்தமான பணம், அந்த அமைப்புகளுக்குச் சொந்தமான பணம் எல்லாம், கொள்ளையடிக்கப்பட்ட அந்த நிகழ்வுகளுக்கான உதாரணங்களைத்தான் காலையிலே நான் பேசுகிறபோது புள்ளி விவரங்களோடு சொன்னேன்.

*பிற்பகல் 4-35*

**திரு. கு. பிச்சாண்டி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் காலையிலே பேசும்போதுகூடச் சொன்னார்கள். நிதிச் சுமைக்கு அதுதான் காரணம் என்று சொன்னார்கள். ஆனால் 1991-96-லே அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே பல இடங்களிலே இந்த தனி அதிகாரிகள் முறைகேடு செய்து, அவர்கள் மீதும், பல சங்கங்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. நேற்றைக்குக்கூட டி.வி.-யிலே சொன்னார்கள்; கோயம்புத்தூரிலே இருக்கின்ற ஒரு சங்கத்திலே அந்த அலுவலரை, அந்தச் சங்க உறுப்பினர்கள் மடக்கி வைத்து, 22 இலட்சம் ரூபாய் கடன் வழங்கப்படவில்லை என்பதற்காக, அவரைப் பிணையக் கைதியாக வைத்துக்கொண்டு இருந்தார்கள் என்று செய்திகளெல்லாம் வந்திருக்கின்றன. பல பத்திரிகைகளிலே, இன்றைக்குக்கூட, அப்படி பல செய்திகள் வருகின்றன. பல கூட்டுறவுச் சங்கங்களிலே, தனி அதிகாரிகள் இருக்கின்ற பல இடங்களிலே முறைகேடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆகவே அதற்காக ஒரு பெரிய நிர்வாகத்தில்

ஓரிடத்தில் நடைபெறுகின்ற தவறுக்காக ஜனநாயக முறையிலே நடைபெற வேண்டிய ஓர் இயக்கம், ஜனநாயக முறையிலே தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் செயலாற்ற வேண்டிய அந்தப் பணி முடக்கப்படுவது, கேலிக் கூத்தாக இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே கூட்டுறவுத் துறை ஒரு சிறப்பான இயக்கமாக, மக்களோடு இணைந்து இருக்க வேண்டுமானால், அந்தப் பகுதியிலே இருக்கக்கூடியவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள், இயக்குநர்கள், உறுப்பினர்கள் பணிகளைச் செய்தால்தான் அந்த இயக்கம் வலுவுள்ளதாக இருக்கும்; மக்களுக்குப் பயனளிக்கக்கூடிய திட்டங்களை வழங்கக்கூடியதாக இருக்கும்.

கடந்த காலங்களிலே பல கோடி ரூபாய், அதன் தலைவர்களுடைய முயற்சியால் கடன்கள் பெற்று, சிறப்பான முறையிலே செயலாற்றியது. விவசாயிகளுக்கு, பல்வேறு கடன்களுடைய அளவை உயர்த்தினார்கள். பல்வேறு வகையிலே விவசாயிகளுக்கான நன்மைகள் கிடைத்தன. ஆகவே இந்தக் கூட்டுறவுச் சங்கத் தேர்தல் என்பது, ஏதோ தனிப்பட்டவர்கள் வெற்றி பெறுவதற்காக அல்ல. நம்முடைய நிதியமைச்சர் பேசுகின்ற நேரத்தில் சொன்னதைப்போல, ஒரு பெரிய நிர்வாகத்தில் பல இடங்களிலே சில பேர் தவறு செய்தவர்கள் இருக்கலாம். ஆனால் அதைவிட மக்களுக்கு நன்மைகள் அதிகமாகக் கிடைக்கின்றன என்பதைச் சொல்ல இந்த அரசாங்கம் முயல வேண்டும் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே இந்தக் கூட்டுறவு சித்தாந்தத்தை, அதனுடைய அடிப்படை நோக்கத்தை தகர்க்கக்கூடியதாக இருக்கக்கூடாது. இந்த ஓராண்டுக் காலம், மீண்டும் நீடிக்க வேண்டும் என்று கேட்டிருப்பது, இந்தக் கூட்டுறவு சித்தாந்தத்தையே...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில இடங்களில் தவறுகள் நடந்திருக்கலாம் என்று சொன்னார். உண்மை நிலை அது அல்ல. பல இடங்களில், பெரும்பான்மையான இடங்களில் (மேசையைத் தட்டும் ஒலி) தவறுகள் நடந்திருக்கின்றன. இதுதான் உண்மை. இதைவிட முக்கியமான ஒன்று, பல கூட்டுறவுச் சங்கங்களில், விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் என்றால், விவசாயிகள் அல்லாதவர்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் என்றால், நெசவாளர்கள் அல்லாதவர்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். மாண்புமிகு முன்னாள் அமைச்சர் திருநாவுக்கரசு அவர்கள் பேசுகின்றபோதுகூட, புள்ளிவிவரங்களோடு எடுத்துச் சொன்னார்கள். கடந்த காலத்தில் நடந்த தவறுகள் இவைதான் என்பதனை அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.





**திரு. கு. பிச்சாண்டி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது, பல இடங்களிலே தனி அதிகாரிகள் காலங்களிலேதான் நடைபெறுவதாகச் சொன்னார்கள். கூட்டுறவுத் துறை இந்த அளவிற்கு ஒரு மோசமான நிலைமையை அடைந்தது. 18 ஆண்டுகாலம் கூட்டுறவுத் துறை, அதிகாரிகள் கையில்தான் இருந்தது. 7 ஆண்டு காலம்தான் தலைவர்கள் அதிலே பணியாற்றியிருக்கிறார்கள். அப்படியென்றால், யாரால் அதிக நஷ்டம் ஏற்பட்டது என்பதை நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே இந்தத் தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை நீட்டிப்பது, கூட்டுறவுத் துறைக்கு சிறந்ததாக இருக்காது. கூட்டுறவுத் தத்துவத்திற்குச் சிறந்ததாக இருக்காது. இன்றைக்கு நீதிமன்றத்திலேயே பழைய உறுப்பினர்களை வைத்து நடத்தலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே நீதிமன்றம் சொன்ன பிறகும்கூட அந்தத் தேர்தலை...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழைய உறுப்பினர்களை வைத்துத் தேர்தலை நடத்தலாம் என்பதற்கு, அரசு தவறுகளை நீதிமன்றத்திடம் சுட்டிக் காட்டியிருக்கிறது. பழைய முறையிலே என்னென்ன தவறுகள் நடந்திருக்கின்றன என்பதும் நீதிமன்றத்தினுடைய கவனத்திற்கு எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு வர இருக்கிறது. வந்த பிறகு புதிய உறுப்பினர்களைச் சேர்த்து, புதிய உறுப்பினர்களின் அடிப்படையில் தேர்தல்களை நடத்துகிறபோதுதான் கூட்டுறவு அமைப்பு கூட்டுறவாளர்களுக்காக, மக்களுக்காக உள்ள அமைப்பாக வரும் என்ற காரணத்தால், அதைத்தான் இந்த அரசு நடைமுறைப்படுத்தும் என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. கு. பிச்சாண்டி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நிதியமைச்சர்...

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பிச்சாண்டி அவர்கள் தவறான தகவலை இந்த அவைக்குத் தெரிவிக்கின்ற காரணத்தினாலே நான் குறுக்கிடுகிறேன். அவர் பேசிய பின்னாலே, இறுதியிலே பதில் சொல்லலாம் என்று இருந்தேன். இருந்தாலும் தவறான தகவலைக் கொடுக்கிற காரணத்தினாலே சொல்கிறேன். நீதிமன்றம், பழைய உறுப்பினர்களை வைத்து தேர்தல் நடத்த வேண்டுமென்று உத்தரவு வழங்கவில்லை என்பதனை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுகூட நாங்கள் பல்வேறு சங்கங்களைக் கேட்கிறோம். இப்போது கடன் கொடுக்கும்போது, உறுப்பினர்களாகச் சேர்க்கின்ற நேரத்தில், அவர்களிடம் ஒரு கடிதம் வாங்குகிறார்கள். உங்களுக்கு வாக்கு அளிக்கிற உரிமையோ, தேர்தலில் நிற்கக்கூடிய உரிமையோ இல்லை என்று கடிதத்தை வாங்கிக் கொண்டுதான், கடன் வழங்குவதற்கு உறுப்பினர்களாகச் சேர்க்கிறார்கள். அமைச்சர் இப்படிச் சொல்வது எனக்கு விந்தையாக இருக்கிறது. பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களிலே இப்படித்தான் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இப்படி ஒரு நிலைமை இருக்கின்ற நேரத்திலே இந்தத் தேர்தலை எப்படியும் முறைப்படி நடத்த வேண்டுமென்று இருந்திருந்தால் ஓராண்டு காலமாக நீங்கள் நடவடிக்கை எடுத்திருக்கலாம். அதற்கான நடவடிக்கைகளை எடுத்து தேர்தல் நடத்தப்பட வேண்டும். ஜனநாயக முறையிலே பல்வேறு தேர்தல்களை நடத்துகிறோம் என்கின்ற ஒரு நிலை இருக்கின்ற நேரத்திலே, கூட்டுறவு ஒரு மிகப் பெரிய இயக்கமாக இருக்கிற காரணத்தால், இந்தத் தேர்தல்களை விரைந்து நடத்தவேண்டும்; இனிமேல் காலம் தாழ்த்தாமல் நடத்தவேண்டும் என்கின்ற அந்த நிலையைத் தெரிவித்து, ஓராண்டுகாலம், தனி அலுவலர்களது கால நீட்டிப்பை எங்கள் கட்சியின் சார்பாக கடுமையாக எதிர்க்கிறேன் என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.

*பிற்பகல் 4-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனி அதிகாரிகளுடைய நியமனம் ஓர் ஆண்டுக் காலத்திற்கு நீட்டித்து இந்தச் சட்டமுன்வடிவு இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிறது. எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் பிச்சாண்டி அவர்கள், கூட்டுறவுச் சித்தாந்தத்தைப் பற்றியெல்லாம் மிக விளக்கமாக இங்கே தெரிவித்தார்கள். "கூட்டுறவே நாட்டுயர்வு" என்பது ஒரு நல்ல சித்தாந்தம். கர்மவீரர் காமராஜர் காலத்திலே கூட்டுறவுச் சங்கங்களிலே அதிகமாகக் கொள்ளை நடந்ததாகவோ, முறைகேடுகள் நடந்ததாகவோ வரலாறே கிடையாது. அப்போது பார்த்தீர்கள் என்று சொன்னால், கூட்டுறவாளர்களாக வரக்கூடியவர்கள், தங்களுடைய சொத்தை இந்தச் சங்கங்களுக்குக் கொடுத்து, அவர்கள் வேண்டுமானால் நடுத்தெருவிற்கு வந்திருக்கலாமேயொழிய, நடுத்தெருவில் இருந்தவர்கள் எல்லாம் பெரிய பணக்காரர்களான வரலாறு என்பது இப்போது புதியதாக கூட்டுறவு





இயக்கங்களிலே வந்துவிட்டது. கூட்டுறவு என்று சொன்னாலே கொள்ளையடிக்கிற ஓர் இயக்கம் என்று சொல்லக்கூடிய அளவிற்கு இந்த நாடு போனது மிகவும் வேதனையான ஒன்று. அதனால்தான் நானேகூட கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலே சுட்டிக்காட்டினேன். நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் மற்றவர்களையும் கேட்டுக்கொண்டேன். கூட்டுறவு இயக்கங்களிலே பல இடங்களிலே, கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கமாக இருந்தாலும் சரி, அல்லது தொடக்க வேளாண்மை வங்கியாக இருந்தாலும் சரி, அல்லது பால் சொசைட்டியாக இருந்தாலும்சரி எல்லா சொசைட்டிகளிலும் பெருத்த அளவிலே முறைகேடுகள் நடந்திருக்கின்றன; அதற்காக ஒரு தனி ஆய்வினை நடத்தி. யாரெல்லாம் குற்றம் செய்திருக்கிறார்களோ அவர்களைக் கண்டுபிடியுங்கள் ஏனென்று சொன்னால் எல்லாமே திவாலாகியிருக்கிறது இன்றைக்கு. கணக்கு எடுத்தால், இன்றைக்கு அதிகாரிகளே அதற்குத் துணை போய்க் கொண்டு இருக்கிறார்கள். இந்த அதிகாரிகளுக்கு அவர்கள் தலையாட்டி, கையெழுத்துப் போட்டுவிட்ட காரணத்தினாலே, தாங்களும் மாட்டிக்கொள்வோம் என்று சொல்லி—அதற்கு உதாரணமாக, வாணியம்பாடியினுடைய நகர கூட்டுறவு வங்கியில் நடந்த ஊழலைப் பற்றி, நான் ஏற்கெனவே ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான அறிவிப்பு கொடுத்துவிட்டு, உங்களுடைய...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமுன்வடிவுக்கு வாருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை. இதிலேயே கேட்டுவிடுகிறேன். ஏனென்றால் தனியாக எடுக்க மாட்டேன் என்கிறீர்கள்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கூட்டுறவுத் தத்துவத்தைப் பற்றியெல்லாம் சொல்வதற்கு நேரம் இல்லை. சட்டமுன்வடிவு குறித்து என்ன சொல்கிறீர்கள். அதைச் சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** வாணியம்பாடி நகர கூட்டுறவு வங்கியிலே கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய் அளவிற்கு ஓர் இடத்திலே ஊழல் நடந்து, வைப்பீட்டாளர்கள்—பணத்தைப் போட்டவர்கள்—இன்று பணத்தைப் பெற முடியாமல் அல்லாடிக் கொண்டிருக்கின்றார்கள். அப்போதிருந்த S.O. முருகன், முன்னாள் கூட்டுறவு வங்கியினுடைய தலைவர், அதேபோல பாலசுப்பிரமணியன் என்ற ஒரு சீனியர் கிளார்க் இவர்கள் மூன்று பேரும் சேர்ந்து அந்தக் கணக்கை adjustment செய்து—அதாவது வைப்பீட்டாளர் ஒரு தொகையை, இரண்டு இலட்சம்

போடுகிறார் என்று சொன்னால், அவருக்கே தெரியாமல், அவருக்கு இவர்கள் கடன் கொடுத்ததாக ஒரு வாரம் கழித்து இவர்கள் ஒரு ரெக்கார்டை தயாரித்து—பிறகு அந்தப் பணத்தை அப்படியே அவர் கணக்கிலே கொண்டு வந்து, இவர்கள் அவர்களுடைய கையெழுத்தைப் போட்டு, இவர்களே close செய்து விட்டு, உங்களுக்குப் பணமே இல்லை, நீங்கள் அப்போதே எடுத்துக் கொண்டு போய்விட்டீர்கள் என்று சொல்லி, இப்படி கிட்டத்தட்ட நிறைய depositors ஏமாற்றப்பட்டு வாணியம்பாடியில் ஒரு பெரிய கொந்தளிப்பே நடக்கிறது. அற்காக நான் ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்து நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் அந்தத் தீர்மானம் போய் இருக்கிறது. ஆகவே நான் கேட்டுக் கொள்வதெல்லாம், காவல் துறை ஒரு வழக்குப் பதிவு செய்திருக்கிறது. அந்தப் பதிவிலே பாவம் அப்பாவி ஆதிகேசவன் என்ற ஒரு கிளார்க் தவிர வேறு யாரும் இல்லை, அவனை மட்டும் கைது செய்து உள்ளே போட்டிருக்கின்றார்களேயொழிய தப்பு செய்தவர்கள், இன்னமும் வெளியே சுற்றிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல மாண்புமிகு உறுப்பினர் பிச்சாண்டி அவர்கள் சொலகிறபோது, தலைவர்கள் இருந்தபோது, கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாம் நன்றாக இருந்தன என்று சொன்னார்கள். அதெல்லாம் பழைய காலம். சென்ற ஐந்து ஆண்டு காலத்திலே, நம்முடைய வேலூர் சூப்பர் மார்க்கெட், இந்தியாவிலேயே நம்பர் 1 சூப்பர் மார்க்கெட்டாக விளங்கிய கற்பகம் சூப்பர் மார்க்கெட், அதனுடைய தலைவர் கிட்டத்தட்ட 17 கோடி ரூபாய் அளவிற்கு அந்த இடத்திலே முறைகேடுகள் நடந்து கைது செய்யப்படாமலே, அப்படியே விட்டுவிட்டார்கள். அதுகுறித்து திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே நான் பலமுறை சொல்லிப் பார்த்தும்கூட, இன்னும் அதற்கான எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை. அதைப் பார்க்கின்றபோதுதான் எங்களுக்கு வேதனையாக இருக்கின்றது. இது குறித்து, கூட்டுறவுத் துறையிலுள்ள ஒவ்வொரு வங்கியாக கணக்கு எடுங்கள், ஏனென்றால் எல்லா வங்கிகளும் போய் விட்டன. இன்னும் கொஞ்ச நாள் போனால் இனிமேல், கூட்டுறவிலே பணம் போடுவதற்கு யாரும் வரமாட்டார்கள். அந்த அளவிற்கு முறைகேடுகள் நடந்துகொண்டேயிருக்கின்றன. கூட்டுறவுத் தத்துவத்தைச் சொல்லிவிட்டால் போதாது. தேர்தல்கள் எல்லாம் வருகின்றன, போகின்றன. ஆனால் அதனால் பயன்படக்கூடியவர்கள் யார்? அதைச் சிந்திக்க வேண்டும். கூட்டுறவில் நியாயமான தேர்தல்களை



நடத்தவேண்டும். அவர்கள் செய்த தப்பே, மீண்டும் நடந்துவிடக்கூடாது என்பதிலே எங்களுக்கு அச்சம் இருக்கிறது.

கூட்டுறவில் உறுப்பினர்களைச் சேர்க்கிறபோது, நெசவாளர் கூட்டுறவாக இருந்தால், நெசவாளர்களைச் சேருங்கள். தொடக்க வேளாண்மை வங்கியிலே விவசாயிகளாக இருந்தால், விவசாயிகளைச் சேருங்கள். பால் சொசைட்டியிலே, பாலை ஊற்றுகிறவர்களைச் சேர்த்துக்கொள்ளுங்கள். அதை விட்டுவிட்டு பிராந்திக் கடைக்காரனையோ, மற்றவர்களையோ சேர்த்தீர்கள் என்றால், நாளைக்கு அடிப்பதற்கு ஆட்களை அவன் சேர்த்துக்கொண்டு வருவானேயொழிய அவன் பாலை ஊற்றுவதற்கு வரமாட்டான். ஆகவே நான் கேட்டுக்கொள்வதெல்லாம், இந்தக் கூட்டுறவுத் துறையைப் பொறுத்தளவில், நீங்கள் ஒரு முழுமையான ஆய்வை நடத்தி, தவறு செய்பவர்களைத் தண்டிக்க வேண்டும். ஏனென்றால் தண்டனையே கொடுக்கவில்லை என்று சொன்னால் இன்றைக்கு யாருக்குமே பயம் இல்லாமல் நாளைக்கு தலைவர் ஆனால் நாம் மிகப்பெரிய ஆளாக ஆகிவிடலாம், பிறகு ஏதோ சம்பாதித்துவிட்டுப் போய்விடலாம், என்ற இப்படிப்பட்ட ஒரு தவறான நோக்கம் இப்பொழுது சமுதாயத்தில் வந்துவிட்டிருக்கிறது. ஏனென்றால் இவர்கள் சில நேரங்களிலே வேலை நடக்கிறது என்று சொன்னார்கள். அங்கே அதே கற்பகம் சூப்பர் மார்க்கெட் தலைவர்—நாங்கள் வேலூரிலே பஸ் ஸ்டாண்ட் ஆரம்பிப்பதற்கு கடந்த ஆட்சியிலே 3 ஆண்டுகளுக்கு முன்னாலே ஒரு G.O. கொடுத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 4-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமுன்வடிவை ஆதரிக்கிறீர்களா? எதிர்க்கிறீர்களா? அதைச் சொல்லுங்கள். எல்லோரும் பேசவேண்டும் அல்லவா!

**திரு. சி. ஞானசேகரன்:** பஸ் ஸ்டாண்ட் ஆரம்பிப்பதற்கு—கூட்டுறவுத் துறை, ஒரு பழ தொழிற்சாலை மூடி கிட்டத்தட்ட 8 வருடம் ஆகிவிட்டது, வேஸ்ட்டாக இருக்கிறது—மூடிக்கிடக்கிற அந்த இடத்தை நாங்கள் பஸ் ஸ்டாண்ட் கட்ட ஆரம்பிப்பதற்கு கேட்டபோது அன்றைய தலைவராக இருந்தவர்கள் எனக்கு தீர்மானத்தைக் கொடுக்காத காரணத்தினாலே கடந்த ஆட்சியிலே G.O. கொடுத்தும்கூட அந்த இடத்திலே—என்னாலே பஸ் ஸ்டாண்டை ஆரம்பிக்க முடியவில்லை. இன்று வரை அப்படியே தடைப்பட்டு நிற்கின்றது. ஆகவே நான் கேட்டுக்கொள்வதெல்லாம், இந்த அதிகாரிகளும் சில நேரங்களிலே இதற்குத் துணைபோய்விடுவதையும்

[திரு. சி. ஞானசேகரன்] [2002 மே 8

நான் எச்சரித்து நம்முடைய அமைச்சர் அவர்கள் கொஞ்சம் விழிப்போடு இருந்து இதுபோன்ற—இப்பொழுது நீட்டித்து தேர்தலை நியாயமான முறையிலே நடத்துங்கள் அதே நேரத்தில்—அதிகாரிகளையும் கொஞ்சம் கண்காணியுங்கள். தப்பு செய்த அதிகாரிகளை உடனே வீட்டுக்கு அனுப்புங்கள் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

முன்பு கூட்டுறவிலே என்னுடைய தாத்தா 1951-ல் கிருஷ்ணகிரியிலே, கிருஷ்ணமூர்த்தி கவுண்டர், சேலத்திலே District Board Chairman, கூட்டுறவு பேங்க்கினுடைய Chairman-ஆக இருந்தார்கள். பிறகு என்னுடைய மாமனார் முல்லை வடிவேல் அவர்கள், வேலூரில் கூட்டுறவுச் சங்கத்தினுடைய தலைவராக இருந்தார்கள். இப்படியெல்லாம் கூட்டுறவாளர்களாக அப்பொழுது இருந்தவர்கள் நிலை வேறு. ஆனால் இப்பொழுது கூட்டுறவாளர்களை, பெயரைச் சொல்லுவதற்கு ஆளே இருக்கமாட்டேன் என்கிறார்கள். கொங்கணாபுரம் சுப்பிரமணிய கவுண்டரை, கூட்டுறவினுடைய தலைவரை இப்பொழுதும் புகழோடு சொல்லிக்கொண்டிருப்பார்கள் சேலம் மாவட்டத்திலே. இப்பொழுது நாமக்கல் மாவட்டமாக மாறிவிட்டது. ஆகவே கூட்டுறவாளர்களாக அன்று இருந்தவர்கள், அந்த அளவிற்குப் பெயர் எடுத்தார்கள். இப்பொழுது இருக்கக்கூடிய நிலைமையிலே நம்மாலே கூட்டுறவாளரைக் கொஞ்சம்கூட அடையாளம் காட்ட முடியாத நிலைக்கு கூட்டுறவு இயக்கம் தேய்ந்துவிட்டது. ஆகவே கூட்டுறவு இயக்கத்தை மேலும் வளப்படுத்துவதற்கு நீங்கள் நியாயமான முறையிலே தேர்தலை நடத்துங்கள் என்று பணிவோடு கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரவர்களாலே கொண்டுவரப்பட்ட சட்டமுன்வடிவிலே தனி அலுவலர்களுடைய பதவிக்காலத்தை நீட்டிக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தத் தனி அலுவலர்களுக்கான பதவிக் காலம் நீட்டிப்பு என்பது தேவையில்லாத ஒன்று. இப்பொழுது நம்முடைய முதலமைச்சராலே அபராத வட்டியெல்லாம் தள்ளுபடி செய்கின்ற நிலை அறிவிக்கப்பட்டு, இதிலே பல இலட்சக்கணக்கான விவசாயிகள் பலன் அடைந்ததாக நாம் சொல்கிறோம். அதற்கு மாறுபட்ட கருத்து இல்லை என்று சொன்னாலும்கூட, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலே இருக்கக்கூடிய செயலாளர்கள், மற்றுமுள்ள துணைப் பதிவாளர்கள்



2002 மே 8] [திரு. ஜி.கே. மணி]

எல்லாம்—விவசாயிகளே கடன் செலுத்தாமல் இவர்களே செலுத்திவிட்டு—அவர்களிடத்திலேயிருந்து ஒரு தொகையை வட்டியாகப் பெற்றுக்கொண்டு மீண்டும் அவர்களிடம் கடன் பெறுவதாக இவர்களே கையெழுத்தைப்பெற்றுக்கொண்டு எடுத்துகொண்டார்கள் என்ற நிலை பல தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளிலே இன்றும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. என்னாலே ஆதாரத்தோடு சொல்ல முடியும். இப்படி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளினுடைய செயலாளர்கள், துணைப் பதிவாளர்கள், இணைப் பதிவாளர்கள் வரையிலே அதிகாரிகள் செய்யக்கூடிய தில்லுமுல்லு என்பது அளவிற்கு அதிகமானது. இதைப்பற்றி நாங்கள் பலமுறை சொல்லியிருக்கின்றோம். தொடக்க வேளாண்மை வங்கியினுடைய கூட்டுறவுச் செயலாளர்கள் நீண்டகாலமாக 20 ஆண்டுகள், 15 ஆண்டுகள் என ஒரே இடத்திலே தங்கி ராஜாக்களைப்போல செயலாற்றி வருகிறார்கள். ஆகவே இப்படிப்பட்டவர்களுக்கு தொடக்கநிலை, மைய மற்றும் உச்சநிலை என்று சொல்லக்கூடிய கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் இல்லாமலே செய்வோம் என்று சொன்னால் இந்த அதிகாரிகள் அவர்கள் விரும்பம்போல செய்வார்கள். கடந்த காலங்களிலே இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளை எடுத்துச்சொல்லியும், இதுவரையிலே எந்த அதிகாரி மீதும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆகவே இந்தச் சந்தர்ப்பத்திலே நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்வது, எந்த நிலையிலே இருக்கக்கூடிய அதிகாரிகள் தவறு செய்திருந்தாலும்கூட, அவர்கள் கடுமையாக தண்டிக்கப்பட வேண்டுமென்ற வேண்டுகோளை நான் இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சட்டமன்றத் தேர்தல் முடிந்து பொறுப்பேற்ற உடனே முதலிலே கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் கூட்டுறவுத் தேர்தலை நடத்துவோம் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்டு ஓர் ஆண்டுக்காலம் ஆகியும்கூட, இதுவரையிலே கூட்டுறவுச் சங்கத் தேர்தல் நடத்தப்படாமல் இருக்கிறது. ஆகவே பதவிக்காலத்தை நீட்டிக்காமல் விரைவாக கூட்டுறவுச் சங்கத் தேர்தலை நடத்த வேண்டும். நமது நிதி அமைச்சர் சொன்னது மாதிரி, இந்தத் தேர்தலை நியாயமாக நடத்துங்கள். யார் தவறு செய்தார்கள் என்ற நிலையை எல்லாம் நீங்கள் பார்க்காமல், பாரபட்சம் இல்லாமல், நடுநிலையோடு--யார் வெற்றிபெற்றாலும் பரவாயில்லை, மக்களுக்கு நேரடியாக பயன்படக்கூடிய ஓர் அமைப்பு கூட்டுறவு என்ற காரணத்தினாலே--இந்தத் தேர்தலை முறைகேடு

[திரு. ஜி.கே. மணி] [2002 மே 8

இல்லாமல், சரியாக நடத்துவதற்கு இந்த அரசு வழிவகை செய்யவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-50

அதைப்போலவே கூட்டுறவுச் சங்கத்தின் இந்தச் சட்டத்தில் நிறைய தளறுபடிகள் இருக்கின்றன. இன்னும் வரையறுத்துச் சொல்லப் படவில்லை. ஆகவே முதலில் இந்தச் சட்டங்கள் வரையறுக்கப்பட வேண்டும. உறுப்பினர்களை நிறைய சேர்த்து தேர்தலை நடத்தப்போகிறீர்களா, அல்லது இருக்கிற உறுப்பினர்களை வைத்து நடத்தப்போகிறீர்களா என்பதைப் பற்றி நீங்கள் சொல்லவில்லை. எப்போது நடத்தினாலும் விரைவாகத் தேர்தலை நடத்தவேண்டும்; முறையாக நடத்தவேண்டும். இதற்கு சட்டதிட்டங்களை வரையறுக்கவேண்டும். அதேநோத்தில் உள்ளாட்சித் தேர்தலுக்கு ஒரு தேர்தல் ஆணையம் இருப்பதைப்போல இந்த கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களுக்கும் ஒரு தேர்தல் ஆணையம் வேண்டும். இதை பாட்டாளி மக்கள் கட்சி சார்பிலே வலியுறுத்தி, இந்த அளவோடு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. மகேந்திரன்.

***திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் முன்மொழிந்திருக்கக்கூடிய கூட்டுறவுச் சங்கங்களுக்கான தனி அலுவலர் பதவிக்காலம் ஓராண்டு நீட்டிப்பு என்பதை மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியதைப்போல கடந்த ஆண்டு தேர்தல் நடந்து முடிந்தவுடன் கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல் நடைபெறும் என்று இந்த மாமன்றத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டிருந்தது. அந்த அடிப்படையில் கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களை நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கூட்டுறவுச் சங்கங்களிலே நடைபெற்றிருக்கக்கூடிய முறைகேடுகள் சம்பந்தமாக சில விவரங்களைச் சுட்டிக்காட்டினார்கள். எங்களைப் பொறுத்தவரையில் தனி அலுவலர்கள் பதவிக்காலமாக இருந்தாலும் சரி, தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களின் பதவிக் காலமானாலும் சரி, கூட்டுறவுச் சித்தாந்தம் வெற்றியடைய வேண்டுமென்று நினைப்பவர்கள் தனி அலுவலர்களாகவோ தலைவர்களாகவோ இருந்தால் மட்டுமே இத்தகைய முறைகேடுகள் நடைபெறாது. கடந்த காலத்தில் கூட்டுறவுச் சங்கத் தேர்தல்கள் நடைபெற்ற



2002 மே 8] [திரு. கே. மகேந்திரன்]

காலத்தில் எல்லாம் முறைகேடான வழிகளில் உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு தேர்தல்கள் நடத்தப்பட்டு, அனேகமாக அது ஆளுங்கட்சியுடைய ஓர் அமைப்பு போலவே செயல்பட்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக் காட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

கூட்டுறவுச் சங்கத் தேர்தலை நடத்துவதற்குத் தனியாக ஒரு தேர்தல் ஆணையம் அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இங்கே பல முறைகேடுகளைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அதில் ஒரு விளக்கத்தை மட்டும் நான் சுட்டிக்காட்டுகிறேன். சென்னையில் எங்கள் தலைமையில் இருக்கக்கூடிய ஜார்ஜ் டவுன் நகரக் கூட்டுறவு வங்கி 31-3-1998 வரை 1 கோடி ரூபாய் நஷ்டத்தில் இயங்கிவந்தது. கடந்த காலத்திலே தேர்தல் நடைபெற்றதற்குப் பின்பு, தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகத்தால் சிறப்பான முறையிலே அது செயல்பட்ட காரணத்தால் 31-3-2001-லே அந்த ஒரு கோடி ரூபாய் நஷ்டத்தை சரிக்கட்டி, 41.41 இலட்சம் ரூபாயை லாபமாக அந்த நகரக் கூட்டுறவு வங்கி ஈட்டியிருக்கிறது. 31-3-2002 கணக்குப்படி ஒரு கோடி ரூபாய் லாபம் ஈட்டும் என்று எதிர்பார்க்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் 33 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் முறைகேடு நடந்திருப்பதாக ஒரு விவரத்தைச் சொன்னார்கள். 1-7-1996 முதல் 31-3-1998 வரை அந்த வங்கியிலே பணியாற்றிய ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கப்படாமல் இருந்தது. நஷ்டத்திலே இயங்கக்கூடிய கூட்டுறவு வங்கியினுடைய ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கக்கூடாது என்று ஆணை இருந்தகாலத்தில், அந்த வங்கி 1998 ஆம் ஆண்டிற்குப் பிறகு லாபம் ஈட்டியதற்குப் பின்பு, மூன்றாண்டுக் காலம் அந்த ஊழியர்களுக்கு வழங்கவேண்டிய ஊதிய உயர்வை வழங்கியதால்தான் 33 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் செலவானது. ஆகவே ஊதிய உயர்வுதான் வழங்கப்பட்டிருக்கிறதே தவிர வேறு எந்த முறைகேடும் நடைபெறவில்லை என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கக்கூடிய 126 அர்பன் வங்கிகளில் 47 அர்பன் வங்கிகள் நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. தமிழகத்தில் இருக்கக்கூடிய அர்பன் வங்கிகளில் மிகவும் சரியான சிறப்பான முறையில் செயல்படக்கூடிய வங்கியாக சேலத்தில் இருக்கக்கூடிய சேலம் நகரக் கூட்டுறவு வங்கி இருக்கிறது. அடுத்து இரண்டாவது இடத்திலே, சென்னை மாநகரத்தில் இருக்கக்கூடிய ஜார்ஜ் டவுன் கூட்டுறவு வங்கி செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதற்கான

விருது தமிழக அரசால் கடந்த ஆண்டிலே வழங்கப்பட்டிருக்கிறது. அதற்கு முந்தைய ஆண்டும் வழங்கப்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டுவதோடு, இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கான தனி அலுவலர் பதவிக் காலத்தை ஓராண்டு நீடிப்பது என்ற இந்தச் சட்டமுன்வடிவை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக எதிர்த்து அமைகிறேன்.

பிற்பகல் 4-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எஸ். மகேஸ்வரி.

***திருமதி எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய தேசிய காங்கிரசின் சார்பாக, இந்தச் சட்டமுன்வடிவை, அறிமுக நிலையிலேயே நாங்கள் ஆட்சேபித்தோம். ஏனென்றால், மக்களின் ஜனநாயக உரிமையைப் பறிப்பதாக இச்சட்டமுன்வடிவு இருக்கிறது. தனி அலுவலர்களின் நியமனக் காலம், 24-5-2002 உடன் முடிவடைகிறது என்று சொன்னால், நாம் முன்கூட்டியே தேர்தலை நடத்தத் திட்டமிட்டிருக்க வேண்டும். அதை விட்டுவிட்டு, தனி அலுவலர்களின் நியமனக் காலத்தை மேலும் ஓராண்டு அதாவது, இரண்டு ஆண்டுக் காலம் வரை நீட்டிக்கப்படலாம் என்று சட்டத்தையே திருத்தம் செய்வது என்பது, காலணிகளுக்கு ஏற்றவாறு கால்களை நறுக்கிக் கொள்வதற்கு ஒப்பாக இருப்பதாகத்தான் அனைவரும் கருதுகின்றார்கள். ஆகவே பொதுவாகவே, இந்தச் சட்டமுன்வடிவு என்பது, தேர்தலைத் தவிர்ப்பதற்காகக் கொண்டு வரப்பட்ட ஒரு சட்டமுன்வடிவாக இருப்பதாக எல்லோருமே அச்சப்படுகிறார்கள். இதுபோன்ற அச்சங்களுக்கு இடம் கொடுக்கக் கூடாது என்று சொன்னால், நாம் உடனடியாக, ஜனநாயகரீதியான தேர்தலைக் கூட்டுறவு அமைப்புகளிலே கொண்டுவர வேண்டும்.

அதேநேரத்திலே கடந்த ஆட்சியாளர்களால் விதைக்கப்பட்டிருக்கின்ற களைகளை எல்லாம் நாம் களைந்துவிட்டு, ஜனநாயக ரீதியான ஒரு தேர்தலை நாம் விரைவாக அறிவிக்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டு, இதற்குத் தகுந்தாற்போன்று, இந்தத் தனி அலுவலர்கள் கால நியமனத்தை வேண்டுமானாலும் அதிகபட்சமாக 6 மாத காலத்திற்கு நீட்டித்துக் கொள்ளலாம். ஏனென்றால் ஒரு வருடமாக ஏற்கெனவே இருப்பதை, 2 வருட காலம் என்று நீட்டிப்பது இன்னொரு அபாயத்திற்கும் வித்திடுவதாக அமைகிறது. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இன்று காலையிலேகூட





சொன்னார்கள். கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே, இந்தக் கூட்டுறவு அமைப்புகள் என்பது எப்படி ஒரு கூட்டுக் கொள்ளை அமைப்பாக இருந்தது என்பதை மிகமிகத் தெளிவாக இங்கே சொன்னார்கள். ஆகவே நாம் தவறி இதுபோன்ற கொள்ளையர்களைக் கொண்டு வந்து அங்கே அமர்த்தி விடுவோமேயானால், அவர்கள் கொள்ளை அடிப்பதற்கு வசதியாக கால அளவை நீட்டித்துக் கொடுப்பதற்கு ஒப்பாக இந்தச் செயல் அமைந்துவிடக்கூடாது என்ற அச்சத்திலே இதனை நாங்கள் சொல்கிறோம். ஆகவே இதனைத் தவிர்த்துவிட்டு, நீங்கள் உடனடியாக ஜனநாயகரீதியான தேர்தலைக் கொண்டு வரவேண்டுமென்று இந்திய தேசிய காங்கிரசின் சார்பாகக் கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கம், மற்ற சங்கங்களுக்கான அலுவலர்களை நியமனம் செய்கின்ற இந்தச் சட்டம் என்பது, ஒரு பொருத்தமற்ற செயலாகும். காரணம் உடனடியாக அந்தக் கூட்டுறவுச் சங்கத்தினுடைய தேர்தலை நடத்த வேண்டும் என்பதுதான். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோதுகூட, பல்வேறு குற்றச்சாட்டுகளை வரிசைப்படுத்திச் சொன்னார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் மட்டுமே அதைச் செய்து விட்டார்கள், ஜனநாயகபூர்வமாக என்று சொல்ல முடியாது. எனக்குத் தெரிந்த அளவிலே, என்னுடைய தொகுதிக்கு உட்பட்டிருக்கிற தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்திலே எடையூர் சங்கம் என்ற ஒரு சங்கம் எடையூரிலே இருக்கிறது. அதனுடைய செயலாளராக இருந்தவர், தற்கொலை செய்து கொண்டு செத்தார், பல இலட்சம் ரூபாயை மோசடி செய்துவிட்டு. அதேமாதிரி, சிங்கலாந்தி கூட்டுறவுச் சங்கம் இருக்கிறது. பல இலட்ச ரூபாயை மோசடி செய்து அவரும் தற்கொலை செய்துகொண்டு செத்தார். இப்படி பல பேர் அந்த நிர்வாகத்தில் பணியாற்றக்கூடியவர்களே மோசடி செய்து, அவர்கள் தற்கொலை செய்து கொண்டார்கள். ஏதோ விவசாயிகள் தாங்கள் பெற்றுக்கொண்ட கடனினாலே மட்டும் இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் நலிவுற்றன என்ற 'image' இன்றைக்கு நாட்டிலே மேலோங்கி இருக்கிறது, வாங்கிய கடனைத் திரும்பக் கட்டவில்லை என்று. ஆனால் அதிகாரிகளே, நிர்வாகத்தை நடத்தக் கூடியவர்களே, பல முறைகேடுகளை செய்ததன் விளைவாக, அந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் நலிவுற்றுப் போயிருக்கின்றன.

[திரு. ஜி. பழனிசாமி] [2002 மே 8

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் எல்லோரும், தேர்ந்தெடுக்கப்பட்ட அத்தனை பேருமே தவறு செய்து விடுவார்கள் என்று சொல்ல முடியாது. நான் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நாளைக்கு கூட்டுறவுச் சங்கத் தேர்தலை நீங்கள் அறிவித்தால், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்திருக்கிறவர்கள் எல்லாம் நாளைக்கு பெரும்பான்மை இடங்களில் வருவதற்கான வாய்ப்பு இருக்கிறது. நான் ஒப்புக்கொள்கிறேன். அப்படி என்றால், அவர்கள் எல்லாம் தவறு செய்து விடுவார்களா? அந்த நம்பிக்கையினாலே, தவறு செய்வார்கள் என்பதற்காக வேண்டியே கூட்டுறவுச் சங்கத் தேர்தலை ஒத்திவைக்கிறோமா? அப்படி அல்ல. கூட்டுறவுச் சங்கத் தேர்தலில் எந்த வகையில் தவறு நடந்திருந்தாலும், தவறைத் தடுப்பதற்கு சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு உரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

இன்னொன்றையும் நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். பல கூட்டுறவுச் சங்கங்களில், விவசாயிகள் தங்களுடைய நகைகளை வைத்து, பயிர்க் கடன் வாங்கிய அந்த நகைகளைத் திருப்பி வாங்குகிறபோது, அது பித்தளை நகையாக மாறிப் போய்விட்டது. அவ்வளவு மோசமான நிலையிலே அந்தக் கூட்டுறவுச் சங்க அமைப்புகள் இருந்தன. இவை எல்லாவற்றையும் நான் மலிவான அரசியலுக்காகப் பேசவில்லை. நடைமுறையிலே இருப்பதை நான் சொல்கிறேன். அந்தவகையிலே கூட்டுறவுச் சங்கங்களின் தனி அலுவலர்கள் நியமனக்காலத்தை நீட்டிப்பது என்று சொன்னால், மிகப் பெரிய, தவறு நடக்கின்ற கூடாரமாக மாறக்கூடிய அபாயம் இருக்கிறது.

கூட்டுறவுச் சங்கத் தேர்தல், கடந்த காலத்திலே நடந்த பின்னால், தவறு செய்த அதிகாரிகள், நீக்கப்பட்டவர்கள்—அந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் கலைக்கப்பட்ட பின்னால்—அவர்களுக்கெல்லாம் பதவி வழங்கப்பட்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி, சிங்கலாந்தி கூட்டுறவுச் சங்கத்தில் தவறு செய்த, நீக்கப்பட்ட அதிகாரிகள், திரும்ப அந்த அமைப்புகள் கலைக்கப்பட்ட பின்னர், அவர்களுக்குப் பதவி வழங்கப்பட்டிருக்கிறது. அமைச்சரிடம் நான் எழுதிக் கொடுத்திருக்கிறேன். நடவடிக்கை எடுக்கச் சொல்லி. அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்த பின்னால், எல்லோரும் என்னிடத்திலே வந்து சமரசம் பேசுகிறார்கள். 'அதையெல்லாம் நீங்கள் அமைச்சரிடத்திலே பேசுங்கள்' என்றேன். அமைச்சர் நல்ல நடவடிக்கை எடுத்திருக்கிறார்; நான் இல்லை என்று மறுக்கவில்லை. இதுபோன்று



2002 மே 8] [திரு. ஜி. பழனிசாமி]

பல்வேறு கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. ஆகவே அதற்காக வேண்டியே, அதனாலேயே இந்தக் கூட்டுறவுச் சங்கத் தேர்தலை ஒத்திவைப்பது என்பது சரியல்ல. எப்போதுமே 6 மாதம்தான் நீட்டிப்பு செய்வார்கள். நீங்கள் எடுத்தவுடனேயே ஒரு வருடம் என்று கொண்டு வந்திருக்கிறீர்கள். இந்தச் சட்டமுன்வடிவை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக எதிர்த்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன்.

*பிற்பகல் 5-00*

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற தனி அலுவலர்களுடைய பதவி நீட்டிப்புக்கான மசோதாவை ஆரம்பத்திலேயே நான் எதிர்க்க விரும்புகிறேன். ஜனநாயக நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற அமைப்புகளிலே தவறுகள் நடைபெறுகின்றன என்று சொன்னால் அதைத் தீர்ப்பதற்கு வழி, தேர்தல் நடத்தாமல் இருப்பதல்ல. சென்ற ஆளுநர் உரையிலேகூட நம்முடைய அரசினுடைய கொள்கை அறிவிப்பிலே சொல்லியிருக்கிறார்கள். உள்ளாட்சித் தேர்தலை இந்த அரசு வெற்றிகரமாக நடத்தி முடித்து இருக்கிறது; அதற்குப் பின்னாலே கூட்டுறவுத் தேர்தலை வெற்றிகரமாக நடத்த இருக்கிறது என்று கோடிட்டுக் காண்பித்து இருக்கிறார்கள். அப்படியெல்லாம் சொல்லிவிட்டு, ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னாலே தனி அலுவலர்களுடைய பதவி நீட்டிப்பை, கால நீட்டிப்பைச் செய்வது என்பது ஜனநாயக முறையல்ல என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதைப்போல தேர்தல் நடத்துகிறபோதும்கூட சரியான வழிமுறையிலே அதை நடத்த வேண்டுமென நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இரண்டு முறை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கூட்டுறவுச் சங்கத் தேர்தல் நடைபெற்று தலைவர்கள் எல்லாம் வந்தார்கள். வந்து இரண்டு முறையும் என்ன செய்தார்கள் என்று சொன்னால், settlement என்று சொல்லி ஊழியர்களுக்கு எல்லாம் அந்தத் தலைவர்கள் இஷ்டப்படி சம்பள உயர்வு, மற்றவற்றை எல்லாம் கொடுத்து, இலாபத்திலே இயங்கிக் கொண்டிருந்த கூட்டுறவுச் சங்கங்களைக்கூட நஷ்டத்திலே இயங்குவதற்கான வழிவகையைச் செய்தார்கள் என்பதை நீங்கள்

உன்னிப்பாக எண்ணிப் பார்க்க வேண்டுமென நான் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இரண்டு முறை தேர்தல் நடந்தது. 1989-லிருந்து 1991 வரைக்கும் ஒரு முறை தேர்தல் நடந்தது. அதற்குப் பின்னாலே 1996-லிருந்து 2001 வரைக்கும் ஒரு தேர்தல் நடந்தது. இரண்டு தேர்தல் நடந்ததற்குப் பின்னாலேயும் இஷ்டப்படி அந்தத் தலைவர்கள்—அதிகமாக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களே தலைவர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்—ஒரு தவறான காரியத்தைச் செய்ததால்தான் கூட்டுறவுச் சங்கங்கள் 75 சதவிகிதம் நலிந்து இன்றைக்கு மிக மோசமான நிலையிலே இருக்கின்றன. ஆகவே அதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென நான் பணிவன்போடு கேட்டுக்கொள்வேன்.

அதேபோல திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, ஒரு தவறான உத்தரவைப் பிறப்பித்தார்கள். கூட்டுறவுச் சங்கத் தேர்தலிலே நிற்பவர்கள் அல்லது வாக்கு அளிக்கக்கூடியவர்கள் முதல் நாள்-1 ஆம் தேதி தேர்தல் என்று சொன்னால், 30 ஆம் தேதி மாலை 4 மணி வரைக்கும் உறுப்பினர்களாகச் சேரலாம் என்று ஓர் உத்தரவைப் போட்டார்கள். காங்கிரஸ் பேரியக்கம் இந்த நாட்டை ஆண்டு கொண்டிருந்தபோது கூட்டுறவுச் சங்கத் தேர்தலுக்கு 30 நாட்களுக்கு முன்னாலே உறுப்பினர்களாக இருக்க வேண்டும்; over due இல்லாமல் இருக்க வேண்டும் என்றெல்லாம் ஒரு சரியான உத்தரவை காங்கிரஸ் பேரியக்கம் போட்டு தேர்தலை நடத்தியது. ஆனால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் முதல் நாள் மாலை 4 மணி வரைக்கும் உறுப்பினர்களாக ஆனவர்கள் எல்லாம் வாக்களிக்கலாம் என்று சொல்லி, அந்தக் கட்சியினரே தலைவராக வருவதற்கான வாய்ப்பினை உருவாக்கினார்கள். அந்தச் சட்டத்தை மறுபரிசீலனை செய்து அந்தச் சட்டத்தை நீக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல தமிழகத்திலே நிறைய தேர்தல்கள் நடந்தன. அந்த நேரத்திலே பத்திரிகைகளிலேகூட வந்தது. மாநில வீட்டுவசதி கூட்டுறவுச் சங்கத்திற்கு சென்னையிலே ஒரு தேர்தல் நடந்தது. அதற்கு யாருக்கும் வேட்பு மனு படிவமே கொடுக்கப்படவில்லை. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், அவர்கள் யாரைச் சொன்னார்களோ, அவர்கள்தான் வேட்புமனு படிவத்தைப் பெற முடிந்தது. அவர்கள்தான் தேர்தலிலே நின்றார்கள்; வெற்றி பெற்றார்கள். ஆகவே நான் மாண்புமிகு கூட்டுறவுத்





துறை அமைச்சரைக் கேட்டுக்கொள்வேன்; தேர்தல் நடத்துவதற்கு முன்னாலே இவற்றையெல்லாம் ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்து—கூட்டுறவுத் துறை மிக உன்னதமான துறை; ஏழை விவசாயிகளை வாழ வைக்கிற ஒரு நல்ல துறை—அந்தத் துறையினுடைய சட்ட திட்டங்களை எல்லாம் அதிகாரிகளோடு நல்ல முறையிலே கலந்து பேசி அந்தச் சட்டங்களை எல்லாம் மாற்ற வேண்டுமென இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 5-05*

நான் ஏற்கெனவே சொன்னதைப்போல தவறுகள் நடக்கின்றன என்பதற்காகவே தேர்தலைத் தள்ளி வைப்பது என்பது தவறு. இந்தியாவில் இருக்கிற அனைத்து மாநிலங்களிலேயுள்ள, சட்டமன்றங்களிலேயும் குற்றச்சாட்டுகளைச் சொல்கிறார்கள். பொது மேடைகளிலே குற்றச்சாட்டுகளைச் சொல்கிறார்கள். அதற்காக சட்டமன்றத் தேர்தலையும், நாடாளுமன்றத் தேர்தலையும் யாரும் நடத்தாமல் இருப்பது இல்லை. ஆகவே, குற்றச்சாட்டு வருகிறது என்றால் நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர, தேர்தலைத் தள்ளி வைப்பது என்பது, தனி அலுவலருடைய பதவிக் காலத்தினை நீட்டிப்பது என்பது தவறு என்று சொல்லி, இந்த மசோதாவிற்கு என்னுடைய எதிர்ப்பைத் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர். பாதுகாப்புத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு கூட்டுறவுத் துறையிலே இருக்கிற தனி அதிகாரிகள் பதவிக் காலத்தை மேலும் ஓராண்டு காலத்திற்கு நீட்டிப்பதற்காக நான் கொண்டு வந்திருக்கிற இந்தச் சட்டமுன்வடிவின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார்கள். அதிலே முதலிலே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் பிச்சாண்டி அவர்கள் கூட்டுறவுச் சித்தாந்தத்தை பற்றியெல்லாம் சொன்னார்கள். ஆனால் அதற்குப் பின்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இந்தக் கூட்டுறவுத் துறை எந்த அளவுக்கு சீரழிக்கப்பட்டிருக்கிறது என்ற விவரத்தையெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆக அனைத்திந்திய அண்ணா திராவிட

முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரை, புரட்சித் தலைவர் மூன்று முறை ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னாலே, எங்களுடைய இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1991-1996-லேயும் அதற்குப் பின்னாலே இப்போது இரண்டாவது முறையாக ஆட்சிப் பொறுப்புக்கு வந்திருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் பிச்சாண்டி தவிர மற்ற உறுப்பினர்கள் சொல்லியிருக்கிற இந்தக் குற்றச்சாட்டுகள் அத்தனையும் நடந்தபோது நாங்கள், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் யாருமே கூட்டுறவுத் துறையிலே இந்தக் காலகட்டங்களிலே தலைவர்களாகவும், நிர்வாகக் குழு உறுப்பினர்களாகவும் இருந்தது இல்லை. ஆனால் அத்தனை குற்றச்சாட்டுகளுக்கும் முழுப் பொறுப்பு திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் கூட்டுறவுத் துறையினுடைய நிர்வாகத்திலே பொறுப்பேற்று இந்தத் துறையைச் சீரழித்து அதை அழித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. கு. பிச்சாண்டி:** தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசி முடித்து விடட்டும்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** ஆகவே அத்தனை குற்றச்சாட்டுகளும், அந்தச் சித்தாந்தம் அவர்களுக்கே விளங்குகிற சித்தாந்தமாக இருக்கிற காரணத்தாலே அத்தனை சித்தாந்தங்களுக்கும் உரியவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நான், பிச்சாண்டி அவர்கள் பேசுகிறபோது வியப்பாகத்தான் பார்த்துக் கொண்டிருந்தேன். ஏனென்று சொன்னால், கசாப்புக் கடைக்காரன் ஜீவகாருண்யத்தைப் பற்றிப் பேசுவதுபோல, இந்தக் கூட்டுறவுத் துறையை சீரழித்தவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் துறையையே அழித்து நாசம் செய்தவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் துறையினுடைய சித்தாந்தத்தைப் பற்றிப் பேசுவதற்கு எந்தத் தகுதியும் இல்லை என்பதை அதற்குப் பின்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் தெள்ளத் தெளிவாக ஒவ்வொருவரும் சொன்னார்கள். ஞானசேகரன் அவர்கள் சொன்ன வாணியம்பாடி...(குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசி முடித்து விடட்டும். (குறுக்கீடு) அமைச்சர் பேசி முடித்து விடட்டும்.





**மாண்புமிகு திரு. ப. தனபால்:** நான் பேசி முடித்து விடுகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் முடித்தவுடன் கூப்பிடுகிறேன். (குறுக்கீடு) அமைச்சர் பேசி முடித்தவுடன் உங்களைக் கூப்பிடுகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** உண்மையைச் சொன்னால் சில நேரங்களில் இப்படியெல்லாம் குறுக்கீடு வருவது இயல்பு. (குறுக்கீடு) உண்மையைத்தான் நான் சொல்கிறேன். நடந்த உண்மைகளைத்தான் நான் சொல்கிறேன். நடக்காத ஒன்றைச் சொல்லவில்லை. நாங்கள் ஒன்றும் தலைவர்களாக இருக்கவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த நீங்கள்தான் இருந்தீர்கள். ஆகவே அதற்கு முழுப் பொறுப்பை நீங்கள்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆகவே அந்தக் குறைகளைப் போக்குவதற்காகத்தான் முழு முயற்சியோடு நாங்கள் செயலாற்றிக் கொண்டிருக்கிறோம். (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, உடனே சொல்லாவிட்டால் சூடு போய்விடும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சூடு போக வேண்டும் என்பதற்காகத்தான் உங்களை உட்காரச் சொல்கிறேன். உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ப தனபால்:** மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் சொன்னார்கள். வாணியம்பாடி கூட்டுறவுச் சங்கத்திலே இவ்வளவு ஊழல் நடந்திருக்கிறது; இந்த அரசாங்கம் ஏன் இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை என்று கேட்டார்கள். வேலூரிலே கற்பகம் சூப்பர் மார்க்கெட்டிலே இவ்வளவு குற்றங்கள் நடந்து இருக்கின்றன, ஏன் நடந்தது? ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று கேட்டார். அந்த இரண்டிலேயும் Board-லே இருந்த நிர்வாகிகள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள்தான் என்பதையும் அவர்கள்மீது இந்த அரசாங்கம் வந்ததற்குப் பிறகு முழுமையாக நடவடிக்கை எடுத்து அவர்கள் மீது வழக்குத் தொடுத்து இரண்டு, மூன்று பேரைக் கைது செய்திருக்கிறோம். கற்பகம் சூப்பர் மார்க்கெட்டைப் பொறுத்தவரை நாங்கள் முழுமையான விசாரணைக்கு உத்தரவிட்டு F.I.R. file செய்து அதற்குத் தேவையான சட்டபூர்வமான நடவடிக்கையை எடுப்பதற்கு முழு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்களுக்குத் தெளிவாக ஒன்றைச் சொல்கிறேன். இது புரட்சித் தலைவியினுடைய ஆட்சி ஒரு தவறு செய்தால் நிச்சயமாக

அந்தத் தவறு செய்பவர்கள்மீது கட்டாயமாக நடவடிக்கை எடுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அது திராவிட முன்னேற்றக் கழகத்திலே எவ்வளவு பெரிய உயர்ந்த பதவியிலே, எவ்வளவு பெரிய ஆளாக இருந்தாலும் சரி. அவர்களை, தவறு செய்தவர்களை, அந்த திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரர்களை சட்டத்தின் முன்னாலே கொண்டுபோய் நிறுத்துவதிலே இந்தத் துறை முனைப்போடு இருந்து செயல்படும். ஆகவே வாணியம்பாடியிலும், கற்பகம் சூப்பர் மார்க்கெட் குறித்தும் உரிய நடவடிக்கை விரைவில் எடுக்கப்படும் என்பதனை நான் உங்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 5-10

அதுமட்டுமல்லாமல் இங்கே ஜி.கே. மணி அவர்கள் பேசுகிறபோது செயலாளர் செய்த தவறுகளை எல்லாம் சொன்னார்கள். அந்தச் செயலாளர்களை எல்லாம் ஒரு common category-யில் கொண்டு வருவதற்குத்தான் இந்த அரசு முனைப்போடு செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது. நீதிமன்றத்திலே வழக்குகள் இருக்கின்ற காரணத்தினால் அதை சீக்கிரமாக முடித்து அதையும் செய்வதற்கு நடவடிக்கை எடுப்போம். அதேபோல ஊழல் செய்த நிர்வாகக் குழுத் தலைவர்கள் மீது நாங்கள் நடவடிக்கை எடுக்கிற அதேநேரத்திலே ஊழல் செய்த அதிகாரிகள் மீதும் தக்க நடவடிக்கையை உரிய நேரத்திலே எடுப்போம் என்பதனை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள்; deposit-ஐ பற்றி பிச்சாண்டி அவர்கள் சொன்னார்கள். ஆனால் அந்த deposit-ல் இன்றைக்கு இரண்டொரு இடத்திலே ஏற்பட்ட குழப்பத்திற்கும்--போலீஸ் விசாரணை செய்கிறபோது-- deposit-கேகூட இவ்வளவு குழப்பம் உருவாவதற்கும் அந்த பழைய தலைவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரர்கள்தான் பின்னாலே இருக்கிறார்கள் என்பதுதான் விசாரணையில் தெரிய வருகிற உண்மையாக இருக்கிறது. ஆகவே deposit-ஐ பற்றி-முன்பு கோவையில் நடந்தது பற்றிச் சொன்னீர்கள்; கவலைப்படாதீர்கள்-அதிலே யார் தவறு செய்தார்களோ அவர்கள் மீது இந்த அரசு உரிய நடவடிக்கையை எடுக்கும் என்பதனை நான் இந்த நேரத்தில் உங்களுக்கு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.





அதேபோல பல நண்பர்கள் எல்லாம் சொன்னார்கள். பல தவறுகள் செய்து இருக்கிற இந்தக் கூட்டுறவுத் துறையை சரிப்படுத்தி தேர்தல் நடத்தவேண்டும்; ஜனநாயக முறையில் தேர்தல் நடத்த வேண்டும் என்று சொன்னீர்கள். இந்த அரசுக்கு நிச்சயமாக மிக மிக அக்கறை உண்டு. ஜனநாயக முறைப்படிதான் தேர்தல் நடத்த வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகக்காரர்கள் நடத்தியதைப் போல, தி.மு.க. நண்பர்கள் நடத்தியதைப் போல, நாங்கள் அராஜகமாகவோ, அநியாயமாகவோ, உண்மையான உறுப்பினர்களாக இல்லாதவர்களை வைத்தோ, தேர்தலை நடத்துவதிலே இந்த அரசாங்கத்திற்கு நிச்சயமாக விருப்பம் இல்லை. தேர்தலுக்கு வருகிறவர்களை வெளியே நிறுத்திவிட்டு, கதவைச் சாத்திவிட்டு, தேர்தலை நடத்துவதற்கு இந்த அரசாங்கத்திற்கு உண்மையிலேயே அக்கறை கிடையாது. உண்மையான உறுப்பினர்களை வைத்து ஜனநாயக முறைப்படி, நியாயமான முறைப்படி, அவர்களுக்கு உரிய மரியாதையைக் கொடுத்து, தேர்தலை நடத்தவேண்டும் என்பதுதான் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆர்வம். (மேசையைத் தட்டும் ஒலி). அதை நிறைவேற்றுவதற்கு இத்துறை மிகுந்த அக்கறையோடும், முனைப்போடும் இருக்கிறது என்பதனை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் பழனிச்சாமி அவர்கள் பேசும்போது நகைக் கடனைப் பற்றிச் சொன்னார்கள். நகைக் கடன் எல்லாம் நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடனேயே 100% சர்வே செய்து--சரியான நகைகளாகத்தான், ஏனென்றால் எங்களுக்குக்கூட சந்தேகம் வந்தது. தி.மு.க. உறுப்பினர்கள் எல்லாம் விட்டுவிட்டுப் போய் இருக்கிறார்களே, எப்படி நகை இருக்கிறதோ என்று--100% Verification செய்து அதைப் பார்த்ததிலே, தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுத்து இருக்கிறோம். மீண்டும் 100% Verification போட்டு இருக்கிறோம். நகைக் கடனைப் பொறுத்தவரை எந்தவிதமான பாதிப்பும் இல்லாமல் இந்த அரசு நகையைக் கொண்டு வந்து அடமானம் வைத்தவர்களுக்கு நிச்சயமாக சரியான முறையிலே திருப்பித் தரும். அதற்கு யாரும் கவலைப்படத் தேவையில்லை என்பதனை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால் இந்த அரசு, புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு. மக்கள் மீது நம்பிக்கை வைத்து அவர்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற அக்கறையோடு இருக்கிறது.

அதுமட்டுமல்ல, deposit ஏதோ தி.மு.க. காலத்தில் வந்து குவிந்துவிட்டது என்று சொன்னார்கள். அது உங்கள் மீது வைத்த நம்பிக்கையினால்

அல்ல. இந்தக் கூட்டுறவுத் துறையின் மீது மக்கள் வைத்து இருக்கிற நம்பிக்கையின் காரணமாகத்தான், deposit-ஐக் கொண்டு வந்து போட்டார்கள். அதைவிட இப்போது, முன்பு போட்ட deposit-ஐ விட அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னாலே இன்னும் அதிகமாகவே deposit கூடுதலாக வந்து இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி). 8 இலட்சம் ரூபாய் வந்து இருக்கிறது. அதுவும் புரட்சித் தலைவி மீது வைத்து இருக்கிற நம்பிக்கையின் காரணமாக, மக்கள் அணி அணியாக வந்து தங்களுடைய deposit-களை கூட்டுறவு வங்கியிலே முதலீடு செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதனையும் உங்களுக்கு நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல. இந்தத் தேர்தலை நியாயமாக நடத்தவேண்டும் என்பதற்காகத்தான் பல வழிமுறைகளை நாங்கள் செய்துகொண்டு இருக்கிறோம். அதிலே முதன்முதலாக இந்த ஆட்சி வந்தவுடனே கவர்னர் உரையிலேயே எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி தமிழகத்தின் முதல்வர் அம்மா அவர்கள் தெளிவாகச் சொன்னார். உள்ளாட்சித் தேர்தலும், கூட்டுறவுத் தேர்தலும் நடத்தப்படும் என்றார்கள். உள்ளாட்சித் தேர்தலை நடத்தி முடித்து இருக்கிறோம். கூட்டுறவுத் தேர்தலை நடத்துவதற்கு முனைப்பான பணிகளைச் செய்தோம். உள்ளாட்சித் தேர்தலுக்குப் பின்னாலே நடத்த வேண்டி இருந்ததாலே, அந்த 6 மாத காலம் உள்ளாட்சி மன்றத் தேர்தல் முடிந்து நடத்துவதற்கு காலதாமதம் ஏற்பட்டது. அதற்குப் பின்னாலேதான் கூட்டுறவுத் தேர்தலை நாங்கள் நடத்தவேண்டிய சூழ்நிலையிலே இருக்கிறோம். அதுமட்டுமல்ல. நடத்த வேண்டியதையும், நியாயமாக நடத்த வேண்டும் என்று சொல்லியிருக்கிறீர்கள். அந்த உணர்வோடு நாங்கள் இருக்கிற காரணத்தினாலேதான் அதிலே இருக்கிற தவறுகளைக் களைந்து நியாயமான தேர்தல் நடத்துவதற்காகத்தான் இந்தக் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. அதைச் சரி செய்து தேர்தலை நடத்த வேண்டி இருக்கிறது.

கூட்டுறவுத் தேர்தல் என்று சொன்னால் சாதாரணமாக நடத்திவிட முடியாது. அதுமட்டுமல்ல, 3 கட்டமாக இந்த கூட்டுறவுத் தேர்தல்களை நாம் நடத்த வேண்டும். முதலில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்குத் தேர்தல். அதற்குப் பின்னாலே மாவட்ட அளவிலே இருக்கிற மத்திய வங்கி போன்றவற்றிற்குத் தேர்தல் நடத்த வேண்டும். அதற்குப் பின்னாலேதான் மாநில அளவிலே இருக்கிற வங்கிகளுக்கும்,





நிர்வாகத்திற்கும் தேர்தல் நடத்த வேண்டும். இப்படி மூன்று கட்டங்களாக இந்தத் தேர்தல்களை நடத்துவதற்கு அவகாசம் தேவை. ஒரு தேர்தலை நடத்துவதற்கு ஏறக்குறைய 45 நாட்கள் ஆகும். அதற்கு முறையான அறிவிப்புகளைக் கொடுத்து தேர்தல் நடத்த வேண்டுமென்ற சூழ்நிலை இருக்கிற காரணத்தினாலே, ஏறக்குறைய இந்த மூன்று கட்டத் தேர்தல்களை நடத்தி முடிப்பதற்கு 4½ மாத காலம் ஆகும் என்கிற காரணத்திலேதான், இதற்கு ஓராண்டு காலம்--6 மாத காலம் தேர்தல் நடத்துவதற்கே ஆகும். அதற்குமேலே இருக்கிற நிர்வாகச் சிக்கல்கள், நிர்வாகத்தில் திருத்தங்களை எல்லாம் கொண்டு வருவதற்கு கால அவகாசம் தேவை என்கின்ற அளவிலே இன்றைக்கு நாங்கள் ஓராண்டு காலம்--தேவை என்கிற அளவிலே இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். நிச்சயமாகச் சொல்கிறோம், நியாயமான தேர்தலை, நிர்வாகத்திலே உண்மையான, ஒரு ஜனநாயகத் தேர்தலை புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு தமிழ்நாட்டிலே நிச்சயம் நடத்தும். ஏனென்று சொன்னால், இதற்கு முன்னாலே நடந்த தேர்தலிலே அத்தனை தில்லுமுல்லுகளைச் செய்த ஒரே ஒரு கட்சி, தொடர்ந்து இப்படிப்பட்ட தவறுகளைச் செய்த காரணத்தினாலே, அந்தத் தவறுகளை எல்லாம் களைந்துவிட்டு ஒரு நியாயமான தேர்தலை, ஜனநாயகத் தேர்தலை இந்த நாட்டுக்குத் தரவேண்டும், கூட்டுறவுத் துறையிலே தரவேண்டும் என்கின்ற முறையிலே கூட்டுறவில் மிகப் பெரிய ஓர் எழுச்சியான காலகட்டமாக புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சி அமையவிருக்கிற காரணத்தினாலே, அந்த கால அவகாசம் வேண்டும் என்கின்ற காரணத்தினாலேதான் ஓராண்டு காலத்தைக் கேட்டு, இன்றைக்கு இந்தச் சட்டமுன்வடிவு கொண்டு வரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் நான் சொல்லியிருக்கிற இந்த பதிலை ஏற்று, இந்தச் சட்டமுன்வடிவை ஆதரிக்க வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

*பிற்பகல் 5-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன்.

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேறொன்றும் அல்ல. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது நாங்கள் எல்லாம் அந்தப் பதவியிலே இல்லை என்று சொன்னார் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்திலிருந்து. அப்பொழுதெல்லாம் தேர்தலே நடைபெறவில்லை. ஆகையினாலே இல்லை. ஆனால் நாங்கள்

[திரு. துரைமுருகன்] [2002 மே 8

வந்து 5 ஆண்டு காலம்தான் இருந்தோம். தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும், எந்த நிலையிலே இருந்தாலும் நீங்கள் நடவடிக்கை எடுப்பதிலே நான் குறுக்கே நிற்கவில்லை. அதைப்பற்றி நாங்கள் பேசவில்லை. அது அரசாங்கத்தினுடைய கடமை. ஆனால் ஏதோ கடந்த ஐந்தாண்டுகளுக்குள்ளாகத்தான் மொத்தமும் கெட்டுப் போனது என்று தேர்தலிலே எங்களோடு கூட்டணியில் இருந்தவர்களும் சொல்கிறார்கள்; ஏதோ காமராசர் காலத்திலே உத்தமமாக இருந்ததுபோலவும் சொல்கிறார்கள். காமராசருடைய காலத்திலேகூட அதற்கு முன்னாலே காங்கிரஸ்காரர்கள் காலத்திலே எப்படி இருந்தது என்று பழைய காலத்தில் அண்ணா அவர்கள் கூட்டுறவுத் தலைவர்களுடைய தேர்தல் ஃபைலில் சில குறிப்பு எழுதியிருக்கிறார். நான் அதையெல்லாம் இப்போது பேசுவதற்கு நேரம் இல்லை. மாண்புமிகு அமைச்சரவர்கள் தயவுசெய்து ஒருமுறை படித்துப்பாருங்கள். 'தானிக்கு தானிக்கு சத்யங்கா உண்டாதி.' (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி, (குறுக்கீடு) இல்லை, இல்லை. Bill மீது விவாதம் முடிந்து விட்டது.

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க.(ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க.(ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.



2002 மே 8] [பேரவைத் தலைவர்]

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க.(ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல், மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்16/2002) நிறைவேற்றப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க.(ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஆ) தமிழ்நாடு சங்கங்கள் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2002). மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

[2002 மே 8

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2002)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவில் பொதுவாக, மாநில வரி வருவாயினை உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பொறுப்புரிமை மாற்றி ஒப்படைப்பதற்காகவும், அதேபோல வளர்ச்சித் திட்டங்களுக்காக ஆற்றப்படும் பணிச் சேவைகளுக்காக நீங்கள் நிதி உதவி அளித்திட வேண்டுமென்பதற்காக வரி அல்லாத வருவாயைப் பெருக்குவதற்காக இப்போது சில கட்டணங்களைக் கூட்டியிருக்கிறீர்கள். ஆனால் 1-ம் இனத்தில் 100 ரூபாய் என்றிருக்கிற சொற்களுக்குப் பதிலாக 500 ரூபாய் என்று ஒரேயடியாக 5 மடங்கு இங்கே நீங்கள் அதிகரித்துக் காட்டியிருப்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 100 ரூபாய் என்பதை இரண்டு மடங்காகவோ அல்லது 2½ மடங்காகவோ, வேண்டுமானால்-200ரூபாய் அல்லது 250 ரூபாய் என்று மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும் என்று நான் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாகக் கேட்டு, இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்று அமைகிறேன்.

பிற்பகல் 5-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்தச் சட்டமுன்வடிவிலே, இதற்குக் காரணம் சொல்லப்பட்டிருப்பது, 'மாநில வரி வருவாயினை உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பொறுப்புரிமை மாற்றி ஒப்படைத்திட பரிந்துரைத்த மாநில நிதிக் குழுவின் பரிந்துரையினை நடைமுறைப்படுத்தியதாலும்,

@2-5-2002 ஆம் நாளிட்ட **தமிழ்நாடு சிறப்பு அரசிதழில்** வெளியிடப் பட்டுள்ளது.



2002 மே 8] [திரு. ஜி.கே. மணி]

மற்றும் பதிவுத் துறையானது கணினிமயமாக்கப்பட்டதாலும் இந்தச் செலவுகளுக்கு நிதி அளிப்பதற்காக' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இங்கே உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி பகிர்ந்தளிப்பது பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதியாதாரங்களை பகிர்ந்தளிப்பது குறித்த மாநில நிதிக் குழுவினுடைய அறிக்கை இதுவரை வெளியிடப்படவில்லை. அது யாருக்கும் தெரியாமலே இருக்கிறது. ஆக, மாநில நிதிக் குழு என்பது எந்த அளவுக்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதியினைப் பகிர்ந்தளிக்க பரிந்துரைத்திருக்கிறது என்ற விவரத்தினை எல்லோரும் தெரிந்துகொள்ள வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்ற காரணத்தாலே, அதைச் சட்டமன்றத்தில் வைத்தால்கூட பொருத்தமுடையதாக இருக்கும். ஆகவே அதை சட்டமன்றப் பேரவையில் வழங்க வேண்டும். மற்றவர்களுக்கும் வெளிப்படையாகச் சொல்லவேண்டுமென்ற அந்தக் கருத்தை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன், கட்டண வீதம் ரூ.100 என்பது ரூ.500, 5 ரூபாய் என்பது 10 ரூபாய், 10 ரூபாய் என்பது 25 ரூபாய், 2 ரூபாய் என்பது 5 ரூபாய், 5 ரூபாய் என்பது 10 ரூபாய் என்று இப்படி கூடுதலாக இருக்கிறது. இதையெல்லாம் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே கருத்துத் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிக் குழுவினுடைய பரிந்துரைக்கிணங்க அதிக வருமானத்தை உருவாக்குவதற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிற சட்டம் இது என்று நோக்க காரண விளக்கவுரையில் சொல்லப்பட்டிருக்கிறது. இன்று இந்த அரசு கொண்டு வந்திருக்கிற பல்வேறு சட்டங்களைப் பார்க்கிற நேரத்தில் ஏழை எளிய மக்களை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தாக்குகிற முறையிலே உள்ள சட்டங்களாகத்தான் பல சட்டங்கள் அமைந்திருக்கின்றன. தமிழக அரசு, இந்த நிதிநிலை அறிக்கையிலே 'தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்' என்ற ஒரு திட்டத்தை அறிவித்தது. தமிழகத்தின் வளர்ச்சிக்காக அது மிகவும் உதவி செய்யும் என்று நாமெல்லாம் நம்புகிறோம். இந்தத் திட்டத்தை அமல்படுத்துவதற்கு இங்கே மாண்புமிகு முதல்வர் அவர்கள்கூட அறிவித்தார்கள். மக்கள் Society யாக form செய்யவேண்டுமென்று. அப்படி அவர்கள் அந்தத் திட்டத்தை அமல்படுத்துவதற்கு வருகிற நேரத்தில் அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்பாடுகள்

செய்யப்படும் என்று சொன்னார்கள். அப்படி ஏராளமான Society-களை form பண்ண வேண்டிய ஒரு நிலையிலே இன்றைக்கு தமிழகத்திலே இருக்கிற மக்கள் இருந்து கொண்டு இருக்கிறார்கள். தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தினுடைய பலன்கள் ஏழை எளிய மக்களுக்குச் சென்று சேர வேண்டுமானால், அவர்கள் Society form பண்ண வேண்டும். ஆனால் இப்பொழுது Society-களை form செய்வதற்கு நடைமுறையில் இருப்பதைவிட பல மடங்கு அதனுடைய fees உயர்த்தப்பட்டிருக்கிற நிலையில், சட்டத்தை இங்கே தாக்கல் செய்திருப்பது, மக்களை மறைமுகமாகத் தாக்குகிற ஒரு நிலையை ஏற்படுத்தும் என்பது என்னுடைய தாழ்மையான கருத்து.

இந்த நாட்டிலே கள்ளப்பணம் ஏராளமாக இருக்கிறது. அதை வெள்ளைப் பணமாக ஆக்குவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டுமென்பது என்னுடைய கருத்து. அப்படியெல்லாம் இந்த நாட்டிலே வசதிபடைத்தவர்கள் வைத்திருக்கிற பணத்தை நாம் வெள்ளைப் பணமாக மாற்றி இந்த நாட்டினுடைய வளர்ச்சிக்காக பயன்படுத்த வேண்டுமே தவிர, ஏழை எளிய மக்களை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தாக்குகிற முறையில் உள்ள நடவடிக்கைகளைக் கைவிட வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டு, இந்தச் சட்டம் அந்த முறையில் சட்டமாக அமைகிறது என்ற காரணத்தால் இந்தச் சட்டத்தை நாங்கள் எதிர்க்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு.

***திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 27 ஆண்டுகளுக்குப் பிறகு 'தமிழ்நாடு சங்கங்கள் பதிவு செய்தல்' சட்டத்தை அரசு கொண்டு வந்திருக்கிறது. உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பொறுப்புரிமை மாற்றி ஒப்படைத்திட பரிந்துரைத்த மாநில நிதிக் குழுவின் பரிந்துரையினை நடைமுறைப்படுத்தியதாலும், பதிவுத் துறை கணினிமயமாக்கப்பட்டதாலும், பல்வேறு திட்டங்களுக்காக நிதிச் செலவு அதிகமாகி இருக்கிறது என்று சொல்லியிருக்கிறீர்கள். இருந்தாலும்கூட இப்பொழுது மக்களுக்கு விழிப்புணர்ச்சி அதிக அளவிலே வந்து கொண்டிருக்கிறது. 1975-ல் நீங்கள் கணக்கெடுத்துப் பார்த்தீர்களானால், அன்றிருந்த சங்கங்கள் எவ்வளவு பதிவு செய்தன என்பதைக் காட்டிலும், இப்பொழுது 2001-2002-ல் பார்த்தால், நூற்றுக்கணக்கான சங்கங்கள் அதிக அளவிலே பதிவு செய்ய ஆர்வம் காட்டியிருக்கின்றன. *





பல அமைப்புகள் எல்லாம் தங்கம் செய்யாததைச் சங்கம் செய்யும் என்ற வகையிலே இவற்றை பதிவு செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே படிப்படியாக பதிவுக் கட்டணத்தை உயர்த்துவதில் காங்கிரஸ் கட்சிக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் கிடையாது. 100 ரூபாயிலிருந்து 500 ரூபாய் என்று சொல்லும்போது ஐந்து மடங்கு அல்லது 500 சதவிகிதம் என்ற வகையிலே வருகிறது. அதே மாதிரி ஆவணத்தைத் தாக்கல் செய்வதற்கு ஐந்து ரூபாய் என்ற அளவை பத்து ரூபாயாகக் கொண்டு வர இருக்கிறீர்கள். ஒரு முறை பார்ப்பதற்கு- தொடர்பான ஆவணங்களைப் பார்ப்பதற்கு — பத்து ரூபாய் என்பது 25 ரூபாயாகவும், சங்கப் பெயர் மாற்றுச் சான்றிதழ் பெறுவதற்கு பத்து ரூபாய் என்பது 25 ரூபாயாகவும், பாக்கியுள்ள ஒவ்வொரு ஒப்பீட்டுக் குறிப்பின் நகலுக்கு இரண்டு ரூபாய் என்று இருந்ததை இப்போது ஐந்து ரூபாய் ஆகவும் கொண்டு வருகிறீர்கள். ஆகவே இதைப் படிப்படியாக இன்னும் ஐந்து வருடங்களுக்குப் பிறகுகூட உயர்த்தலாம். 27 வருடங்களுக்குப் பிறகு இச்சட்டமுன்வடிவு வந்ததினால் ஓரேயடியாக ஏழையெளிய மக்களுக்கு இது கொஞ்சம் அதிக அளவில் பாரமாக இருக்கும் என்ற கருத்தைச் சொல்லி, முடிந்த அளவிற்கு இதை நீங்கள் இன்னும் கொஞ்சம் குறைக்கலாம் என்ற கருத்தைச் சொல்லி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 5-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவின் மூலமாக இரு மடங்கு உயர்த்தப்பட்டிருக்கிறது கட்டணங்கள். அமைச்சர் அவர்கள் இது மிக சொற்பத் தொகைதான் என்றுகூடச் சொல்லலாம். பதில் சொல்வதற்கு அவர் அப்படித்தான் தயாராக இருப்பார் என்று கருதுகிறேன். ஏனென்றால் ஐந்து ரூபாய் என்பது பத்து ரூபாயாகவும், நூறு ரூபாய் என்பது ஐநூறு ரூபாயாகவும் சொல்லப்பட்டிருக்கிறது என்றுகூடச் சொல்லலாம். இந்தத் தொகையினுடைய மதிப்பு என்னவென்று பார்ப்பதைவிட, இதிலே குறிப்பிட்டுச் சொன்னால், நிதிக் குழுவினுடைய பரிந்துரையினை நடைமுறைப்படுத்தியதாலும் என்று வருகிறபோது, இதைத்தான் நாங்கள் இங்கே தொடர்ந்து சொல்லிக்கொண்டே இருக்கிறோம். நம்முடைய மத்திய அரசாங்கத்தினுடைய பொருளாதாரக்

[திரு. வை. சிவபுண்ணியம்] [2002 மே 8

கொள்கை அப்படியென்று சொன்னால் தவறான பொருளாதாரக் கொள்கை என்பது எங்களுடைய அழுத்தமான கருத்து. அந்தக் கொள்கையை மாநிலங்களும் நடைமுறைப்படுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது. இதை விரும்பியோ விரும்பாமலோ ஏற்றுக்கொண்டு செயல்படுத்தவேண்டிய நிர்பந்தமான நிலைக்கு மாநிலங்கள் ஆளாக்கப்படுகின்றன. ஆகவே அதனுடைய விளைவாக இப்படிப்பட்ட காரியங்கள் தொடர்ந்து நடைபெறுவதற்குரிய சந்தர்ப்பமும் வாய்ப்பும் இருக்கும் என்று நாங்கள் அஞ்சுகிறோம். இது சங்கங்களைப் பதிவு செய்வதற்குரிய கட்டண உயர்த்துதலாக இல்லாமல் ஒட்டுமொத்தமாக சாதாரண ஏழையெளிய மக்களுக்கு மறைமுகமாகவோ, நேர்முகமாகவோ ஒரு தாக்குதலை, ஒரு பாதிப்பை வரி உயர்வை செய்வதற்குரிய வாய்ப்புகள் வெவ்வேறு வகையிலே வந்து கொண்டே இருக்கும். அப்படிப்பட்ட சூழ்நிலைகள் இருக்கின்றன. அதிலும் குறிப்பாக, சங்கங்களைப் பதிவு செய்வதற்கு இப்படி ஒரு கட்டண விகிதத்தை ஐந்து மடங்கு அளவிலே உயர்த்தி இருப்பது தேவையில்லாதது. அதை அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கூறி இந்தச் சட்டமுன்வடிவை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் எதிர்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டு ஒன்றுக்கு 9,500 Registration, Societies Act மூலமாக பணமாகப்படுகிறது. அதுமட்டுமல்லாமல் 2001-2002 வரை 1,83,206 Registration நடந்துள்ளது. Average-ஆக, வருடத்திற்கு இதன் மூலமாக பதினைந்து இலட்சம் ரூபாய்தான் வந்துகொண்டிருக்கிறது. இதை உயர்த்துவதன் மூலமாக அரசாங்கத்திற்கு ரூபாய் 40 இலட்சம் கிடைக்க இருக்கிறது. இங்கே திரு. ஹேமச்சந்திரன் மற்றும் திரு. ராஜு போன்ற உறுப்பினர்கள் எல்லாம் இது அதிகமாக இருக்கிறது என்று கூறினார்கள். தற்போது நாட்டினுடைய சூழ்நிலையிலே Registration method கணினிமயமாக்கப்படுகிறது. நீங்கள் எங்கே இருந்து கொண்டிருந்தாலும் உங்களுடைய வீட்டிலிருந்துகொண்டோ அல்லது கன்னியாகுமரியிலிருந்துகொண்டோ நீங்கள் நிலத்தினுடைய விலை, தரம் மற்றவற்றையெல்லாம் பார்த்துக்கொள்ளலாம். அதற்கெல்லாம் போதிய ஆதாரங்கள், செலவுகள் எல்லாம் இருந்துகொண்டிருக்கின்றன. (குறுக்கீடு) நான் முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு) நான் முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு)



2002 மே 8]

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** சட்டமன்ற உறுப்பினர்கள் நிதியிலிருந்து ஆர்.டி.ஓ. அலுவலகம் கட்டுவது போன்ற காரியங்களுக்குப் பணம் கேட்கிறார்கள். நாங்கள் பணம் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். அதில் ஒன்றும் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் இது ஏழை எளிய மக்களைப் பாதிக்கிறது என்பதைத்தான் சொன்னேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** இல்லை, இல்லை. ஆர்.டி.ஓ. ஆபிஸ் இல்லை. Registration-ஐப் பொறுத்த அளவிலே General Computerisation ஆக்குவதற்கு - அதனுடைய நன்மை என்னவென்று நீங்கள் பார்க்க வேண்டும். ஏற்கெனவே 100 ரூபாயிலிருந்து — 1994 Revision-க்குப் பிறகு — இப்போது 100 ரூபாயிலிருந்து 500 ரூபாயாக மாற்றியிருக்கிறோம். அதுமட்டுமல்லாமல் மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் கூறினார்கள். ஐந்து ரூபாயிலிருந்து 10 ரூபாயாக மாற்றியிருக்கிறோம். ஐந்தே ரூபாயாக இருந்திருக்கிறது. இப்போது 10 ரூபாயாக மாற்றியிருக்கிறோம். ஐந்து ரூபாயை பத்து ரூபாயாக மாற்றியிருக்கிறோம். அப்புறம் 10 ரூபாயிலிருந்து 25 ரூபாயாக மாற்றியிருக்கிறோம் என்று Tamil Nadu Societies Registration Act பிரகாரம், செக்ஷன் 44 & 45 only, Appeal Provision. ஆனால் இந்த Appeal Provision-க்கு என்றுள்ள 25 ரூபாயை 50 ரூபாயாக ஆக்கியிருக்கிறோம். அதனாலே நீங்கள் சொல்வதுபோல் அதிகமாக ஏற்றவில்லை. Society என்பது ஏழை மக்களாக இருந்தாலும், Society யிலே member-கள் எல்லாம் ஜாஸ்தியாக இருக்கிறார்கள். 1994-லே 100 ரூபாயாக இருந்தது இப்போது 500 ரூபாயாக ஏற்றப்பட்டிருக்கிறது. இதனால் ஏழை மக்களுக்கு எந்த விதத்திலும் பாதிப்பு வராது என்று சொல்லி உறுப்பினர்கள் அனைவரும் இந்தச் சட்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும்: உங்களிடம் சொல்ல வேண்டும் என்றால், குறிப்பாக திரு. ஹேமச்சந்திரனுக்குச் சொல்ல வேண்டும் என்றால், இந்த 100 ரூபாய் 500 ரூபாய் என்பது பெரிதல்ல. இது எந்தக் காலத்திலும், எந்த நேரத்திலும் ஏழை மக்களைப் பாதிக்காது என்று உங்களிடம் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே உறுப்பினர்கள் அனைவரும் இந்தச் சட்டத்தை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 5-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 18/2002) நிறைவேற்றப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (இ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2002), மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண்.11/2002) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து வரும் 3 சட்டமுன்வடிவுகளும் பொது விற்பனை வரி, நுழைவு வரி மற்றும் விற்பனை வரி தொடர்பானவை. அவை ஒரே அமைச்சரைச் சார்ந்தவை என்பதால் தங்கள் கருத்துக்களைக் கூற விரும்பும் உறுப்பினர்கள் 3 சட்டமுன்வடிவுகளுக்கும் சேர்த்தே கூறலாம். திரு. எ.வ. வேலு.

***திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நுழைவு வரிச் சட்டத்தைப் பொறுத்த அளவிற்கு இது ஒரு கொடுமையான சட்டமாக இருக்கின்ற காரணத்தினால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நாங்கள் அதைக் கடுமையாக எதிர்க்கிறோம். காரணம் இதிலே நுழைவு வரிப் பட்டியலில் அலுமினியத்திற்கு நுழைவு வரி இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. அதேபோன்று— (குறுக்கீடு)

@ 17-4-2002ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, ஆய்வுக்கு மொத்தமாக எடுத்துக்கொள்ளலாம். (குறுக்கீடு) மொத்தமாக எடுத்துக்கொள்ளலாம். (குறுக்கீடு) இல்லை, ஏற்கெனவே அறிமுகம் ஆகிவிட்டது. இப்போது ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. (குறுக்கீடு) பேசக்கூடிய உறுப்பினர்கள் நான்கிலும் சேர்த்துப் பேசலாம்.

**திரு. எ.வ. வேலு:** டீசலுக்கு நுழைவு வரி போடப்படுகிறது. இன்றைக்குப் பெரும்பாலும் கிராமப் பகுதிகளிலே மின்சாரம் இல்லாத விவசாயிகள் டீசல் என்ஜின் வைத்துக்கொண்டுதான் இப்போது தண்ணீர் இறைத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே விவசாயப் பெருங்குடி மக்கள் அதன் மூலமாக பெரிதும் பாதிக்கப்படுவார்கள். அதேபோன்று பொட்டாஷியம் குளோரைடு. இதற்கு நுழைவு வரி போடப்பட்டு இருக்கிறது. இப்போது நுழைவு வரி போடாத காலங்களில் மெட்ரிக் டன் 37,050 ரூபாய்க்கு அது கிடைக்கின்றது. நுழைவு வரி போடுகிறபோது அதனுடைய விலை 41,575 ரூபாய் ஆகின்றபோது 12.2% அதன் மீது அதிகமாக வரி போடுகின்ற காரணத்தினால் பொட்டாஷியம் குளோரைடு விலை கூடுகிறது. தீக்குச்சிக்காகப் பயன்படுத்துகிற ஒரு மூலப்பொருளான பொட்டாஷியம் குளோரைடுக்கு நுழைவு வரி போட்டுவிட்டு அதற்குப் பின்னால் வத்திப்பெட்டியாக தயார் செய்து அதை விற்கிறபோது விற்பனை வரி கூடிவிடுகிறது. எனவே மேலும் உற்பத்தி வரி, excise duty-யும் கூடிவிடுகிறது. ஆக சாதாரணமாக விவசாயிகள், தொழிலாளர்கள் பயன்படுத்துகிற அந்தத் தீப்பெட்டிக்கு இப்படி 3 வகையிலே வரி கூடுகிறபோது அந்தத் தொழில் நசுக்கப்படுகிறது. ஏனென்று சொன்னால் விலைவாசி அதிகமாகிறபோது வெளிமாநிலங்களிலிருந்து வருகிற பொருட்களினுடைய விலை குறைவாக இருக்கும். மூலப்பொருட்களுக்கு, வரும்போது நுழைவு வரி, விற்பனை வரி, உற்பத்தி வரி என்று சொல்கிறபோது அலுமினியம், தீப்பெட்டி போன்ற பொருட்களுக்கு அதிகமாக விலை வருகிற காரணத்தினால் இங்கே தொழில் வேறு நசிந்துவிடும்.

*பிற்பகல் 5-35*

அதோடு மட்டுமல்ல. பி.வி.சி. பைப்பினுடைய மூலப்பொருள் ரெசின். இந்த மூலப்பொருளிலிருந்துதான் பி.வி.சி. பைப் தயார் செய்கிறார்கள். வெளிமாநிலங்களிலிருந்துதான் பெரும்பான்மையாக அந்த ரெசின் இப்போது வருகிறது. அப்படி வருகிறபோது அந்த ரெசினுக்கு நுழைவு வரி இங்கே விதித்து, அதற்குப் பின்னால் உற்பத்தி வரி போட்டு, அதற்குப் பின்னால் விற்பனை வரி போடுகிறபோது அந்த பி.வி.சி. பைப்பினுடைய விலை அதிகமாகிறது. விவசாயப் பெருங்குடி மக்கள்தான் அதிகமாக



பி.வி.சி. பைப்பை பயன்படுத்துகிறார்கள். அதன் மூலமாக பைப் விலை ஏறுகிறது. அதோடு மட்டுமல்லாமல் P.V.C. Pipe உற்பத்தியாகி வெளி மாநிலத்திலேயிருந்து வருகிறபோது Entry Tax மட்டும் கட்டிவிட்டு வந்துவிடுகிறார்கள். அப்படி வருகிறபோது தமிழ்நாட்டில் போட்டி மனப்பான்மை (competition) என்று வருகிறபோது, வெளி மாநிலத்திலேயிருந்து வருகிற பொருள் குறைந்த விலைக்கு விற்கப்படும். இங்கே உற்பத்தி செய்கிற பொருள், இந்த வரிகள் எல்லாம் கூடுகிற காரணத்தினால் அதிகமான விலையிலே விற்பதற்கு வாய்ப்பாக அமைந்துவிடுகிறது.

அதோடுமட்டுமல்லாமல் வியாபாரிகளைப் பொறுத்தவரைக்கும் என்ன நினைக்கிறார்கள் என்று சொன்னால், இந்த உற்பத்தி வரி போடுவதால் மட்டும் தங்களுடைய வியாபாரம் பாதிக்கிறது என்று நினைப்பதில்லை. அரசு என்ன நினைக்கிறது? இப்படி உற்பத்தி வரி போடுவதன் மூலமாக அரசுக்கு அதிகமாகப் பணம் வரும் என்று நினைக்கிறது. அரசுக்கு வரியைக் கட்டுவதைவிட அதிகாரிகளைச் சரிக் கட்டிவிடலாமே என்றுகூட சிலர் நினைக்கக்கூடும். அரசுக்கு வரியைக் கட்டுவதைவிட அரசு அதிகாரிகளைச் சரி செய்துவிடலாம் என்கிற நிலை வருகிறபோது அரசாங்கத்திற்குக்கூட நீங்கள் நினைத்த அளவிற்கு பணம் வருவதற்கு வாய்ப்பில்லை. நீங்கள் சோதனைச் சாவடிகள் வைக்கலாம் என்று நினைக்கிறீர்கள். ஆனால் நாங்கள் வேதனைச் சாவடி வருகிறதே என்று நினைக்கிறோம். அதற்குக் காரணம், இந்தச் சோதனைச் சாவடிகளில் நிறுத்தி வைக்கின்ற வண்டிகளையெல்லாம் நான் பலமுறை பார்த்திருக்கிறேன், பூந்தமல்லி நெடுஞ்சாலையிலே வண்டிகளை நிறுத்தி அவர்கள் பரிசோதிக்கிறபோது மணிக் கணக்கிலே வண்டிகள் நிற்கும். இதனால் traffic நெரிசல் அதிகமாகிறது. அதுமட்டுமல்ல. இன்றைக்கு விற்கிற டீசல் விலையைப் பார்க்கிறபோது அந்த engine ஓடிக்கொண்டே இருக்கிற காரணத்தால் டீசல் 10, 15 சதவீதம் waste ஆகிறது. அதன் மூலமாகக்கூட ஒரு நஷ்டம் நாட்டுக்கு ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில் இந்த அரசாங்கம், வரியைக் குறைப்போம், நாங்கள் வசதியைப் பெருக்குவோம் என்று ஆளுகிறபோது உங்களுக்கு நல்ல பெயர் வரும். ஆனால் வரியை நாங்கள் போடுவோம் வசதியைக் குறைப்போம் என்ற அடிப்படையில் ஆட்சியை நடத்துகிறபோது ஒரு கெட்ட பெயர் இந்த ஆட்சிக்கு வந்துவிடக்கூடாது என்ற உணர்வோடுதான் இந்த ஆலோசனையை நான் சொல்ல விரும்புகிறேன். (சிரிப்பு) ஒரு காலத்திலே, இதுபோன்ற விற்பனை வரியைப் பொறுத்த அளவிற்கு இதற்கு ஒரு மாற்றுப் பெயர்கூட உண்டு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன இருந்தாலும் பழைய பாசம். (சிரிப்பு)

**திரு. எ.வ. வேலு:** அரசுக்கு, சட்டமன்ற உறுப்பினர் என்கிற முறையில் பொதுமக்கள் பாதிக்கப்பட்டுவிடக்கூடாது என்ற உணர்வோடு ஓர் ஆலோசனை சொல்வது ஒன்றும் தவறு அல்ல. இந்தப் பொருளை ஏதோ திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருப்பவர்கள், எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள் குடும்பத்திலே உள்ளவர்கள் மட்டும் பயன்படுத்துவதில்லை. ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள், உங்கள் தொகுதியிலே இருக்கின்ற ஏழைகள்கூட இந்தப் பொருளைப் பயன்படுத்துகின்றார்கள். எனவே அதிக விலைக்கு வாங்கிப் பயன்படுத்துவதன் மூலமாக ஏழைகளுக்கு, விவசாயிகளுக்கு, தொழிலாளர்களுக்கு அதிக வரிச் சுமையை ஏற்படுத்தி விடக்கூடாது என்கிற ஆதங்கத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

விற்பனை வரியைப் பொறுத்த அளவிற்கு ஒரு காலத்திலே octroi என்கிற பெயரிலே இருந்தது. 1937 ஆம் ஆண்டு ராஜாஜி காலத்திலேதான் இந்த Sales Tax Act முதன்முதலாக தமிழ்நாட்டிலேதான் implementation செய்யபபட்டது. அந்தக் காலத்திலேகூட மத்திய அரசாங்கத்தால் ஒரு குழு அமைக்கப்பட்டது. மத்திய அரசாங்கம் எல்.கே. ஜா. என்கிறவரை அந்தக் குழு தலைவராக நியமித்து அமைக்கிறபோது அவர் ஒரு Report கொடுத்தார். இந்த நுழைவு வரி என்பது, octroi வரி என்பது தேவையில்லாத ஒன்று, அருவருக்கத்தக்க ஒன்று என்றுகூட அப்போது Report கொடுக்கப்பட்டது. மரியாதைக்குரிய இந்திரா காந்தி அம்மையார் அவர்கள்கூட இந்த நுழைவு வரி தேவையில்லையென்று ஒரு முறை தன்னுடைய கருத்தைச் சொல்லியிருக்கிறார்.

அதோடுமட்டுமல்லாமல் எந்தப் பேரறிஞர் அண்ணாவை நாம் வணங்குகிறோமோ, எந்தப் பேரறிஞர் அண்ணாவினுடைய பெருமையைப் பேசுகிறோமோ அதே பேரறிஞர் அண்ணா ஒரு முறை சொன்னார். 'இதோ பக்கத்திலே இருக்கின்ற துறைமுகத்திலே வந்து இறங்குகிற பொருள்கள் சென்னைக்குள்ளே வருகிறபோது அதற்கு நுழைவு வரி போடுகிறார்கள், இது தேவையற்றது, எனவே அந்த நுழைவு வரி வேண்டாம்' என்று அண்ணாகூட ஒரு முறை சொல்லியிருக்கிறார்கள். எனவே அந்த அடிப்படையில் இந்த நுழைவு வரியை நீங்கள் இரத்து செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த விற்பனை வரி என்பது அரசாங்கத்தைப் பொறுத்த அளவிற்கு வணிக வரித் துறை காமதேனு போன்றது, கற்பக விருட்சம் போன்றது.





ஏனென்றால் இதில் அதிகமாக அரசுக்கு வேண்டிய வரி வரும். எனவே இப்படி நுழைவு வரி போட வேண்டிய அவசியமில்லை. ஆனால் இந்த அரசு என்ன நினைக்கிறது என்று சொன்னால், அது பொன் வாத்து. அந்தப் பொன் முட்டையிடுகிற வாத்தை அறுத்து எடுக்கலாம் என்று நினைத்துவிட்டால், அதில் ஒரே ஒரு முட்டைதான் இருக்கும். எனவே கொஞ்சம் கொஞ்சமாக வரியைச் சுமத்துவதன் மூலமாகவும், வரியை வசூல் செய்வதன் மூலமாகவும் உங்களுக்கு வருமானம் கிடைக்கும். எனவே இது பொன் வாத்து என்கிற காரணத்தால் அறுத்துவிட வேண்டாம். மக்கள்மீது நுழைவு வரியைச் சுமத்தி வசூல் செய்ய வேண்டாம் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 5-40*

நான் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். 1983 ஆம் ஆண்டு இதேபோன்று நுழைவு வரி என்கிற நிலை வந்தது. அப்போது மக்கள் திலகம் புரட்சித் தலைவர் அவர்கள் முதலமைச்சராக இருந்தார்கள். இதே மாமன்றத்திலே எங்களுடைய தலைவர் அண்ணன் கலைஞர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார். என்னவென்று சொன்னால், நுழைவு வரி தேவையில்லை, இது மக்கள்மீது சுமத்தப்படுகிறது, எனவே இதை இரத்து செய்ய வேண்டுமென்று அவர் சொன்னபோது அன்று மீண்டும் மக்கள் திலகத்திற்கு ஒரு நினைவு வந்தது. அவர்கள் ஒரு திரைப்படத்தில் நடித்தார். குலேபகாவலி என்ற ஒரு திரைப்படம். அந்தத் திரைப்படத்திலே ஓர் ஊரிலிருந்து இன்னொரு ஊருக்குப் போகிறபோது, அன்றைக்கு நகைச்சுவை நடிகராக இருந்த சந்திர பாபு அவர்களும் இரண்டு பேரும் போவார்கள். அங்கே gate போடப்பட்டிருக்கும். அங்கே வரிப்பணம் கேட்பார்கள். என்ன என்று MGR கேட்பார். இந்த ஊருக்குள் போகவேண்டுமென்று சொல்லுவார்கள். எதற்கு வரி என்று கேட்பார்கள். நுழைவு வரி என்று அப்போதே அந்தத் திரைப்படத்திலே கதை வசனம் தீட்டப்பட்டு இருந்தது. ஆனால் அப்போது சொன்னார்கள். அந்தக் காலத்திலே, குலேபகாவலியிலே சுட்டிக்காட்டினார்கள் அதை. அப்போதுகூட திரைப்படத்தில் ஒரு பல்லவி - ஒரு வரியை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். "அநியாயம், இந்த ஆட்சியிலே இது அநியாயம்" என்று அந்த பல்லவியிலே அதைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். எனவே அதைச் சுட்டிக்காட்டி, 'உங்களுடைய ஆட்சியிலே, நீங்கள் திரைப்படத்திலே குலேபகாவலியிலே இப்படி நுழைவு வரியை சுட்டிக்காட்டியிருக்கிறீர்கள் அன்றைக்கு, இப்படிப் போடலாமா' என்று எங்களுடைய தலைவர் அண்ணன் கலைஞர் கேட்டுக்கொண்டதற்கு



225166

இணங்க இதே நுழைவு வரியை இரத்து செய்திருக்கிறார்கள். நான் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களையும், மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். இந்த நுழைவு வரியைப் பொறுத்த அளவில் ஒரு Prestige-ஆக எடுத்துக் கொள்ளாமல் இதனால் பொதுமக்கள் பாதிக்கப்படுவார்கள், தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள், விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள் என்ற அந்த அடிப்படையில் நீங்கள் அதைச் சிந்திக்க வேண்டும். இதை நீங்கள் இரத்து செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே தி.மு.க.வின் சார்பாகக் கேட்டுக் கொண்டு என்னுடைய கருத்தைச் சொல்வதற்கு வாய்ப்பு அளித்த பேரவைத் தலைவருக்கும் நன்றி சொல்லி என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக திரு. ஞானசேகரன் பேசுகிறீர்களா? பொன்முடியோடு பேசிக் கொண்டிருக்கிறீர்களே!

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே General Sales Tax Act-லே கொண்டு வரப்பட்டிருக்கிற 4 சட்ட முன்வடிவுகளில் இரண்டை வரவேற்கிறோம். இரண்டை நான் தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக எதிர்க்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதிலே ஒன்று நீங்கள் பிஸ்கெட்டுக்கு போடக்கூடிய அந்த வரியை எடுத்திருக்கிறீர்கள்; அதை வரவேற்கிறேன். நிச்சயமாக எதிர்க்கவில்லை.

இன்னொன்று சமாதானத் திட்டம் என்று கொண்டு வந்து உயர் நீதிமன்றத்திலே Writ மனுவிலோ அல்லது Writ Appeal-லில் இருக்கக்கூடிய வழக்குகளைத் தவிர மற்ற வழக்குகளை எல்லாம் நீங்கள் சமாதானத் திட்டத்தின் மூலம் முடித்து அந்த arrear tax-ஐ உடனடியாக வசூல் செய்வதற்காக கொண்டுவரப்பட்டிருக்கிற அந்தச் சட்டமுன்வடிவை நான் தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மீதி இரண்டு சட்டங்கள். அதிலே சட்டமுன்வடிவு எண் 12/2002-ல் விசை இயக்கம் கொண்ட இரு சக்கர வண்டிகள், மூன்று சக்கர வண்டிகள், நான்கு சக்கர வண்டிகள், அவற்றைவிட அதிக எண்ணிக்கையில் சக்கரங்கள் கொண்ட வண்டிகள் ஆகியவற்றுடன் வழக்கமாகப் பயன்படுத்தப்படும் இணைப்புப் பட்டியலில் வேறெங்கும் குறிப்பிடப்பட்டுள்ளவை அல்லாத பிறவுமான காற்றடைத்த உருளிகள்—





இது, ரொம்ப தூய தமிழில் இருக்கிறது--உருளிகள், டயர், அதேபோல் உருளிப்பட்டைகள், டியூப் மற்றும் தொங்கற்பட்டைகள் flaps உள்ளடங்கலாக, வேறு ஒன்றும், அதேபோல் விலங்குகளைக் கொண்டு இழுத்துச் செல்லப்படும் வண்டிகளுக்கான உருளிகள், அதேபோல், பல பொருட்களுக்கு நீங்கள் வரியைப் போட்டிருக்கிறீர்கள்.

அதேபோல் Bill No. 19/2002-ல் Entry Tax-லே பலவிதமான பொருட்களை நீங்கள் பட்டியலில் சேர்த்து நிறைய பொருட்களுக்கு அதாவது அலுமினியம், ஆஸ்பெஸ்டாஸ், ஆட்டா, மைதா, ரவா என்று பல பொருட்களுக்கு இப்போது நீங்கள் நுழைவு வரியைப் போட்டிருக்கிறீர்கள். ஏற்கெனவே பொருளாதார மந்தம் நிலவி வரக்கூடிய சூழலில், பணப்புழக்கம் இன்று சமுதாயத்தில் இல்லாமல் திணறிக் கொண்டிருக்கிற இந்தச் சூழலில், இதுபோன்ற வரி விதிப்புகள் நம்முடைய அரசாங்கத்திற்கு வரியைக் கொண்டு வரும் என்று சொல்வதைவிட இது பொருளாதார தேக்கத்தைத்தான் சமுதாயத்திலே ஏற்படுத்தும் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நம்முடைய இந்த General Sales Tax Act பிரகாரம் வரக்கூடிய 66 சதவிகித பணம் அரசாங்கத்திற்கு கிடைக்கக்கூடிய பணம் என்பதிலேகூட நிறைய evasion இருந்து கொண்டிருக்கிறது. அதையே நீங்கள் evasion இல்லாமல் பார்த்து கொஞ்சம் கிடுக்கிப்பிடி போட்டீர்கள் என்று சொன்னால் இன்னும் 20, 30 சதவிகித பணத்தை உங்களால் நிச்சயமாகப் பெற முடியும். ஏனென்றால், Sales Tax Officer-ஐ எல்லாம் பார்த்தீர்கள் என்றால் அவர்கள் எல்லாம் வளமாக இருக்கிறார்கள். அதிலே சில வியாபாரிகள் ரொம்ப evasion செய்கிறார்கள். ஒவ்வொன்றிலும் evasion இருந்து கொண்டிருக்கிறது. அந்த வரி ஏய்ப்பை எப்படி எல்லாம் தடுக்க முடியும் என்கிற ஆய்வினை முழுமையாக நடத்தி இதுபோன்ற வரி போடுவதை கொஞ்சம் தயவு செய்து நீங்கள் நிறுத்துங்கள் என்று நான் உங்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதிலே டயர், டியூப் மீதெல்லாம் நீங்கள் போட்டிருக்கிறீர்கள். இந்த அரசாங்கம் வருகிறபோது மேலும் பளுவை நம்முடைய தலையில் வைக்காது என்ற நம்பிக்கையோடு மக்கள் நமக்கு வாக்களித்திருக்கிறார்கள். இப்போது நீங்கள் நிதி நெருக்கடி என்கிற காரணத்தைச் சொல்லி இப்படியெல்லாம் நிறைய வரியைப் போட்டுவிட்டோம் என்று சொன்னால் பிறகு அவனால் எழுந்து நிற்கவே முடியாது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன், முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இந்த வரி விதிப்பைவிட

வரி இழப்பைத் தடுப்பதன் மூலமே வருவாயை நிச்சயமாக உங்களாலே ஈட்டமுடியும் என்கிற என்னுடைய ஆணித்தரமான கருத்தை மீண்டும் நான் இங்கே வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே இப்போது டயர், டியூப், flaps இவற்றிற்கெல்லாம் போட்டிருக்கிற வரிகளை தயவுசெய்து நீங்கள் உயர்த்த வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 5-45*

அடுத்து entry tax இந்த entry tax போடுவது பற்றி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் எ.வ. வேலு அவர்கள் சொல்கிறபோதுகூட குலேபகாவலி படத்தைப் பற்றியெல்லாம் சுட்டிக்காட்டிச் சொன்னார்கள். முன்பு முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்கள்கூட அப்போது அதை எதிர்த்தார் என்று சொன்னார். ஆனால் அதே கலைஞர் ஆட்சியிலேகூட கொண்டு வந்தார்கள். அதே Entry Tax-ஐக் கொண்டு வந்தார். அதைப் பிறகு நிறுத்தினார்கள். ஆனால் இந்த Entry Tax-ஐப் போடுவதன் மூலம் நிச்சயமாகப் பணப்புழக்கம் வராது. வரக்கூடிய பொருட்களை எல்லாம் எப்படியாவது வரி ஏய்ப்பு செய்து, கொண்டு போய் விடுவார்களேயொழிய, உங்களுக்கு வரி வந்து சேரும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை. ஆகவே நான் பணிவன்போடு கேட்டுக்கொள்வது எல்லாம், இதிலே பலமுனை வரி போடுவதனாலே இன்னும் பெருத்த ஏமாற்றம்தான் வரும். அதாவது வியாபாரிகள் மத்தியிலேயும் கொந்தளிப்பு, மக்கள் மத்தியிலேயும் கொந்தளிப்பு. இவற்றையெல்லாம் நாம் சம்பாதித்துக்கொண்டு எப்படி கரை ஏறப்போகிறோம் என்கிற அச்சம் எனக்கு இருக்கிறது. ஆகவே நான் மாண்புமிகு முதல்வர் அவர்களையும் மற்றும் நம்முடைய மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

நீங்கள் உலை எண்ணெய், வெள்ளை சிமெண்ட், வெப்பம் தாங்கும் சிமெண்ட், அலுமினியம், கல்நார் சிமெண்ட் தகடுகள், குளிர்சாதனப் பெட்டிகள், உராய்வுத் தடுப்பு எண்ணெய், எண்ணெய்ப் பசை, லியூப் ஃபேஸ் எண்ணெய், ஓடுகள், கிரானைட், கிரானைட் கற்பலகைகள், செராமிக் ஓடுகள், இயக்கூர்தி வெறியம் ஆகியவற்றைக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் எங்களுடைய தலைவர் எஸ். ஆர். பி. அவர்கள் சொல்வது போல் கச்சாப் பொருட்களை எல்லாமே நாம் வெளியிலேயிருந்துதான் கொண்டு வருகிறோம். இந்தப் பஞ்சை எடுத்துக்கொண்டாலும் சரி, எல்லா கச்சாப் பொருட்களையும் வெளியிலிருந்து கொண்டு வருகிறபோது, அதனுடைய வியாபாரத்தைப் பெருக்குவதற்கு அடித்தளமாக, ஆதாரமாக அமையக்கூடிய ஒன்று அது. இவற்றுக்கும் நாம் வரி போட்டு தடுத்துவிட்டோம் என்று சொன்னால், சில நேரங்களிலே அவற்றையெல்லாம் கொண்டு வந்து நாம் தயாரித்து, பிறகு விற்க முடியாமல் தவிப்பது, பிறகு பொருளாதாரத் தேக்கநிலையிலே மாட்டிக்கொண்டு விழிப்பது என்று எல்லாம் இருக்கிற சூழ்நிலையை எண்ணி, வியாபாரிகள் இந்தப் பக்கமே தலைவைத்துப் படுக்க மாட்டார்கள். உற்பத்தியாளர்கள் இது வேண்டாம் என்று கைவிட்டு விடுவார்கள். ஆகவே இப்படிப்பட்ட நிலையில் இந்த entry tax-ஐ தயவு செய்து, மிகக் கடுமையாக இருக்கக்கூடிய இந்த entry tax-ஐ, அச்சத்தை ஏற்படுத்தக்கூடிய இந்த entry tax-ஐ நீங்கள் தயவு செய்து தவிர்த்துவிடுங்கள் என்று தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாகக் கேட்டு இந்த இரண்டு சட்டமுன்வடிவுகளையும் நாங்கள் எதிர்க்கிறோம்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழில் துறை மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களாலே அறிமுகம் செய்யப்பட்டு, ஆய்வு செய்யப்படக்கூடிய சட்டமுன்வடிவுகள், எண் 11, 12, 19 மற்றும் 21 ஆகிய இந்தச் சட்டமுன்வடிவுகளிலே 11 என்பதில் பதிவு செய்யப்படாத பிஸ்கட்டுகள் மீதான வரி குறைக்கப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆகவே இது எல்லோரும் வரவேற்கக்கூடிய ஒன்று. இதிலே யாருக்கும் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*

இந்த 12/2002 மூலம் நிறைய பொருட்கள்மீது வரி விதிக்கப்பட்டு, இதனாலே விலைவாசி கூடுதல் ஆவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அந்த வகையிலே பார்ப்போம் என்று சொன்னால், எரிகாரம், பாரஃபின் மெழுகு, தீப்பெட்டி மெழுகு, பொதுவான மெழுகு என பல பொருட்கள் இங்கே சொல்லப்பட்டிருக்கின்றன. இப்படி இந்தப் பொருட்கள் மீதான வரி உயர்வின் காரணத்தாலே இதுசம்பந்தமான தொழில்கள் எல்லாம் பாதிப்பு அடையக்கூடும். குடிசைத் தொழிலான மெழுகு உற்பத்தியைச் செய்யக்கூடிய நிறைய குடும்பங்கள் அதை வைத்து பிழைப்பு நடத்திக்கொண்டிருக்கின்றன. அதைப்போலவே தீப்பெட்டித் தொழிற்சாலை. இந்தத் தீப்பெட்டித் தொழில் என்பது குடிசைத் தொழிலாகவே இருந்துகொண்டிருக்கின்றது. ஆகவே இப்படிப்பட்ட தீப்பெட்டித் தொழிற்சாலைகளிலே பணியாற்றக்கூடிய தொழிலாளர்கள், தொழில் நடத்தக்கூடியவர்கள் எல்லாம் இப்போது நசிந்து போய் அவர்கள் வாழ்க்கையே கேள்விக்குறியாக ஆகிக் கொண்டிருக்கக்கூடிய காலகட்டம் இது. தீப்பெட்டித் தொழிலாளர்கள் எப்படி வாழ்வது என்று நம்முடைய அரசாங்கத்திலே கோரிக்கை வைத்துக்கொண்டிருக்கக்கூடிய இந்த

[திரு. ஜி.கே. மணி] [2002 மே 8

நேரத்திலே இப்படிப்பட்ட வரிவிதிப்பினால் அந்தத் தொழில் மேலும் நலிவடைந்து அவர்கள் வாழ்க்கையே கேள்விக்குறியாக இருக்கக்கூடிய காலகட்டத்திலே இப்படிப்பட்ட வரி உயர்வு தேவையில்லை என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்கு அடுத்து நுழைவு வரி. நுழைவு வரிக்கு என இதிலே சில பொருட்களைக் கொடுத்திருக்கிறீர்கள். உலை எண்ணெய், அலுமினியம், கல்நார் சிமெண்ட் தகடுகள், ஆட்டா, மைதா, ரவா, கோதுமை மாவு, பி.வி.சி., மரக்கூழ் வகை, புரொபாலினால் நெய்யப்பட்ட ஆடைகள், எண்ணெய்ப் பசை, ஓடுகள், காகிதம், கோப்பு அட்டைகள் என நிறைய பொருட்கள் இங்கே சொல்லப்பட்டிருக்கின்றன. ஆகவே இந்தப் பொருட்களுக்கு மாத்திரம் அல்லாமல், இனி எந்தப் பொருட்கள் வந்தாலும்கூட நுழைவு வரி விதிக்கப்படுகின்ற நேரத்திலே விலைவாசி உயருவதற்கு வழி வகுக்கும். ஆகவே சாதாரண மக்கள் பாதிக்கக்கூடிய வகையிலே, தொழில் செய்யக்கூடிய வணிகர்கள், சாதாரண சிறு வியாபாரிகள்கூட பாதிக்கக்கூடிய நிலை இருக்கக்கூடிய காரணத்தாலே, இந்த நுழைவு வரி என்பது தேவையில்லாத ஒன்று. ஆகவே இந்த நுழைவு வரியை நாங்கள் கடுமையாக ஆட்சேபிக்கின்றோம். இது தேவையில்லை என்ற காரணத்தாலே இதை இரத்து செய்ய வேண்டுமென்று இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*பிற்பகல் 5-50*

அதைப்போலவே சமாதானத் திட்டம் என்று ஒன்றைச் சொல்லியிருக்கிறீர்கள். இந்த சமாதானத் திட்டம் இரண்டாவது முறையாக நம்முடைய தமிழகத்தில் கொண்டுவரப்பட்டிருக்கிறது. கடந்த காலங்களிலே நிறைய தொகை வரி வசூலிக்கப்படாமல்— காலையிலேகூட இதுபற்றி பேசப்பட்டது—தேங்கிக் கிடக்கக்கூடிய இந்த வரியை வசூலிப்பதற்காகக் கொண்டுவரப்பட்ட இந்தத் திட்டத்தை அமலாக்குகின்ற நேரத்திலே நாம் எச்சரிக்கையாக, ஜாக்கிரதையாக வேண்டிய நிலையிலே இருந்து கொண்டிருக்கிறோம். எந்த வகையிலே என்று சொன்னால் விற்பனை வரி 1999-2000-ல் வசூல் செய்தது 7024 கோடி. விற்பனை வரி பாக்கி 7,244 கோடி. ஆகவே ஓராண்டில் வசூல் செய்ததைவிட வசூல் ஆகாமல் நிலுவையில் இருப்பது அதிகமாக இருக்கிறது. இப்படி தொடர்ந்து எல்லா ஆண்டுகளிலும் இருக்கின்ற காரணத்தாலே இந்த சமாதானத் திட்டத்தின் அடிப்படையிலே, நீதி மன்றத்தில் வழக்கு இருக்கிறது என்ற காரணத்தைச் சொல்லி ஏதோ சில



2002 மே 8] [திரு. ஜி.கே. மணி]

பேர் தப்பித்துக்கொள்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டுவிடக்கூடாது எந்த வகையிலாவது வரி பாக்கியை நாம் கட்டாயம் வசூல் செய்தாக வேண்டும். எந்த வகையிலும் இந்த சமாதானத் திட்டம் ஏமாற்றக்கூடியவர்களுக்கு வாய்ப்பாக அமைந்து விடக்கூடாது என்பதை இங்கே சொல்ல விரும்புகிறேன். அதே நேரத்தில் இந்த சமாதானத் திட்டத்தில் கிடுக்கிப்பிடி போட்டுப் பிடிக்கின்ற நேரத்திலே சாதாரண ஏழை எளிய சிறு வியாபாரிகள் குறைந்த அளவில் வரி செலுத்தக்கூடியவர்கள் செலுத்திவிட்டு அவர்கள் சிக்கிக்கொண்டு, பெரிய திமிங்கலங்கள் எல்லாம் தப்பித்துவிடக்கூடிய ஒரு நிலைமை உருவாகிவிடக்கூடாது. ஆகவே அப்படிப்பட்ட வகையிலே இந்த சமாதானத் திட்டத்தின் மூலம் வரி பாக்கியை முழுமையாக வசூலிக்க வேண்டும். வழக்கிலேயிருந்து நீதிமன்றத்திலேயிருந்து விடுபட்டு இந்த சமாதானத் திட்டத்தின் மூலமாக முழுமையாக வரி பாக்கியை வசூல் செய்யக்கூடிய வகையிலே அமைய வேண்டுமே தவிர இது எந்த வகையிலும் மீண்டும் வரி ஏமாற்றத்திற்கு உறுதுணையாக இருந்துவிடக்கூடாது என்ற கருத்தை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக தெரிவித்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வைத்திருக்கின்ற இந்தச் சட்டமுன்வடிவுகளில் நுழைவு வரி என்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எதிர்க்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல விற்பனை வரிச் சட்டம், அதில் இருக்கக்கூடிய திருத்தங்களில் ஏராளமான பொருட்கள் இங்கே குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றை மீண்டும் நான் மன்றத்தில் சுட்டிக்காட்ட விரும்பவில்லை. இவை மீது விதிக்கப்படுகின்ற வரியின் விளைவாக விலைவாசி ஏற்றம் மேலும் அதிகரிக்கும் என்பதையும் சிறு தொழில் நடத்தக்கூடியவர்கள் மேலும் இன்னலுக்கு ஆளாவார்கள் என்பதையும், தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கு, வர்த்தக வளர்ச்சிக்கு இது குந்தகமாக இருக்கும் என்பதையும் சுட்டிக்காட்டி இவற்றை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் எதிர்க்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நுழைவு வரியைக் கைவிட வேண்டும். வந்திருக்கக்கூடிய விற்பனை வரிச் சட்டத் திருத்தங்களைக் கைவிட வேண்டும் என்று கேட்டு, இத்துடன் முடித்துக்கொள்கிறேன். இந்த சமாதானத் திட்டத்தையும் நாங்கள் எதிர்க்கிறோம். அது வேறு விதத்தில் வரி ஏய்ப்புக்கு வழிகோலும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. ஜெயக்குமார்.

**திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவுகள்மீது பேசுகின்றபோது எனக்கு அடிப்படைக் குழப்பம் ஒன்று தோன்றுகின்றது. தினமும் கொடுக்கின்ற நிகழ்ச்சி நிரலில் பல எண்களைக் கொடுத்திருக்கின்றீர்கள். ஒவ்வொரு சட்டமுன்வடிவுக்கும் எண் 11-ன்கீழ் 2002 என்றும் 12-ன்கீழ் 2002 என்றும் பல எண்களைக் கொடுத்திருக்கிறீர்கள். ஆனால் எங்களுக்குக் கொடுக்கப்படுகின்ற சட்டமுன்வடிவில் அத்தகைய எண்கள் இல்லாத காரணத்தால் எதை எதோடு ஒப்பிட்டுப் பார்ப்பது என்ற அடிப்படையான குழப்பம் ஏற்படுகிறது. அதை தயவுசெய்து சரிசெய்து கொண்டால், எதிர்காலத்தில் நன்றாக இருக்கும் என்று நான் கருதுகின்றேன்.

இன்றைக்கு சட்டமுன்வடிவு 19/2002-ல் நுழைவு வரியைப் பற்றி குறிப்பிட்டிருக்கின்றீர்கள். அதில் இரண்டாம் பிரிவில் 'ஏ' எனும் கூறானது, 2001 ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள் 1 ஆம் நாளன்றே நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்என்றும், இரண்டாம் பிரிவில் 'பி' எனும் கூறானது, 2002 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27 ஆம் நாளன்றே நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. I do not know whether our suggestions or comments on these relevant amendments are necessary at this stage here at all. ஏனென்றால் இது இப்போது அவைக்குறிப்பில் சொல்ல வேண்டுமென்பதற்காகவே எடுத்து வைக்கப்படுகின்ற கருத்துகளாக இருக்குமேயொழிய இதனால் எதுவும் பெரிதாக பாதிக்கப்படப் போவதில்லை. எங்கள் கருத்துகளுக்கு அவ்வளவு இடம் இங்கே இருக்கப் போவதில்லை என்ற ஒரு கருத்து எனக்கு எழுகின்றது. இந்தத் தலைப்பின்கீழ் மிக விரிவாகப் பேசுகின்ற நல்லதொரு வாய்ப்பினை நான் நேற்று பெற்றிருந்தேன். இதில் விளக்கமான கருத்துகளை நான் ஏற்கெனவே எடுத்து வைத்திருந்தேன்.

*பிற்பகல் 5-55*

இந்த entry tax-ஐ பொறுத்தமட்டில், ஒரு பெரிய அட்டவணையையே இங்கே கொடுத்திருக்கின்றீர்கள். அதில் 21 பொருள்களைக் குறித்தும் பட்டியலிட்டுக் கொடுத்திருக்கின்றீர்கள். அதில் 2-ஏ என்றும் 2-பி என்றும் பிரித்துக் கொடுத்திருக்கின்ற இந்த நேரத்திலே பல உறுப்பினர்கள் இங்கே தங்கள் கருத்துகளை எடுத்து வைத்தார்கள். ஒரு சிலர் மூலப்பொருட்களின்மீது விதிக்கப்படுகின்ற இந்த நுழைவு வரியானது





எதிர்காலத்தில் நம்முடைய தமிழகத்திலே இருக்கின்ற தொழிற்சாலைகளினுடைய உற்பத்தியை பாதிக்கும் என்றும், இது கூடவே கூடாது என்ற கருத்தினையும் எடுத்துச் சொன்னார்கள். நான் நேற்றையதினமே என்னுடைய கருத்தைச் சொன்னேன். அரசாங்கத்திற்கு வருமானம் வருகின்ற வழி எதுவாக இருந்தாலும், அது பெருவாரியாக, நாட்டின் பொருளாதார வளர்ச்சியைப் பாதிக்காத அளவிலே இருக்குமென்றால் அதை இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியானது முழு மனதோடு வரவேற்கின்றது. ஆனால் இந்த அட்டவணையிலே கொடுத்திருக்கின்ற பொருட்களைப் பார்க்கின்றபோது consumer durables என்று சொல்வார்களே, டி.வி., கார் போன்ற இவையெல்லாம் வெளி மாநிலங்களிலேயிருந்து இங்கே உள்ளே வருகின்றபோது அவற்றுக்கு entry tax நுழைவு வரி விதிப்பது சரியானது என்றே நான் கருதுகின்றேன். ஏனென்றால் தமிழகத்திலே செய்யப்படுகின்ற அந்தப் பொருட்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டுமென்ற விதத்திலேயும் அது சந்தையிலே நல்ல விலைக்குச் செல்ல வேண்டுமென்றும் வெளி மாநிலத்திலே இருக்கின்ற பொருள்களெல்லாம் இங்கே கொண்டு வந்து குவித்துவிடக்கூடாது என்பதற்காகவும் அத்தகையதொரு நோக்கோடு இந்த வரி விதிக்கப்படுகின்றது என்றால் இது இருகரம் கூப்பி வரவேற்கப்படுகின்றதாகவே எனக்குத் தோன்றுகின்றது.

அதேநேரத்தில் மூலப் பொருள்களுக்கும், கச்சாப் பொருள்களுக்கும் நம்முடைய தமிழகத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்ற தொழிற்சாலைகளுக்கு வேண்டிய மூலப் பொருட்கள் வெளியிலேயிருந்து வருகின்றபோது அவற்றின்மீது நாம் இந்த வரியைத் திணித்தால் அது நம்முடைய தொழிற்சாலைகளுக்கு விபரீதமான எதிர்காலத்தை உருவாக்கும் என்பதையும் மீண்டும் நான் இந்த அவையிலே வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே இந்த அரசுக்கு நான் சிரம் தாழ்த்தித் தெரிவித்துக்கொள்வதெல்லாம், உங்களுக்கு வருமானம் வருகின்ற வகையிலே, அவை நம்முடைய தொழில்களைப் பாதிக்காத வகையிலே, நம்முடைய நாட்டிலே தொழிற்சாலைகள் வைத்து நடத்திக் கொண்டிருக்கிறவர்கள் மனம் நோகாத வகையிலே இந்த entry tax என்பது திணிக்கப்பட்டால்—திணிக்கப்பட்டால் என்று சொல்வது தவறு—வசூலிக்கப்பட்டால் அது வரவேற்கப்படுகின்ற ஒன்று என்றும் அது நம்முடைய தொழிற்சாலைகளைப் பாதிக்கும் வகையிலே இருக்கும் என்றால் அது வெறுக்கத்தக்கது, ஒதுக்கத்தக்கது, ஒதுக்கப்பட வேண்டியது என்கிற கருத்தினை நான் இன்றையதினம் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. கு. ஜெயக்குமார்] [2002 மே 8

அடுத்து சட்டமுன்வடிவு 21/2002. இதன் மூலமாக இந்தப் பூசல்களையெல்லாம் நிராகரித்து, நேற்றே நான் சொன்னேன், 'நம்முடைய வணிக வரித் துறையானது புதிதாக வரிகள் போடுவதால் பயனில்லை, வசூலிக்க முடியாத வரிகளைப் போட்டு எதைச் செய்யப்போகின்றோம்' என்ற வினாவினை நான் நேற்று எழுப்பினேன். எனவே புது வரிகளைப் போட்டு, அவை வசூலிக்க முடியாத வரிகளாக ஆகும்போது, வரப்போகின்ற ஆண்டிலே நீங்கள் நிதிநிலை அறிக்கையைத் தயார் செய்கின்றபோது, நாங்கள் இத்தனை கோடி வருமென்று வரி போட்டோம், ஆனால் வசூலிக்க முடியாத நிலையிலே இவ்வளவு பற்றாக்குறையாக இருக்கின்றது என்ற நிலை ஏற்படக்கூடாது என்ற காரணத்தினால், புது வரிகளைப் போடுவதைவிட போடப்படுகின்ற வரிகளை வசூலிப்பதற்கு நல்ல முறைகளை அணுக வேண்டும். அத்தகையதொரு நல்ல முறைக்கு வழிகாட்டியாகத்தான் இந்தச் சட்டமுன்வடிவு 21/2002 இங்கே அமைகின்றது என்று நான் கருதுகின்றேன். இதை நீங்கள் செயல்படுத்துகின்ற நேரத்திலே யாரெல்லாம் வரி கட்டுவதற்குத் தயங்குகின்றார்களோ அவர்கள் வரி கட்டுவதற்கு முன் வருகின்ற வகையில் இந்தச் சட்டமுன்வடிவை நீங்கள் அமைத்துக்கொள்ள வேண்டும். இந்த வரி விதிக்கின்ற முறைகளை கணிசமாக, சிக்கலற்ற முறையாக அமைக்க வேண்டும். We should encourage our entrepreneurs and the industrialists to voluntarily come forward to pay their taxes. We should evolve such a system. அது நம்முடைய தமிழகத்திற்கு வரி வருமானத்தை அதிகப்படுத்துவதாக அமையும். அதற்கு இது சாதகமாக இருக்கும் என்று கருதி, இதையும் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக நான் வரவேற்கின்றேன்.

*பிற்பகல் 6-00*

அடுத்து 11-ன்கீழ் 2002 விற்பனை வரிச் சட்டம் (இரண்டாம் திருத்தம்) என்று சொல்லியிருக்கின்றீர்கள். இதிலே பதிவு செய்யப்படாத பிஸ்கட்டுகளுக்கு வரி குறைக்கப்படும் என்று அறிவித்திருக்கிறீர்கள். வரவேற்கத்தக்கது. பதிவு செய்யப்பட்ட பிஸ்கட்டுகளுக்கும் இந்த வரியைக் குறைத்துக் கொண்டால் நல்லது. நான் வரியைக் குறைப்பதை எப்பொழுதுமே ஆதரிப்பவன் அல்ல என்பது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்குத் தெரியும். ஏன் என்றால், தமிழகத்தின் நிதிநிலையை நன்றாக உணர்ந்தவன். நிதிநிலை அறிக்கையை நன்றாகப் பார்த்திருக்கின்ற காரணத்தினால், பதிவு செய்யப்படாத பிஸ்கட்டுகளுக்கு நீங்கள் குறைக்கின்றபோது-- இந்த பிஸ்கட்டுகள் என்பது குழந்தைகளுக்குக் கொடுக்கப்படுகின்ற சத்துணவாகவும், தாய்மார்கள் உண்கின்ற சத்துணவாகவும் மற்றும் பிணியிலே இருக்கின்றவர்கள், நோயாளிகள்கூட



2002 மே 8] [திரு. கு. ஜெயக்குமார்]

இதை உண்கின்ற சத்துணவாகவும் அமைகின்ற காரணத்தினால் மருத்துவமனைகளுக்குக்கூட நாம் செல்கின்றபோது வாங்கிச் செல்கின்ற காரணத்தினால், நோயாளிகளுக்கு எடுத்துச் செல்கின்ற காரணத்தினால், ஒரு சிறப்பு உணவாக நாம் கருதுகின்ற காரணத்தினால்--பதிவு செய்யப்பட்ட பிஸ்கட்டுகளுக்கும் நீங்கள் வரியைக் குறைத்தால் அது நலமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். வேண்டும் என்றால் இறக்குமதி செய்கின்ற பிஸ்கட்டுகளுக்கு எவ்வளவு வரி வேண்டுமானாலும் போடுங்கள். ஏன் என்றால் அது இறக்குமதியை நிராகரிப்பது ஆகவும், உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்குவதற்குத் தூண்டுதலாகவும் அமையும் என்ற கருத்தை இங்கே வலியுறுத்தி, இதையும் நாங்கள் வரவேற்கின்றோம் என்று கூறி நல்ல வாய்ப்பினை அளித்த அவைத் தலைவருக்கு நன்றி கூறி அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விற்பனை வரி விதிப்பு, சிறு தொழில்களை, கைத் தொழில்களைப் பாதிப்பதாக இருக்கிறது. ஆகவே வரி விதிக்கக் கூடாது என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். நுழைவு வரியும் விலை உயர்வதற்குரிய வாய்ப்பாக அமைந்துவிடும் என்ற காரணத்தினாலே அவற்றையும் தவிர்க்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். 'சமாதானத் திட்டம்' என்ற முறையில் எப்படியாவது அரசுக்கு வந்து சேர வேண்டிய வரி வசூலை செய்து விடலாம் என்ற நல்ல நோக்கத்தின் அடிப்படையிலே, அது சொல்லப்பட்டால்கூட நீதிமன்றங்களிலே இருக்கின்ற வழக்குகளையே தவிர்ப்பதற்கான முயற்சிகளை எடுப்பவர்கள், இந்தக் கால அவகாசத்தையும் பயன்படுத்தி தப்பித்துக்கொள்வதற்கான ஒரு முயற்சியை எடுக்கக்கூடும். அரசு 3 மாத காலம் என்று அவகாசம் சொல்கின்றபோது, இந்தக் காலத்திற்குள்ளாகவே அதை வசூலிப்பதற்கான நடவடிக்கைகளை எப்படி எடுக்கப்போகிறது என்பது ஒரு கேள்விக்குறியை உண்டாக்கியிருக்கிறது. ஆகவே இப்படி ஒரு அவகாசம் கொடுத்ததற்குப் பின்னாலே, அவர்கள் செலுத்தத் தவறும் பட்சத்தில், திரும்பவும் நீதிமன்றத்திற்கே செல்ல வேண்டிய அவசியங்கள் வரலாம். ஆகவே மேலும் ஒரு வாய்ப்பைக் கொடுக்கின்றபோது ஒரு இடைவெளியிலே சமாதானத் திட்டம் என்ற இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி இதில் செலுத்துவதற்கான முயற்சிகள் எடுக்காதபோது, திரும்பவும் நீதிமன்றம் செல்கின்றபோது, அதனுடைய வலு குறைந்துவிடும் என்று நாங்கள் கருதுகின்றோம். ஆகவே இந்தத் திட்டம் அப்படி வரி கட்டாதவர்களுக்குரிய வாய்ப்பை அல்லது

ஏமாற்றுவதற்கான ஒரு சந்தர்ப்பத்தை அளித்துவிடும் என்று நாங்கள் கருதுகின்றோம்.

அடுத்து குறிப்பாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சினிமாத் துறைக்கு ஒரு சலுகையை அறிவித்தார்கள். அது திரையரங்கு உரிமையாளர்களுக்கு மிகப் பெரிய வாய்ப்பாக அமைந்திருக்கிறது. ஆனால் 20 ரூபாய் விற்றுக்கொண்டிருந்த டிக்கெட் இப்போது கிட்டத்தட்ட 49 ரூபாய் அளவிற்கு விலை உயர்த்தப்பட்டு விட்டது. ஆகவே கிட்டத்தட்ட 2 மடங்கு, 3 மடங்கு விலை உயர்வு வந்திருக்கிறது. ஆனால் அதற்குரிய வரி மற்ற விஷயங்களைப் பார்க்கிறபோது மிகக் குறைந்த நிலையிலே வந்திருக்கிறது. ஆகவே இப்படி உயர்த்துவதன் மூலமாக பாதிக்கு மேலாக டிக்கெட்டினுடைய கட்டணம் உயர்த்தப்பட்டுவிட்டது. ஆகவே அதைப் பற்றியெல்லாம் யோசித்து, அதன் மூலமாக வருகிற அந்த வரி வருவாய் பற்றியும் சிந்திப்பதற்கான முயற்சிகளை எடுத்து அரசுக்கு வரக்கூடிய வரியைப் பெருக்குவதற்கான முயற்சியை எடுக்க வேண்டும். கிட்டத்தட்ட 7,000 கோடி ரூபாய் வராமல் இருக்கிறது என்று சொல்கிறபோது, சாதாரண ஏழை விவசாயிகள், ரூ. 5,000, 3000 என்று கடன் பட்டிருந்தால், அவர்களுக்கு நிர்ப்பந்தம் கொடுத்து, ஜப்தி செய்கின்ற முயற்சிகள் எல்லாம் பொதுவாக இருக்கிறது சட்டத்திலே. ஆனால் இப்படிப்பட்டவர்களை எந்தச் சட்டத்தின் மூலமாகவும் தண்டிக்க முடியாமல் இருக்கிறதே என்ற வேதனையை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே தெரிவித்து அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன்.

*பிற்பகல் 6-05*

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணிக வரித் துறை என்பது பொன் முட்டையிடுகின்ற வாத்து. நம்முடைய வருவாயிலே மிக அதிகமான பங்கினை நமக்குத் தருவது அந்தத் துறை. அந்தத் துறையைக் கையாளும்போது, இரு முனைகளிலும் கூர்மையாக உள்ள கத்தியைக் கையாளுவதைப் போல கையாள வேண்டும். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒழுங்காகக் கையாளவில்லையென்று சொன்னால், அது அவரையும், அவருடைய துறையையும் பாதிக்கும் என்பதை ஓர் எச்சரிக்கையாக நான் அவருக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கூர்ந்த மதி நுட்பமும், கருணையுள்ளமும் கொண்ட நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், நம்முடைய அரசியல் வழிகாட்டிகளான பேரறிஞர் அண்ணா அவர்கள் செய்யாத ஒரு காரியத்தை, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் செய்வதற்கு முயற்சி செய்து, பல அரசியல் கட்சித் தலைவர்களும் சொன்னதற்கு இணங்கி, அவர்களுடைய கருத்துகளுக்கு செவி சாய்த்து, திரும்பப் பெற்ற ஒரு வரியை, தாங்கள் போட வேண்டாம் என நான் உங்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.





நீங்கள் எப்படித்தான் எடுத்துச்சொன்னாலும், இதனால் கடைசியிலே பாதிக்கப்படுவர்கள் யார் என்று சொன்னால் consumers, நுகர்வோர்கள்தான் பாதிக்கப்படுவார்கள்; உபயோகிப்பவர்கள்தான் பாதிக்கப்படுவார்கள். நாம் சட்ட திட்டங்களை எல்லாம் சொல்வோம். இப்படி இப்படி எல்லாம் சட்டத்தைப் போடுவோம் என்று சொல்வோம். ஆனால் நடைமுறையில் பார்க்கிறபோது யார் பாதிக்கப்படுவார்கள் என்று சொன்னால் உபயோகிப்பாளர்கள், நுகர்வோர்கள்தான் பாதிக்கப்படுவார்கள். ஆகவே இந்த நுழைவு வரியை, நம்முடைய அரசியல் வழிகாட்டிகள் கொண்டு வராத நுழைவு வரியை நாம் கொண்டுவர வேண்டாம் என நான் பணிவன்போடு இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல சமாதானத் திட்டம் என்ற ஒரு திட்டத்தைச் சொல்லியிருக்கின்றீர்கள். பல பகுதிகளிலே கட்டப் பஞ்சாயத்து நடக்கிறது. கட்டப் பஞ்சாயத்திலே என்ன கிடைக்கும்? குரங்கு ஆப்பத்தைப் பங்கு போட்ட கதையாக முடியும். இரண்டு பேர் பஞ்சாயத்திற்குச் செல்கிறார்கள். இரண்டு பேர் பஞ்சாயத்திற்குச் சென்றபோது குரங்கு பஞ்சாயத்து செய்ததாம். இரண்டு பேருக்கும் எதுவும் கிடைக்காமல், குரங்கு முழுவதையும் தின்றதாகச் சொல்வார்கள். எங்களுடைய ஊரிலேகூட ஒரு கதை சொல்வார்கள். ஒரு பெரியவர் தன்னுடைய வயதான காலத்திலே தன்னுடைய இரண்டு மகன்களையும் அழைத்து, உங்களுக்கெல்லாம் என்னுடைய சொத்தை எழுதி... (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசன், கதையெல்லாம் கொஞ்சம் ஓய்வாகக் கேட்போம். சட்டமுன்வடிவில் பேசுங்கள்.

**திரு. ப. அரசன்:** நல்ல சுவையாக இருக்கும் இந்தக் கதை. தன்னுடைய இரண்டு மகன்களையும் அழைத்து, இங்கே வாருங்கள். என்னுடைய சொத்தை உங்களுக்குப் பிரித்து எழுதி வைத்திவிடுகிறேன். என்று

சொன்னாராம். அதற்கு அந்த இரண்டு மகன்களும் சொன்னார்களாம். நீங்கள் எழுதி வைத்தால் எழுதி வைத்துவிடுங்கள்; இல்லையென்றால் போங்கள்; எங்களுக்கு இரண்டு வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள்; அவர்களை வைத்து நாங்கள் சொத்தைப் பிரித்துக்கொள்கிறோம் என்றார்களாம். அப்போது அந்தப் பெரியவர் சொன்னாராம். மூத்தவரைப் பார்த்து, உன்னுடைய வழக்கறிஞருடைய பெயரைச் சொல் என்று சொன்னாராம். அந்த மூத்தவன் தன்னுடைய வழக்கறிஞர் பெயரைச் சொல்லியிருக்கிறார். அதைப்போல இளையவனைப் பார்த்து, உன்னுடைய வழக்கறிஞர் பெயர் என்னவென்று கேட்டிருக்கிறார். அவரும் அந்தப் பெயரைச் சொல்லியிருக்கிறார். சரி, சரி, இந்தச் சொத்தை நான் அவர்கள் இரண்டு பேருக்கும் எழுதி வைத்துவிடுகிறேன் என்று சொன்னதாக நம்முடைய பகுதியிலே ஒரு கதை சொல்வார்கள். அதைப்போல இந்த கட்டப் பஞ்சாயத்து, சமாதானத் திட்டம் என்பது அரசுக்குப் பயன் விளைவிக்குமா? நீங்கள் நினைக்கிற வரி வருமா என்பது ஐயமாக இருக்கிற காரணத்தினாலே இந்த சமாதானத் திட்டம் ஒரு சிறந்த திட்டமல்ல.

காலையிலேகூட நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் தன்னுடைய மானியக் கோரிக்கையிலே பதில் சொன்னார்கள். எனக்கு பேசுவதற்கு வாய்ப்பு இல்லை. சென்ற ஆண்டு நீங்கள் சிறு சேமிப்பு திட்டத்திலே 2400 கோடி ரூபாய் வசூலிக்க வேண்டுமென்று திட்டமிட்டிருந்தீர்கள். ஆனால் நீங்கள் வசூலித்தது 1850 கோடி ரூபாய். 550 கோடி ரூபாய், அதிலே இலக்கை எட்ட முடியவில்லை. இதுபோன்று மற்ற துறைகளிலே இலக்கை எட்டுவதற்கு முயற்சி செய்ய வேண்டுமே அல்லாமல் இதைப்போல நுழைவு வரி விதிப்பதும், பல முனை வரி விதிப்பதும் பொது மக்களை, உபயோகிப்பாளர்களை, நுகர்வோர்களைப் பெரிதும் பாதிக்கும். ஆகவே இதை நீங்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாமன்ற உறுப்பினர்கள் சமாதானக் குழுத் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். ஏற்கெனவே இரு சமாதானத் திட்டம் இருந்த நிலை சீரமைக்கப்பட்டுத்தான் புதிதாக இன்று கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்தத் திட்டம்—கடந்த ஆண்டில் ரூ.19.27 கோடி



வருமானம் என இருந்ததை, மேலும் அதிகமான வருமானம் வருகின்ற வகையில்தான் சீரமைக்கப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்தில் கூறுகின்றேன்.

பிற்பகல் 6-10

உறுப்பினர் அனைவரும் நுழைவு வரியைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் பேசும்பொழுது, அவர்களது தலைவர்களைப் பற்றியும், பல்வேறு தலைவர்களையும் உதாரணம் கூறி குறிப்பிட்டார்கள். 1990 ஆம் ஆண்டு வாகனங்களின் மீதான நுழைவு வரி, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் கொண்டுவரப்பட்டது என்பதை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்று நுழைவு வரியைக் கொண்டு வந்ததற்கான காரணம், பேப்பர், பி.வி.சி. பைப் போன்றவை தமிழ்நாட்டில் கிடைக்கக்கூடிய பொருள். இதை இங்கே வாங்காமல், வணிகர்களும், உபயோகிப்போரும் வெளிமாநிலங்களுக்குச் சென்று அம்மாநிலங்களுக்கு வரியினையும் செலுத்தி வாங்கி வருகின்றார்கள். இதனால் தமிழ்நாட்டில் விற்பனை குறைந்துவிட்டது. மேலும் இங்கே இயங்குகின்ற தொழிற்சாலைகள் சிரமப்படுகின்ற சூழ்நிலைகள் இருக்கின்றன. எனவேதான் தமிழ்நாட்டு தொழிற்சாலைகளை ஊக்கப்படுத்தவும், தமிழ்நாட்டிற்குரிய வரியினைப் பெறும் நோக்கத்துடனும் நுழைவு வரி விதிக்கப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். எனவே மாமன்ற உறுப்பினர்கள் நான் கொண்டுவந்த 11,12,19 மற்றும் 21/2002 ஆகிய சட்டமுன்வடிவுகளை நிறைவேற்றித் தருமாறு கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2002) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.





### (ஈ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2002), மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2002) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறவேண்டும்".

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

---

@ 17-4-2002ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[பேரவைத் தலைவர்] [2002 மே 8

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2002) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

**(உ) தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் கொணரும் பொருட்களின் மீதான நுழைவு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் கொணரும் பொருட்களின் மீதான நுழைவு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2002), மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.



2002 மே 8]

***மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் கொணரும் பொருட்களின் மீதான நுழைவு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2002)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் இல்லை என்க. இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிற்பகல் 6-15

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@ 2-5-2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் கொணரும் பொருட்களின் மீதான நுழைவு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2002) நிறைவேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது:

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

### (ஊ) தமிழ்நாடு விற்பனை வரி (பூசல்களைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (பூசல்களைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/2002), மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.





***மாண்புமிகு திரு.செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (பூசல்களைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/2002) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 15 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 15 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@ 7-5-2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (பூசல்களைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/2002) நிறைவேற்றப் பெறவேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

### (எ) தமிழ்நாடு பிளாஸ்டிக் பொருட்கள் (விற்பதனை, சேமித்து வைப்பதனை, ஏற்றிச் செல்வதனை மற்றும் பயன்படுத்துவதனைத் தடை செய்தல்) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிளாஸ்டிக் பொருட்கள் (விற்பதனை, சேமித்து வைப்பதனை, ஏற்றிச் செல்வதனை மற்றும் பயன்படுத்துவதனைத் தடை செய்தல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/2002), மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.





**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிளாஸ்டிக் பொருட்கள் (விற்பதனை, சேமித்து வைப்பதனை, ஏற்றிச் செல்வதனை மற்றும் பயன்படுத்துவதனைத் தடை செய்தல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/2002) @ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன், பிளாஸ்டிக் ஆதரவாளர். (சிரிப்பு)

***திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறையினுடைய அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற, சட்டமுன்வடிவு எண் 22-ஐப் பொறுத்து, என்னுடைய கருத்துகளை இங்கே எடுத்து வைக்க வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பிளாஸ்டிக் பொருட்களை--கைப் பைகள், கோப்பைகள், டம்ளர், தட்டு, கரண்டி, முள் கரண்டி, கத்தி, ஸ்ட்ரா, திரவ உறிஞ்சி, பெட்டி, மூடி, பட்டை, கயிறுகள், விரிப்பு, பாய்கள் போன்ற பிளாஸ்டிக் பொருட்களை—தமிழகத்திலே பயன்படுத்தக்கூடாது என்று இந்தச் சட்டமுன்வடிவின் வாயிலாக இங்கே எடுத்துக்கூறி இருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு உலகம் முழுவதும், ஒட்டுமொத்தமாக மக்களோடு ஒன்றி இருக்கின்றது இந்தத் தொழில். தமிழகத்தைப் பொறுத்தவரையில், சுமார் 6,000 சிறிய, நடுத்தரத் தொழில்கள் சென்னையிலிருந்து கன்னியாகுமரி வரை பரந்திருக்கின்றன. தமிழகத்திலே படித்தவர்கள், பட்டம் பெற்றவர்கள், கல்விப் படிப்பு முடித்தவர்கள், நடுத்தரப் படிப்பை முடித்தவர்கள் எல்லாம், இந்தத் தொழிலிலே ஈடுபட்டு, ஏறத்தாழ 20 இலட்சம் தொழிலாளர்கள் இதிலே பணியாற்றுகின்ற ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கின்றது.

அதேநேரத்தில் வங்கிகளும், நிதி நிறுவனங்களும் இந்தத் தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்காகவும், நடத்துவதற்காகவும் பல கோடி ரூபாயை நிதியாக, கடனாக வழங்கியிருக்கின்ற சூழ்நிலையில், திடீரென்று பிளாஸ்டிக் பொருட்களைப் பயன்படுத்துவது, சேமித்து வைப்பது, எடுத்துச் செல்வது ஆகியவற்றை மிகப் பெரிய குற்றமாகக் கருதி, அதைத் தடுக்க நான்கு பிரிவுகளாகப் பிரித்து, மிக அதிகபட்சமாக

---

@ 7-5-2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

50,000 ரூபாய் அபராதத் தொகை என்றும் இங்கே நீங்கள் அறிவித்துள்ளீர்கள்.

பிற்பகல் 6-20

அதேநேரத்தில் பிளாஸ்டிக் பொருள்களினால் பல நன்மைகள் ஏற்படுகின்றன. உதாரணமாக, பயிர்களின் வளர்ச்சியைத் துரிதப்படுத்துகிறது பிளாஸ்டிக். இளம் நாற்றுகளைப் பாதுகாக்கிறது. முளைகளை இளம் பருவத்தில் நடுவதற்கு உதவுகிறது. கிருமி நாசினிகள், பூச்சி மருந்துகளின் உதவி இல்லாமலேயே களைகளை வளரவிடாமல் தடுக்கிறது. நீர் வற்றுவதை, நீராவியாவதைத் தடுக்கிறது. வறண்ட நிலங்களுக்கு மிகவும் அவசியமானது. நீரினால் மண் அரிக்கப்படாமல் தடுக்கிறது. காய்கறி, பழ வகைகளில் அழுகல் ஏற்படுவதைக் குறைக்கிறது. உரங்களை அபாயமற்ற சிறப்பான முறையில் பயன்படுத்த உதவுகிறது. பிளாஸ்டிக் பொருட்கள், தாவரங்களைப் பல வகைகளிலே பாதுகாக்கின்றன.

வீட்டிற்கான மரச் சாமான்கள், கட்டடப் பொருட்கள், சுமை தூக்கிக் கருவிகள் போன்றவை, மரத்திற்குப் பதிலாக பிளாஸ்டிக்கால் தற்போது செய்யப்படுவதால் காடுகள் பெருமளவில் அழிக்கப்படுவதைக் குறைக்க முடிகிறது. நீர்ப்பாசனம் மற்றும் வெள்ளப் பாசனம், சொட்டு நீர்ப் பாசனம் போன்ற முறைகளில் பிளாஸ்டிக் குழாய்களே பெருமளவில் பயன்படுகின்றன. உதாரணமாக, உலகத்திலேயே மிக அதிக அளவில் விவசாயத்தைப் பெருக்குகின்ற நாடு இஸ்ரேல் நாடு. அந்த நாட்டிலே மழை என்பது, 6 ஆண்டுகளுக்கு 7 ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் வருகிறது. அந்த நாட்டில் பிளாஸ்டிக் குழாய்கள் மூலமாகத்தான் நீரைச் சேமித்து வைத்துக் கொள்கிறார்கள். 7 ஆண்டுகளுக்கு ஒருமுறை பெய்கின்ற மழை நீரைச் சேமித்து வைத்துக் கொள்கிறார்கள்.

அதுமட்டுமல்ல. சீனாவிலே விவசாயத்திற்கு, சுமார் ஓராண்டுக்கு 10 இலட்சம் டன் பிளாஸ்டிக் பொருட்களைப் பயன்படுத்துகிறார்கள். அதேபோன்று உலக அளவிலே வளர்ச்சியடைந்த நாடாக இருக்கின்ற, செல்வச் செழிப்பான நாடாக இருக்கின்ற அமெரிக்காவிலே, அனைத்து வேலைகளுக்கும், உணவுப் பொருட்களை பதப்படுத்துவதிலேயிருந்து, மருந்துப் பொருட்களைச் சேமித்து வைப்பதிலிருந்து, பால் மூலமாக உற்பத்தி செய்கின்ற சுமார் 20, 30 பொருட்களை பல ஆண்டுகளுக்கு, ஓராண்டு, இரண்டு ஆண்டுகளுக்கு சேமித்து வைப்பதிலிருந்து பிளாஸ்டிக் பைகளைத்தான் அவர்கள் தேர்ந்தெடுத்துள்ளார்கள். ஆகவே இயந்திரங்கள்





மூலமாக பிளாஸ்டிக்கை சுமார் 100 முறைக்கு மேல் மீண்டும் மீண்டும் உரு மாற்றலாம். அதேநேரத்தில் பிளாஸ்டிக்கை, நம் அண்டை நாடுகளான, சிறிய நாடுகளான, சிங்கப்பூர், மலேசியா, ஹாங்காங் போன்ற சிறிய நாடுகளிலே, use and throw-ஆகத்தான் அங்கே அனைவரும் பயன்படுத்துகிறார்கள்; தட்டுகள், பிளாஸ்டிக் கரண்டிகள், காபி சாப்பிடுவதற்கு சிறிய டம்ளர்கள் எல்லாம். அதே நிலைதான் தமிழகத்திலேயும் இருக்கிறது. ஆனால் அரசு இதுபோன்ற பொருட்களை பல இடங்களில் எறியாமல், ஒரு குறிப்பிட்ட இடத்தில், dust bin-களை வைத்து, இந்த இடத்தில்தான் எறிய வேண்டும் என்று உள்ளாடசித் துறை மூலமாக, மாநகராட்சி மூலமாக, அல்லது நகராட்சிகள் மூலமாக, அல்லது பஞ்சாயத்துக்கள் மூலமாக அதை வலியுறுத்தினால், அது நன்றாக இருக்கும். அதைத் தவிர்த்து, பிளாஸ்டிக்கையே தடை செய்வது என்கிற வகையில் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தால், இதனால் பல்வேறு பிரச்சினைகள் வரும். சாதாரணமானவர்கள், பாமர மக்கள் பயன்படுத்துகின்ற பிளாஸ்டிக் கரண்டிகள், ஸ்பூன்கள், முள்கத்தி முள் கரண்டிகள் போன்ற பொருட்களை விலை கொடுத்து வாங்குவதற்கு அவ்வளவு வசதி இல்லாத இந்த ஏழை நாட்டிலே இதைத் தடை செய்வதை நாம் தவிர்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். உதாரணமாக இப்போது ஐஸ் விற்கிறார்கள். அதிலே சில்வர் கரண்டி போட்டுத் தரமாட்டார்கள். ஏனென்றால் ஐஸினுடைய விலை 5 ரூபாய், அல்லது 6 ரூபாய்தான் இருக்கும். அதேபோல இளநீர் குடிக்கிறோம். அங்கே 'ஸ்ட்ரா'தான் போட்டுத் தருவார்கள். அதற்குப் பதிலாக நாம் சில்வர் ஸ்ட்ரா போட்டுத் தரச் சொன்னால், முடியுமா? அது முடியாது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் இவற்றையெல்லாம் அரசு கவனத்திலே கொள்ள வேண்டும். நாம் சில்வர் கரண்டியையும் பயன்படுத்த முடியாது அல்லது உலோகத்தால் செய்த 'ஸ்ட்ரா'வையும் பயன்படுத்த முடியாது அல்லது வெள்ளி டம்ளரையும் நாம் பயன்படுத்த முடியாது, அலுமினிய டம்ளரையும் நாம் பயன்படுத்த முடியாது. ஏனென்றால், கழுவ வேண்டிய சிரமம் ஏற்படும். தண்ணீர்த் தட்டுப்பாடு இப்போது இருக்கிறது. ஆகவே இவற்றையெல்லாம் மனதிலே கொண்டு, பிளாஸ்டிக்கைத் தடை செய்கின்ற இந்த மசோதாவை நீங்கள் திரும்பப் பெற வேண்டும். அதே நேரத்தில் நான் இந்த மசோதாவை எதிர்க்கிறேன் என்பதைச் சொல்லி, எனக்கு வாய்ப்பு தந்த பேரவைத் தலைவருக்கு நன்றி சொல்லி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 6-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. பொன்முடி.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்திற்கான நோக்கம் ஏற்கப்படக்கூடியதாக இருந்தாலும்கூட, இதை நடைமுறைப்படுத்துவதிலே ஏற்பட்டிருக்கிற சிக்கல்களைப்பற்றி அரசு சிறிது கவனம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

முதலாவதாக, இந்தச் சட்டத்திலே non-usable என்ற ஒரு வார்த்தையைப் போட்டிருக்கிறீர்கள். 'மறு பயன்பாடற்ற', இதை எப்படி வேண்டுமானாலும் அதிகாரிகள் interpretation செய்யலாம். குறிப்பாக நாம் மினரல் வாட்டர் பாட்டிலை எடுத்துக்கொண்டு போகிறோம். அதை use பண்ணிவிட்டு சில பேர் தூக்கிப் போடுவதும் உண்டு. அதையே எடுத்துக்கொண்டு போய் வீட்டிலும் use பண்ணுவதும் உண்டு. நாம் use and throw என்று சொல்லும்போது, சில பொருட்களை மட்டும்தான் இந்த மாதிரி பண்ணுகிறோம். வேறு மாதிரி சில பொருட்கள் இருக்கிறபோது, எந்தப் பொருள் அது என்ற Technical definition, atleast எந்தப பொருட்களினால் செய்யப்படுகிற பிளாஸ்டிக்குக்ளை நாம் தடை செய்கின்றோம் என்ற விளக்கம் வேண்டும். இந்த விளக்கம் என்பது இல்லையானால் நிச்சயமாக அதை நடைமுறைப்படுத்துகிற அதிகாரியின் கையிலே interpretation செய்துகொள்கிற அதிகாரத்தைக் கொடுப்பதாக அமையுமே தவிர, இது சரியாகச் செய்வதாக இருக்க முடியாது.

அதுமட்டுமல்ல. நீங்கள் இந்தச் சட்டத்தை ஒரேயடியாக அமல்படுத்த வேண்டுமென்று நினைக்கின்றீர்கள். உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்கள், ஏற்றிச் செல்பவர்கள், சேமித்து வைப்பவர்கள், பயன்படுத்துகிறவர்கள், ஆகிய ஐந்து பேரின் மீது ஒரே நேரத்தில் செலுத்தினால், எல்லோரையும் அது பாதிக்கும். நீங்கள் உண்மையிலேயே இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று எண்ணினால், முதலிலே தொழிற்சாலைக்கு கால அவகாசம் கொஞ்சம் கொடுங்கள். ஏனென்றால் அவர்களும் இலட்சக்கணக்கிலே raw materials-களை வாங்கி வைத்திருக்கிறார்கள். இந்த raw materials-ஐப் பயன்படுத்தி, அவர்கள் உற்பத்தி செய்கிற பொருட்களை முதலிலே தொழிற்சாலைகளிலே நிறுத்த வேண்டும். ஆறு மாதம் காலம் கொடுத்து, தொழிற்சாலைகள் உற்பத்தி செய்கிற இடங்களிலே நீங்கள் நிறுத்திவிட்டு அதற்குப் பிறகு, ஆறு மாதம் கொடுத்து விற்பனையாளர்களிடம் நிறுத்தி விட்டு, அதற்குப் பிறகு





ஒரு வருடம் அல்லது ஒன்றரை வருடங்கள் கழித்து பயன்படுத்துபவர்களிடம் நீங்கள் நிறுத்தினீர்கள் என்று சொன்னால் உண்மையிலே இது அமல் நடத்துவதற்கு ஆக்கபூர்வமான யோசனையாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். ஒரே நேரத்தில் இப்போது நீங்கள் செய்தால் எவ்வளவு பேர் பாதிக்கப்படுவார்கள்? தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்கிறவனும் பாதிக்கப்படுவான். விற்பனை செய்கிறவன், இலட்சக்கணக்கிலே வாங்கி வைத்துக் கொண்டு இருப்பவனும் பாதிக்கப்படுவான். வீட்டிலே பயன்படுத்திக்கொண்டிருக்கின்ற ஏழையெளிய மக்களும் பாதிக்கப்படுவார்கள். இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையிலே இதை உடனடியாக, ஒரே காலகட்டத்திலே அமல்படுத்துவது என்பது நடைமுறைக்கு சாத்தியமாக இருக்காது.

உதாரணத்திற்குச் சொல்கிறேன். திருப்பதியில் லட்டு வாங்கிக் கொண்டு வரும்போதே, அங்கே பிளாஸ்டிக் பையிலேதான் லட்டைப் போட்டுக் கொடுப்பார்கள். திருப்பதியில் லட்டை வாங்கிக் கொண்டு வேலூர் வரும்போது, அந்த பிளாஸ்டிக் பையை நீ பயன்படுத்தினாய் என்று சொல்லி 50 ரூபாய் fine போட்டால், லட்டு வாங்கின காசும்போய் fine கட்ட வேண்டிய சூழ்நிலை அவனுக்கு வந்துவிடக்கூடாது. ஏனென்றால் மற்ற மாநிலங்களிலே, சுற்றியிருக்கின்ற மாநிலங்களிலே இதைப் பயன்படுத்துகின்றபோது, இதற்கு interpretation சரியான முறையிலே இல்லாது இருக்கின்ற காரணத்தால், நடைமுறைப்படுத்துகின்றபோது பிரச்சினைகள் வரும். இந்தத் தொழிற்சாலைகளை நம்பி- பல தொழிலாளர்கள்-வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். மூலதனத்தைச் செய்திருக்கின்ற பல்வேறு தொழிற்சாலைகளும் இருக்கின்றன. ஆகவே தொழிற்சாலை அதிபர்களையும் அழைத்துப் பேசி, ஆறு மாதம், ஒரு வருடத்தில் உங்களுடைய மூலப்பொருட்கள் தீருகின்றவரை உற்பத்தியை வைத்துக்கொள்ளுங்கள் என்று அவர்களுக்கு ஆறு மாதம் ஒரு வருடம் கால அவகாசத்தைக் கொடுத்து, அதற்குப் பிறகு விற்பனையாளர்களுக்கு ஒரு கால அவகாசத்தைக் கொடுத்து, பயன்படுத்துபவர்களுக்கும் கால அவகாசத்தைக் கொடுப்பீர்கள் என்று சொன்னால் இந்த நோக்கம் நிறைவேறுவதற்கு வசதியாக இருக்கும். அதை விட்டுவிட்டு ஒரேயடியாக பயன்படுத்தவும் கூடாது என்று சொன்னால் சரியாக இருக்காது. ஏழையெளிய மக்கள், குடிசைகளில் வாழ்கிற மக்கள் எல்லாம் தண்ணீர் பிடிப்பதற்குக்கூட, பெரும்பாலான இடங்களில் பிளாஸ்டிக் குடங்களைத்தான் பயன்படுத்துகின்றார்கள். ஆனால் நீங்கள் சொல்லும்போது, நாங்கள் reusable-ஐத்தான் சொல்கிறோம் என்று இதே interpretation-லே அதையும் சொல்லலாம். ஆனால் இதே interpretation-லே அதையும்

[டாக்டர் க. பொன்முடி] [2002 மே 8

சொல்வதற்குக்கூட வாய்ப்பு இருக்கும். ஆகவேதான் இதனைப் பொறுத்தவரையிலே, இதைக் கொஞ்சம் நிதானமாக ஆலோசித்து, யோசித்து, இந்தச் சட்டத்தை நிறைவேற்றினால் சரியாக இருக்கும். ஆகவே தற்போது இந்தத் திருத்தங்களையெல்லாம் ஏற்றுக்கொண்டு படிப்படியாக இந்தச் சட்டத்தைக் கொண்டுவருவோம் என்று சொன்னால் உண்மையிலே, இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று என்னுடைய கருத்தைச் சொல்லி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவின் மீது எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் நண்பர் ரங்கநாதன் அவர்கள் ஒரு பெரிய ஆய்வே நடத்தி இந்த பிளாஸ்டிக்கினுடைய சிறப்புகளைப் பற்றி மிக அழகான முறையிலே எடுத்துரைத்தார்கள். இந்த பிளாஸ்டிக் திடீரென்று தடை செய்யப்படுவதனால் ஏற்படக்கூடிய சிரமங்களைப் பற்றி மிகத் தெளிவாக எடுத்துரைத்திருக்கிறார்கள்.

விதி 5-ல் இந்தப் பிரிவுகள் எந்த நோக்கத்திற்காக—பிளாஸ்டிக் பொருள் என்றால், 'மறுபயன்பாடற்ற பிளாஸ்டிக் கைப்பை, கோப்பை, டம்ளர், தட்டு, கரண்டி, முள் கரண்டி, கத்தி, திரவ உறிஞ்சி, பெட்டி, மூடி, பட்டைக் கயிறுகள், விரிப்பு, பாய்கள் அல்லது பிளாஸ்டிக் அடங்கிய அல்லது பிளாஸ்டிக்கால் செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் அரசால் அறிவிக்கை செய்யப்படக்கூடிய வேறு பொருள்' என்று பொருள் கூறப்பட்டிருக்கிறது. ஆக பிளாஸ்டிக் உபயோகம் பெரும்பாலும், முழுவதுமாக தடை செய்யப்படுகிறது. இதற்குக் காரணம், இந்தப் பிளாஸ்டிக் மக்கும் தன்மையற்றது. அதுதான் நோக்கத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. இந்த பிளாஸ்டிக் என்பது, மேற்சொன்ன பிளாஸ்டிக் மக்கும் தன்மையற்றது. Non-biodegradable. மறுபயன்பாடற்ற பிளாஸ்டிக் பொருட்கள் ஒருமுறை பயன்படுத்தப்பட்டு, பின்பு தூக்கி எறியப்பட்டு விடுகிறது என்றும் இதிலே சொல்லப்பட்டிருக்கிறது. இது எந்த அளவிற்குச் சரியாக இருக்கும் என்பதை நாம் கொஞ்சம் யோசித்துப் பார்க்க வேண்டும். இன்றையதினம் பிளாஸ்டிக் இல்லாமல் சாதாரணமான மக்கள் வாழ்க்கையிலே கற்பனைகூட செய்து பார்க்க முடியாது. காலையிலே எழுந்தவுடனே முதலில் அவர்கள் பிளாஸ்டிக்கிலேதான் விழிக்கின்றார்கள். அவர்கள் சொன்னதைப்போல தடம் பிளாஸ்டிக்கிலே இருக்கிறது. அதை reusable என்று சொல்லலாம். அதையே நீங்கள் non-reusable என்றும் சொல்ல முடியும். கீழே விழுந்தால்



2002 மே 8] [திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்]

உடைந்து போய்விடும். Non-reusable தான் அது. பக்கெட் பிளாஸ்டிக்கில்தான் இருக்கிறது. குவளை பிளாஸ்டிக்கில்தான் இருக்கிறது. காலையிலே பால் வாங்கிக் கொண்டு வந்தால் அந்த பால் இந்த பிளாஸ்டிக், குழலைப் பையில்தான் இருக்கிறது. எண்ணெய் குழலைப் பை உறையில்தான் இருக்கிறது. எதையெடுத்தாலும் இந்தப் பிளாஸ்டிக் இல்லாமல், எதையுமே இன்றையதினம் பார்க்க முடியாது. மருத்துவமனைகளுக்குப் போனீர்களென்றால், சுகாதாரமாக இருக்க வேண்டுமென்று சொன்னால், இந்த பிளாஸ்டிக்கில் செய்யப்பட்டதுதான்; சரியாகச் சொன்னால் Disposable Syringe இருக்கிறது. பிரச்சினையே இல்லை. பழைய Syringe என்று வைத்துக் கொள்ளுங்கள். அதை அவர்கள் கொதிக்க வைத்தார்களா, இல்லையா? ஒருவருக்குப் போட்டதையே மறுபடியும் உபயோகிக்கிறார்களா என்பது நமக்குத் தெரியாது. Disposable Syringe என்றால், நாமே எடுத்துச் செல்ல முடியும்.

பிற்பகல் 6-30

அதுமட்டுமல்ல இதனுடைய உபயோகம் என்பது, இன்றையதினம் உலகம் முழுவதும் உள்ளது. ஒருகாலத்திலே தடைசெய்ய வேண்டுமென்ற நோக்கம் இருந்தது. அதை மறுக்க முடியாது. நமது பொன்முடி அவர்கள்கூட அதையே ஏற்றுக்கொண்டு பேசினார்கள். ஆனால், இன்றைக்கு நிலைமை என்னவென்று சொன்னால், பல்வேறு நாடுகளில் இதைத் தடைசெய்துவிட்டு, மீண்டும் அதைப் பயன்படுத்த அனுமதித்திருக்கிறார்கள். அமெரிக்காவிலே 20 ஆண்டு காலத்திற்கு முன்னாலே இது தடை செய்யப்பட்டது. ஆனால் இன்றையதினம் அமெரிக்காவிலே இதை உபயோகிக்கலாம்; அது தப்பில்லை. அதேமாதிரி மேலை நாடுகளிலே தடை செய்யப்பட்டது. தடை செய்யப்பட்ட நாடுகளில் எல்லாம், இன்றையதினம் உணவுப் பண்டங்களை அதிலேதான் சுற்றித் தருகிறார்கள். அது சாக்லெட்டாக இருந்தாலும் சரி, croissant-ஆக இருந்தாலும் சரி, எதுவாக இருந்தாலும், காலையில் சென்று வாங்கினீர்களென்றால், அதை இந்த பிளாஸ்டிக்/ பாலித்தினில்தான் நமக்கு சுற்றித் தருகிறார்கள். இந்த உபயோகம் என்பதை திடீரென்று ஒரே நாளில் நிறுத்திவிட முடியாது.

நம்முடைய நாட்டில் பால் என்று எடுத்துக்கொண்டால், இந்த ஒரு பகுதியிலே மட்டும் இருப்பதைச் சொல்கிறேன். 16 மில்லியன் லிட்டர் ஒரு ஆண்டுக்கு உற்பத்தி ஆகிறது. மொத்தம் 80 மில்லியன் லிட்டர் என்று சொல்கிறார்கள். அதிலே 16 மில்லியன் லிட்டர், அதற்கு ஒரு கணக்கு கொடுத்திருக்கிறார்கள். பாலித்தின் கவர்கள் இதற்கு வாங்கினால்,

0.8 மில்லியன் டன்கள் போதும். இதற்குப் பதிலாக கண்ணாடி பாட்டில்களில் அடைத்தால், அதுவே 14.7 மில்லியன் டன்கள் தேவைப்படுகின்றன. ஆக மாற்றுப் பொருளான கண்ணாடித் தேவையினுடைய உபயோகம்/தேவை என்பது, 18 மடங்கு அதிகமாகிறது.

அதேபோல உணவு எண்ணெய் இப்பொழுது, 10 இலட்சம் மில்லியன் டன் நம்ம ஊரிலே ஆண்டொன்றுக்கு உற்பத்தியாகிறது. இதிலே 1998 ஆம் ஆண்டு அரசாணை பிறப்பிக்கப்பட்ட பிறகுகூட, 2.8 மில்லியன் டன்தான் இன்றைக்கு உணவு எண்ணெய் பாலித்தின் பையில் நிரப்பப்பட்டு அனுப்பப்படுகிறது. இதனால் நுகர்வோருக்கு நல்ல பயனுள்ள வகையிலே இருக்கிறது. ஆனால் பிளாஸ்டிக் பைகளில் அடைப்பதற்கு, இந்த 10 மில்லியன் டன்னிற்கு எவ்வளவு தேவைப்படும் என்றால் 164 கிலோ டன்கள்தான் தேவைப்படுகின்றன. அதிலே டின்கள் என்று சொன்னால், 330 கிலோ டன்கள் ஆகிறது. இரண்டு மடங்கு டின் தேவை அதிகரிக்கிறது; உயர்ந்துவிடுகிறது.

சிமெண்ட் உற்பத்தி ஆண்டொன்றுக்கு நமது நாட்டிலே 100 மில்லியன் டன் என்று கணக்கு சொல்கிறார்கள். சிதறி விரையம் ஆகும் சேதம் 2 மில்லியன் டன். மொத்த இழப்பு அதிலே மட்டும் 560 கோடி. உணவு தானிய உற்பத்தி என்று எடுத்துக்கொண்டால், 205 மில்லியன் டன் ஓர் ஆண்டிற்கு. முறையற்ற சேமிப்பு இல்லாமல், இதுமாதிரி எல்லாம் வைக்காமல், வேறுமாதிரி வைப்பதால் ஆண்டு ஒன்றுக்கு 5.2 மில்லியன் டன் விரையமாகிறது. மொத்த இழப்பு 3,400 கோடி ரூபாய் என்று கணக்கு சொல்கிறார்கள். உரம், சரியாக, முறையாக சேமிக்கப்படவில்லையென்று சொன்னால், அதிலே ஆண்டு ஒன்றுக்கு 806 கோடி ரூபாய் விரையம் ஆகிறது. இதுபோன்று நிறைய விரையங்கள் இருக்கின்றன.

அதுமட்டுமல்ல. Plastic non-reusable என்பது முன்பு. இன்றையதினம், மீண்டும் அதைப் பயன்படுத்தலாம். பிளாஸ்டிக்கை இரசாயனத்தின் மூலமாக, 'மோலோமர்'-ஆக மாற்றி மீண்டும் உபயோகிக்க முடியும் என்று சொல்கிறார்கள். அதெல்லாம் உபயோகிக்கலாம். அதுமட்டுமல்ல. நம்முடைய நாட்டிலே கூட, தமிழ்நாட்டிலேகூட, பரீட்சார்த்தமாக இன்றையதினம்—தண்ணீர் கொண்டு வருகிற பாட்டிலைப் பற்றிச் சொன்னார்கள். அதை உபயோகிக்கவில்லையென்றால் என்ன செய்ய முடியும்? அதிலே இன்றையதினம்—ஒரு பகுதியிலே மதுரைக்குப் பக்கத்திலே ஒருவர் ஆய்வு செய்து ஒரு கிலோமீட்டர் சாலை அமைத்திருக்கிறார். அது வெற்றிகரமாக நிறைவேறியிருக்கிறது என்று சொல்கிறார்கள். அதேபோல எல்லா பிளாஸ்டிக்கையும் நாம் மீண்டும் உபயோகிக்க முடியும். பாலித்தின் பைகளில் வருகிற பாலைப்





பொறுத்தவரை ஆவினில் இன்றையதினம் அறிவித்திருக்கிறார்கள். நாங்கள் இதே பாலித்தின் பைகளில்தான் பால் விநியோகிக்க இருக்கிறோம். ஏனென்று சொன்னால், இதை மீண்டும் பயன்படுத்த முடியும். இதை மீண்டும் ஃபிலிமாக மாற்றி, பிறகு அதிலே—தயாரிக்கப்பட்ட உணவுப் பண்டங்களைத் தவிர,— வேறு எதை வேண்டுமானாலும் பயன்படுத்த முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆக இந்த பிளாஸ்டிக் என்பது மீண்டும் பயன்படுத்தக்கூடிய ஒன்றுதான். பல நாடுகளிலே இதுபோல இருந்து அவற்றையெல்லாம் விட்டுவிட்ட நேரத்திலே முன்னேறிய நாடுகளிலே, வளர்ந்துவிட்ட நாடுகளிலே அவற்றையெல்லாம் கைவிட்டுவிட்ட நேரத்திலே—நம்முடைய நாடு வளர்ந்து வரும் நாடு— ரங்கநாதன் அவர்கள் சொன்னதைப்போல கிட்டத்தட்ட 6,000 தொழிற்சாலைகள் நமது தமிழ்நாட்டிலே மட்டும் இருக்கின்றன. பல இலட்சம் தொழிலாளர்கள்—20 இலட்சம் தொழிலாளர்கள் என்பதை நான் ஒப்புக் கொள்ளவில்லை. கொஞ்சம் குறைவாக இருக்கலாம், அதிகமாக இருக்கலாம், அது வேறு விஷயம். பல இலட்சம் தொழிலாளர்கள்— அதிலே நிச்சயமாக இருக்கிறார்கள். பல கோடி ரூபாய் இதிலே முதலீடு செய்யப்பட்டிருக்கிறது. திடீரென்று ஒரே நாளில் அதற்குத் தடை விதிக்கப்பட்டது என்று சொன்னால், அந்தத் தொழிற்சாலைகளினுடைய கதி என்ன ஆகும்? அந்தத் தொழிலாளர்களுடைய கதி என்ன ஆகும்? சாதாரணமாக இதை உபயோகிக்கின்ற ஏழை மக்கள், நடுத்தர மக்கள் கதி என்ன ஆகும் என்பதையெல்லாம் நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்.

ஹோட்டலுக்குப் போனால், இன்றையதினம் வீட்டிற்கு டிபன் ஏதாவது வாங்கிவர வேண்டுமென்றால், சாம்பார் அதிலேதான் ஊற்றிக் கொடுக்கிறார்கள். சட்னி அதில்தான் கொடுக்கிறார்கள். இட்லி அதிலே வைத்துக் கொடுத்தால், பக்குவமாக இருக்கிறது. ஃபிரைட் ரைஸ் அதிலே வைத்துக் கொடுத்தால் நன்றாக இருக்கிறது. அவ்வளவு எதற்கு? நம் குடிமகன்களைப் பற்றிச் சொல்கிறேன். மலிவு விலை மதுவை இப்போது அறிமுகப்படுத்தினார்கள். அதை எதில் அறிமுகப்படுத்தினார்கள் என்றால், குழலைப் பைகளில் அறிமுகப்படுத்தினார்கள். அந்தக் குழலைப் பைகளில் மது வந்தபோது குடிமகன்கள் எல்லாம் குதூகலம் அடைந்தார்கள். ஏனென்றால் குறைந்த விலைக்குக் கிடைக்கிறது என்று, குழலைப் பை வந்துவிட்டது என்று அவர்கள் குதூகலம் அடைந்தார்கள். ஆகவே பிளாஸ்டிக்கை நாம் அறவே விட்டுவிட வேண்டிய அவசியம் இல்லை. அதற்கு மாற்றுப் பொருள் வருகிறபோது அதைப் பற்றிச் சிந்திப்போம். இப்போதைக்கு நிச்சயமாக இந்தச் சட்டமுன்வடிவு தேவையற்றது. இந்தச்

சட்டம் அமலுக்கு வருமேயானால் பலவிதமான குளறுபடிகளுக்கு நாம் ஆளாக வேண்டி வரும். சாதாரண ஏழை எளிய, நடுத்தர மக்கள் பெருமளவுக்குப் பாதிக்கப்படுவார்கள். எனவே இந்தச் சட்டமுன்வடிவை இந்த நிலையில் கைவிடவேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு அமைகிறேன். வணக்கம்.

*பிற்பகல் 6-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு.

***திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுப்புறச் சூழலையும் பொதுமக்கள் சுகாதாரத்தையும் பாதுகாப்பதற்காகவும், ஒருசில பிளாஸ்டிக் பொருட்கள் விற்பதற்கும் சேமித்து வைப்பதற்கும், ஏற்றிச் செல்வதற்கும், பயன்படுத்துவதற்கும் தடைசெய்வதற்கான இந்தச் சட்டமுன்வடிவை அவையில் வைத்திருக்கிறார்கள்.

எங்களுடைய நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நான் முதலிலே ஒரு தகவலைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தியாவிலேயே முதன்முறையாக கடந்த ஒரு வருட காலமாக பிளாஸ்டிக்குக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. ஒரு நல்ல நோக்கத்துடன் செய்யப்பட்ட தடை அது. பிளாஸ்டிக்கினால் கால்நடைகள் பலவற்றை நாங்கள் நீலகிரி மாவட்டத்தில் இழக்க நேரிட்டது. திருமண வீடுகளில் இலை போடுவதற்குக் கீழே இந்த பிளாஸ்டிக் தாளை உபயோகப்படுத்துவதன் மூலமாக, சில இடங்களில் நாங்கள் பார்க்கும்போது அந்த இலையை பிளாஸ்டிக்குடன் கால்நடைகள் சாப்பிடும்போது உயிர்ச்சேதம் ஏற்பட்டிருக்கிறது; மூச்சுத் திணறியிருக்கிறது. நீலகிரி மாவட்டத்தில் பிராண வாயு மிகக் குறைவு என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். பிளாஸ்டிக் பொருள்கள் எவ்வளவு எரிந்தாலும் அவை விரைவில் அணைவதில்லை; எரிந்துகொண்டேயிருக்கின்றன. ஆக அதன் மூலமாக, வெளியேறும் விஷ வாயுக்களை நாங்கள் எல்லாம் சுவாசிக்கும்போது கண்டிப்பாக உடல் நலத்தில் அதிக பாதிப்பு ஏற்படுத்திக் கொண்டேயிருக்கிறது. ஆகவே சுற்றுலாத் தலமான நீலகிரி மாவட்டத்தில் "பிளாஸ்டிக் இல்லாத நீலகிரிக்கு வருகை தாருங்கள், ஊட்டி டீயைப் பருகுங்கள்" என்றெல்லாம் நாங்கள் விளம்பரம் செய்து வருகிறோம்.

இருந்தாலும்கூட இதன் மூலமாக நிலத்தடி நீர் கண்டிப்பாக மாசுபட்டிருக்கிறது. அதன் மேம்பாடும் பாதிப்படைகிறது. ஆகவே இந்தத் தடவை பர்லியாறு தாண்டும் சுற்றுலாப் பயணிகளுக்கு எல்லாம்



பிளாஸ்டிக்குக்குப் பதிலாக மாற்றுச் சாதனங்கள் எல்லாம் அனேக உபயதாரர்கள் முன்வந்து அங்கே மாற்றிக் கொடுக்கிறார்கள். அங்கே பிளாஸ்டிக் சாமான்களை மாற்றிவிட்டு அதற்காக மாற்றுச் சாமான்களைத் தருகிறார்கள். உதாரணமாக பேப்பர் பை எல்லாம் இப்போது குடிசைத் தொழிலாக அங்கே நான்கைந்து இடங்களில் செய்து கொண்டிருக்கிறார்கள். இல்லையென்றால் மலிவான கைத்தறி பைகளை எல்லாம் செய்துகொண்டிருக்கிறார்கள். இவற்றைத் தருகிறார்கள்.

மேலும் சுகாதாரத்தைப் பாதிக்கும் வகையில் ஓசோன் பாதிப்பும் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. அந்த அளவில் இந்தியாவில் முதன்முதலாக நீலகிரி மாவட்டத்தில் இதற்குத் தடை ஏற்படுத்தினாலும்கூட, ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் பேசியதைப்போல ஒரேயடியாக இல்லாமல் சுற்றுலா மையங்கள், மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சிகள், போன்ற இடங்களில் எல்லாம் படிப்படியாகத் தடை செய்வது நல்லது என்று கருதுகிறேன். ஏனென்றால் நீலகிரியில் ஓராண்டுக்கு மேலாக நாங்கள் செய்ததை எல்லாம் மற்ற மாவட்டங்களில் செய்வதற்கு அவர்கள் தயாராக இல்லை. ஒரு நல்ல நோக்கம். கண்டிப்பாக எல்லோரும் வரவேற்பார்கள். ஆனால் மற்ற மாவட்டங்களில் உள்ள மக்கள் எல்லாம் நீலகிரி மாவட்டத்தைப்போல செய்ய அவர்கள் தயார் நிலையில் இல்லை. ஆகவே அவர்கள் எல்லாம் படிப்படியாக ஏற்குமாறு செய்யலாம். இல்லையென்றால் ஒரு நாளைக் குறித்து, இவ்வளவு மாதத்திற்குப் பிறகு என்று ஒரு தேதியிலிருந்து நீங்கள் உபயோகப்படுத்தக்கூடாது என்று சொல்லலாம். ஏற்கெனவே பிளாஸ்டிக் தொழிலில் ஏராளமான ரூபாயை முதலீடாகச் செய்திருப்பார்கள். அதிக அளவில் சிறு சிறு தொழிலாகச் செய்யும் அந்த வியாபாரிகள் எல்லாம், திடீரென்று இதை நிறுத்தும்போது அவர்கள் மிகவும் துன்புறுவார்கள். ஆகவே படிப்படியாக இதைச் செய்வோமானால் கண்டிப்பாக நீலகிரி மாவட்டத்தில் எப்படி இதைத் தடை செய்தோமோ அப்படியே மற்ற மாவட்டங்களிலும் இதைக் கண்டிப்பாக வரவேற்பார்கள் என்பதில் எந்தவிதமான ஐயப்பாடும் கிடையாது. ஏனென்றால் இதன் பாதிப்பு அதிகமாகவே இருக்கிறது. பிளாஸ்டிக்கால் நன்மையைவிட தீமைகள் அதிகம் என்பதை நாட்டின் அறிஞர்கள் எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே படிப்படியாக அவ்வாறு செய்வதன் மூலமாக, நமது ஏழை மக்களையும், சிறு சிறு தொழிலை நம்பி இருக்கும் வியாபாரிகளையும் பாதுகாக்க, அவர்களுக்கும் ஒரு சந்தர்ப்பத்தை நாம் கொடுக்கலாம் என்ற கருத்தைச் சொல்லி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 6-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி க. பாலபாரதி.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவினுடைய மையக் கருவான நிலத்தடி நீர் மாசுபடாமல் பாதுகாக்கப்பட வேண்டும்; சுற்றுப்புறச் சூழல் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு எனக்கும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் உடன்பாடு இருக்கிறது. ஆனால் அதேசமயத்தில் இதைச் சட்டமாக அமல்படுத்துகிறபோது ஏற்படக்கூடிய விளைவுகள், அது அரசியலாக இருந்தாலும் சரி, வேறுவிதமான விளைவுகளாக இருந்தாலும் சரி, அதை இப்போது கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், "இடம் எதிலும், எந்த நேரத்திலும் நுழைந்து, இந்தச் சட்டத்திற்கு எதிரான குற்றச் செயல் ஒன்று நடந்ததாக, நடைபெறுவதாக, அல்லது நடக்க இருப்பதாக நியாயமாக சந்தேகப்படக்கூடிய அந்த இடத்தில் நுழைந்து சோதனையிடலாம்" என்று இந்தச் சட்டத்தினுடைய ஷரத்துகள் சாதாரண மக்களை அச்சுறுத்துவதாக இருக்கிறது. ஆகவே இந்த அச்சுறுத்தலை, இதனுடைய விளைவை, பிளாஸ்டிக்குகளைப் பயன்படுத்துகிறபோது ஏற்படக்கூடிய விளைவுகளை மக்களுக்கு விளக்க வேண்டும். முதற்கட்டமாக அந்த விளக்கத்தை ஏற்றுக் கொள்ளக் கூடியவர்களாக ஆக்க வேண்டும். அதைச் செய்து முடித்த பிற்பாடுதான் இந்தச் சட்டத்திற்கான ஆதரவைப் பொது மக்களிடமிருந்து நாம் பெறமுடியும்.

குடிசை வீடுகளில் குடம், பிளாஸ்டிக்கிலே இருக்கிறது; டம்ளர் பிளாஸ்டிக்கிலே இருக்கிறது; உட்காருகிற நாற்காலி பிளாஸ்டிக்கிலே இருக்கிறது; படுக்கிற பாயும் பிளாஸ்டிக்கிலே இருக்கிறது. இவற்றையெல்லாம் பார்க்கும்போது ஒரு பிளாஸ்டிக் கலாச்சாரமாக இன்றைக்கு மாற்றப்பட்டாகிவிட்டது. பிரிட்டானியா போன்ற அந்நிய நாட்டு பிஸ்கட் கம்பெனிகள், கோகோ கோலா, மிராண்டா போன்ற குளிர்பானங்களை எல்லாம் பிளாஸ்டிக் பாட்டில்கள் மூலம்தான் விற்பனை செய்கிறார்கள். அந்த பிளாஸ்டிக்குகள் மண்ணிலே மக்கக்கூடிய, மக்கிப்போகக்கூடிய பிளாஸ்டிக்குகளா? அதைத் தடை செய்வதற்கு நாம் என்ன செய்யப்போகிறோம்? அயல்நாட்டு கம்பெனிகள், இதை இந்திய நாடு முழுவதும் விற்பனை செய்து கொண்டிருக்கின்றன. ஆகவே இது சாதாரண மக்கள் பயன்படுத்தக்கூடிய பொருள்கள் மட்டுமாகவே இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே குழந்தைகளின் கையிலே இருக்கக்கூடிய நகத்தை





வெட்ட வேண்டும்; அது குழந்தைப் பருவத்திலே இருப்பதனால், கத்தியைக் குழந்தைகள் கையிலேயே கொடுத்து விடுவது ஆபத்தாக முடியும். இந்த நாட்டிலே பீடி குடிப்பதும் குற்றம்; பிளாஸ்டிக் டம்ளரிலே டீ குடிப்பதும் குற்றம் என்று யாராவது எதிர்ப் பிரச்சாரம் செய்ய ஆரம்பித்தால் ஆதரவு என்பது, அரசினுடைய சட்டத்திற்கு இல்லாமல் போய்விடும். ஆகவே இதனுடைய விளைவைப் பற்றி, ஆபத்தான தன்மையைக் குறித்து மக்கள் முன்னால் பிரச்சாரத்தை இந்தத் துறை செய்ய வேண்டும். அதற்குப் பின்பு, இந்தச் சட்டம் கொண்டு வரப்பட வேண்டும். ஆகவே இதை Select Committee-க்கு அனுப்ப வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.எஸ். கண்ணன்.

***திரு. ஏ.எஸ். கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிளாஸ்டிக்கைப் பயன்படுத்துவது, சேமிப்பது, விற்பது, அதனை ஏற்றிச் செல்வது ஆகியவற்றைத் தடை செய்யும் இந்தச் சட்டமுன்வடிவு--மாசுக் கட்டுப்பாடு என்ற வகையில் வரவேற்கக்கூடியது. ஆனால் அதேநேரத்தில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக எங்கள் கருத்துகளை முன்வைக்கிறோம். பிளாஸ்டிக் என்பது இன்றைக்கு உலக நாடுகளில் பயன்படுத்துவதற்காக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. U.S.A., ஜெர்மன், ஜப்பான் போன்ற நாடுகளில் 100 சதவிகிதம் பயன்படுத்துகிறார்கள். நம்மைப் போன்ற ஜனத்தொகை 200 கோடிக்கு மேல் உள்ள சீனத்தில் இன்றைக்கு 20 சதவிகிதம் அதைப் பயன்படுத்துகிறார்கள். ஆனால் இந்தியாவில் 3 சதவிகிதம்தான் அதை பயன்படுத்துகிறார்கள். அதிலும் அந்த 3 சதவிகிதத்தில்கூட, குஜராத், மகாராஷ்டிராவில் 50 சதவிகிதம் பொருள்களை அங்கே பயன்படுத்துகிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில், இரண்டரை சதவிகிதம்தான் நாம் அதைப் பயன்படுத்துகிறோம். ஆனால் அதேநேரத்தில் இந்தத் துறையில், 2 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு சம்பந்தப்பட்ட துறையினர் கடன் வாங்கி அதிலே முதலீடு செய்திருக்கிறார்கள். எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் கூறியபடி, பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகள் 6 ஆயிரம் இருக்கின்றன. ஆனால் பதிவு செய்யப்படாத தொழிற்சாலைகள் ஒட்டுமொத்தமாக சேர்த்துப் பார்க்கிறபோது 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் இருக்கின்றன. அவற்றில் பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் 8 இலட்சம் பேர் இருக்கிறார்கள். இதற்கு--கடனை வாங்கி இருப்பவர்கள்--மத்திய, மாநில அரசு

[திரு. ஏ.எஸ். கண்ணன்] [2002 மே 8

வங்கிகளிலும், நிதி நிறுவனங்களிலும் கடன் வாங்கி இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். அதேநேரத்தில் இந்தத் தொழிலை உடனடியாக முடக்குவதன் மூலம் இதில் பணிபுரிகின்ற தொழிலாளிகள் பாதிக்கப்படுகின்றார்கள். அதேநேரத்தில் எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்கள் சொல்லியபடி, பிளாஸ்டிக் பொருட்களை சாதாரண மக்கள் எல்லாம் பயன்படுத்துகிறார்கள் என்பதை இந்த நேரத்திலே உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதேநேரத்தில் ஒன்றை மட்டும் நான் உறுதியாகச் சொல்கிறேன். இந்தத் துறையைச் சேர்ந்த தொழில் முனைவர்கள், இந்தப் பிரச்சினையில் முடிவு காண்பதற்காக அரசை அணுகுகின்ற முறை சரியானதல்ல என்பது எங்களைப் போன்ற தொழில் முனைவர்கள் சங்கங்கள் நடத்துகின்றவர்களுக்கு நன்றாகத் தெரியும். அவர்களுடைய நடைமுறை., அரசாங்கத்தை அணுகுகின்ற முறை சரியல்ல. அதற்கு மாறாக, அரசாங்கத்தை அவர்கள் முறையாக அணுகி, இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு அணுகுகின்றபோது இங்கே இருக்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருணை உள்ளத்தோடு இந்தப் பிரச்சினையை எடுத்து அவர்களுக்கு கால அவகாசம் தந்து, படிப்படியாக இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக பிளாஸ்டிக் சட்டமுன்வடிவை Select Committee அனுப்பக் கேட்டு, தற்போது இந்த தடைச் சட்ட முன்வடிவை எதிர்க்கிறோம் என்று கூறி அமைகிறேன்.

*பிற்பகல் 6-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் இயக்கத்தின் சார்பாக இந்தச் சட்டமுன்வடிவை எதிர்க்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் ஆர். கோவிந்தசாமி.

**டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிளாஸ்டிக் பொருட்களை உபயோகிப்பதால் கடுமையான, மோசமான விளைவுகள் ஏற்படுகின்றன. பிளாஸ்டிக் பொருட்கள் எரியும் பொழுது டை-ஆக்ஸின் என்ற வாயு வெளிப்படுகிறது. It is pre-cancerous state; புற்று நோய் உண்டாக்குவதற்கான அறிகுறி தென்படுகின்றது. அதைவிட



2002 மே 8] [டாக்டர் ஆர். கோவிந்தசாமி]

முக்கியமானது ozone depletion. இயற்கையிலே ஓசோன் குறைவாக இருக்கும்பொழுது, அந்தச் சூழ்நிலையையும் பாதிக்கக்கூடிய பிளாஸ்டிக் பொருட்கள் தவிர்க்கப்பட வேண்டியதுதான்; தடைச் சட்டம் வரவேற்கப்பட வேண்டியதுதான். இருந்தாலும் பல இலட்சம் தொழிலாளர்களை பாதிக்கக்கூடிய இந்தத் தொழிலை சிறு சிறு அளவிலே, குறிப்பிட்ட அளவிலே, சில குறிப்பிட்ட பொருட்களுக்கு மட்டும் தடை விதித்துவிட்டு, மற்றவற்றிற்கு படிப்படியாக தடை விதித்துச் செய்யலாம் என்று நாங்கள் கருத்து தெரிவிக்கின்றோம். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, உங்கள் கட்சியின் சார்பாகச் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு) உங்கள் கட்சியின் சார்பாக கருத்து சொல்லப்பட்டுவிட்டது.

**திரு. ஜி. பழனிசாமி:** இது முக்கியமானது....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. உங்கள் இயக்கத்தின் சார்பாக கருத்துச் சொல்லப்பட்டுவிட்டது; (குறுக்கீடு) இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக கருத்துச் சொல்லப்பட்டுவிட்டது. (குறுக்கீடு) சரி. சொல்லுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிளாஸ்டிக் பொருட்களுக்குத் தடை செய்கிற சட்டத்தை நாங்கள் வரவேற்கிறோம். வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் அதிலே சில விதிமுறைகளைக் கொண்டு வர வேண்டும்; சில இனங்களுக்கு மட்டும் கொண்டு வர வேண்டும். பொதுவாக ஜனங்கள் விலை கொடுத்து வாங்குகின்ற பிளாஸ்டிக் பொருட்களை எங்கேயும் போட்டுவிடுவதில்லை. இலவசமாக யார் யாரெல்லாம் கொடுக்கிறார்களோ, அவற்றை ஆங்காங்கே போட்டு விடுகிறார்கள். சென்னையிலே ஒரு மாடு 16 கிலோ பிளாஸ்டிக்கை சாப்பிட்டு இறந்துபோனது. அந்தப் பொருட்களை காட்சிக்காக வைத்து இருக்கிறார்கள். 16 கிலோ பிளாஸ்டிக்கை ஒரு எருமை மாடு சாப்பிட்டு இருக்கிறது. அந்த மாட்டை ஆபரேஷன் பண்ணி பிளாஸ்டிக்கை எடுத்து வைத்து இருக்கிறார்கள். இலை போன்று, கடிதாசு போன்று இருக்கிற பிளாஸ்டிக் பொருட்களை, இன்னும் ஜவுளிக் கடைகளில் துணிகளை வாங்குகின்றபோது இலவசமாகக் கொடுக்கின்ற அந்த பிளாஸ்டிக் பைகளைத்தான் கண்ட இடத்தில் ஜனங்கள் போட்டு

விடுகிறார்கள். காசு கொடுத்து ஒரு டம்ளரை வாங்கினால் அதைத் திரும்ப வீட்டில் வைத்திருந்து, வெங்காயத்திற்கோ, அல்லது புளிக்கோ அல்லது பேரீச்சம்பழத்திற்கோ அதை விற்றுவிடுவார்கள். அது திரும்பவும் தொழிற்சாலைக்குப் போய் விடுகிறது. அந்தப் பொருட்களை ஜனங்கள் கீழே போடுவதில்லை. அதேமாதிரி குடம், வாளி போன்ற பொருட்கள் உடைந்துவிட்டால், அவற்றைத் திரும்பவும் பழைய பொருட்களை வாங்குபவரிடம் விற்பனை செய்துவிடுகிறார்கள். ஆக இலவசமாகக் கொடுக்கக்கூடிய பேப்பர் போன்று இருக்கக்கூடிய பிளாஸ்டிக் பொருட்கள்தான் சுற்றுச்சூழலை பாதிக்கின்றன; அவற்றை பல இடங்களில், கண்ட இடங்களில் எறிந்து விடுகிறார்கள். பொறுப்பற்று எறிவதால் சென்னை போன்ற நகரங்களில் பல சாக்கடைகளிலே அடைப்புகூட வருகிறது. பெரிய நகரங்களிலே சாக்கடை அடைப்பு எல்லாம் வருவதற்கு இந்த பிளாஸ்டிக் பொருட்கள்தான் காரணம். ஆகையால் இங்கே மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்கள் சொன்ன கருத்தைக்கூட நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இதுபோன்ற பொருட்களுக்கு முதலில் தடை விதிக்கலாம். ஒரு கால அவகாசம் கொடுக்கலாம். அதற்குப் பின்னால் இதுபோன்ற பொருட்களை அந்தத் தொழிற்சாலைகள் உற்பத்தி செய்யக்கூடாது என்று தடை விதிக்கலாம். அப்படிக் கொண்டுவந்தால் இந்த பாதிப்பை படிப்படியாகக் குறைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதைப் பரிசீலிக்க வேண்டும். அதேபோல் இந்தச் சட்டமுன்வடிவை Select Committee-க்கு விட்டு, ஆராய்ந்து, அதற்குப் பிறகு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டுவர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் அதனுடைய இருபக்கங்களையும் பார்க்க வேண்டும். நாணயத்திற்கு இருபக்கங்கள் இருக்கின்றன என்பதுபோல், எந்த விவகாரமாக இருந்தாலும், எந்தப் பொருளாக இருந்தாலும், அதற்கும் இரண்டு பக்கங்கள் இருக்கின்றன. பிளாஸ்டிக் பொருட்களை தடை செய்யும் சட்டத்தைக் கொண்டு வந்து அதன் மூலம் பிளாஸ்டிக் பொருட்கள் உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் தொழில் அதிபர்களைத் துன்புறுத்த வேண்டும் என்றோ, அந்தத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ஒரு அநீதியை இழைக்க வேண்டும் என்றோ, பிளாஸ்டிக் பொருள்களை பரவலாகப் பயன்படுத்தும் பொது மக்களுக்கு தொல்லை கொடுக்க வேண்டும்,



தொந்தரவு கொடுக்க வேண்டும், அவர்களை மிரட்ட வேண்டும் என்றோ இந்த அரசுக்கு எண்ணம் கிடையாது. சுற்றுப்புறச் சூழலை தூய்மையாக வைக்க வேண்டியது, பாதுகாக்க வேண்டியது ஒரு அரசாங்கத்தின் தலையாய, முக்கியமான கடமையாகும். சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கும் மிகப் பெரிய பொறுப்பை அரசாங்கம் ஏற்றிருக்கிறது. சுற்றுப்புறச் சூழலை தூய்மையாக வைக்க வேண்டுமென்று சொன்னால் அதில் ஒரு முக்கியமான அம்சம் கழிவுகளை அகற்றுவது, அந்தக் கழிவுகளை அழிப்பது. இவைதான் சுற்றுப்புறச் சூழலை தூய்மைப்படுத்துகின்ற பணியின் முக்கியமான அம்சங்களாகும்.

பிற்பகல் 6-50

பொதுவாக கிராமப்புறங்களில்கூட நிறைய குப்பைகள் சேர்ந்து விட்டால் அவற்றை எப்படி அழிக்கிறார்கள்? சுற்றுப்புறத்தை எப்படி தூய்மையாக வைத்துக் கொள்கிறார்கள்? அந்தக் குப்பைகளையெல்லாம் எரித்து விடுகிறார்கள். அப்படி எரிக்கின்ற குப்பை சாம்பலாகி விடுகிறது. காலப்போக்கில் அது அப்படியே மண்ணோடு கலந்து விடுகிறது. கால்நடைகள் மூலமாக வருகிற கழிவுப்பொருட்கள் உரமாக மாறி விடுகின்றன. அவையும் மண்ணோடு மண்ணாக கலந்துவிடுகின்றன. உற்பத்தியைப் பெருக்குவதற்கு அவைகூட இடுபொருள்களாகப் பயன்படுகின்றன.

நான் குழந்தையாக இருந்த காலத்தில், ஆரம்ப காலத்தில் நான் பள்ளிக்கூடம் சென்றபோது இன்னும் பிளாஸ்டிக் பொருள்கள் மார்க்கெட்டிற்கு வரவில்லை. அப்போதெல்லாம் வாழ்க்கை நடக்கவில்லையா? நாங்கள் எல்லாம் பள்ளிக்குச் செல்லவில்லையா? பள்ளிக்கு உணவு அனுப்பவில்லையா? குடிநீர் அனுப்பவில்லையா? அப்போதெல்லாம் இருந்த பெரியவர்கள் அலுவலகங்களுக்குச் செல்லவில்லையா? அவர்களுக்கெல்லாம் அப்போது டிபன் கேரியர்களில் உணவு அனுப்பப்படவில்லையா? அவர்களுக்கு எல்லாம் அப்போது இரப்பர் கைப் பைகளிலும், கண்ணாடி பாட்டில்களிலும் குடி தண்ணீர் அனுப்பப்படவில்லையா? அப்போது பிளாஸ்டிக் இல்லாததால் அன்றாட வாழ்க்கை ஸ்தம்பித்து விட்டதா? அன்றாட வாழ்க்கை நடக்கவில்லையா? நடந்து கொண்டுதான் இருந்தது. அப்போதெல்லாம் பிளாஸ்டிக் மார்க்கெட்டிற்கு வராததால் அதனுடைய தேவை மக்களுக்கு ஏற்படவில்லை. ஆரோக்கியமான இயற்கைப் பொருள்களால் கிடைக்கக்கூடிய பொருள்களைத்தான், உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களைத்தான் அன்றைக்கு பயன்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

இப்போது சர்வ சாதாரணமாக எங்கும் பிளாஸ்டிக், எதிலும் பிளாஸ்டிக் என்பதுபோல பிளாஸ்டிக் இல்லாமல் வாழ்க்கையே இல்லை என்ற ஒரு சூழ்நிலை இங்கே தமிழ்நாட்டில் மட்டுமல்ல, உலகம் முழுவதும் உருவாகிவிட்டது. இதனால் குப்பைகள் மலைகள்போல குவிந்து கொண்டிருக்கின்றன. எங்கே பார்த்தாலும் தூக்கியெறியப்பட்ட காலி பிளாஸ்டிக் பாட்டில்கள், பிளாஸ்டிக் பைகள், பிளாஸ்டிக் உறைகள், பிளாஸ்டிக் டப்பிகள். இவையெல்லாம் non-biodegradable; காலத்தால் அழியாதவை. எங்கே பார்த்தாலும் தூக்கியெறியப்பட்ட பிளாஸ்டிக் தட்டுகள், பிளாஸ்டிக் டம்ளர்கள், பிளாஸ்டிக் கோப்பைகள், அவை அப்படியே இருக்கும். எத்தனை ஆண்டுகளானாலும் அப்படியே இருக்கும்.

முன்பெல்லாம் ஒரு சுற்றுப்பயணம் சென்றால் அல்லது ஒரு மோட்டார் வாகனத்தில் வெளியூருக்குச் சென்றால் வழியில் சாப்பிடுவதற்கு பேப்பர் டம்ளர்கள், பேப்பர் தட்டுகள் கொண்டு வருவார்கள். அதில்தான் உணவு பரிமாறுவார்கள். அந்த பேப்பர் தட்டுகள், பேப்பர் கோப்பைகளை பயன்படுத்திய பிறகு தூக்கி எறிந்துவிட்டால் காலப்போக்கில் அப்படியே மக்கி விடும்; மண்ணோடு மண்ணாக அது கலந்து விடும். அவையெல்லாம் degradable, bio-degradable பொருட்கள். அதனால் சுற்றுப்புறச் சூழலுக்கு எந்தக் கேடும் இல்லை. ஆனால் பிளாஸ்டிக் அப்படி அல்ல. எங்கே நீங்கள் பார்த்தாலும் பிளாஸ்டிக் கழிவுப் பொருட்கள், உபயோகப்படுத்தப்பட்டு தூக்கி எறியப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் மலைபோல் கிடக்கின்றன. நேஷனல் ஹைவேஸில் சென்று பாருங்கள். இங்கிருந்து மகாபலிபுரம் வரை சென்று பாருங்கள். ரோட்டின் இரு பக்கங்களிலும் அழகான இயற்கை எழில் காட்சிகள், மலைகள் இருக்கின்றன, ஆறுகள் இருக்கின்றன, எல்லாம் இருக்கின்றன. ஆனால் இருபுறங்களிலும் நீங்கள் பார்த்தீர்களானால், வழி நெடுகிலும் காலி பாலித்தின் பைகள், காலி பிளாஸ்டிக் பாட்டில்கள், காலி பேப்பர், தூக்கி எறியப்பட்ட காலி பிளாஸ்டிக் டம்ளர்கள், கோப்பைகள். இவை எங்கே பார்த்தாலும் அப்படியே கிடக்கின்றன. ஓர் அரசாங்கத்திற்கு இருக்கின்ற கட்டமைப்புக்கு, அந்த கட்டமைப்புக்கு உள்ள சக்திக்கு அப்பாற்பட்ட விஷயமாக இவை விளங்குகின்றன.

பிற்பகல் 6-55

ஒரு மாநகராட்சி என்று சொன்னால், குறிப்பிட்ட எண்ணிக்கையில் துப்புரவுத் தொழிலாளர்கள் இருப்பார்கள். அப்படி ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்பையும் நீங்கள் எடுத்துக்கொண்டால், குறிப்பிட்ட எண்ணிக்கையில்தான் துப்புரவுத் தொழிலாளர்கள் இருப்பார்கள். நாடு



முழுவதும், காடு முழுவதும், எங்கே பார்த்தாலும், பிளாஸ்டிக் பொருட்களை மலைகள் போல் குவித்து வைத்தால் யார் அவற்றை அகற்றுவது? சில ஆண்டுகளுக்கு முன்னால் கொடைக்கானல் சென்றேன். ஊட்டி சென்றேன். அங்கே நான் கண்ட காட்சிகளைப் பார்க்கும்போது எனக்கு அழுகையே வந்துவிட்டது. கொடைக்கானலில், மலைப்பகுதிகளில் எங்கே பார்த்தாலும், டூரிஸ்ட்கள், பயணிகள் வந்து போகின்ற இடங்களில் எல்லாம் அப்படி அப்படியே பிளாஸ்டிக் பைகள், பிளாஸ்டிக் பாட்டில்கள், பிளாஸ்டிக் கோப்பைகள், பிளாஸ்டிக் டம்ளர்கள் அப்படிக் குவிந்து கிடந்தன. ஊட்டி, கொடைக்கானல் மட்டுமில்லை. பயணிகள் அதிக அளவில் செல்கின்ற எந்த tourist spot-ஆக இருந்தாலும் இன்றைக்கு அதே நிலைமைதான். புண்ணிய ஸ்தலங்கள் இருக்கின்றன. கோயில்கள் இருக்கின்றன. எந்தப் பெரிய திருக்கோயிலை நீங்கள் சென்று பார்த்தாலும் அந்த கோயிலைச் சுற்றி இத்தகைய பொருட்கள்தான் கிடக்கும். எங்கே பார்த்தாலும், மலைபோல் இந்த பிளாஸ்டிக் பொருட்கள் குவிந்த வண்ணம் இருக்கின்றன.

உலக நாடுகளிலே இன்றைக்கு இந்த பிளாஸ்டிக் waste products- ஐ எப்படி dispose செய்வது என்பது ஒரு national problem ஆக இருக்கிறது. இதனால் பல நாடுகளுக்கு இடையே சண்டையே வந்து இருக்கின்றது. இங்கே கர்நாடகத்திற்கும், தமிழ்நாட்டிற்கும் இடையே நதிநீர்ப் பிரச்சினை. காவிரி நதிநீர் தாவா பிரச்சினை இருக்கிறது. வேறு சில நாடுகளுக்கு இடையேகூட நதிநீரை பங்கிட்டுக் கொள்வதில் பிரச்சினை இருக்கின்றது. உதாரணத்திற்கு இந்தியாவிற்கும், பங்களாதேஷ்-க்குமே நதிநீரைப் பங்கிட்டுக் கொள்வதில் ஒரு பிரச்சினை இருக்கிறது. இப்படி மேலை நாடுகளில்கூட, ஒரு நாட்டுக்கும் அண்டை நாட்டுக்கும் நதிநீரை பங்கிட்டுக்கொள்வதில் முன்பு எல்லாம் பிரச்சினைகள் வரும். சண்டைகள் வரும். ஆனால் இந்த நவீன காலத்தில் மேலை நாடுகளில் இந்த பிளாஸ்டிக் குப்பைப் பொருட்களை dispose செய்வதிலேயே ஒரு நாட்டுக்கும் அண்டை நாட்டுக்கும் சண்டைகள் வருகின்றன. இந்தியா மிகப் பெரிய நாடு. இங்கே தமிழ்நாடு மேலை நாடுகளில் 4, 5 நாடுகளுக்குச் சமமான நிலப்பரப்பைக் கொண்டது. European Countries—மேலை நாடுகளில்-ஐரோப்பாவில் இருக்கின்ற நாடுகள் எல்லாம் மிகச் சிறிய நிலப்பரப்பைக் கொண்டவை. சில நாடுகளில் இப்படி எக்கச்சக்கமான பிளாஸ்டிக் பொருட்கள் குவிந்துபோய் அந்தக் குப்பைகளை எல்லாம் என்ன செய்வது என்று தெரியாமல் அவர்கள் நாட்டில் இந்த குப்பைகளைப் போட இடம் இல்லாததால், அவர்கள் எல்லையைக் கடந்து அண்டை நாட்டில் போட்டுவிடுகிறார்கள். அதனால் அந்த அண்டை நாட்டினுடைய

அரசாங்கம் இவர்களோடு சண்டைக்கு வந்துவிடுகிறது. அவர்கள் திரும்ப அந்த குப்பைகளைக் கொண்டு வந்து இவர்கள் நாட்டிலேயே போட்டுவிடுகிறார்கள். இப்படியெல்லாம்கூட இந்த நவீன காலத்தில் நடைபெறுகிறது. இது ஒரு மிகப் பெரிய சுகாதாரக் கேடாக வளர்ந்துகொண்டு இருக்கிறது. இதனால் மனிதர்கள் பாதிக்கப்படுகிறார்கள். மனிதர்கள் மட்டுமல்ல, கால்நடைகளும், மிருகங்களும் பாதிக்கப் படுகின்றன.

இந்த பிளாஸ்டிக் பொருட்களை உபயோகப்படுத்துகின்றவரை உபயோகப்படுத்திவிட்டு பின்னர் அவை வேண்டாம் என்று முடிவு செய்யும்போது பலபேருக்கு அவற்றை என்ன செய்வது என்று தெரிவதில்லை. அவற்றை எரித்தால் எரிக்கும்போது ஒரு விஷ வாயு கிளம்புகிறது. அந்த விஷ வாயுவினால் பல தீவிரமான நோய்கள் மனிதர்களுக்கு ஏற்படுகின்றன. அந்த நோய்களை குணப்படுத்துவதற்குக்கூட இன்று வரை மருந்துகள் கண்டுபிடிக்கப்படவில்லை. மனிதர்களின் ஆயுளையே அது குறைத்துவிடும். அந்த அளவிற்கு அவை அபாயகரமானவை. இங்கே நம் நகரங்களில் எல்லாம் சர்வ சாதாரணமாக கால்நடைகள் நடமாடிக்கொண்டு இருக்கும். எத்தனையோ ஆடுகள், மாடுகள் ரோட்டில் கிடக்கின்றன. இந்த பிளாஸ்டிக் பைகளை தின்றுவிட்டு இறந்துபோய் இருக்கின்றன. ஏனென்றால் இந்த மாடுகள் எல்லாம் முன்பு poster-களைத் தின்னும். சுவர்களில் கோந்தால் ஒட்டப்பட்ட காகிதப் poster-களைத் தின்னும். அதைத் தின்றால் ஒன்றும் ஆகாது. ஜீரணம் ஆகிவிடும். ஆனால் ஒரு பிளாஸ்டிக் பை கிடக்கிறதே என்று ஒரு மாடு அதை விழுங்கினால் அது ஜீரணம் ஆகாது. ஏனென்றால் கரைந்துபோகும் தன்மை அதற்குக் கிடையாது. அந்த மாட்டின் குடலையே அது கிழித்துவிடும். அந்த மாடு இறந்துவிடும். இப்படி நகரங்களிலே urban area-களில், நம் கிராமப்புறங்களில் எத்தனையோ கால்நடைகள் அண்மைக்காலங்களில் இறந்து கிடக்கின்றன. இறந்து போகின்றன.

பிற்பகல் 7-00

இங்கே மட்டுமல்ல, காடுகளில் மிருகங்கள்கூட, வன விலங்குகள்கூட, இதனால் பாதிக்கப்படுகின்றன. Mudumalai Sanctuary இருக்கின்றது; Bandipur Sanctuary இருக்கின்றது. வன விலங்குகள் சரணாலயங்கள் இருக்கின்றன. அங்கே எத்தனையோ பயணிகள் செல்கின்றார்கள். அவர்கள் பல தின்பண்டங்களை பிளாஸ்டிக் பைகளில் எடுத்துச் செல்கிறார்கள். சாப்பிட்டுவிட்டு, அந்தப் பைகளை அப்படியே



காடுகளில் போட்டுவிட்டு வந்துவிடுகிறார்கள். அதன் பின்னர் அந்தக் காடுகளில் இருக்கின்ற யானைகள், புலிகள், கரடிகள், குரங்குகள் அந்தப் பைகளைத் தின்று, அதனால் பரிதாபமாகக் செத்துக் கிடக்கின்றன. ஒரு நகரத்தில் ஒரு மிருகத்திற்கு உடல்நலக் கோளாறு ஏற்பட்டால் குறைந்தபட்சம் யாராவது அதைக் கண்டுபிடித்து ஒரு Veterinary Doctor— இடம் அழைத்துச் செல்வார்கள். அப்படி சில மிருகங்களை முடிந்தால் காப்பாற்ற முடியும். ஆனால் வன விலங்குகளை யார் காப்பாற்றுவது? வன விலங்குகள் இந்த நாட்டினுடைய சொத்து. அவற்றைப் பாதுகாக்க வேண்டியது நம் அனைவருடைய கடமை.

அதுமட்டுமல்லாமல் இப்படி எங்கெல்லாம் National Highway-கள் இருக்கின்றனவோ, எங்கெல்லாம் tourist attractions இருக்கின்றனவோ, எங்கெல்லாம் மலைகள், hill stations, கோயில்கள், எங்கெல்லாம் நீர் வீழ்ச்சிகள் இருக்கின்றனவோ, அங்கெல்லாம் பயணிகள் செல்கிறார்கள். விடுமுறை நாட்களில் எல்லோரும் செல்கிறார்கள். இப்போதெல்லாம் இத்தகைய tourist attraction இருக்கின்ற இடங்களில் எல்லாம் கூட்ட நெரிசல் அதிகம். எனவே ஜனத்தொகையும் பெருகிவிட்டது. இப்படி, கூட்டம் கூட்டமாகச் செல்கின்றவர்கள், அங்கேயிருந்து திரும்பும்போது, அந்த இடத்தையே அசுத்தப்படுத்தி விடுகிறார்கள். முன்பெல்லாம் இப்படி கூட்டம் கூட்டமாகப் பயணிகள் சென்றபோது, சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்படவில்லை. ஏனென்றால் முன்பெல்லாம் தின்பண்டங்களைக் கொண்டு சென்றால், காகிதத்தில் சுற்றிக்கொண்டு செல்வார்கள்; அல்லது இலையில் சுற்றிக் கொண்டு செல்வார்கள். தையல் இலை வைத்துக் கொள்வார்கள்; அல்லது வாழை இலை வைத்துக் கொள்வார்கள்; அல்லது வெறும் காகிதத்தில் அந்த உணவுகளை pack செய்து எடுத்துச் செல்வார்கள். சாப்பிட்டுவிட்டு, அவற்றை அப்படியே போட்டுவிட்டால், ஒரு நல்ல மழை பெய்தால் போதும், அப்படியே அது மக்கிப் போய்விடும். மண்ணோடு மண்ணாகிக் கலந்து விடும்.

அதைப்போலவே இந்த plastic carry bags பைகள் வருவதற்கு முன்னால், சணல் பைகள் இருந்தன; துணிப் பைகள் இருந்தன; காகிதப் பைகள் இருந்தன. இங்கே மாண்புமிகு உறுப்பினர் ஒரு கேள்வியைக் கேட்டார். இளநீர் குடிக்க வேண்டுமானால், cool drink குடிக்க வேண்டுமானால் plastic straw இல்லையென்றால் எப்படிக் குடிப்பது என்று கேட்டார். ஏன், paper straw-க்கள் இருக்கின்றன. பிளாஸ்டிக் வருவதற்கு முன்னால் எப்படி எல்லோரும் குடித்துக் கொண்டிருந்தார்கள்? அதனால் அது ஒரு காரணமாகாது. ஆகவே சுற்றுப்புறச் சூழல், இந்த பிளாஸ்டிக்

பொருட்களினால் எந்த அளவு பாதிக்கப்படுகிறது என்பதை அனைவரும் உணர்ந்து, இதை ஒரு சமுதாயச் சீர்திருத்த இயக்கமாக அனைவரும் ஏற்றுக் கொண்டு, நம் சமுதாயத்திலிருந்து படிப்படியாக பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டை அகற்ற வேண்டும். அதை இல்லாமல் செய்ய வேண்டும் என்பதை அனைவரும் ஏற்றுக்கொண்டு, அதை ஓர் இயக்கமாக நடத்தினால்தான், இந்த நாட்டை நாம் காப்பாற்ற முடியும்; தமிழ்நாட்டை நாம் காப்பாற்ற முடியும்; நம் இயற்கை எழிலை நாம் பாதுகாக்க முடியும். சுற்றுப்புறச் சூழலைத் தூய்மையாக வைத்துக்கொள்ள முடியும். ஆனால் மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே தெரிவித்த பல கருத்துகளை நான் ஏற்றுக்கொள்கிறேன். படிப்படியாக மக்களுக்கு பிளாஸ்டிக் பொருட்களைப் பயன்படுத்துவதனால் ஏற்படுகின்ற தீமைகளைப்பற்றி நாம் உணர வைக்க வேண்டும்; புரிய வைக்க வேண்டும். இதற்காகத்தான் நான் சொன்னேன். எல்லோருடைய ஒத்துழைப்போடு நாம் ஓர் இயக்கமே நடத்த வேண்டும்.

பல தொழில் அதிபர்கள் பிளாஸ்டிக் பொருட்கள் தயாரிப்பில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நாம் கால அவகாசம் கொடுத்து, அவர்கள் மாற்றுத் தொழிலைத் தொடங்குவதற்கு அரசாங்கம் அவர்களுக்கு உறுதியும் செய்து, அவர்களுக்கு அந்த வாய்ப்பு அளிக்கவேண்டும் என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அது ஒரு நியாயமான கோரிக்கைதான், நியாயமான சிந்தனைதான்.

அதைப்போலவே பிளாஸ்டிக் பொருட்கள் தயாரிக்கின்ற தொழிற்சாலைகளில் எத்தனையோ தொழிலாளர்கள் வேலை செய்கின்றார்கள். அவர்களுடைய வாழ்க்கை இந்தச் சட்டத்தினால் பாதிக்கப்படக்கூடாது. அரசாங்கம் தன்னுடைய பொறுப்பை உணர்கிறது. அத்தகைய தொழிலாளர்களுக்கும் ஒரு மாற்று வேலை கிடைப்பதற்கும் உதவி செய்யவேண்டும். அதற்கும் போதிய கால அவகாசம் கொடுக்க வேண்டும்.

அதுமட்டுமல்லாமல் இத்தகைய ஒரு சட்டத்தை ஒரேயடியாகக் கொண்டு வந்து நிறைவேற்ற முடியாது என்பதை இந்த அரசு உணர்கிறது. நானும் அதை ஏற்றுக்கொள்கிறேன். முதலில் இதனுடைய தீமைகளை மக்களுக்கு விளக்கி, மக்கள் அதை உணரும்படிச்செய்து, அதன் பின்னர் முதலில் மாநகராட்சிகளில், பின்னர் Municipality-களில் பின்னர் பேரூராட்சிகளில், பின்னர் பஞ்சாயத்துகளில், பின்னர் தமிழ்நாடு முழுவதும் என்ற அளவில் படிப்படியாக இந்தச் சட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்பதை நானும் ஏற்றுக்கொள்கிறேன். ஆகவே எவ்வாறு





இதையெல்லாம் செய்யலாம் என்பதைச் சிந்திக்க அரசுக்கும் கால அவகாசம் தேவைப்படுவதால், இந்தச் சட்டமுன்வடிவை Select Committee-க்கு refer செய்யலாம் என்று நான் கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 7-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதி 132-ன்கீழ் 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிளாஸ்டிக் பொருட்கள் (விற்பனை, சேமித்து வைப்பதனை, ஏற்றிச் செல்வதனை மற்றும் பயன்படுத்துவதனை தடை செய்தல்) சட்டமுன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/2002)" ஆய்ந்து அறிக்கை அளிப்பதற்கு ஆய்வுக் குழுவிற்கு (Select Committee)-க்கு அனுப்ப வேண்டுமென்ற தீர்மானத்தை, புரட்சித் தலைவி அவர்களுடைய கருத்துக்கு இணங்க இந்தத் தீர்மானத்தை மொழிகிறேன். இக்குழுவில் பணியாற்ற இருக்கும் உறுப்பினர்கள் குறித்து பின்னர் அறிவிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஆய்வுக்குழுவிற்கு விடப்படுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (9-5-2002) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 7-07 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

[2002 மே 8

# 10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

161. 2000-2001ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிமெண்டஸ் நிறுவனத்தின் இருபத்தி ஐந்தாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

162. 1998-99ஆம் ஆண்டிற்கான சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் நிறுவனத்தின் நாற்பத்தி இரண்டாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

163. 1999-2000ஆம் ஆண்டிற்கான சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் நிறுவனத்தின் நாற்பத்தி மூன்றாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

164. 2000-2001ஆம் ஆண்டிற்கான பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழகத்தின் இருபத்தி ஏழாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், மற்றும் ஏனைய தாள்கள்

391. பொதுக் கணக்குக் குழுவின் நூறாவது அறிக்கை. (2001-2002)

392. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று ஒன்றாவது அறிக்கை (2001-2002)

393. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று இரண்டாவது அறிக்கை (2001-2002)

394. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று மூன்றாவது அறிக்கை (2001-2002)

395. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று நான்காவது அறிக்கை (2001-2002)

396. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று ஐந்தாவது அறிக்கை (2001-2002)



2002 மே 8]

397. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று ஆறாவது அறிக்கை (2001-2002)

398. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று ஏழாவது அறிக்கை (2001-2002)

399. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று எட்டாவது அறிக்கை (2001-2002)

400. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தி மூன்றாவது அறிக்கை (2001-2002)

401. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தி நான்காவது அறிக்கை (2001-2002)

402. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தி ஐந்தாவது அறிக்கை (2001-2002)

403. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தி ஆறாவது அறிக்கை (2001-2002)

404. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தி ஏழாவது அறிக்கை (2001-2002)

405. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தி எட்டாவது அறிக்கை (2001-2002)

406. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தி ஒன்பதாவது அறிக்கை (2001-2002)

407. பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பதாவது அறிக்கை (2001-2002)

408. மனுக்கள் குழுவின் ஏழாவது அறிக்கை. (2001-2002)

409. மனுக்கள் குழுவின் எட்டாவது அறிக்கை (2001-2002)

410. பதினோராவது நிதிக் குழுவிற்கு தமிழ்நாடு அரசு அளித்த குறிப்புத் தொகுதியின் சுருக்கமும், பதினோராவது நிதிக் குழுவின் முக்கிய பரிந்துரைகளும் (மே 2002) (தமிழ், ஆங்கிலம்)

411. தமிழ்நாடு இரண்டாவது மாநில நிதி ஆணையத்தின் அறிக்கையும், பரிந்துரைகளும் (மே 2001) (தொகுதி-1) (ஆங்கிலம்)

[2002 மே 8

412. தமிழ்நாடு இரண்டாவது மாநில நிதி ஆணையத்தின் அறிக்கையும், பரிந்துரைகளும் (மே 2001) (தொகுதி-1) (தமிழ்)

413. தமிழ்நாடு இரண்டாவது மாநில நிதி ஆணையத்தின் அறிக்கையும், பரிந்துரைகளும் (பின் இணைப்புகள்) (மே 2001) (தொகுதி-2) (ஆங்கிலம்)

414. தமிழ்நாடு இரண்டாவது மாநில நிதி ஆணையம் - இணைப்புகள் (மே 2001) (தொகுதி-2) (தமிழ்)

415. தமிழ்நாடு இரண்டாவது மாநில நிதி ஆணையத்தின் சுருக்கம் (மே 2001) (தமிழ்)

416. இரண்டாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைளின் விளக்கக் குறிப்பு (மே 2002) (தமிழ், ஆங்கிலம்)

417. மானியக் கோரிக்கை எண் 15- நிதித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 2002-2003 (தமிழ், ஆங்கிலம்)

418. மானியக் கோரிக்கை எண் 15-2002-2003 ஆம் ஆண்டிற்கான நிதித் துறை பற்றிய விரிவான மானியக் கோரிக்கை.

419. நிதித் துறையின் "மக்கள் சாசனம்" 2002-2003 (தமிழ், ஆங்கிலம்)

420. மானியக் கோரிக்கை எண் 35- திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 2002-2003 (தமிழ், ஆங்கிலம்.)

421. மானியக் கோரிக்கை எண் 35—2002-2003 ஆம் ஆண்டிற்கான திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை பற்றிய விரிவான மானியக் கோரிக்கை.

422. தகவல் தொழில் நுட்பத் துறையின் செயல்திட்ட ஆய்வுரை (2001-2002) (தமிழ், ஆங்கிலம்)

423. மானியக் கோரிக்கை எண் 1- 2002-2003 ஆம் ஆண்டிற்கான மாநில சட்டமன்றம் பற்றிய விரிவான மானியக் கோரிக்கை.

424. மானியக் கோரிக்கை எண் 30-தகவல் தொழில் நுட்பவியல் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 2002-2003 (தமிழ், ஆங்கிலம்)



2002 மே 8]

425. மானியக் கோரிக்கை எண் 30—2002-2003ஆம் ஆண்டிற்கான தகவல் தொழில்நுட்பவியல் துறைக்கான விரிவான மானியக் கோரிக்கை.

426. தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் "மக்கள் சாசனம்" (தமிழ், ஆங்கிலம்).

427. மானியக் கோரிக்கை எண் 48-ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 2002-2003 (தமிழ், ஆங்கிலம்).

428. மானியக் கோரிக்கை எண் 48—2002-2003 ஆம் ஆண்டிற்கான ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய விரிவான மானியக் கோரிக்கை.

429. மானியக் கோரிக்கை எண் 2—ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 2002-2003 (தமிழ், ஆங்கிலம்).

430. மானியக் கோரிக்கை எண் 2—2002-2003 ஆம் ஆண்டிற்கான ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய விரிவான மானியக் கோரிக்கை.

431. 2002-2003 ஆம் ஆண்டிற்கான கடன் செலவுகள் பற்றிய விரிவான மானியக் கோரிக்கை.

432. 2002-2003 ஆம் ஆண்டிற்கான பொதுக் கடன்-திருப்பிச் செலுத்துதல் பற்றிய விரிவான மானியக் கோரிக்கை.

433. தொழில் துறை குறித்த மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் (2002-2003) (தமிழ், ஆங்கிலம்).

434. வணிக வரித் துறை குறித்த மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் (2002-2003) (தமிழ், ஆங்கிலம்).

435. தமிழ்நாடு காவல் துறையின் "மக்கள் சாசனம்", 2002-2003 (தமிழ்).

436. ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வு கால நன்மைகளும் பற்றிய "மக்கள் சாசனம்" (தமிழ், ஆங்கிலம்).

**இணைப்பு I**

**(398 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)**

**மானியக் கோரிக்கை எண்15**

**நிதித் துறை**

**கொள்கை விளக்கக் குறிப்பு, 2002-2003**

**"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு."**

மேலே குறிப்பிடப்பட்டுள்ள மாமுனிவர் திருவள்ளுவரின் வாக்கில் நிதித் துறையின் பங்கு சரியாக வரையறுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் மாநில வரவு-செலவுத் திட்டம் தயாரிப்பதில் நிதித் துறை முக்கிய பங்கு வகிக்கிறது. வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதற்காக பல்வேறு வகையான புள்ளிவிவரங்களை நிதித் துறை சீராய்வு செய்வது பன்முகப்பட்டதும் விரிவானதுமான பணியாகும்.

2. செலவுகளை கட்டுப்படுத்துதலும் செம்மையான நிதி நிர்வாகமும் நிதித் துறையின் முக்கிய பணிகளாகும். பிற துறைகளின் செயற்குறிப்புகள் நிதித் துறையால் கவனமாக கூர்ந்தாய்வு செய்யப்படுகின்றன. இதர துறைகளின் கருத்துருக்கள், தேவை, செலவு, பயன்பாடு, நிதி ஒதுக்கீடு மற்றும் நிதி ஒதுக்க நடைமுறைகளின் அடிப்படையில் இத்துறையால் ஆய்வு செய்யப்படுகின்றன. வரவுகளும் செலவுகளும் சமச்சீர் நிலையில் இருக்க வேண்டியதன் அவசியத்தை கருத்திற் கொண்டும், அரசின் ஒட்டுமொத்த நோக்கங்களை எய்தவேண்டியும் கருத்துருக்கள் ஆய்வு செய்யப்படுகின்றன.

3. கீழ்க்கண்ட துறைத்தலைமையிடங்கள் நிதித் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் வருகின்றன:

(i) சிறு சேமிப்பு

(ii) பரிசுச்சீட்டு

(iii) முதன்மை உள் தணிக்கை

(iv) தகவல் தொகுப்பு விவர மையம்

[2002 மே 8

(v) கருவூலக் கணக்கு

(vi) ஓய்வூதியம்

(vii) உள்ளாட்சி நிதித் தணிக்கை

(viii) கூட்டுறவுத் துறைத் தணிக்கை

4. மேற்கண்ட துறைகளின் செயல்பாடுகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன:

**சிறுசேமிப்பு**

5. சிறுசேமிப்பு மாநில அரசின் மிக முக்கியமானதொரு வருவாய் ஆதாரமாகும். சிறுசேமிப்பு நிகர வருவாய் முழுவதையும் மாநில அரசுக்கு நீண்டகாலத் தவணைக் கடனாக வழங்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. 25 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தத்தக்க இக்கடன்களுக்கு 5 ஆண்டு கால தவணை நீட்டிப்பும் உள்ளது. இக்கடன்களுக்கான வட்டிவீதம் 10.5 விழுக்காடு ஆகும்.

6. அனைத்துத் தரப்பு மக்களுக்கும் ஏற்ற பல்வேறு வகை சிறுசேமிப்புத் திட்டங்கள் நடப்பில் உள்ளன. அவை பின்வருமாறு:

**அ. உயர் வருவாய் அளிக்கும் திட்டங்கள்**

(i) கிஸான் விகாஸ் பத்திரம் (Kisan Vikas Patra).

**ஆ. வரிச் சலுகை அளிக்கும் திட்டங்கள்**

(i) 1992 ஆம் ஆண்டு தேசிய சேமிப்பு திட்டம்.

(ii) தேசிய சேமிப்பு பத்திரம் (8-வது வெளியீடு).

(iii) 15 ஆண்டு கால பொது வருங்கால வைப்பு நிதித் திட்டம்.

**இ. தொடர் வருவாய் அளிக்கும் திட்டங்கள்**

(i) அஞ்சலக மாதாந்திர வருவாய்த் திட்டம்.

(ii) அரசு/பொது நிறுவன ஓய்வுபெற்றவர்களுக்கான முதலீட்டுத் திட்டம்.

**ஈ. தொடர் சேமிப்புக்கான திட்டங்கள்**

(i) அஞ்சலகத் தொடர் வைப்புத் திட்டம்.



2002 மே 8]

**உ. வைப்பு நிதியில் முதலீடு செய்வோருக்கான திட்டம்**

(i) அஞ்சலக குறித்த கால - 1 ஆண்டு வைப்பு நிதி

(ii) அஞ்சலக குறித்த கால - 2 ஆண்டுகள் வைப்பு நிதி

(iii) அஞ்சலக குறித்த கால - 3 ஆண்டுகள் வைப்பு நிதி

(iv) அஞ்சலக குறித்த கால - 5 ஆண்டுகள் வைப்பு நிதி முதலியவை.

7. அனைத்து சிறுசேமிப்புத் திட்டங்களுக்கும் வழங்கப்படும் வட்டி விகிதங்கள் மத்திய அரசினால் நிர்ணயிக்கப்படுகின்றன. சிறுசேமிப்புத் திட்டங்களுக்கான வட்டி விகிதத்தை மத்திய அரசு 01-03-2002 முதல் குறைத்துள்ளது. அதன் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| வரிசை எண் | திட்டங்கள் | பழைய வட்டி விகிதம் | 01-03-2002 முதல் திருத்தி அமைக்கப்பட்ட வட்டி விகிதம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | மாத வருவாய்த் திட்டம் | 9.5% | 9% |
| 2. | 1 ஆண்டு-குறித்த கால வைப்பு நிதி | 7.5% | 7.25% |
| | 2 ஆண்டு-குறித்த கால வைப்பு நிதி | 8% | 7.5% |
| | 3 ஆண்டு-குறித்த கால வைப்பு நிதி | 9% | 8.25% |
| | 5 ஆண்டு-குறித்த கால வைப்பு நிதி | 9% | 8.5% |
| 3. | ஐந்தாண்டு அஞ்சலகத் தொடர் வைப்புத் திட்டம் | மாதம் ரூ.10 வீதம் செலுத்தி ஐந்தாண்டு முடிவில் முதிர்வுத் தொகை ரூ.758.53 | மாதம் ரூ.10 வீதம் செலுத்தி ஐந்தாண்டு முடிவில் முதிர்வுத் தொகை ரூ.748.49 |

[2002 மே 8

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 4. | தேசிய சேமிப்புப் பத்திரம் (எட்டாவது வெளியீடு) | 9.5% | 9% |
| 5. | பொது வருங்கால வைப்பு நிதி | 9.5% | 9% |
| 6. | அஞ்சலக சேமிப்பு வங்கி | 3.5% | 3.5% |
| 7. | கிஸான் விகாஸ் பத்திரம் | 7¼ ஆண்டுகளில் இரு மடங்கு | 7 ஆண்டு 8 மாதங்களில் இரு மடங்கு |
| 8. | அரசு/பொது நிறுவன ஓய்வு பெற்றோருக்கான முதலீட்டுத் திட்டம் | 8.5% | 8% |
| 9. | தேசிய சேமிப்புத் திட்டம், 1992 | 9% | 8.5% |

**8. குறியீடு மற்றும் சாதனை**

ஒவ்வொரு ஆண்டும் அரசு சிறுசேமிப்புத் திட்ட நிகர வசூல் குறியீட்டினை நிர்ணயம் செய்து அதனை அனைத்து மாவட்டங்களுக்கும் பகிர்ந்தளிக்கிறது. அந்தந்த மாவட்டங்களில் சிறுசேமிப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி இலக்கினை எய்துவதற்கு மாவட்ட ஆட்சியர்கள் பொறுப்பாவார்கள். சென்னையைப் பொறுத்தவரை சென்னை மாநகராட்சி ஆணையர் இதற்குப் பொறுப்பாவார். 2001-2002ஆம் ஆண்டிற்கு சிறுசேமிப்பு நிகர வசூல் இலக்கு ரூ.2,400 கோடி என மாநில அரசு நிர்ணயித்தது. அதில் ரூ.1850 கோடி (தோராயமாக) வசூல் செய்யப்பட்டுள்ளது.

9. சிறுசேமிப்பு இயக்குநரகம், சிறுசேமிப்புத் திட்டங்களை செயல்படுத்துவதற்கு உறுதுணையாக செய்தித் தாள், தொலைக்காட்சி மற்றும் வானொலி மூலம் விளம்பரம் செய்கிறது. மேலும் விளம்பரப் பலகைகள், கையேடுகள் மற்றும் மின்னணுப் பலகைகள் மூலமும் விளம்பரம் செய்கிறது. சிறுசேமிப்பு இயக்குநரகம் ஒவ்வொரு மாதமும்



2002 மே 8]

மாவட்டவாரியான, திட்டவாரியான புள்ளிவிவரங்களைத் தொகுப்பதுடன் வசூலையும் ஆய்வு செய்து வருகிறது. சிறுசேமிப்பு இயக்குநர், அஞ்சல் மற்றும் தேசிய சேமிப்பு நிறுவனத்துடன் ஒருங்கிணைந்து செயல்படுவதுடன், ஒவ்வொரு மாவட்டத்தின் சிறுசேமிப்பு வசூல் பணியினை மாவட்ட ஆட்சித் தலைவர்களின் நேர்முக உதவியாளர் (சிறுசேமிப்பு) மற்றும் சென்னை மாநகராட்சியின் சிறுசேமிப்பு துணை இயக்குநர் மூலமாக காலமுறையில் ஆய்வு செய்து வருகிறார்.

**சிறுசேமிப்பு முகவரமைப்பு**

**10.** சிறுசேமிப்பு வசூலில் முகவர்கள் முக்கிய இடம் வகிக்கின்றனர். தற்போது மூன்று வகையான முகவரமைப்புகள் உள்ளன.

**(i) நிலைப்படுத்தப்பட்ட முகவரமைப்பு (SAS)**

சிறுசேமிப்புத் திட்டங்களில் முதலீடு செய்ய இம்முகவர்கள் பரிந்துரை செய்கின்றனர். இம்முகவரமைப்பின்கீழ், தற்போது மாநிலத்தில் 10,238 முகவர்கள் உள்ளனர். இவர்களை மாவட்ட ஆட்சியர், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் வட்டாட்சியர்கள் நியமிக்கின்றனர்.

**(ii) அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் (பொது வருங்கால வைப்பு நிதித் திட்டம்)**

இந்த வகையான முகவர்கள் பொது வருங்கால வைப்பு நிதித் திட்ட முதலீடுகளை மட்டும் திரட்ட முடியும். மாநில முழுவதும் இவ் வகையிலான அமைப்பின்கீழ் 1,703 முகவர்கள் உள்ளனர். இந்த முகவர்கள் மத்திய அரசின் தேசிய சேமிப்பு நிறுவன மண்டல இயக்குநர் மூலம் நியமனம் செய்யப்படுகின்றனர்.

**(iii) மகளிர் முகவர் திட்டம் (MPKBY)**

மகளிர் மட்டுமே முகவர்களாக நியமிக்கப்படும் இத்திட்டத்தில், 5 ஆண்டு அஞ்சலகத் தொடர்வைப்பு திட்ட முதலீடுகளை இவர்கள் மட்டுமே திரட்டமுடியும். இவர்கள் நிலைப்படுத்தப்பட்ட முகவர்களாகவும் மற்றும் பொது வருங்கால வைப்பு நிதி முகவர்களாகவும் செயல்படலாம். தற்போது இந்த முகவரமைப்பின் கீழ் 15,808 முகவர்கள் மாநிலம் முழுவதும் உள்ளனர். இவர்களை மாவட்ட ஆட்சியர்கள், மத்திய

[2002 மே 8

அரசின் தேசிய சேமிப்பு நிறுவன மண்டலத் துணை இயக்குநரின் பரிந்துரையுடன் நியமனம் செய்கின்றனர்.

**11. முகவர்கள் ஊக்கத் தொகை**

முகவர்கள் திரட்டும் முதலீடுகளுக்குக் கீழ்க்கண்டவாறு ஊக்கத்தொகை பெறுகின்றனர்:—

| வ. எண் | முகவர் அமைப்பு | மத்திய அரசின் தரகுத் தொகை | மாநில அரசின் கூடுதல் ஊக்கத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1) | நிலைப்படுத்தப்பட்ட முகவர் (SAS) | 0.5% முதல் 1% | 0.5% முதல் 1% | 1% முதல் 2% |
| 2) | மகளிர் முகவர் (MPKBY) | 4% | 2% | 6% |
| 3) | பொது வருங்கால வைப்பு நிதி முகவர் (PPF) | 1% | 1% | 2% |

12. முகவர் ஊக்கத்தொகை தீர்வு செய்வது மற்றும் அவர்கள் பணி முன்னேற்றத்தை, தேசிய தகவல் மைய தொழில்நுட்ப உதவியுடன் கண்காணிப்பது போன்ற மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகங்களால் செய்யப்படும் பணிகளை சிறுசேமிப்பு இயக்குநரகம் கணினி மயமாக்கிட தக்க நடவடிக்கை எடுத்துள்ளது. இப்பணி முடிக்கப்பட்டு தகவல் தொடர்பு பரிமாற்றம் நடைமுறையில் உள்ளது.

13. மேலும் மாநிலத்தில் சிறுசேமிப்பு வசூல் அதிகரிக்கப்பட சிறுசேமிப்பு இயக்குநரகம் கீழ்க்கண்ட நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது :—

(i) தேசிய தகவல் மையம் முகவர்களுக்கான அடிப்படைத் தகவல் அடங்கிய மென் பொருள் வடிவமைத்து அதன் மூலம் நீடித்து செயல்படாத முகவர்களைக் கண்டறிந்து நீக்கம் செய்ய நடவடிக்கை எடுத்தல்;

(ii) ஒவ்வொரு மாவட்டத்திலும் அதிக அளவில் பணி ஓய்வு பெறும் பணியாளர்களின் ஓய்வூதியப் பயனை மாதாந்திர வருவாய்த் திட்டம் மற்றும் இதர திட்டங்களில் முதலீடு செய்தல்;



2002 மே 8]

(iii) வருமான வரித் துறை வாயிலாக அதிக வருவாய் உள்ள வரி செலுத்துவோர் பட்டியல் பெற்று வரிச் சலுகையுடன் இணைந்த சேமிப்பினைத் தரும், தேசிய சேமிப்புப் பத்திரம் (NSC), தேசிய சேமிப்புத் திட்டம், பொது வருங்கால வைப்பு நிதி (PPF) போன்ற திட்டங்களில் அவர்களின் சேமிப்பை முதலீடு செய்ய ஊக்குவிக்க, அஞ்சல் மூலம் விவரம் அனுப்புதல்;

(iv) மகளிர் மற்றும் நிலைப்படுத்தப்பட்ட முகவரமைப்பில் முகவர்களை அதிக அளவில் நியமனம் செய்ய குறிப்பாக இல்லத்தரசிகளை நியமிக்க நடவடிக்கை எடுத்தல்;

(v) ஒவ்வொரு நிதியாண்டிலும் ஒன்றிய அளவில் சிறுசேமிப்பு முகவர் பயிற்சி முகாம்கள் இரண்டு முறை நடத்துதல்;

(vi) சிறப்பாகச் செயல்படும் சிறுசேமிப்பு முகவர்களுக்கு ஒன்றிய, மாவட்ட மற்றும் மாநில அளவில் வெகுமதிகளும் வழங்கப்படுகின்றன;

(vii) சிறப்பாகச் செயல்படும் அஞ்சலக அலுவலர்களுக்கு வெகுமதிகள் வழங்குவதன் மூலம் அஞ்சலக அலுவலர்கள் பொதுமக்களுக்குச் சிறப்பான சேவை வழங்கச் செய்தல்;

(viii) ஒவ்வொரு மாவட்டத்திலும் தேவையான அஞ்சலகங்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து தருவதன் மூலம் பொது மக்களுக்கான வசதியினை அதிகரித்தல்;

(ix) முகவர் ஊக்கத்தொகை உடனுக்குடன் தீர்வு செய்ய துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

(x) மாவட்டந்தோறும் கிராமங்களில், ஒளி-ஒலி அமைப்பின் மூலம் முறையான விளம்பர இயக்கம் நடத்த செயல் திட்டங்கள் வகுத்து ஒப்புதல் அளிக்கப்பட்டு வருகிறது.

(xi) பொதுமக்களின் வசதிக்காக தொலைபேசியுடன் இணைந்த தகவல் அறியும் திட்டம் (IVRS), சிறுசேமிப்பு இயக்குநரகத்திலும் மதுரை மற்றும் கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும் பொருத்தப்பட்டுள்ளன. வேலூர், திருச்சி, காஞ்சிபுரம், திருநெல்வேலி, ஈரோடு மற்றும் சேலம் மாவட்டங்களில் தொலைபேசியுடன் இணைந்த தகவல் அறியும் திட்டம் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[2002 மே 8

14. உள்ளாட்சி நிறுவனங்களை ஊக்கப்படுத்தி சிறுசேமிப்பு வசூலில் ஈடுபடச் செய்யும் வண்ணம், உள்ளாட்சி நிறுவனங்கள் கடந்த ஆண்டைவிட நடப்பாண்டில் செய்த கூடுதல் நிகர வசூலின் அடிப்படையில் அரசு ஊக்கத்தொகை வழங்குகிறது. 2000-2001 ஆம் ஆண்டில் ரூ.31.29 கோடியும், 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.33.73 கோடியும் இதற்காக வழங்கப்பட்டது.

**பரிசுச்சீட்டு**

15. பொதுமக்களுக்கான நலத்திட்டங்களைச் செயல்படுத்த நிதியினைத் திரட்டுவது பரிசுச்சீட்டு திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

16. தமிழ்நாடு பரிசுச்சீட்டு கீழ்க்காணும் காரணங்களினால் மக்களிடையே நன்மதிப்பு பெற்றுள்ளது.

(i) குலுக்கல்கள் அனைவரும் அறியும் வண்ணம் இரண்டு அரசு அலுவலர்கள் மற்றும் மூன்று அரசு சார்பற்ற அலுவலர்கள் முறையே ஒரு தொழிலதிபர், ஒரு வங்கி மேலாளர் மற்றும் ஒரு பரிசுச்சீட்டு முகவர் ஆகியோர் அடங்கிய கண்காணிப்புக் குழுவால் வெளிப்படையான முறையில் நடத்தப்படுகிறது.

(ii) ரூபாய் 5,000/-க்கும் மேலாக உள்ள பரிசுகள் துறையின்மூலம் பரிசு பெற்ற நபருக்கு வழங்கப்படுகிறது. பரிசு பெற்ற பரிசுச்சீட்டுக்கள் அனைத்தும் இத்துறையிடம் ஒப்படைக்கப்படுகிறது.

(iii) பரிசுச்சீட்டு குலுக்கலின்போது பொது மக்கள் பங்கேற்க அனுமதி வழங்கப்படுகிறது.

(iv) அனைத்துப் பரிசுச்சீட்டு குலுக்கல்களின் முடிவுகள் அரசிதழில் வெளியிடப்படுகின்றன.

17. கீழ்க்காணும் பரிசுச்சீட்டுத் திட்டங்கள் தற்போது நடைமுறையிலுள்ளன :

| வ.எண் | திட்டத்தின் பெயர் |
|---|---|
| (i) | திருமகள் (நாள்தோறும்) |
| (ii) | வைகை (வெள்ளிக்கிழமைதோறும்) |
| (iii) | பணத்தோட்டம் (செவ்வாய்க்கிழமைதோறும்) |
| (iv) | தமிழ்நாடு வள்ளல் (சனிக்கிழமைதோறும்) |
| (v) | பம்பர் |
| (vi) | பண்டிகைக் கால பம்பர் |



2002 மே 8]

2001-2002 ஆம் ஆண்டில் மொத்த விற்பனை ரூ.166.16 கோடியாகவும் நிகர இலாபம் ரூ.50.23 கோடியாகவும் இருந்தது.

**18. பரிசுச்சீட்டுக் குலுக்கல் நடத்துதல்**

இரண்டு மற்றும் ஐந்து ரூபாய் மதிப்புள்ள பரிசுச்சீட்டுகளின் வாராந்திர மற்றும் தினசரி குலுக்கல்கள் சென்னையில் நடத்தப்படுகின்றன. அவை, அரசு அலுவலர்கள் மற்றும் அரசு சாரா அலுவலர்களான, தொழிலதிபர்கள், வங்கி மேலாளர்கள் மற்றும் பரிசுச்சீட்டு முகவர்கள் கொண்ட குழுவினரால் கண்காணிக்கப்பட்டு சான்றளிக்கப்படுகின்றன.

பத்து, இருபது மற்றும் ஐம்பது ரூபாய் மதிப்புள்ள பம்பர் குலுக்கல்கள் மாதம் இருமுறை பல்வேறு மாவட்டங்களில் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் நடத்தப்படுகிறது. பொதுமக்கள் முன்னிலையில் அனைவரும் அறியும் வண்ணம் நடத்தப்படும் பரிசுச்சீட்டு குலுக்கல் பரிசு வென்றவர்களை அனைவரும் வெளிப்படையாக அறியச் செய்கிறது.

**19. பரிசு விழுந்த சீட்டுகளின் விவரங்களை கணினிமயமாக்கல்**

குலுக்கல் சம்பந்தமான கணக்கு விவரங்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. தானியங்கி இயந்திரத்தின் மூலம் பரிசு விழுந்த பரிசுச்சீட்டுக்களின் எண்ணிக்கையைக் கணக்கிடுவதற்கு, எல்காட் நிறுவனத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**20. பரிசுச்சீட்டு மூலம் கிடைக்கும் நிகர வருவாயைப் பயன்படுத்துதல்**

தமிழ்நாடு பரிசுச்சீட்டுக்களின் மூலம் கிடைக்கும் நிகர வருவாயில் 75 விழுக்காடு ஆண்டுதோறும், தமிழ்நாடு சிறப்பு நல நிதிக்கு மாற்றம் செய்யப்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் டிசம்பர் மாதத்தில் நடைபெறும் முதல் குலுக்கலின் நிகர வருவாய் முன்னாள் இராணுவத்தினர் நல நிதிக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. 2001-2002 ஆம் நிதியாண்டில் ஊனமுற்றவர்களின் நலத்திற்காக ஒரு சிறப்புக் குலுக்கல் நடைபெற்றது.

**21. கணினியுடன் இணைந்த பரிசுச்சீட்டுத் திட்டம் (Online Lottery)**

கணினியுடன் இணைந்த பரிசுச்சீட்டுத் திட்டம் ஒன்றினை அறிமுகப்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. அத்திட்டத்தை

மேற்பார்வையிட்டு செயல்படுத்த, தகவல் தொழில்நுட்பத் துறை செயலர் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

**உள் தணிக்கை மற்றும் நிறுவனத் தணிக்கைத் துறை**

*22.* தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத்தொழில்கள் வாரியம், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் போன்ற சட்டபூர்வ மற்றும் சட்டம் சாரா நிறுவனங்களின் கணக்குகளைத் தணிக்கை செய்வது இத்துறையின் முக்கிய செயல்பாடு ஆகும்.

*23.* புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மதிய சத்துணவுத் திட்டம், அரசுத் துறைகளின் உள்தணிக்கை, வேளாண் விரிவாக்க மையங்கள் மற்றும் மாநில அரசிடமிருந்து மானிய உதவி பெறும் நிறுவனங்கள் போன்றவற்றின் தணிக்கைகள் இத்துறைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன.

*24.* இத்துறையால் 2001-2002 ஆம் ஆண்டில் தணிக்கை செய்யப்பட்ட பூகிய நிறுவனங்களின் கணக்கு மதிப்பு ரூ.1883.55 கோடி ஆகும்.

**தமிழ்நாடு அரசு தகவல் தொகுப்பு விவர மையம்**

*25.* நிதி சம்பந்தமான தகவல்களைத் தொகுத்து மாநில அரசின் கணக்குகளை மின்னணு தொகுப்பாய்வுச் சாதனத்தின் மூலம் தக்க திறனாய்வு செய்வதற்கும், அச்சீரமைப்பின் மூலம் சிறந்த வரவு-செலவுத் திட்டத்தினை உருவாக்கவும் மத்திய வரவு-செலவுத் திட்ட விவரங்கள் தொகுப்பு மையம் 1971 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இம்மின்னணு விவர வகைப்பாட்டு வசதிகளை மையமாகக் கொண்டு அரசுக்கான மேலாண்மைத் தகவல் பயன்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட வேண்டுமென்பதே அரசின் நோக்கமாகும். இதன் அடிப்படையில் மின்னணு விவர வகைப்பாட்டினைப் பயன்படுத்தி அரசுத் துறைகளின் பலதரப்பட்ட செயல்பாட்டுத் தேவைகளை தொகுக்கிற வகையில், முழுமையான அரசு தகவல் தொகுப்பு விவர மையம் 1972 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. நிர்வாக வசதிக்காக மேற்படி இரண்டு மையங்களும் ஒரு குடையின்கீழ் அரசு தகவல் தொகுப்பு விவர மையமாக 1975 ஆம் ஆண்டு இணைக்கப்பட்டது.

*26.* ஐ.பி.எம். (IBM) நிறுவனத்தின் மூலமாக பள்ளித் தேர்வு முடிவுகள் தொகுக்கும் பணிகள் 1974 ஆம் ஆண்டு வரை நடைபெற்றன. அப்பணிகள்



பிறகு அரசு தகவல் தொகுப்பு விவர மையத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு, ஆரம்பித்த நாளிலிருந்து தேர்வு முடிவுகள் தொடர்பான விவரப் பதிவுப்பணிகள் மற்றும் தேர்வாளரது அடிப்படைக் குறிப்புகள் தொகுத்தல் போன்ற பணிகள் அரசு தகவல் தொகுப்பு விவர மையத்தால் செய்யப்பட்டு வருகின்றன.

***27. தேர்வு முறை***

பள்ளி இறுதித் தேர்வு முடிவுகள் கணினி மூலமாக தொகுக்கும் பணி செப்டம்பர் 1974 முதலும், மேனிலைப் பள்ளித் தேர்வு முடிவுகள் தொகுக்கும் பணி மார்ச் 1980 முதலும் இம்மையத்தில் ஆரம்பிக்கப்பட்டன. அன்று முதல் இம்மையத்தின் வாயிலாக, மார்ச் மற்றும் அக்டோபர் தேர்வுகள் வாரியாக, மெட்ரிக்குலேசன் மற்றும் ஆங்கிலோ இந்தியன் பள்ளித் தேர்வு முடிவுகள் மற்றும் அனைத்துப் பள்ளி இறுதித் தேர்வு முடிவுகள் ஆகியவை முறையாக கணினியில் தொகுக்கப்பட்டு குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் சரியாக வெளியிடப்பட்டு வருகின்றன. அரசு தகவல் தொகுப்பு விவர மையத்தின் 1998-2002 ஆம் ஆண்டு வரையிலான ஐந்தாண்டுக் கால செயல் மதிப்பீடு கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| தேர்வுகள் | 1998 மார்ச் | 1999 மார்ச் | 2000 மார்ச் | 2001 மார்ச் | 2002 மார்ச் |
|---|---|---|---|---|---|
| மேல்நிலைப் பள்ளி மாணவர்களின் எண்ணிக்கை | 3,01,017 | 3,33,226 | 3,43,798 | 3,89,443 | 4,29,867 |
| பத்தாம் வகுப்பு மாணவர்களின் எண்ணிக்கை | 4,95,085 | 5,29,033 | 5,61,651 | 6,09,022 | 6,21,056 |
| மெட்ரிக்/ ஆங்கிலோ இந்தியன் பள்ளி மாணவர்களின் எண்ணிக்கை | 60,045 | 65,697 | 73,122 | 78,109 | 84,293 |
| **ஆண்டுக்கான மொத்தம்** | **8,56,147** | **9,27,956** | **9,78,571** | **10,76,574** | **11,35,216** |

*28.* ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மற்றும் அக்டோபர் மாதத் தேர்வுகளில் மேல்நிலைப் பள்ளி, பத்தாம் வகுப்பு, மெட்ரிக்குலேசன் மற்றும் ஆங்கிலோ இந்தியன் பள்ளி ஆகியவற்றைச் சார்ந்த 15,00,000 மாணவர்களின் தேர்வு முடிவுகள் இம்மையத்தின் கணினிகளில் தொகுக்கப்படுவதோடு தேர்வு குறித்த புள்ளி விவரங்கள் மற்றும் அவை சார்ந்த அறிக்கைகள் அனைத்தையும் அச்சடித்து குறிப்பிட்ட கால

[2002 மே 8

வரையறைக்குள் இம்மையம் தொடர்ந்து வழங்கி வருகிறது. மேலும் ஆண்டுதோறும் மார்ச்/அக்டோபர் மாதங்களில் தேர்வு எழுதும் 4.50 இலட்சம் தனித் தேர்வர்களின் தேர்வு முடிவுகளையும் இந்த மையம் தொகுத்து வழங்கி வருகிறது.

29. அரசு தகவல் தொகுப்பு விவர மையத்திற்குக் கீழ்க்கண்ட பணிகளும் தொகுப்பதற்கென அளிக்கப்படுகின்றன:

(i) பி.டெக். (உயிரி தொழில்நுட்பவியல்) நுழைவுத் தேர்வு முடிவுகள்

(ii) அறிவுத்திறன் சோதனைத் தேர்வு

(iii) சட்டக் கல்வி நுழைவுத் தேர்வுகள்

(iv) இந்திய ஆட்சிப் பணித் தேர்வுக்கான முன்பயிற்சித் தேர்வுகள்

(v) சீருடைப் பணியாளர்கள் தேர்வாணையக் குழுமத்தின் உதவி ஆய்வாளர், காவலர், தீயணைப்புப் படை வீரர் மற்றும் சிறைப் பாதுகாவலர் பணிகளுக்கான தேர்வு தொகுப்புப் பணிகள்

(vi) ஆசிரியர் சேமநல நிதி

**30. அரசு தகவல் தொகுப்பு விவர மையத்தில் தமிழ்நாடு அரசு தகவல் களஞ்சியம்**

தகவல் களஞ்சியம் என்பது தகவல் விவர தொகுப்புப் பணியின் கருத்தோட்டமாகும். கணினியில் வன்பொருள் (Hardware) மற்றும் மென்பொருளைக் (Software) கொண்டு பெருமுயற்சியில் திரட்டப்பட்ட புள்ளிவிவரங்களை பகுப்பாய்வு செய்வதால் அரசுத் துறைகள் தங்களுக்குரிய தெளிவான முடிவுகளை எடுக்க அவை வழிவகை செய்கின்றன. இவ்வகையில் தகவல் களஞ்சியத்தின் உதவி கொண்டு நிறுவப்படும், "முடிவுகள் எடுப்பதில் தக்க உதவிகள் அளிக்கும் அமைப்பு" (Decision Support System) பல்வேறு அரசுத் துறைகளுக்கு முடிவுகள் எடுப்பதற்கு சிறந்த ஒரு சாதனமாக அமையும். செயல்திறனை மேம்படுத்துவதற்காக இம்மைய கணினியின் விவரத் தொகுப்புத் திறன் தற்போது பலமடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளது. அரசு இம்மையத்தில் தகவல் களஞ்சியத்தை (Government Data Warehouse) ஏற்படுத்த முடிவு செய்து இம்மையத்தின் கணினி அமைப்பை நிலையுயர்த்துவதற்காக, புதிய நவீன கணினி சாதனங்கள் வாங்க ரூ.25 இலட்சம் நிதி ஒப்பளிப்பு



2002 மே 8]

வழங்கியது. இதன்மூலம் புதிய கணினி இயந்திரம் (Es 40-Highland RISC Server worth 64 bit Unix Operating System) வாங்கப்பட்டு Oracle 8i மென்பொருள்கள் இணைய முறையில் இயக்கப்படுவதற்கு வசதியாக தற்போது மையத்தில் நிறுவப்பட்டுள்ளது. மேலும் தேசிய தகவல் மையத்தின் (N.I.C.) துணையுடன், வானொலி அதிர்வலைகள் இணைப்பு வசதிகளையும் இம்மையம் பெற்றுள்ளது. இந்த வசதியினால், இதர துறைகள் / நிறுவனங்களது இணையதளத்திலுள்ள புள்ளிவிவரத் தகவல்களை பாதுகாப்போடு சேகரித்துக்கொள்ளக் கூடிய வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

**கருவூலம் மற்றும் கணக்குத் துறை**

31. கருவூலம் மற்றும் கணக்குத் துறை நிதித் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகிறது. இத்துறை கருவூல நிர்வாகம் சரியான முறையில் செயல்படுவதற்கு பொறுப்பாவதுடன் கணக்குகள் சம்பந்தப்பட்ட விவரங்கள் மற்றும் பல விதித் தொகுப்புகளுக்கு பொருள் விளக்கம் அளிப்பதற்கு அரசிற்கு ஆலோசகராகவும் செயல்படுகிறது.

**32. கருவூலக் கணக்குகளை கணினிமயமாக்குதல்**

கருவூல அலுவலர்கள் மற்றும் சம்பளக் கணக்கு அலுவலர்கள், கணினி மூலம் தயாரிக்கப்பட்ட அனைத்து மாதாந்திர துணை/இறுதிக் கணக்குகளை சென்னை மாநில முதன்மைக் கணக்காயருக்கு அளிக்கின்றனர். கருவூலக் கணக்குகளை கணினிமயமாக்குதல் 1992-93 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 1997-98 ஆம் ஆண்டு முடிய கருவூலத் துறை முழுவதும் படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டது. மேலும் சார் கருவூலம், கருவூலம் மற்றும் சம்பளக் கணக்கு அலுவலகங்களில் பணம் பெறும் அலுவலக வாரியான வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீட்டில் உள்விவரத் தலைப்புவாரியான (Sub-Detailed heads) புள்ளிகள் பெற்று பராமரிக்கப்படுகிறது. பட்டியல்கள் கூர்ந்து ஆய்வு செய்து சரி பார்த்து வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட தொகைக்குள் இருந்தால் மட்டுமே ஏற்கப்படுகிறது.

33. சார் கருவூலங்களிலும் சம்பளக் கணக்கு அலுவலகங்களிலும் கணினி வழி செயல்பாடுகளை மேலும் விரிவுபடுத்தவும், மாற்றப்படவும் வேண்டி உள்ளது. இதுபோலவே மாறிவரும் கணினிவழி தொகுப்புச் சூழ்நிலைக்கேற்ப பட்டியல்களை ஒப்பளிப்பு செய்வது கணினி மூலம் நேரடியாக செயல்படுத்தப்பட வேண்டும். சம்பளக் கணக்கு அலுவலகம், மாவட்டக் கருவூலம் மற்றும் சார் கருவூலங்களுக்கு புதிய கணினிவழி செயலாக்கத் திட்டத்திற்கு ரூ.3.31 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2002 மே 8

### 34. கருவூலம் மூலமாக ஓய்வூதியம் வழங்குதல்

ஓய்வூதியத் தொகையை இந்தியாவில் எந்தக் கருவூலத்திலும் பெறலாம். சென்னை மாநகரத்தில் ஓய்வூதியம் வழங்கும் அலுவலரும் (சென்னை மாவட்டக் கருவூலம் நீங்கலாக) அனைத்து மாவட்டக் கருவூல அலுவலர்கள், சார் கருவூல அலுவலர்களும் தமிழ்நாட்டில் ஓய்வூதியம் வழங்கும் அலுவலராக செயல்படுகிறார்கள். சென்னை மாநகரத்தில் ஓய்வூதியம் வழங்குவது ஓய்வூதியம் வழங்கும் அலுவலராலும் மாவட்டக் கருவூல அலுவலகங்களில் ஓய்வூதியம் வழங்குவது உதவிக் கருவூல அலுவலராலும் மேற்கொள்ளப்படுகிறது. நமது மாநிலத்தில் 4,59,874 ஓய்வூதியர்களுக்கு பல்வேறு நிலை கருவூலங்கள் மூலமாக ஓய்வூதியம் கீழ்க்கண்ட வகைப்பாடுகளில் வழங்கப்படுகிறது :

| | |
|---|---|
| (i) மாநில ஓய்வூதியம் | 223048 |
| (ii) குடும்ப ஓய்வூதியம் | 104150 |
| (iii) ஆசிரியர் ஓய்வூதியம் | 59023 |
| (iv) ஆசிரியர் குடும்ப ஓய்வூதியம் | 27087 |
| (v) மற்ற வகையினர் | 46566 |
| **மொத்தம்** | **459874** |

### ஓய்வூதியம்

35. 1-9-1991 முதல் கீழ்க்கண்ட பணிகளைக் கவனிப்பதற்காக ஓய்வூதிய இயக்ககத்தை அரசு அமைத்துள்ளது:

(i) ஓய்வூதியர்கள் குறைகளைக் கவனித்தல்

(ii) அனைத்து அரசுத் துறைத் தலைவர்களும், அலுவலகத் தலைவர்களும், ஓய்வூதியக் கருத்துருக்களை மாநிலக் கணக்காயருக்கு உரிய நாளில் அனுப்பினார்களா என்பதனை உறுதி செய்தல் மற்றும் அதை காலமுறையில் ஆய்வு செய்தல்.

(iii) மாநிலக் கணக்காயர் அலுவலகத்தில் தொடர்பு கொண்டு ஓய்வு பெறும் நபர்களுக்கு ஓய்வு பெறும் நாளன்றோ அதற்கு முன்னரோ



2002 மே 8]

ஓய்வூதியம் மற்றும் அனைத்து ஓய்வூதியப் பயன்கள் தீர்வு செய்யப்படுவதன் மூலம் அலுவலர்களும், ஊழியர்களும் தாமதமின்றி ஓய்வூதியப் பயனை அடைய தக்க நடவடிக்கை எடுத்தல்.

(iv) ஓய்வூதியர்கள் கோரும் விளக்கங்களை அளித்தல்.

(v) சமூகப் பாதுகாப்புத் திட்டத்தைச் செயல்படுத்துதல்.

(vi) கருவூலக் கணக்குத் துறையில் பராமரிக்கப்பட்டு வந்த சிறப்பு சேமநல நிதி வழங்கும் திட்டத்தை மேற்கொள்ளுதல்.

(vii) தமிழ்நாடு அரசு தொழிலாளர்கள் வருங்கால வைப்பு நிதித் திட்டம் மற்றும் அது தொடர்பான பணிகளைக் கவனித்தல்.

36. பின்னர் அறிமுகப்படுத்தப்பட்ட கீழ்க்கண்ட திட்டங்களும் ஓய்வூதிய இயக்ககத்தால் செயல்படுத்தப்படுகின்றன:

(i) தமிழ்நாடு அரசு ஓய்வூதியர்கள் மருத்துவ நல நிதித் திட்டம், 1995.

(ii) தமிழ்நாடு அரசு ஓய்வூதியர்கள் குடும்பப் பாதுகாப்பு நல நிதித் திட்டம், 1997.

(iii) தமிழ்நாடு அரசுப் பணியாளர் சிறப்பு சேம நல நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம், 2000.

### 37. ஓய்வூதியர்கள் குறைகள்

(i) 31-12-2001-ன்படி மொத்த ஓய்வூதியர்கள்/ குடும்ப ஓய்வூதியர்களின் விவரம்.

| விவரம் | ஓய்வூதியர்கள் | குடும்ப ஓய்வூதியர்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| ஓய்வூதியர் | 223048 | 104150 | 327198 |
| ஆசிரியர் | 59023 | 27087 | 86110 |
| பிறவகையினர் | 46566 | .. | 46566 |
| **மொத்தம்** | **328637** | **131237** | **459874** |

[2002 மே 8

(ii) மாவட்ட ஆட்சித் தலைவர்களால் அந்தந்த மாவட்டத்தில் ஓய்வூதியர்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் 4 மாதங்களுக்கு ஒருமுறை நடத்தப்பட்டு வருகிறது.

ஓய்வூதிய இயக்குநர் அல்லது இயக்குநரக அலுவலர் ஒருவர் இக்கூட்டத்தில் பங்கேற்று, அம்மாவட்டத்தில் உள்ள ஓய்வூதியர்கள் குறைகளை விரைந்து தீர்த்திட உதவி புரிகின்றனர். மாநிலக் கணக்காயர் அலுவலகத்தில் நிலுவையில் உள்ள ஓய்வூதியர்கள் பற்றிய கருத்துருக்களில் தொடர் நடவடிக்கையும் இவ்வியக்ககத்தால் கண்காணிக்கப்பட்டு வருகின்றது.

(iii) இவற்றைத் தவிர ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்கள் இத்துறையில் நேரடியாகவும் முதலமைச்சரின் தனிப்பிரிவு மூலமாகவும் தங்களது குறைகளைக் களைய அணுகுகின்றனர்.

(iv) இவ்வியக்ககத்தில் குறை தீர்வு விண்ணப்பங்கள் பெறப்பட்டு தீர்வு பெற்ற விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

| வருடம் | தீர்வு பெற்றவை |
|---|---|
| 1994 | 735 |
| 1995 | 4760 |
| 1996 | 5319 |
| 1997 | 7328 |
| 1998 | 5784 |
| 1999 | 4123 |
| 2000 | 6717 |
| 2001 | 4738 |

(v) ஓய்வூதியப் பயன்களை ஓய்வூதியர்கள் அறிந்துகொள்ளும் பொருட்டு வழிகாட்டி ஏடு ஒன்று தயார் செய்யப்பட்டு இணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.(www.tn.gov.in /dop) ஓய்வூதியப் படிவங்கள் இணைய தளத்தில் இருந்தும் உடனடி உபயோகத்திற்காக பெற்றுக்கொள்ளலாம். இயக்குநரகத்தின் மின் அஞ்சல் குறியீடு dop @ tn.nic.in



2002 மே 8]

**38. தமிழ்நாடு அரசு ஓய்வூதியர்கள் மருத்துவ நல நிதித் திட்டம், 1995**

(i) தமிழ்நாடு அரசு ஓய்வூதியர்கள், ஆசிரிய ஓய்வூதியர்கள் மற்றும் தமிழக அரசு சார்ந்த இந்திய அரசுப் பணியில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்கள், அரசினால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ மனைகளில் சிறப்பு சிகிச்சை/அறுவைச் சிகிச்சை மேற்கொண்டதற்கு நிதி உதவி செய்யும் பொருட்டு தமிழ்நாடு அரசு ஓய்வூதியர் மருத்துவ நலநிதித் திட்டம் 1-7-1995 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(ii) ஓய்வூதியர் தமது வாழ்நாளில் மேற்கொண்ட மருத்துவ சிகிச்சை/அறுவைச் சிகிச்சைக்கான செலவுத் தொகையில் 75 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.50,000/-, இதில் எது குறைவோ, அத்தொகை அவருக்கு வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு வருடாந்திர மானியத் தொகையாக அரசு ரூ.8 இலட்சம் வழங்குகிறது. நிலுவையில் உள்ள விண்ணப்பங்களை தீர்வு செய்யும் நோக்கில் 2001-2002 ஆம் நிதியாண்டில் சிறப்பு மானியமாக ரூ.200 இலட்சத்தினை அரசு வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் ஓய்வூதியர்களிடமிருந்து பெறப்படும் சந்தா பின்வருமாறு:

01-07-1995 முதல், ஆண்டுக்கு ரூ.5/- வீதம்.

01-07-1997 முதல், ஆண்டுக்கு ரூ.10/- வீதம்.

01-10-1998 முதல், மாதத்திற்கு ரூ.5/- வீதம்.

01-10-2001 முதல், மாதத்திற்கு ரூ.10/- வீதம்.

(iii) 31-03-2002 வரை ஓய்வூதியர்களிடமிருந்து பெறப்பட்ட 6535 விண்ணப்பங்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்டு ரூ.7.54 கோடி நிதி உதவி செய்யப்பட்டுள்ளது.

**39. தமிழ்நாடு ஓய்வூதியர் குடும்ப நல பாதுகாப்புத் திட்டம், 1997**

இறந்த ஓய்வூதியரின் குடும்ப உறுப்பினர்களின் நன்மைக்காக, தமிழ் நாடு அரசு ஓய்வூதியர் குடும்ப நல பாதுகாப்புத் திட்டம் 1-1-1997 முதல் அரசால் தொடங்கப்பட்டது. இந்த நிதி 1-1-1998 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த நிதியில் ஓராண்டு தொகை

செலுத்திய பின்னர் ஓய்வூதியர் இறந்தால், ஓய்வூதியர் மனைவி (அ) கணவர் / நியமனதாரர் / வாரிசுதாரருக்கு ரூ.25,000/- வழங்கப்படுகிறது. இது ஒரு விருப்பத் திட்டமாகும். ஓய்வூதியர் இத்திட்டத்தில் சேர்ந்த பின்பு பின்னர் ஒரு தேதியில் இத்திட்டத்திலிருந்து விலகிக்கொள்ள நேர்ந்தால் அவர் மாதந்தோறும் செலுத்திய தொகை திரும்ப வழங்கப்படும்.

2. ஓய்வூதியரிடமிருந்து பிடித்தம் செய்யப்படும் சந்தாத் தொகை விவரம்.

| | |
|---|---|
| 1-1-1997 முதல் | ரூ.20/- ஒரு மாதத்திற்கு |
| 1-4-1999 முதல் | ரூ.40/- ஒரு மாதத்திற்கு |
| 1-6-2000 முதல் | ரூ.50/- ஒரு மாதத்திற்கு |
| 1-11-2001 முதல் | ரூ.70/- ஒரு மாதத்திற்கு |

31-3-2002 முடிய இத்திட்டத்தின்கீழ் 18362 நபர்கள் பயனடைந்துள்ளனர். நிலுவையிலுள்ள விண்ணப்பங்களை தீர்வு செய்யும் பொருட்டு, 2001-2002 ஆம் நிதி ஆண்டில் ரூ.500 இலட்சம் சிறப்பு மானியமாக அரசு வழங்கியுள்ளது.

**40. தமிழ்நாடு அரசு தொழிற்சாலை தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டம், 1969.**

(i) அரசுத் தொழில் துறைகளில் தினக்கூலிப் பணியாளர்களின் நலன் கருதி இத்திட்டம் 1969 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

(ii) வேளாண்மை, வனத் துறை, பொதுப் பணித் துறை, கால்நடை பராமரிப்பு, பட்டு வளர்ச்சித் துறை போன்ற அரசுத் துறை சார்ந்த 456 அலகுகள் இத்திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டு 20785 உறுப்பினர்கள் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர். இத்திட்டத்தின் கணக்கு வைப்பு முறை முழுவதும் கணினி மயமாக்கப்பட்டுள்ளது. 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.81.53 இலட்சம் சந்தாத் தொகையாக பெறப்பட்டு, தகுதியுள்ள ஓய்வுபெற்ற தொழிலாளர்களுக்கு ரூ.168.32 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.



**41. தமிழ்நாடு அரசு ஊழியர் சிறப்பு சேம நல நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம், 1984**

இந்தத் திட்டம் 1-4-1984 ஆம் ஆண்டு முதல் அமல்படுத்தப்பட்டது. மாதந்தோறும் ரூ.20/- வீதம் 148 மாதங்கள் வரை பிடித்தம் செய்யப்பட்டு அத்தொகை பணியிலிருந்து ஓய்வு பெறும்போது அவர் செலுத்திய மொத்த சந்தாத் தொகை, அதற்கான வட்டி மற்றும் அரசின் பங்குத் தொகை ரூ.5,000/- மும் சேர்த்து வழங்கப்படுகிறது. இத்தொகை 15-9-2000 முதல் ரூ.10,000/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**42. தமிழ்நாடு அரசு ஊழியர் சிறப்பு சேம நல நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம், 2000.**

இத்திட்டம் 1-10-2000 முதல் அமல்படுத்தப்பட்டுள்ளது.

(i) அனைத்து நிரந்தர அரசு ஊழியர்களும் இத்திட்டத்தில் மாதம் ரூ.50/- வீதம், ஓய்வு பெறும் மாதத்திற்கு முன் மாதம் வரை விருப்பின் பேரில் செலுத்தலாம். அத்தொகை ஓய்வு பெறும்போது சேரும் வட்டியுடன் திரும்ப வழங்கப்படுகிறது.

(ii) ஏற்கெனவே பணியில் உள்ள அரசு ஊழியர்கள் இத்திட்டத்தில் விருப்பத்தின்பேரில் சேரலாம். 1-10-2000 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ பணியில் சேருபவர்களுக்கு இத்திட்டம் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

1-10-2000 அன்றோ அதற்குப் பின்னரோ புதியதாக பணியில் சேருபவர்களுக்கு மாத சந்தா ரூ.70/- ஆகும். இத்தொகையுடன் வட்டியும் அரசின் பங்குத்தொகை ரூ.10,000/-மும் சேர்ந்து பணியிலிருந்து ஓய்வு பெறும் நாளன்று திரும்ப வழங்கப்படுகிறது.

**உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை**

**43.** உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை நிதித் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. உள்ளாட்சி நிறுவனங்கள் சட்டத்தின்கீழ் இயங்கிவரும் நகர்ப்புற, ஊரக உள்ளாட்சி அமைப்புகள், பல்கலைக்கழகம் மற்றும் பல்வகை மானியம் பெறும் நிறுவனங்களின் சட்டபூர்வ தணிக்கைப் பணி இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

[2002 மே 8

*44.* கீழ்க்காணும் நிறுவனங்கள் இத்துறையின் தணிக்கைக் கட்டுப்பாட்டின்கீழ் வருகின்றன:

| வ. எண் | நிறுவனங்கள் | மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| (i) | மாநகராட்சிகள் | 6 |
| (ii) | நகராட்சிகள் | 102 |
| (iii) | ஊராட்சி ஒன்றியங்கள் | 385 |
| (iv) | மாவட்ட ஊராட்சிகள் | 28 |
| (v) | பேரூராட்சிகள் | 613 |
| (vi) | பல்கலைக்கழகங்கள் | 16 |
| (vii) | நூலக ஆணைக் குழு | 29 |
| (viii) | மாவட்ட விற்பனைக் குழு | 20 |
| (ix) | பல்வகை நிறுவனங்கள் | 9 |
| (x) | கிராம ஊராட்சிகள் - சோதனைத் தணிக்கை மட்டும் | |

இத்துறையால் தணிக்கை செய்யப்படும் மேற்கண்ட நிறுவனங்களின் மொத்த நிதி அளவு சென்ற ஆண்டு ரூ.7134.73 கோடி ஆகும்.

**45. தணிக்கைத் தடைகள் தீர்வு**

தணிக்கை அறிக்கையின் மீதான தொடர் நடவடிக்கை இத்துறையின் முக்கிய பணிகளில் ஒன்றாகும். சீரிய முறைகேடுகள் மற்றும் தொகை இழப்புகள் ஆகிய இனங்கள் தணிக்கை அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டு மாதாந்திர அறிக்கை மூலம் சம்பந்தப்பட்ட செயல் அலுவலர், நிர்வாகத் துறையின் தலைவர் மற்றும் அரசுக்கும் இத்துறையின் மூலம் தெரியப்படுத்தப்படுகின்றது.

சம்பந்தப்பட்ட நிர்வாக அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் தணிக்கைத் தடைகளுக்கான பதில்கள் பெறப்பட்டு கூட்டமர்வின் மூலம் இத்துறையின் மண்டல மற்றும் மாவட்ட அதிகாரிகளால் தணிக்கைத் தடைகள் நிவர்த்தி செய்யப்படுவதுடன் சுட்டிக்காட்டப்பட்ட குறைகளைக் களையவும் இத்துறையால் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.



2002 மே 8]

இன்றைய நிலையில் 4,24,396 தணிக்கைத் தடைகள் தீர்வு செய்யப்பட கீழ்கண்டவாறு நிலுவையில் உள்ளன:

| | |
|---|---|
| மாநகராட்சிகள் | 81802 |
| நகராட்சிகள் | 103794 |
| பேரூராட்சிகள் | 105119 |
| ஊராட்சி ஒன்றியங்கள் | 95712 |
| மாவட்ட ஊராட்சிகள் | 1064 |
| பல்கலைக்கழகங்கள் | 25120 |
| நூலக ஆணைக் குழு | 8461 |
| விற்பனைக் குழு | 3138 |
| பல்வகை நிறுவனங்கள் | 186 |

**46. தணிக்கை நிலை**

இத்துறை கட்டுப்பாட்டில் உள்ள தணிக்கை நிறுவனங்களின் 31-3-2002 அன்றைய நிலவரப்படி தணிக்கை நிலை விவரம் கீழ்வருமாறு:

பெரும்பாலான நிறுவனங்களில் தணிக்கை நாளதுவரை நடைபெற்றுள்ளது எனக் கொள்ளலாம்.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | நிறுவனங்களின் எண்ணிக்கை | தணிக்கை முடிவுற்ற ஆண்டு | தற்போது தணிக்கை செய்யப்படும் ஆண்டு |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| (i) | மாநகராட்சிகள் | 6 | 1999-2000 | 2000-2001 |
| (ii) | நகராட்சிகள் | 102 | 1999-2000 | 2000-2001 |
| (iii) | ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் | 385 | 2001-2002 (முதல் அரை யாண்டு) | 2001-2002 (இரண்டாம் அரை யாண்டு) |
| (iv) | மாவட்ட ஊராட்சிகள் | 28 | 2000-2001 | |

[2002 மே 8

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| (v) | பேரூராட்சிகள் | 611 | 1999-2000 | 2000-2001 |
| (vi) | பல்கலைக் கழகங்கள் | 16 | 2000-2001 (ஒன்று தவிர) | 2000-2001 (ஒரு பல்கலைக் கழகம்) |
| (vii) | நூலக ஆணைக் குழு | 29 | 1998-1999 | 1999-2000 |
| (viii) | விற்பனைக் குழுமம் | 21 | 1998-1999 | 1999-2000 |

**47. பயனீட்டுச் சான்றிதழ் அளித்தல்**

இத்துறையின் தணிக்கை வரையறையின்கீழ் வரும் பல்கலைக் கழகங்கள் மற்றும் இதர நிறுவனங்களுக்கு மாநில, மத்திய அரசு மற்றும் பல்கலைக்கழக மானியக் குழுவினால் வழங்கப்படும் மானியங்களுக்கான பயனீட்டுச் சான்றிதழ் இத்துறையால் வழங்கப்பட்டு வருகின்றது.

**48. சிறப்புப் பணிகள்**

வழக்கமான தணிக்கைப் பணியுடன் கீழ்க்காணும் சிறப்புப் பணிகளும் இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன:

(i) நகராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் பேரூராட்சிப் பணியாளர்களின் ஓய்வூதிய நிதியைப் பராமரித்தல்.

(ii) உள்ளாட்சி நிறுவனங்களின் வைப்பு நிதிக்கு வட்டி ஒப்பளித்தல்.

(iii) அறக்கட்டளைகளுக்கான பொருளாளராகப் பணியாற்றுதல்.

**49. உள்ளாட்சி நிறுவனப் பணியாளர்களின் ஓய்வூதிய நிதியை நிர்வகித்தல்**

இத்துறையின் இயக்குநரகம், உள்ளாட்சி நிறுவனப் பணியாளர்களான நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களின்



2002 மே 8]

ஓய்வூதியப் பயன்களுக்கு சான்றளித்தல் மற்றும் ஒப்பளித்தல் போன்ற பணிகளை ஒருங்கிணைத்துச் செயல்படுகிறது. கீழே குறிப்பிட்டுள்ளபடி 14634 ஓய்வூதியர்கள், நான்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளான ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, இந்தியன் வங்கி, கனரா வங்கி மற்றும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி ஆகியவற்றின் மூலம் மாதாந்திர ஓய்வூதியம் பெறுகின்றனர். மேலும் மாதந்தோறும் ரூ.335 இலட்சம் ஓய்வூதியமாக வழங்குவதுடன் இறப்பு மற்றும் ஓய்வூதிய பணிக்கொடை, ஓய்வூதியத் தொகுப்பு மற்றும் ஏனைய ஓய்வூதியப் பயன்களாக ரூ.331 இலட்சம் அளவிற்கு உள்ளாட்சி ஓய்வூதியர்கள் பெற்று வருகின்றனர். ஓய்வு பெற்றவுடன் இவர்களின் ஓய்வூதியப் பயன்கள் உடனுக்குடன் வழங்கப்பட்டு வருகின்றன.

| வ. எண் | உள்ளாட்சி நிறுவனங்கள் பெயர் | ஓய்வூதியம் பெறுவோர் எண்ணிக்கை | ஓராண்டுத் தேவை |
|---|---|---|---|
| (i) | நகராட்சிகள் | 2893 | ரூ.1960 இலட்சம் |
| (ii) | பேரூராட்சிகள் | 4555 | ரூ.1817 இலட்சம் |
| (iii) | ஊராட்சி ஒன்றியங்கள் | 7186 | ரூ.2895 இலட்சம் |
| | **மொத்தம்** | **14634** | **ரூ.6672 இலட்சம்** |

**50. உள்ளாட்சிப் பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதித் தொகைகளுக்கு வட்டி ஒப்பளித்தல்**

அரசு ஆணை எண் 533, நிதித் துறை, நாள் 17-6-1967ன்படி உள்ளாட்சிப் பணியாளர்களின் சேமநல வைப்பு நிதியும் அதிலுள்ள முதலீடுகளும் அரசால் ஏற்கப்பட்டது. உள்ளாட்சி நிறுவனங்களின் கருவூல வைப்பு நிதிக் கணக்குகளின் இருப்புகள் மீதான வட்டி ஒப்பளிப்பு வழங்குவதற்கு, உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. உள்ளாட்சி நிறுவனத்திடமிருந்து வட்டிக்கான கேட்பு பெறப்பட்டு இந்தத் தலைப்பின்கீழ் அரசினால் வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீட்டின்படி உள்ளாட்சி நிறுவனங்களுக்கு வட்டித்

[2002 மே 8

தொகை உடனுக்குடன் அளிக்கப்பட்டு வருகிறது. 2001-2002 ஆம் ஆண்டில் உள்ளாட்சிகளுக்கு ரூ.12 கோடி வட்டித் தொகை ஒப்புதல் அளிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

**51. அறக்கட்டளை நிதிகளுக்கான பொருளாளர்**

உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர், அறக்கட்டளை நிதிப்பொருளாளராக 01-04-1952 முதல் இயங்கி வருகிறார். அறக்கட்டளை நிதிக்கான பொருளாளர் கல்வி சம்பந்தப்பட்ட காரணத்திற்காக உருவாக்கப்படும் அறக்கட்டளைக்கு நன்கொடை பெறுகிறார். அறக்கட்டளையை அரசு ஏற்று ஆணை பிறப்பித்து அரசிதழில் செயல்பாட்டு திட்ட விதிகள் வெளியிட்ட பின்னரே அறக்கட்டளை செயல்பாட்டுக்கு வரும்.

இந்த அறக்கட்டளை நிதியிலிருந்து பெறப்படும் வட்டித் தொகை சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அவர்களுடைய கோரிக்கையின் அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்படுகிறது. தற்போது ரூ.3.87 இலட்சம் மதிப்பிலான நான்கு மத்திய அரசு அறக்கட்டளைகளும், ரூ.7.04 கோடி மதிப்புள்ள 442 மாநில அரசு அறக்கட்டளைகளும், அறக்கட்டளை நிதிக்கான பொருளாளர் கட்டுப்பாட்டில் உள்ளன.

**கூட்டுறவுத் தணிக்கைத் துறை**

**52.** தணிக்கையினை சுதந்திரமாகச் செயல்படுத்தும் நோக்கத்துடனும், சந்தானம் கமிட்டியின் பரிந்துரையின் பேரிலும் கூட்டுறவுத் துறையிலிருந்து (கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்) தணிக்கைப் பிரிவினைப் பிரித்து கூட்டுறவுச் சங்கங்களின் (பால் உற்பத்தி கூட்டுறவுச் சங்கங்கள் தவிர) தணிக்கையினை 17-06-1981 முதல் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவுத் தணிக்கைத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டது.

**53.** கூட்டுறவுத் தணிக்கைத் துறை மத்திய பதிவாளர் மற்றும் 14 செயல் பதிவாளர்கள் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் மாநிலத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் இம்மாநிலத்தில் இயங்கும் பன்மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கையினை மேற்கொள்ள வேண்டும். செயல் பதிவாளர்கள் மற்றும் மத்தியப் பதிவாளர் கட்டுப்பாட்டில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் விவரம் கீழே அளிக்கப்பட்டுள்ளது.



2002 மே 8]

| வ. எண் | பதிவாளரின் பெயர் | சங்கங்களின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| (i) | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | 11,130 |
| (ii) | ஆணையர், கைத்தறி மற்றும் துணிநூல் துறை | 1,716 |
| (iii) | ஆணையர், தொழில் மற்றும் வணிகத் துறை | 377 |
| (iv) | முதன்மைச் செயல் அலுவலர், தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் | 1,849 |
| (v) | முதன்மைச் செயல் அலுவலர், பனைத்தொழில் முன்னேற்ற வாரியம் | |
| (vi) | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் (வீட்டு வசதி) | 1,022 |
| (vii) | இயக்குநர், மீன்வளத் துறை | 965 |
| (viii) | இயக்குநர், கால்நடை பராமரிப்புத் துறை | 979 |
| (ix) | ஆணையர், சர்க்கரைத் துறை | 19 |
| (x) | இயக்குநர், வேளாண்மைத் துறை (எண்ணெய் வித்துக்கள்) | 372 |
| (xi) | இயக்குநர், வேளாண்மைப் பொறியியல் மற்றும் சேவை கூட்டுறவுச் சங்கங்கள் | 224 |
| (xii) | இயக்குநர், பட்டு வளர்ச்சித் துறை | 68 |
| (xiii) | இயக்குநர், சமூக நலத் துறை | 150 |
| (xiv) | இயக்குநர், ஊரக வளர்ச்சித் துறை | 41 |
| (xv) | பன்மாநில கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | 64 |
| | **மொத்தம்** | **18,976** |

பால் உற்பத்தி கூட்டுறவுச் சங்கங்கள் தவிர இதர அனைத்து விதமான கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கை, கூட்டுறவுத் தணிக்கைத் துறையில் உள்ள தணிக்கையாளர்களால் மேற்கொள்ளப்பட்டு, இணை இயக்குநர், உதவி இயக்குநர் மற்றும் கூட்டுறவு தணிக்கை அலுவலர் ஆகியோரால் அவர்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் அடிப்படையில் தணிக்கைச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

[2002 மே 8

*54.* கூட்டுறவுச் சங்கங்களில் இரண்டு முறையான தணிக்கைகள் உள்ளன.

(i) உடன்நிகழ் தணிக்கை

(ii) அடிப்படை விதி 127-ன்கீழ் தணிக்கை

**55. உடன்நிகழ் தணிக்கை**

45 நாட்கள் மற்றும் அதற்குக் குறைவான நாட்களுக்குள் தணிக்கை முடிக்கப்பெறும் நிலையில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு உடன்நிகழ் தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது. தணிக்கையாளரின் பதவி நிலையினைப் பொறுத்தும் கணக்குகளைத் தணிக்கை மேற்கொண்ட நேரத்தைப் பொறுத்தும் சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து தணிக்கைக் கட்டணம் வசூல் செய்யப்படுகிறது. 2001-2002 ஆம் நிதியாண்டில் தணிக்கைக் கட்டணமாக ரூ.8.87 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது.

**56. அடிப்படை விதி 127-ன் கீழ் தணிக்கை**

கூட்டுறவுச் சங்கங்கள் மிகப் பெரியதாகவும் அதிக அளவு வணிக நடவடிக்கையுடன், பல்வேறு வகைப்பட்ட பணிகளிலும் ஈடுபட்டிருந்தால் அம்மாதிரியான சங்கங்களின் தணிக்கை அடிப்படை விதி 127-ன்கீழ் அரசால் மொத்தமாக அனுமதிக்கப்பட்ட தணிக்கையாளர்களைக் கொண்டு மேற்கொள்ளப்படுகிறது.

**57. தணிக்கை முன்னேற்றம்**

கடந்த ஐந்து வருடங்களில் துறையினால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் பின்வருமாறு:—

| வ.எண் | வருடம் | தணிக்கை அறிக்கைகள் முடிக்கப்பட்டது |
|---|---|---|
| (i) | 1997-1998 | 16,210 |
| (ii) | 1998-1999 | 16,198 |
| (iii) | 1999-2000 | 15,871 |
| (iv) | 2000-2001 | 19,820 |
| (v) | 2001-2002 | 19,753 |



2002 மே 8]

## இணைப்பு II

(398 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 35

## திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை—கொள்கை விளக்கக் குறிப்பு, 2002-2003

**1.1. திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் முக்கியப் பணிகளாவன:**

(i) மாநிலத் திட்டக் குழுவின் உதவியோடு ஐந்தாண்டுத் திட்டங்கள் மற்றும் ஆண்டுத் திட்டங்கள் தயாரித்தல்.

(ii) திட்டப் பணிகள், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டப் பணிகள் மற்றும் வெளிநாட்டு நிதி உதவி பெறும் திட்டங்களைக் கண்காணித்தல்.

(iii) திட்டப் பணிகள், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டப் பணிகள் மற்றும் வெளிநாட்டு நிதி உதவி பெறும் திட்டங்கள் ஆகியவற்றை மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை மூலம் மதிப்பீடு செய்தல்.

(iv) பொருளியல் மற்றும் புள்ளியியல் இயக்குநரகம் மூலமாக புள்ளிவிவரங்கள் சேகரித்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் வெளியிடுதல். இப்பணிகளில் மாநில வருவாய் மதிப்பீடு, பொருளாதாரக் கணக்கெடுப்பு, வேளாண்மைக் கணக்கெடுப்பு மற்றும் சிறப்பு ஆய்வுகள் ஆகியவற்றுடன் மாநில பொருளாதார மாதாந்திரக் கண்காணிப்பு ஆகியவை அடங்கும்.

(v) இருபது அம்சத் திட்டம் மற்றும் பாரதப் பிரதமரின் கிராமோதயத் திட்டம் போன்ற வறுமை ஒழிப்புத் திட்டங்களைக் கண்காணித்தல்.

(vi) பரவலாக்கப்பட்ட மாவட்டத் திட்டத்தில் மாவட்ட திட்டக் குழுவின் பணிகளை மேற்பார்வையிடுதல்.

(vii) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுத் திட்டப் பணிகளை மேற்பார்வையிடுதல்.

(viii) உலக வர்த்தக மையப் பிரிவின் ஒருங்கிணைப்பாளரின் பணிகளை மேற்பார்வையிடுதல்.

[2002 மே 8

(ix) பெரிய கட்டமைப்புத் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்தல்.

1.2. மேலே குறிப்பிடப்பட்டுள்ள முக்கியப் பணிகள் பற்றிய குறிப்பு பின்வருமாறு:

***1.2.1. ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டம் (1997-98 முதல் 2001-2002):***

ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டத்திற்காக ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீடு ரூ.25,000 கோடியாகும். ஒவ்வொரு ஆண்டுத் திட்டத்திற்கான திட்ட ஒதுக்கீடுகள் மற்றும் செலவினங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| ஆண்டு | ஏற்பளிக்கப் பட்ட திட்ட ஒதுக்கீடு | செலவினம் | விழுக்காடு |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1997-1998 | 4009.90 | 4010.63 | 100.02 |
| 1998-1999 | 4501.00 | 4515.81 | 100.33 |
| 1999-2000 | 5251.75 | 5413.75 | 103.08 |
| 2000-2001 | 5701.30 | 5776.52 | 101.32 |
| 2001-2002 | 5200.00 | 5200.00 (உத்தேசிக்கப் பட்டது) | 100.00 |
| **மொத்தம்** | **24.663.95** | **24.916.71** | **101.02** |

***1.2.2. பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம் (2002—2007) மற்றும் ஆண்டுத் திட்டம் 2002-2003***

மாநில அரசு, பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குரிய வரைவுக் கண்ணோட்டத்தை மாநிலத் திட்டக் குழுவுடன் கலந்தாலோசித்து தயாரித்துள்ளது. அது, 10 வருடங்களில் தனி நபர் வருமானத்தை இரட்டிப்பாக்கும் வகையில் மொத்த மாநில உற்பத்தியில் 8 விழுக்காடு வளர்ச்சி வீதத்தை எய்துவதற்கான உத்திகளை வெளிக்கொணர்ந்துள்ளது. பொருளாதாரத்தில் துரித வளர்ச்சியை எய்துவதற்கான உத்திகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. சமநிலையிலான வளர்ச்சியை எய்துவதற்கு கண்காணிக்கத் தகுந்த குறியீடுகள் முன்மொழியப்பட்டுள்ளன. பத்தாவது



2002 மே 8]

ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் வளர்ச்சியையும் மேம்பாட்டையும் எய்துவதற்கான கொள்கைகள் மற்றும் முதலீடுகளைச் செய்வதற்கு தமிழ்நாடு உறுதி பூண்டுள்ளது. 2002-2003ஆம் ஆண்டுத் திட்டம் மற்றும் பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீடுகள் சமீபத்தில் நடைபெறவுள்ள மத்திய திட்டக் குழுவின் துணைத் தலைவர் மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் அளவிலான கூட்டத்தில் நிர்ணயிக்கப்படும்.

***1.2.3. மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள்/ மத்திய மாநில அரசுகள் பொறுப்பேற்கும் திட்டங்கள்***

இந்த அரசு, மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களையும் (100 விழுக்காடு மத்திய அரசின் நிதியுதவியுடன்) மற்றும் மத்திய, மாநில அரசுகள் பொறுப்பேற்கும் திட்டங்களையும் செயல்படுத்தி வருகின்றது. 2001-2002ஆம் நிதி ஆண்டில் ரூ.354.77 கோடி செலவில் 238 மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களும், ரூ.338.62 கோடி செலவில் 208 மத்திய மாநில அரசுகள் பொறுப்பேற்கும் திட்டங்களும் செயல்படுத்தப்பட்டன. இத்திட்டங்களின் முன்னேற்றம் குறித்து மாதாந்திர மற்றும் காலாண்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

***1.2.4. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் - நீலகிரி மாவட்டம்***

மத்திய அரசின் சிறப்பு நிதியுதவியுடன், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் நீலகிரி மாவட்டத்தில் மட்டும் 1975 ஆம் ஆண்டிலிருந்து சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை வளங்களைப் பாதுகாப்பதில் மாநில அரசிற்குத் துணைபுரியும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. காலப்போக்கில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் கொள்கைகள் பெருத்த மாறுதல்களுக்கு உள்ளாயின. தற்போது, இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள் சுற்றுச் சூழலைக் காத்தல், பேணுதல் மற்றும் மாவட்டத்தின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சி ஆகியவையாகும். மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டப் பணிகள் ஒருங்கிணைந்த நீர்நிலை ஆதார அணுகுமுறை அடிப்படையில் பல்வேறு துறைகளையும் ஒரே மாதிரியாக மேம்படுத்தும் வகையில், முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட நீர்நிலை ஆதாரப்பகுதிகளில் புலப்படும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு 2001-2002 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு ரூ.2,210.00 இலட்சங்களாகும். இத்திட்டம் சம்பந்தப்பட்ட

[2002 மே 8

துறைகள் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆண்டுத் திட்டம் 2001-2002-க்கான துறைவாரியான ஒதுக்கீடுகளும் செலவினங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| வரிசை எண் | துறையின் பெயர் | ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) | செலவினம் |
|---|---|---|---|
| 1. | மண்வளப் பாதுகாப்பு | 352.888 | 352.888 |
| 2. | வனம் | 354.062 | 354.062 |
| 3. | தோட்டக்கலை | 299.236 | 299.236 |
| 4. | இன்கோ தேயிலை தொழிற்சாலை | 20.000 | 20.000 |
| 5. | கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளம் | 56.819 | 56.819 |
| 6. | மருத்துவம் மற்றும் சுகாதாரம் | 87.500 | 87.500 |
| 7. | சிறுபாசனம் | 25.000 | 25.000 |
| 8. | சுற்றுலா | 55.500 | 55.500 |
| 9. | சாலைகள் | 138.700 | 138.700 |
| 10. | பட்டு வளர்ச்சித் துறை | 8.000 | 8.000 |
| 11. | ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நலம் | 108.350 | 108.350 |
| 12. | மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டப் பிரிவு | 50.000 | 50.000 |
| 13. | மனிதவள மேம்பாடு | 127.580 | 127.580 |
| 14. | புவியியல் நுட்பப்பிரிவு | 14.000 | 14.000 |
| 15. | பொதுப் பணித் துறை | 54.000 | 54.000 |
| 16. | தொலையுணர்வு ஆய்வு | 10.000 | 10.000 |
| 17. | மதிப்பீடு | 30.000 | 30.000 |
| 18. | தொழில் நுட்பப் பிரிவு, தலைமைச் செயலகம் | 7.000 | 7.000 |
| 19. | ஊரக எரிசக்தி | 2.000 | 2.000 |
| 20. | உள்ளாட்சி நிறுவனங்கள் மேம்பாடு | 197.000 | 197.000 |
| 21 | நீர்நிலை மேம்பாடு | 212.365 | 212.365 |
| | **மொத்தம்** | **2,210.000** | **2,210.000** |



2002 மே 8]

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டப் பணிகளுக்காக 2002-2003ஆம் ஆண்டுத் திட்டத்திற்கு ரூ.2,210.00 இலட்சத்திற்கான கருத்துருக்கள் மத்திய திட்டக்குழுவின் ஒப்புதலுக்காக விரைவில் அனுப்பப்படவுள்ளது. மேற்கண்ட துறைகளுக்கான நிதி ஒதுக்கீடு சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கைகளில் ஒதுக்கப்பட்டுள்ளது.

**1.2.5. மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம்**

இத்திட்டம் தமிழ்நாட்டில் 1975-76-ல் தொடங்கப்பட்டு தற்போது கீழ்க்கண்ட 8 மாவட்டங்களிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட 33 வட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது:—

1. கோயம்புத்தூர்
2. ஈரோடு
3. திண்டுக்கல்
4. தேனி
5. மதுரை
6. விருதுநகர்
7. திருநெல்வேலி மற்றும்
8. கன்னியாகுமரி

தேனி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்கள் முழுவதும் இத் திட்டத்தின்கீழ் வருகின்றன. இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாவன:

*பல்வேறுபட்ட உயிரினம் மற்றும் தாவரங்களின் பாதுகாப்பிற்கும், விலங்குகளின் வாழ்க்கைக்கு உறுதுணையாகவும் உள்ள இயற்கைச் சூழலின் சமநிலையைப் பேணுதல்.

*மனித இனத்தால் இயற்கைச் சூழலுக்கு ஏற்படுகின்ற சீரழிவுகளை சரிசெய்து அங்குள்ள மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி சுற்றுச்சூழல் வளர்ச்சிக்கான திட்டங்களில் அவர்களை தீவிரமாக பங்குகொள்ளச் செய்தல்.

[2002 மே 8

இத்திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் முக்கியப் பணிகள் மண்வளப் பாதுகாப்பு, தோட்டக்கலை, காடு வளர்ப்பு, சிறுபாசனம், நெடுஞ்சாலை, ஊரகப் பணி, கால்நடை பராமரிப்பு, மீனளம், பட்டு வளர்ச்சி, கதர், கிராமத் தொழில்கள் மற்றும் பனைப்பொருள் வளர்ச்சி ஆகியவையாகும்.

மத்திய திட்டக் குழு 2001-2002ஆம் ஆண்டிற்கு ரூ.1099.00 இலட்சம் இத்திட்டத்திற்காக ஒப்பளிப்பு செய்துள்ளது. மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2001-2002ஆம் ஆண்டில் பல்வேறு துறைகளுக்கு ஒப்பளிக்கப்பட்ட தொகை மற்றும் செலவு விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண் துறையின் பெயர் | ஒதுக்கீடு | செலவினம் |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1. மண்வளப் பாதுகாப்பு | 345.59 | 345.59 |
| 2. தோட்டக்கலை | 150.00 | 150.00 |
| 3. கால்நடை பராமரிப்பு | 40.86 | 40.86 |
| 4. வனம் | 328.46 | 328.46 |
| 5. பட்டு வளர்ச்சி | 23.10 | 23.10 |
| 6. மீனளம் | 27.46 | 27.46 |
| 7. சிறுபாசனம் | 34.00 | 34.00 |
| 8. கதர் (ம) கிராம வளர்ச்சி | 5.00 | 5.00 |
| 9. பனைபொருள் வளர்ச்சி | 6.00 | 6.00 |
| 10. ஊரகச் சாலைகள் | 56.50 | 56.50 |
| 11. தொழில்நுட்பப் பிரிவு (ம) மதிப்பீடு | 23.50 | 23.50 |
| 12. தொலையுணர்வு | 20.00 | 20.00 |
| 13. சுற்றுலா | 4.00 | 4.00 |
| 14. ஊரக வளர்ச்சி | 10.35 | 10.35 |
| 15. உள்ளாட்சிகள் | 11.78 | 11.78 |
| 16. சமூகப் பணிகள் | 12.40 | 12.40 |
| **மொத்தம்** | **1099.00** | **1099.00** |



2002 மே 8]

மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2002-2003 ஆம் ஆண்டிற்கு ரூ.1099.00 இலட்சம் அளவில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு மத்திய திட்டக் குழுவின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கைகளில் ஒதுக்கப்பட்டுள்ளது.

**1.2.6. இருபது அம்சத் திட்டம்**

இத்திட்டம் நாட்டின் வறுமையினை குறைப்பதற்கென 1986 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிற திட்டம் ஆகும். இத்திட்டத்தில் கிராமப்புற வீட்டுவசதி, குடிசை மாற்று வசதி, குழந்தைகள் நல மேம்பாடு, கிராமப்புற குடிநீர் வசதி மற்றும் தாழ்த்தப்பட்டோர்/பழங்குடியினர் மேம்பாடு ஆகியவை முக்கிய அம்சங்களாகும். இத்திட்டச் செயல்பாடுகளின் முன்னேற்றம் மாநில அளவிலும், தேசிய அளவிலும் மாதந்தோறும் ஆய்வு செய்யப்படுகின்றன.

**1.2.7. பெருந்திட்டங்களின் பயன்களை மதிப்பீடு செய்தல்**

அரசுத் திட்டங்களின் பயன்கள் உரிய மக்களைச் சென்றடைவதை உறுதிப்படுத்துவதற்காக மதிப்பீடு செய்தல் இத்துறையின் முக்கிய பணியாகும். மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித்துறை திட்டங்களைச் செயல்படுத்தும்போதும், முடிவுற்ற பின்னரும் மதிப்பீடுகளைச் செய்து வருகின்றது. அம்மதிப்பீட்டாய்வுகளின் முடிவுகள் பகுத்தாய்வு செய்யப்பட்டு தேவையான திருத்தங்கள் மற்றும் கொள்கையளவில் மாற்றங்கள் ஏதேனும் இருப்பின், அரசுக்கு தெரிவிக்கப்படுகிறது.

**1.2.8. உலக வர்த்தக நிறுவனப் (WTO) பிரிவு**

உலக வர்த்தக நிறுவனம் சம்பந்தமான பொருள் குறித்து ஒருங்கிணைப்பதற்காக அரசு ஆணை (நிலை) எண் 121, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை, நாள், 19-11-2001இன்படி ஒரு ஒருங்கிணைப்புப் பிரிவு திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

9-3-2002 அன்று சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் உரையில் அறிவித்துள்ளபடி, உலக வர்த்தக நிறுவனத்தின் ஒப்பந்தங்களால் மாநிலத்திற்கு ஏற்படும் பாதிப்பினை ஆராய்வதற்கும், மேலும் அதிகப் பயன்களைப் பெறுவதற்கான உத்திகளை வகுப்பதற்கும் பல்வேறு

[2002 மே 8

துறைகளில் உள்ள வல்லுநர்களைக் கொண்டு மேற்கண்ட பிரிவினை திருத்தியமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

*1.3.* **துறைத் தலைமையிடங்கள்**

திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள துறைகள் பின்வருமாறு:

(i) மாநிலத் திட்டக் குழு

(ii) பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை

(iii) மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை

மேற்கண்ட துறைகளின் பணிகள் பின்வரும் பக்கங்களில் சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

**மாநிலத் திட்டக் குழு**

*2.1.* தமிழ்நாட்டில் மாநிலத் திட்டக் குழு 25-05-1971 அன்று அமைக்கப்பட்டது. மாநில அமைச்சரவைக்கு ஆலோசனை வழங்கும் அமைப்பாக மாநிலத் திட்டக் குழு இயங்கி வருகிறது. கொள்கைகளை ஏற்றுக்கொள்வதும், அவற்றினை நடைமுறைப்படுத்துவதும் அரசின் பொறுப்பாக உள்ளது.

அரசிற்கு ஆலோசனை வழங்குவதுடன் மாநிலத் திட்டக் குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள முக்கியப் பொறுப்புக்களாவன—

(அ) ஐந்தாண்டுத் திட்டம், ஆண்டுத் திட்டம் மற்றும் ஐந்தாண்டுத் திட்டங்களுக்கான இடைப்பருவ ஆய்வு

(ஆ) ஆண்டுத் திட்டத்திற்கான பகுதி-2 புதிய திட்டங்களை ஆய்வு செய்து தெரிந்தெடுத்தல்

(இ) ஆண்டுத் திட்டங்களில் சேர்க்கப்பட்டுள்ள திட்டங்கள் மற்றும் பெருந்திட்டங்களின் செயல்பாட்டின் முன்னேற்றத்தினை ஆய்வு செய்தல்

(ஈ) பரவலாக்கப்பட்ட மாவட்ட திட்டப் பணிகள் மற்றும் அதனைச் சார்ந்த பணிகள்

(உ) திட்டங்களைத் தயாரித்தல், கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்



2002 மே 8]

(ஊ) தகவல் சேகரிப்பு அமைப்பினைப் பராமரித்தல் மற்றும் மேம்படுத்துதல்

(எ) சமூக மற்றும் பொருளாதார இனங்களில் அரசுக்கு அறிவுரை வழங்குதல்.

மாநில திட்டக் குழு 17-09-2001 அன்று மாண்புமிகு முதலமைச்சரை தலைவராகவும் மற்றும் முனைவர் மா.சா. சுவாமிநாதன் அவர்களை துணைத் தலைவராகவும், ஒரு முழுநேர உறுப்பினர், 6 பகுதி நேர உறுப்பினர்கள், 4 பணி சார்ந்த உறுப்பினர்கள் மற்றும் உறுப்பினர் செயலருடனும் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் வல்லுநர்கள் ஆகியோரின் பணிகளைத் திட்டமிடல் மற்றும் வளர்ச்சிக்கு மாநிலத் திட்டக் குழு பயன்படுத்திக்கொள்ளலாம்.

மேற்குறித்த பணிகள் தவிர, மாநிலத் திட்டக் குழு, சில சிறப்புப் பணிகளையும் மேற்கொள்கிறது. அவற்றின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

*2.2.* **தமிழ்நாட்டின் பொருளாதாரத்தைக் கண்காணித்தல்**

தமிழ்நாட்டின் பொருளாதார நிலைமை குறித்து காலாண்டு அறிக்கையினை மாநிலத் திட்டக் குழு தயாரிக்கிறது. இதில் பொருளாதாரத்தின் முக்கியப் பிரிவுகளான வேளாண்மை, தொழில்கள், மின்சாரம், வருவாய் திரட்டுதல், முக்கியப் பொருள்களின் விலைவாசி நிலவரங்கள், வேலைவாய்ப்பு உருவாக்குதல் மற்றும் திட்டச் செயலாக்கம் ஆகியவை ஆய்வு செய்யப்படுகின்றன.

*2.3.* **மாவட்டப் பரவலாக்கத் திட்டம்**

இந்திய அரசமைப்புச் சட்டம் 73வது திருத்தச் சட்டப் பிரிவுக் கூறு 243 G இன்கீழ் உள்ளாட்சி அமைப்புகள் திட்டங்களைத் தீட்டுவதிலும், பொருளாதார முன்னேற்றத்திலும், சமூக நீதியிலும் தன்னாட்சியுடன் செயல்படவேண்டும்.

மாவட்ட வளர்ச்சித் திட்டம் தயாரிப்புக்கான ஒருங்கிணைந்த வழிகாட்டி நெறிமுறைகள்-மாநிலத் திட்டக் குழுவினால் ஏற்கெனவே தயாரிக்கப்பட்டு அரசால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட வளர்ச்சித் திட்டக் குழுக்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக்களால் 2002-2003 ஆம் ஆண்டிற்கான மாவட்ட வளர்ச்சித் திட்டம் தயாரிக்கப்பட உள்ளது.

மாவட்ட வளர்ச்சித் திட்டத்தினை தயாரிக்கும் பொருட்டு, மாவட்ட திட்டக் குழு மாவட்டந்தோறும் மாவட்ட திட்ட அலுவலர், நுட்ப உதவியாளர், உதவியாளர், அலுவலக உதவியாளர் ஆகிய பணியாளர்களைக்கொண்டு 28 மாவட்டங்களிலும் இயங்கி வருகின்றது. மாவட்ட திட்டக் குழுக்கள் சிறப்பாகவும், திறமையாகவும் பணிபுரிய அடிப்படை வசதிகளான, தளவாடங்கள், கணினி, தொலைபேசி, ஈப்பு, மற்ற மாவட்டங்கள் மற்றும் தலைமையகத்தைத் தொடர்பு கொள்ள இணைய வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

### 2.4. தமிழ்நாடு மாநில நிலப்பயன்பாட்டு வாரியம்

முனைவர் மா.சா. சுவாமிநாதன், துணைத் தலைவர், மாநில திட்டக் குழு அவர்களது தலைமையில் மாநில நிலப்பயன்பாட்டு வாரியம் மாநில திட்டக் குழுவில் ஒரு சிறிய அமைப்பாக இயங்கி வருகிறது. இதன் பணிகளாவன.

(1) காற்று அல்லது கடல்நீர் அரிப்பு, மழை நீர்த் தேக்கம் மற்றும் உவர்நீர், தொழில்மயமாக்கல் மற்றும் நகரமயமாக்கல் இவற்றிலிருந்து வளமான வேளாண்மை நிலங்களைப் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுப்பது.

(2) மாநிலத்தின் நிலவள ஆதாரங்கள் மற்றும் இதற்கான விரிவான நிலவள ஆய்வுப்படங்களை துல்லியமாக வரைந்து, அதன் மூலமாக நிலச் சீரமைப்பு மற்றும் நில மேம்பாட்டுத் திட்டங்களை நடைமுறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

(3) பெரிய மற்றும் நடுத்தரப் பாசனத் திட்டங்கள் மற்றும் ஆற்றுப்படுகைகளில் மணல் படிவு ஏற்படுவதைத் தடுப்பதற்காக தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

(4) நிலம் மற்றும் நீர் சம்பந்தப்பட்ட ஏனைய செயல்பாடுகள்.

### 2.5. தமிழ்நாட்டின் மனித வள மேம்பாட்டு அறிக்கை

தமிழ்நாடு மனிதவள மேம்பாட்டு அறிக்கை, மாநிலத் திட்டக் குழுவினால் தயாரிக்கப்பட்டு வருகிறது. இவ்வறிக்கைக்குத் தேவையான நுட்பத் தகவல் வளம் மற்றும் புள்ளி விவரங்கள் பொருளியல் மற்றும் புள்ளியியல் இயக்ககம் மற்றும் வல்லுநர் குழுக்களால் அளிக்கப்பட்டுள்ளன. ஒரு தொகுப்பாளர் மூலம் சீரமைக்கப்பட்டு வரும் இவ்வறிக்கை விரைவில் வெளியிடப்படவுள்ளது.



### 2.6. பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம்

பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான அணுகுமுறை குறித்தான அறிக்கை 01-09-2001 அன்று, புது தில்லியில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. அக்கூட்டத்தில் கூறப்பட்ட கொள்கைகள் மற்றும் முன்னுரிமைகளின் அடிப்படையில் மாநில திட்டக் குழு, பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட அறிக்கையினை தயாரிக்கும் பணியை மேற்கொண்டுள்ளது.

பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான (2002-2007) வரைவுக் கண்ணோட்டம் மாநில திட்டக் குழுவின் உறுப்பினர்களுடனும் மற்றும் அனைத்து அரசுத் துறைகளுடனும் கலந்தாலோசிக்கப்பட்ட பின்னர் தயாரிக்கப்பட்டுள்ளது. அனைவரும் ஆரோக்கியமான வளமிக்க வாழ்வினைப் பெறுவதற்கான வாய்ப்புகளை உருவாக்குவது பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இந்த இலக்கினை அடைய, மாண்புமிகு முதலமைச்சரின் 15 அம்சத் திட்டம் பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு வழிகாட்டியாக அமையும்.

பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம் 2002-2007 மற்றும் ஆண்டுத் திட்டம் 2002-2003க்கான நிதி ஒதுக்கீடுகள் மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மத்திய திட்டக் குழுவின் துணைத் தலைவர் அளவில் விரைவில் நடைபெறவுள்ள கூட்டத்தில் முடிவு செய்யப்படும்.

## பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை

**3.1.** பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை, மாநிலத்தின் தலைமைப் புள்ளி இயல் முகமையாகும். மாநிலம் முழுமையிலும் புள்ளி விவரங்களைச் சேகரிப்பதிலும், தொகுப்பதிலும், ஆராய்வதிலும், வேளாண்மை, தொழில் மற்றும் விலைவாசி ஆகிய பிரிவின்கீழ் அறிக்கைகள் வெளியிடுவதும் மற்றும் புள்ளி விவரங்கள் குறித்த செயல்பாடுகளில் ஒருங்கிணைப்பாளராகச் செயல்படுவதும் இத்துறையின் முக்கியப் பணியாகும்.

**3.2.** பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறையால் கீழ்க்கண்ட திட்டங்கள் செயலாக்கப்படுகின்றன.

[2002 மே 8

**(அ) மாநில அரசினால் செயல்படுத்தப்படும் திட்டங்கள்**

**1. பயிர் பரப்பு மற்றும் உற்பத்தி உரிய காலத்தில் மதிப்பிடும் திட்டம்**

ஒவ்வொரு ஆண்டும் 20 விழுக்காடு கிராமங்களில் முன்னுரிமை அடிப்படையில் நில உபயோக புள்ளிவிவரங்கள் கணக்கெடுத்தல் மற்றும் ஒவ்வொரு பருவத்திலும், பயிர் வாரியாக நீர்பாய்ச்சப்பட்ட மற்றும் நீர்பாய்ச்சப்படாத பரப்பில் உயர் ரகம் மற்றும் உள்ளூர் ரகம் வாரியாக பரப்பு மதிப்பீடு செய்யப்படுகிறது.

**2. தேசிய மாதிரி ஆய்வுப் பிரிவினை வலுப்படுத்தும் திட்டம்**

தேசிய மாதிரி ஆய்வு, தேசிய அளவில், முக்கியமாக அமைப்பு சாராப் பிரிவுகளின் பல்வேறு பொருட்களை உள்ளடக்கி அடுத்தடுத்த சுற்றுக்களில் தொடர்ந்து நடத்தப்படும் ஓர் ஒருங்கிணைந்த ஆய்வாகும்.

இவ்வாய்வு 6 மாதம் அல்லது ஒரு வருட காலத்தில் முழு நேரப் பணியாளர்களை களப் பணியாளர்களாகக் கொண்டு நடத்தப்படுகிறது. இது மக்களுடைய சமூக பொருளாதார இனங்களின் மீதான அடிப்படை விவரங்களை அளிக்கிறது.

**3. பயிர் மேம்பாட்டுத் திட்டம்**

மாநிலத்தில் கிராம அளவில் அடிப்படை களப் பணியாளர்களான கிராம நிர்வாக அலுவலர்களால் சேகரிக்கப்படும் வேளாண்மை புள்ளி விவரங்களில் காணப்படும் குறைபாடுகளை முறையாக ஆய்வு செய்து, அவற்றை சரிசெய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

**4. வேளாண்மை புள்ளி இயலை மேம்படுத்துதல்**

வேளாண்மை மற்றும் வேளாண்மையைச் சார்ந்த விவரங்களைச் சேகரித்து, தொகுத்து, ஆராய்ந்து அறிக்கை வெளியிடப்படுகிறது.

**5. மேலாண்மை முறை மற்றும் விவரங்கள் சேகரித்தலை நவீனப்படுத்துதல்**

இத்திட்டத்தின்கீழ், கணிப்பொறி முறைகள் மற்றும் பணியாளர்களுக்கான பயிற்சி ஆகியவை மேம்படுத்தப்படுகிறது.



2002 மே 8]

**(ஆ) மத்திய அரசினால் செயல்படுத்தப்படும் திட்டங்கள்**

**1. வேளாண்மைக் கணக்கெடுப்பு**

வேளாண்மையை திட்டமிட நுண்ணிய அளவில், உரிய நிலப் பதிவேடுகளிலிருந்து கைப்பற்றின் அளவு, தன்மை மற்றும் கையிருப்பின் உரிமம் பற்றிய விவரங்கள் கணக்கிடப்படுகின்றன.

**2. பொருளாதாரக் கணக்கெடுப்பு**

வேளாண்மை (பயிர் உற்பத்தி மற்றும் தோட்டக்கலை நீங்கலாக) மற்றும் வேளாண்மை அல்லாத நிறுவனங்களின் அமைப்பு மற்றும் அமைப்பு சாரா பிரிவுகளின் விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

**3. கால்நடைக் கணக்கெடுப்பு**

கால்நடை, கோழிப்பண்ணை, வேளாண்மைக் கருவிகள், மீன்பிடிக் கருவிகள், மற்றும் இயந்திரங்கள் தொடர்பான விவரங்கள் சேகரித்தல். கால்நடைக் கணக்கெடுப்பு மட்டுமே வயது, இனம், அமைப்பு ஆகியவற்றுடன் கால்நடை வகை மற்றும் எண்ணிக்கை ஆகியவற்றை அளிக்கக்கூடியது. மேலும் கோழிப்பண்ணை, வேளாண்மை உபகரணங்கள், இயந்திரங்கள் மற்றும் மீன்வளப் புள்ளி விவரங்கள் குறித்த கூறுபாடுகளை உடையது.

**4. பழம், காய்கறி மற்றும் சிறுபான்மைப் பயிர்களில் பயிர் மதிப்பீட்டாய்வு நடத்துதல்**

பழம் மற்றும் காய்கறிப் பயிர்களில் பயிர் அறுவடைப் பரிசோதனைகள் நடத்தி பயிர் பரப்பு, உற்பத்தி மற்றும் விளைச்சல் விகிதம் மிக நுட்பமாகக் கண்டறியப்படுகிறது.

**(இ) மத்திய மாநில அரசுகளால் சரிசமமாக பங்கேற்கும் திட்டங்கள் (50:50)**

**1. பயிர் பரப்பு மற்றும் உற்பத்தி உரிய காலத்தில் மதிப்பிடும் திட்டம்**

ஒவ்வொரு ஆண்டும் 20 விழுக்காடு கிராமங்களில் முன்னுரிமை அடிப்படையில் நில உபயோக புள்ளி விவரங்கள் கணக்கெடுத்தல் மற்றும் ஒவ்வொரு பருவத்திலும், பயிர் வாரியாக நீர்பாய்ச்சப்பட்ட மற்றும் நீர்பாய்ச்சப்படாத பரப்பில் உயர் ரகம் மற்றும் உள்ளூர் ரகம் வாரியாக பரப்பு மதிப்பீடு செய்யப்படுகிறது.

[2002 மே 8

### 2. பயிர் மேம்பாட்டுத் திட்டம்

மாநிலத்தில் கிராம அளவில் அடிப்படை களப் பணியாளர்களான கிராம நிர்வாக அலுவலர்களால் சேகரிக்கப்படும் வேளாண்மைப் புள்ளி விவரங்களில் காணப்படும் குறைபாடுகளை முறையாக ஆய்வு செய்து, அவற்றை சரிசெய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

**(ஈ) தன்னாட்சி முறையில் இயங்கும் திட்டங்கள்**

**தேசிய தொழில் நுட்ப ஆள்திறன் தகவல் முறைக்கான ஒருங்கிணைப்பு மையம் ஏற்படுத்துதல்**

இத்திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டில் உள்ள தேர்ச்சி பெற்ற பொறியியல் பட்டதாரிகள் மற்றும் பட்டயதாரர்கள் ஆகியோரின் பல்வேறுபட்ட பொறியியல் மற்றும் தொழில் நுட்ப தனித்தன்மை குறித்து விவரங்கள் சேகரித்தல் மற்றும் அவர்களின் தேவை மற்றும் அளிப்பினை மதிப்பிடுதல் ஆகியவை மேற்கொள்ளப்படுகின்றன.

3.3. பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை வாயிலாக நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் திட்டம்சாரா திட்டங்கள் குறித்த விவரங்கள் சுருக்கமாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| வ. எண் | திட்டம் | நோக்கம் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | மாநில வருவாய் மதிப்பீடு | ஒவ்வொரு ஆண்டும் பொருளாதார வளர்ச்சிக்கு திட்டமிட ஏதுவாக 17 இனங்களுக்கான மொத்த மாநில உற்பத்தி, நிகர மாநில உற்பத்தி மற்றும் தனி நபர் வருமானம் மதிப்பிடப்படுகிறது. |
| 2. | மாநிலக் கணக்கு | மாநில பொதுத் துறை நிறுவனங்களின் பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் பிற பொருளாதார நடவடிக்கைகளின் செயல்பாடுகள் குறித்த |



2002 மே 8]

| (1) | (2) | (3) |
|---|---|---|
| | | தெளிவான பார்வை கிடைக்கும் பொருட்டு, மண்டல கணக்குக் குழுமத்தின் பரிந்துரையின்படி உற்பத்தி, நுகர்வு மற்றும் மூலதன ஆக்கம் குறித்த விவரங்கள் மண்டலக் கணக்குகளில் இருந்து சேகரிக்கப்படுகின்றன. மேலும் உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் மாநிலத்தின் பொதுத் துறை நிறுவனங்களுடன் மாநில அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் குறித்தும் வெளிப்படுத்துகின்றது. |
| 3. | மூலதன ஆக்கம் | தமிழ் நாட்டில் உள்ள அரசு நிர்வாகத் துறைகள், அரசு சார்பு மற்றும் அரசு சாரா நிறுவனங்கள், வரையறுக்கப்பட்ட வாரியங்கள், உள்ளாட்சி நிறுவனங்கள் முதலிய மாநில பொதுத் துறைப் பிரிவு மற்றும் தனியார் துறை ஆகியவற்றின் மொத்த நிலையான மூலதன ஆக்க மதிப்பீடுகள் கணக்கிடப்படுகின்றன. |
| 4. | ஆண்டுத் தொழில் ஆய்வு | மாநில வருவாய் மதிப்பீட்டிற்காக மாநிலத்தில் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளின் முதலீடு, கடன், தொழிலாளர்கள், சம்பளம், இடுபொருள், உற்பத்தி மற்றும் கூடுதல் பெறுமானம் ஆகியவை குறித்து மதிப்பிடப்படுகிறது. |

[2002 மே 8

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 5. | மாதாந்திர தொழில் குறியீட்டெண் | குறிப்பிட்ட காலத்திற்கு மாநிலத்தின் தொழில் வளர்ச்சியைக் கணக்கிட மாதந்தோறும் தொழிற் குறியீட்டெண் கணக்கிடப்படுகிறது. |
| 6. | பருவமும் பயிரும் பற்றிய அறிக்கை | நில உபயோகம், பாசன ஆதாரங்கள் நீர்பாய்ச்சப்பட்ட மற்றும் நீர் பாய்ச்சப்படாத பயிர் பரப்பு, உற்பத்தி மதிப்பீடு, ஒவ்வொரு மாவட்டத்திலும் உணவு மற்றும் உணவல்லாத பயிர்களின் உற்பத்தி விகிதாச்சாரத்தைக் கணக்கிடுதல், அத்துடன் மழை விவரங்கள், விலைவாசி நிலவரம், விவசாயக் கூலி விவரங்கள் மற்றும் பண்ணை விலை விவரங்கள் போன்ற விவரங்களை உள்ளடக்கியது. |
| 7. | பயிர் முன் மதிப்பீட்டறிக்கை | ஒரு பசலியாண்டிற்குரிய பயிர் பரப்பு மற்றும் உற்பத்தியை ஆண்டு முடிவில் கணக்கிடுவதற்கு முன்பாகவே, தமிழ்நாட்டிலுள்ள 43 முக்கிய உணவு, உணவல்லாத மற்றும் பணப்பயிர்களின் பரப்பு மற்றும் உற்பத்தி விவரங்கள் முன் கூட்டியே முன்மதிப்பீடு செய்யப்படுகின்றன. |
| 8. | உணவு மற்றும் உணவு அல்லாத பயிர்களின் பயிர் மதிப்பீட்டாய்வு | மாவட்டங்கள் மற்றும் மாநில அளவில் பல்வேறு பயிர்களில் பயிர் அறுவடை பரிசோதனைகள் |



2002 மே 8]

| (1) | (2) | (3) |
|---|---|---|
| | | நடத்தி மிக நுட்ப அளவில் ஹெக்டேருக்கான சராசரி விளைச்சல் விகிதத்தைக் கணக்கிட்டு மொத்த உற்பத்தி பற்றி மதிப்பீடு செய்யப்படுகிறது. |
| 9. | தேசிய வேளாண் காப்பீட்டுத்திட்டம் | இயற்கையின் சீற்றத்தில் ஏற்படும் வறட்சி, வெள்ளம், சூறாவளி, பூச்சித் தாக்குதல் மற்றும் நோய் தாக்குதல் போன்றவற்றால் ஏற்படும் இழப்பை காப்பீடு மூலம் விவசாயிகளுக்கு ஈடுகட்ட சில குறிப்பிட்ட பயிர்களின் விளைச்சல் விகிதம் பயிர் அறுவடை பரிசோதனை மூலம் கணக்கிடப்படுகிறது. |
| 10. | தென்னை மற்றும் கமுகு ஆய்வு | தென்னை மற்றும் கமுகு பயிர்களின் பரப்பு, விளைச்சல் விகிதம் மற்றும் உற்பத்தி குறித்து மதிப்பீடு செய்யப்படுகிறது. |
| 11. | மழை விவரங்கள் சேகரித்தல் | மாவட்டம் மற்றும் மாநிலத்திற்குரிய தினசரி/மாதாந்திர/பருவ கால மற்றும் ஆண்டுக்கான மழை விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. |
| 12. | நீர்ப்பாசனத் திட்டம். | மாவட்ட வாரியாக வட்ட அளவில், பயிர் சாகுபடி முறை மற்றும் பாசன ஆதாரங்கள் மூலம் சாகுபடி செய்யப்பட்ட நிகரப் பரப்பு, மொத்தப் பரப்பு மற்றும் ஒரு தடவைக்கு மேல் சாகுபடி செய்யப்பட்ட பரப்பின் சதவீதம் கணக்கிடப்படுகின்றன. |

[2002 மே 8

| (1) | (2) | (3) |
| --- | --- | --- |
| 13. | விவசாயக்கூலி குறியீட்டெண் | மாவட்ட மற்றும் மாநில அளவில், தினசரி/ மாதாந்திர/ வருடாந்திர அடிப்படையில் வழங்கப்பட்ட விவசாயக் கூலி விவரங்களின் அடிப்படையில் விவசாயக் கூலி விவர குறியீட்டெண் கணக்கிடப்படுகின்றன. |
| 14. | வீட்டுவசதி புள்ளி விவரம் | தேசிய அளவில் வீட்டுவசதிக் கொள்கை மற்றும் வீட்டு வசதி திட்ட ஆவணங்களை ஏற்படுத்துவதற்காக பொது மற்றும் தனியார் துறைகளின் கட்டடம் சம்பந்தமான செயல்பாடுகள் குறித்த விவரங்கள் சேகரிப்படுகின்றன. |
| 15. | கட்டட கட்டுமானச் செலவு குறியீட்டெண் | கட்டடப் பொருட்கள் மற்றும் கட்டுமானப் பணியாளர்களின் ஊதிய விகிதங்களை காலாண்டிற்கொருமுறை சேகரித்து, 16 மையங்களுக்கான கட்டட கட்டுமான செலவு குறியீட்டெண் ஒருங்கிணைக்கப் படுகிறது. |
| 16. | ஆண்டு நகராட்சி புள்ளி இயல் கையேடு மற்றும் மாவட்ட புள்ளி இயல் கையேடு | மாவட்டங்கள் மற்றும் நகராட்சிகளில் உள்ள அனைத்து விவரங்களும் தொகுத்து அளிக்கப்படுகின்றன. |



2002 மே 8]

| (1) | (2) | (3) |
| --- | --- | --- |
| 17. | வெளியீடு மாநில புள்ளி இயல் கையேடு மற்றும் ஆண்டு புள்ளி விவரத் தொகுப்பு. | ஆட்சியாளர்கள், திட்ட வல்லுநர்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு கிடைப்பதற்கு ஏதுவாக முக்கிய விவரங்களை உள்ளடக்கிய விவரங்களான மக்கள்தொகை, விவசாயம், தொழில், சுகாதாரம், கல்வி, மின்சாரம், விலைவாசி மற்றும் வர்த்தக விவரங்கள் சேகரித்து தொகுத்து வழங்கப்படுகின்றன. |
| 18. | ஆள்திறன் மற்றும் வேலை வாய்ப்புத் திட்டம் | பல்வேறு துறைகளில் தேவைப்படும் ஆள்திறன் தேவை மற்றும் அளிப்பு குறித்த விவரங்களைச் சேகரித்தல் மற்றும் பயிற்சி பெற்ற பணியாளர்களின் வேலைவாய்ப்பு, வேலையின்மை, குறை வேலை வாய்ப்பு மற்றும் மாணவர்கள் சேதம் போன்றவை குறித்த ஆய்வு மேற்கொள்ளப் படுகிறது. அண்மையில் முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின் பயன்பற்றிய சிறப்பு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. |
| 19. | அங்காடிப் புலனாய்வு மற்றும் விலைவாசி | இத்திட்டத்தில், விலைகள், வரத்து, அனுப்புகை, இருப்பு மற்றும் இதர உற்பத்தி, அங்காடியின் போக்கு குறித்தான 96 மையங்களில் இருந்து முக்கியமான வேளாண்மைப் பொருட்களுக்கான விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 20. | தொழிற்சாலை ஊழியர்களின் நுகர்வு விலைக் குறையீடு | தொழிற்சாலை ஊழியர்கள் நுகர்வு விலைக் குறியீடு, பல்வேறு காலங்களில் மேற்படி ஊழியர்கள் நுகரும் ஒரு சில நிலையான பொருட்கள் மற்றும் பணிகளின் விலை வேறுபாட்டிற்கான சராசரி சதவீத மாற்றத்தை வெளிப்படுத்துகின்றது. |

### 3.4. மாநிலப் புள்ளி இயல் குழு

மாநிலப் புள்ளி இயல் குழுவானது பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறையில் புள்ளி விவரங்கள் சேகரிக்கப்படும் முறைகள், அவற்றைப் பயன்படுத்தும் தன்மைகள் ஆகியவை குறித்து மேற்பார்வை செய்கிறது. இக்குழு தற்போது மாற்றியமைக்கப்படவுள்ளது.

இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநரும், ஆந்திர மாநிலத்தின் தற்போதைய ஆளுநருமாகிய டாக்டர் சி. ரங்கராஜன் அவர்கள் தலைமையிலான தேசிய புள்ளி இயல் குழு, செப்டம்பர் திங்கள் 2001-ல் அளிக்கப்பட்ட அறிக்கையில் புள்ளி இயல் விவரங்கள் சேகரிக்கும் முறையினை மேம்படுத்த சில முக்கிய மாற்றங்களைச் செய்யும்படி கருத்து தெரிவித்துள்ளது. மேற்படி குழுவின் பரிந்துரைகளை செயல்படுத்த பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றது. மாநிலப் புள்ளி இயல் குழு இதனை மேற்பார்வை செய்யும்.

### மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை

**4.1.இத்துறையின் முக்கியப் பணிகளாவன:**

(அ). 1. மத்திய, மாநில அரசுத் திட்டங்களை மதிப்பீடு செய்தல்;

2. அயல்நாட்டு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள் உட்பட குறிப்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திட்டங்களை ஆய்வு மற்றும் சிறப்பு மதிப்பீடு செய்தல்;

3. மாநில நிதி நிலவரம் மற்றும் தமிழ்நாடு பொருளாதாரம் பற்றிய சிறப்புப் பகுத்தாய்வுகள் மேற்கொள்ளல்.

(ஆ). 1. வருடாந்திர வெளியீடுகளான 'தமிழ்நாடு - ஒரு பொருளாதார ஆய்வு' மற்றும் தமிழ்நாடு அரசின் நிதி நிலை அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு 'பொருளாதாரம் மற்றும் பணிவாரியான பகுப்பாய்வு' மேற்கொள்ளல்.





**4.2.** தமிழ்நாட்டில் வெளிநாட்டு உதவியுடன் நடைபெற்று வரும் திட்டங்களான டானிடா திட்டம், சிடா திட்டம், ஐரோப்பிய பொருளாதாரக் கழகத் திட்டங்கள் மற்றும் பன்னாட்டு வளர்ச்சிக் கழகத் திட்டங்கள் ஆகியவை இத்துறையால் மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றன. 1999ஆம் ஆண்டில், உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்பட்ட தமிழ்நாடு வேளாண் வளர்ச்சித் திட்டம் மதிப்பீட்டுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. பல்வேறு பிரிவுகளான கிராமப்புறக் குடிநீர் வழங்கல், கிராமச் சாலைகள், காடு வளர்ப்பு, கால்நடை அபிவிருத்தி, வேளாண் விரிவாக்கம், விதை மற்றும் வேளாண் திட்டங்கள் தீட்டுதல் போன்றவையும் மதிப்பீட்டுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. மேலும் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம் ஆகிய திட்டங்களும் அவற்றின் வேறுபட்ட உட்கூறுகளும் தொடர்ச்சியாக மதிப்பீட்டாய்வு செய்யப்படுகின்றன.

**4.3.** இத்துறை தொடங்கப்பட்டதிலிருந்து, பல்வேறு துறைகளைச் சார்ந்த 468 மதிப்பீட்டாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன் விவரம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது. சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட சில முக்கியமான ஆய்வுகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(i) மத்திய அரசின் கிராமப்புற வளர்ச்சி மற்றும் வேலை வாய்ப்பு அமைச்சகத்தின், கிராமப்புற வேலைவாய்ப்பு மற்றும் வறுமை ஒழிப்புத் துறையால் அளிக்கப்பட்ட வேலைவாய்ப்பு உறுதி அளிப்புத் திட்டம் குறித்த ஆய்வு ரூ.11.77 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டது. பணி முடிக்கப்பட்டு அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. மத்திய அரசு இவ்வறிக்கையை பெரிதும் பாராட்டியுள்ளது.

(ii) உள்ளாட்சி அமைப்புகளின் நிதி நிலை மற்றும் அடிப்படைத் தேவைகள் குறித்த பேராய்வு, இரண்டாம் மாநில நிதிநிலைக் குழு கேட்டுக் கொண்டதற்கிணங்க இத்துறையால் நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவான ஐந்து மாதங்களுக்குள் முடிக்கப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. இவ்வாய்வானது 28 மாவட்டங்களில் 385 வட்டாரங்களைச் சேர்ந்த 1000 ஊராட்சிகளில் மேற்கொள்ளப்பட்டது.

(iii) இரண்டாம் மாநில நிதிநிலைக் குழுவிற்காக, 'கிராமசபை நடைபெறுதல்' குறித்த துரித ஆய்வு ஒன்று 23 மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு, ஒரே வாரத்திற்குள் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

[2002 மே 8

உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களின் ஓய்வூதியச் செலவு குறித்த எதிர்காலப் போக்கின் கணிப்பு குறித்த ஆய்வும் இத்துறைக்குக் கொடுக்கப்பட்டது. மேற்கூறப்பட்ட அனைத்து ஆய்வுகளும் இத்துறையில் அமைந்துள்ள தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி குறிப்பிடப்பட்ட காலக் கெடுவிற்குள்ளாகவே முடிக்கப்பட்டன. இரண்டாம் மாநில நிதிநிலைக் குழு இத்துறையின் ஆய்வறிக்கையைப் பெரிதும் பாராட்டியுள்ளது.

(iv) சுய வேலைவாய்ப்புத் திட்டங்கள் (பிரதம மந்திரியின் வேலைவாய்ப்புத் திட்டம், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி வளர்ச்சிக் கழகம், தமிழ்நாடு தொழில் நிதி வளர்ச்சிக் கழகம் மற்றும் சுய உதவிக் குழுக்கள்) குறித்த ஆய்வு, இளைஞர்களுக்கான தனி சுய வேலைவாய்ப்பு நிதி நிறுவனங்கள் அமைப்பது சாத்தியமானதாக அமையுமா என்று இதற்கென அரசால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவுக்குக் கருத்துக் கூறுவதாக அமைந்தது.

(v) மேலும் இத்துறைக்கு வருமுன் காப்போம் திட்டத்தைத் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யும் பணியும் அளிக்கப்பட்டுள்ளது.

(vi) இத்துறையால் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் கீழ் இயங்கும் சிறப்புப் பள்ளிகள் பற்றியும், பட்டுப்புழு வளர்ப்புத் திட்டம் பற்றியும், காடுகள் வளர்ப்புத் திட்டம் பற்றியும் திறனாய்வுப் பணி மேற்கொள்ளப்பட்டது. மேலும் இத்துறையால் நடமாடும் கால்நடை மருத்துவமனை குறித்து மதிப்பாய்வு நடத்தப்பட்டது. மதிப்பாய்வில் தெரிவித்த கருத்துகள் மேற்படி திட்டத்தினை சீரமைக்க கால்நடைத் துறைக்கு மிகவும் உபயோகமாக இருந்தது.

(vii) சமீபத்தில் மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம், இத்துறைக்கு ரூ.20.00 இலட்சத்திற்கு அங்கீகாரம் வழங்கி வேலைக்கு உணவுத் திட்டத்தை ஆந்திரப் பிரதேசம் மற்றும் கர்நாடக மாநிலங்களில் ஆய்வு செய்யப் பணித்துள்ளது. ஆய்வு இந்த ஆண்டு தொடங்கப்பட்டு வருகிறது. முதல் தவணையாக ரூ.8.00 இலட்சம் மத்திய அரசிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

(viii) தேசிய மாதிரி ஆய்வு அமைப்பு 1999-2000-ல் வறுமையை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு செய்து வெளியிட்ட புள்ளிவிவரங்கள் பற்றி இத்துறையால் விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.



2002 மே 8]

(ix) மத்திய திட்டக் குழு வெளியிட்டுள்ள வேலைவாய்ப்பு பற்றிய சிறப்பு பணி அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பு மற்றும் அதன் செயல்படும் திறன் பற்றிய ஆராய்வு இத்துறையால் மேற்கொள்ளப்பட்டது.

*4.4.* தற்பொழுது இத்துறை 26 மதிப்பீட்டு ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது. பணி முன்னேற்றம் பல்வேறு நிலைகளில் உள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளில், சராசரியாக இத்துறை ஒவ்வொரு மூன்று வாரத்திற்கும் ஓர் அறிக்கை என்ற விகிதத்தில், அறிக்கைகளைத் தயாரித்து அரசுக்குச் சமர்ப்பித்துள்ளது. 'தமிழ்நாடு ஒரு பொருளாதார ஆய்வின்' அடுத்த வெளியீடு இறுதியாக்கப்பட்டு வெளியிடுவதற்கு தயாராக உள்ளது. மேற்கண்ட வெளியீட்டை முன்னர் வெளியிட்டது போலவே குறுந்தகடுகளில் CD வெளியிட முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

*4.5.* இயல்பு மதிப்பீடு ஆய்வு அறிக்கைகள் தவிர பல்வேறு நிர்வாகத் துறைகளால் கேட்டுக் கொள்ளப்படும் பல்வேறு திட்டங்கள் பற்றிய சிறப்பு ஆய்வுகளையும் இத்துறை மேற்கொள்கிறது. அரசு வருவாய் பற்றிய எதிர்காலப் போக்கினைக் கணித்தல், அளவீடு செய்தல், வரியினங்கள் பற்றிய ஆய்வு, ஓய்வூதியம் பற்றிய ஆய்வு, அரசின் நிதிநிலைப் பற்றாக்குறையின் போக்கு, பகுதி வாரியான பொருளாதார வளர்ச்சி செயல்பாடு, மாநில வருவாய்ப் போக்கு, மாநிலத்தின் வறுமை ஒழிப்பு மற்றும் வேலைவாய்ப்பு வளர்ச்சி போன்ற பல்வேறு ஆய்வுகளையும் மேற்கொண்டு நிதித் துறைக்கு இத்துறை ஆக்கபூர்வ உதவி அளித்து வருகின்றது.

*4.6.* பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட அணுகுமுறை அறிக்கை, சமூகத் துறைத் திட்டங்கள் பற்றிய மதிப்பீட்டு ஆய்வுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது. தொடர்ந்து திட்டங்களின் செயல்பாடுகளைக் கண்காணித்தல், மதிப்பீடு ஆய்வு மேற்கொள்ளல் போன்றவை மத்திய மாநில திட்டங்களின் ஓர் அங்கமாகும். இதற்காக கீழ்க்காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது:

* மாநில மதிப்பீட்டுத் திறனை உயர்த்துதல் மற்றும் வலுப்படுத்துதல்.

* செய்தி தொழில்நுட்பத் துறைகளோடு தொடர்புடைய அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல்.

53-139—21a

[2002 மே 8

* திட்டச் செயல்பாடுகள் வெளிப்படையாகவும், பொறுப்பேற்றுக் கொள்ளும் வண்ணமும் அமைவதற்கு ஏதுவாக திட்டப் பணிகளின் மதிப்பீட்டு முடிவுகளைப் பலரும் அறிவதற்கான வழி செய்தல்.

* இத்துறையின் ஆண்டறிக்கைகளை குறித்த காலத்தில் வெளியிடுதல்.

* இத்துறை ஆய்வறிக்கைகளைப் பயன்படுத்துபவர்களுக்கு குறுந்தகடுகள் (CD) மற்றும் மாநில இணையத் தளம் மூலம் எளிதில் கிடைக்கச் செய்தல்.

* நிதி மற்றும் தமிழ்நாடு பொருளாதாரம் பற்றிய கணிப்புகள் மிகவும் துல்லியமாக இருக்கும் பொருட்டு எதிர்கால அளவீட்டுச் செயல்முறைகளைச் செம்மைப்படுத்துதல்.

**இணைப்பு**

**மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறையால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டு ஆய்வறிக்கைகளின் துறைவாரியான விவரங்கள்**

| வ. எண் (1) | துறை (2) | எண்ணிக்கை (3) |
|---|---|---|
| | **மதிப்பீட்டாய்வுகள்** | |
| 1. | வேளாண்மை | 44 |
| 2. | வேளாண் விற்பனை | 6 |
| 3. | பட்டு மேம்பாட்டுத் தொழில் | 4 |
| 4. | மீன் வளர்ப்பு | 7 |
| 5. | நீர்ப்பாசனம் | 53 |
| 6. | ஊட்டச்சத்து | 4 |
| 7. | வேலைவாய்ப்பு | 14 |
| 8. | கல்வி | 11 |
| 9. | சமூக நலம் | 15 |



2002 மே 8]

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 10. | வருவாய் | 5 |
| 11. | தோட்டக்கலை | 7 |
| 12. | கால்நடை வளர்ப்பு | 11 |
| 13. | காடு வளர்ப்பு | 7 |
| 14. | தொழில்கள் | 12 |
| 15. | சுகாதாரம் மற்றும் குடும்ப நல மேம்பாடு | 32 |
| 16. | கூட்டுறவு | 9 |
| 17. | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் | 13 |
| 18. | ஊரக வளர்ச்சி | 19 |
| 19. | வேளாண் பொறியியல் | 11 |
| 20. | மற்றவை | 54 |
| | **சிறப்பு மதிப்பீட்டாய்வுகள்** | |
| 1. | உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்பட்ட வேளாண் வளர்ச்சித் திட்டம் (TNADP) | 24 |
| 2. | மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் (HADP) | 18 |
| 3. | மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம் (WGDP) | 14 |
| 4. | சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டம் (SIDA) | 12 |
| 5. | டானிடா உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள்— | |
| | (i) சுகாதார பாதுகாப்புத் திட்டம் | 3 |
| | (ii) புதுக்கோட்டை கால்நடை மேம்பாட்டுத் திட்டம் | 1 |
| 6. | உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்பட்ட தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவு திட்டம் (TINP I & II) | 58 |
| | **மொத்தம்** | **468** |

2002 மே 8]

## இணைப்பு III

*(398 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

**மானியக் கோரிக்கை எண் 30**

**தகவல் தொழில் நுட்பவியல் துறை**

**கொள்கை விளக்கக் குறிப்பு, 2002-2003**

**முன்னுரை**

தமிழகம், தகவல் தொழில்நுட்பத் தொழில் முதலீட்டிற்கு இன்றியமையாத அறிவியல் மற்றும் சமூகக் கட்டமைப்பையும், மனித ஆற்றலையும் தன்னகத்தே கொண்டுள்ளது. நமது மாநிலத்தில் இந்தத் துறையில் சுமார் 40,000 தொழில் வல்லுநர்கள் பணியாற்றி வருகின்றனர். உலக வங்கி, (World Bank) ஏபிஎன் ஆம்ரோ (ABN AMRO) இ.டீ.எஸ். (Electronic Data Services) போன்ற புகழ்பெற்ற நிறுவனங்கள் சென்னை நகரில் தங்கள் அலுவலகங்களின் பிரிவுகளை அமைத்துள்ளன. தனியார் துறை தொலைத் தொடர்பு நிறுவனமான பார்தி என்டர்பிரைசஸ் (Bharti Enterprises) மற்றும் சிங்கப்பூர் தொலைத் தொடர்பு நிறுவனமும் இணைந்து நீர் மூழ்கி ஒளி இழைவடம் (Submarine Optical Fibre Cable) மூலம் சென்னைக்கும் சிங்கப்பூருக்கும் தொடர்பு ஏற்படுத்தித் தர உள்ளன. இத்திட்டம் 'i2i இணைப்புத் திட்டம்' என்று சொல்லப்படும் உலகிலேயே மிகப் பெரிய இணைப்புத் திட்டமாகும். மாநிலத்தில் 'ஒளி இழைவடம் இணைப்பு' வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன. இதனால் மாநிலத்தின் தகவல் தொடர்பு வசதிகள் மேம்படுத்தப்படும். தனியார் துறை நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு, இதுவரை சுமார் 5000 கிலோ மீட்டர் நீளத்திற்கு மாநிலத்தில் இவ்விணைப்பு வடங்கள் பதிக்கப்பட்டுள்ளன. இத்திட்டங்களின் மூலம் சென்னை' இந்தியாவின் 'தகவல் தொடர்பு நுழைவு வாயிலாக' விளங்கும். இங்கிலாந்து நாட்டின் சான்ஸா (XANSA), ஒரு மென்பொருள் நிறுவனத்தினை சிறுசேரி தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் அமைத்து வருகிறது.

2. கடந்த ஆண்டு (2001-2002) உலகம் முழுவதிலும் தகவல் தொழில்நுட்பத் தொழில் பொதுவாக தேக்க நிலையில் இருந்த போதிலும், தமிழகத்தில் அமைந்துள்ள 866 தகவல் தொழில்நுட்பத்தைச் சார்ந்த

[2002 மே 8

நிறுவனங்கள் சுமார் 5223 கோடி ரூபாய் மதிப்புக்கு ஏற்றுமதிகள் செய்துள்ளன. தமிழகம் தகவல் தொழில்நுட்ப ஏற்றுமதியில் கர்நாடகத்திற்கு அடுத்தபடியாக இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது. 2000-2001 ஆம் ஆண்டில் இந்நிறுவனங்கள் (அப்போது 766 நிறுவனங்கள்) சுமார் 3,116 கோடி ரூபாய் மதிப்புக்கு ஏற்றுமதிகள் செய்தன.

3. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் தகவல் தொழில் நுட்ப மன்றம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. தகவல் தொழில் நுட்பம் சம்பந்தமான அனைத்துக் கொள்கை முடிவுகள், மனித ஆற்றல் தேவைகள், ஆளுமையில் தகவல் தொழில்நுட்பத்தின் பயன்பாடு ஆகியவற்றில் இம்மன்றம் தக்க முடிவுகளை எடுத்து வருகிறது.

4. தகவல் தொழில் நுட்பத் தொழிலுக்கு ஆதரவாக பல முக்கிய முயற்சிகளை தமிழக அரசு மேற்கொண்டுள்ளது. ஆளுநர் உரை மற்றும் நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டவாறு, மாநிலத்தில் தகவல் தொழில் நுட்பத் தொழிலை வளர்ச்சி அடையச் செய்யவும், மக்களுக்குப் பயனளிக்கும் வகையில் தகவல் தொழில்நுட்பத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்தவும் அரசு தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

5. ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்ட மாண்புமிகு முதலமைச்சரின் 15 அம்சத் திட்டத்தில், முன்னணி அறிவியல் தொழில் நுட்பமான தகவல் தொழில்நுட்பத்தில் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சியை ஊக்குவித்தல், கல்வியறிவையும் களச் செயல்பாட்டையும் ஒருங்கிணைக்கும் முயற்சிகள், மக்களிடையே அறிவியல் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் அறிவியல் வல்லுநர்களுக்கும் சமுதாயத்திற்குமிடையே புதிய சமூகத் தொடர்பை ஏற்படுத்தவும் இயக்கம் ஒன்றைத் தொடங்குதல் ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளன.

6. இந்தியாவிலேயே ஒப்புயர்வற்ற நிலையை தமிழகம் எய்தும் பொருட்டு, தகவல் தொழில் நுட்பம் மற்றும் தகவல் தொழில் நுட்பத்தால் சாத்தியப்பட்ட சேவைகள் (Information Technology Enabled Services) வளர்ச்சிக்கு தொடர் முக்கியத்துவம் தரப்படும் எனவும் அரசு அறிவித்துள்ளது.

7. கீழ்க்கண்ட நோக்கங்களுக்காக புதிய தகவல் தொழில் நுட்பக் கொள்கை ஒன்று அறிவிக்கப்படும்.



2002 மே 8]

(அ) தகவல் தொழில் நுட்ப முதலீடுகளுக்கு உகந்த இடமாக தமிழ்நாட்டினை அமைத்தல்.

(ஆ) மின்னணு ஆளுமை மற்றும் அரசு அமைப்புக்குள் தகவல் தொழில் நுட்பப் பயன்பாடுகள் மூலம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்.

(இ) மின்னணு வசதி பெறுவதில் நகர்ப்புற மற்றும் கிராமப்புறப் பகுதிகளுக்கு இடையே உள்ள இடைவெளியைக் குறைத்தல்.

(ஈ) ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு முயற்சிகளை அதிகரித்தல்.

(உ) தகவல் தொழில்நுட்பத்தில் தமிழ் மொழியின் பயன்பாட்டை ஊக்குவித்தல்.

8. தகவல் தொழில் நுட்பப் பயன்பாட்டின் மூலம் அரசின் திறமைகள் மேம்படுத்தப்படும். நெசவுத்தொழில், தோல் மற்றும் மோட்டார் வாகனம் போன்ற பழமை வாய்ந்த தொழில்கள் போட்டியிட்டு வளரும் சூழ்நிலை அதிகரிக்கப்படும். நிதிநிலை அறிக்கையில் வேளாண்மைத் துறைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதால், தமிழக வேளாண் மக்களின் உற்பத்தித் திறனை உலகத் தரத்திற்கு ஈடாக அதிகரிப்பதற்கு ஏதுவாக சந்தை வாய்ப்பு பெறுதல். இடுபொருட்கள், வேளாண் தொழில் நுட்பம் போன்றவற்றில் தகவல் தொழில் நுட்பம் பயன்படுத்தப்படும். மக்களுக்கான மின்னணு சேவைத் திட்டங்கள் கொண்டு வரப்படும்.

9. சென்னையில், உலகத் தரம் வாய்ந்த உட்கட்டமைப்போடு, பொது மற்றும் தனியார் பங்கேற்புடன் அறிவுசார் தொழில் நகரியம் (Knowledge Industry Townships) அமைக்கப்படும். சென்னையிலுள்ள இந்திய தொழில் நுட்பக் கல்வி நிறுவனம் (Indian Institute of Technology) மூலமாக பன்னாட்டு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அறிவுப் பூங்கா (International Research and Development Knowledge Park) ஒன்று அமைக்கப்படும்.

10. கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி ஆகிய இரண்டாம் நிலை நகரங்கள் வளர்ச்சி அடைய தகவல் தொழில் நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தால் சாத்தியப்பட்ட சேவைகள் முதலீடுகளை அதிகரிக்க தனி நோக்க ஊர்தியை (Special Purpose Vehicle) அரசு அமைத்து வருகிறது.

[2002 மே 8

11. உலகம் முழுவதும் வாழும் தமிழ் மக்கள் இணையம் வழியாக வாய்ப்புகள் மற்றும் ஆதாரங்கள் அளிக்கும் நோக்கத்தோடு அரசின் நிதியுதவியுடன், தமிழ் இணையப் பல்கலைக்கழகம் ஒரு சங்கமாக 2000ஆம் ஆண்டு மே திங்களில் பதிவு செய்யப்பட்டது. அறிவியல் மற்றும் பொறியியல் தமிழ்ப் பாடங்களை உலகத்தின் பல்வேறு பகுதிகளிலுள்ள தமிழர்களுக்கு இணையம் மூலம் வழங்க தமிழ் இணையப் பல்கலைக் கழகம் முயற்சிகள் மேற்கொள்ளும்.

**தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (எல்காட்)**

தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (எல்காட்) தமிழக அரசின் நிறுவனமாக, 1977 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. மார்ச் திங்கள் 2002 ஆம் ஆண்டு இந்நிறுவனம் தனது 25 ஆண்டு காலப் பணியினைப் பூர்த்தி செய்துள்ளது.

மின்னணு இயந்திரங்கள், உபபொருட்கள், உட்கட்டமைப்புத் திட்டங்கள், நுகர்வோர், மின்னணுப் பொருட்கள், உயர் தொழில்நுட்ப தகவல் தொடர்புச் சாதனங்கள், மென்பொருள் போன்ற பலதரப்பட்ட மின்னணுப் பொருட்களை உற்பத்தி செய்யும் அநேக திட்டங்களை இணைகூட்டு/வழிகாட்டுத் துறையில் எல்காட் நிறுவனம் அமைத்துள்ளது.

செயல் திறனும், வெளிப்பாட்டுத் திறனும் கொண்ட எல்காட் நிறுவனம், இன்று தமிழக அரசின் தகவல் தொழில்நுட்பக் கொள்கை மற்றும் திட்டங்களுக்கான ஒருங்கிணைப்பு நிறுவனமாக உள்ளது.

எல்காட் நிறுவனத்தால் செயல்படுத்தப்படும் பல்வேறு முயற்சிகள்/திட்டங்களைக் கீழ்க்கண்டவாறு நான்கு தலைப்புகளில் வகைப்படுத்தலாம்:

(அ) கணினி மற்றும் கணினி சார்ந்த சாதனங்கள் மற்றும் மென்பொருள் கொள்முதல்

(ஆ) வளர்ச்சித் திட்டங்கள்

(இ) தகவல் தொடர்புத் திட்டங்கள்

(ஈ) மின்னணு ஆளுமைத் திட்டங்கள்.



2002 மே 8]

**(அ) கணினி மற்றும் கணினி சார்ந்த சாதனங்கள் / மென்பொருள் கொள்முதல்**

16-2-1999 ஆம் நாளிட்ட நிதி (பொதுத் துறை நிறுவனங்கள்) துறையின் அரசு ஆணை (நிலை) எண் 58-ல் அரசுத்துறைகள் மற்றும் நிறுவனங்கள் தங்களுக்குத் தேவைப்படும் தகவல் தொழில் நுட்பம் தொடர்பான சாதனங்களை வாங்க எல்காட் நிறுவனத்தை விருப்பக் கொள்முதல் முகமையாக நியமித்துக் கொள்ளலாம் என அரசு ஆணையிட்டுள்ளது. இவ்வாண்டில் எல்காட் நிறுவனம் நில அளவை மற்றும் நிலவரித் திட்டத் துறை, வனத் துறை, காவல் துறை ஆகிய அரசுத் துறைகளுக்கும், தமிழ்நாடு மின் வாரியம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள் ஆகியவற்றிற்கும் தகவல் தொழில் நுட்பம் சம்பந்தமான பொருட்களைக் கொள்முதல் செய்தது.

**(ஆ) வளர்ச்சித் திட்டங்கள்**

**(1) தமிழ்நாட்டை உகந்த இடமாகத் தெரிவு செய்வதற்கான மேம்பாட்டுப் பணிகள்**

தமிழ்நாட்டின் தன்னக ஆற்றல்களான, போதுமான மின் வசதி, உயர் தரம் கொண்ட மனித ஆற்றல், நல்ல உட்கட்டமைப்பு போன்ற வசதிகள் இருப்பதை தமிழ்நாட்டிற்கு வருகை தரும் அயல் நாட்டு உயர் பதவியாளர்களுடன் கலந்துரையாடும்போதும், பல்வேறு மாநாடு மற்றும் கருத்தரங்குகளில் பங்கு கொள்ளும் போதும் எல்காட் நிறுவனம் சுட்டிக்காட்டிதகவல் தொழில் நுட்பத்தில் முதலீடு செய்ய தமிழ் நாட்டை உகந்த இடமாகத் தெரிவு செய்ய வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறது.

**(2) மாநாடுகள் மற்றும் பொருட்காட்சிகள் நடத்துதல்**

தமிழக அரசு எல்காட் நிறுவனம் மூலமாக இந்திய தொழில்கள் கூட்டமைப்புடன் இணைந்து தகவல் தொழில்நுட்பம், தகவல் தொடர்பு மற்றும் உயிர்த் தகவலியல் (Bio-Informatics) குறித்த "இணை 2001" என்ற பன்னாட்டு மாநாடு ஒன்றினை சென்னையில் நடத்தியது. "இணை 2002" மாநாடு செப்டம்பர் 2002-ல் சென்னையில் நடைபெறவுள்ளது. இதற்கான வேலைகள் விரைந்து நடந்து வருகின்றன. அவ்வாறே, கோயம்புத்தூரை தகவல் தொழில்நுட்பத்திற்கு உகந்த இடமாக முன்னிலைப் படுத்தி இந்திய தொழில்கள் கூட்டமைப்புடன் இணைந்து டிசம்பர் 2001-ல்

[2002 மே 8

கோயம்புத்தூர் I.T. Com என்ற வருடாந்திர நிகழ்ச்சி கோயம்புத்தூரில் நடத்தப்பட்டது. கோயம்புத்தூர் I.T. Com நவம்பர் 2002-ல் நடைபெறும்.

'நானோ கம்ப்யூட்டிங்' (Nano Computing) தொடர்பாக டிசம்பர் 2001-ல் தஞ்சாவூரில் நடத்தப்பட்ட பன்னாட்டு மாநாடு ஒன்றிற்கு எல்காட் நிறுவனம் ஆதரவளித்து பங்கேற்றது. இத்துறையில் இது முதல் மாநாடு என்பதோடு அமெரிக்கா, இங்கிலாந்து, இஸ்ரேல் உட்பட 7 நாடுகளின் பிரதிநிதிகள் இதில் பங்கு கொண்டனர்.

**(3) தொழில்-கல்வி நிறுவனங்களுக்கிடையே தொடர்பு ஏற்படுத்த வசதி அளித்தல்**

(i) மைய அரசின் டெக்னாலஜி இன்ஃபர்மேஷன் ஃபோர்காஸ்டிங் அசெஸ்மெண்ட் கவுன்சில் (Technology Information Forecasting Assessment Council) உயர்நிலைக் கணினி, இணைப்புகள், தொழில் வடிவமைப்பு போன்றவற்றிற்காக சென்டர் ஆப் ரெலவன்ஸ் அண்ட் எக்ஸலன்ஸ் மையம் (Centre of Relevance and Excellence) ஒன்றினை அமைக்க, தமிழ்நாட்டில் 5 கல்லூரிகளைத் தேர்ந்தெடுத்துள்ளது. இது குறித்து, கல்வி நிறுவனங்களில், கவுன்சில் மற்றும் மையத்தின் பல நடவடிக்கைகளுக்கு எல்காட் நிறுவனம் தொடர்பு வசதிகளை அளித்து வருகிறது.

(ii) மாநிலத்திலுள்ள பொறியியல் பட்டதாரிகளின் போட்டித் திறனை அதிகரித்து, நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஆங்கிலத்தில் அவர்களின் பேச்சு மற்றும் எழுதும் ஆற்றலை வெளிக் கொண்டுவருவதற்காக, "பொறியியல் பட்டதாரிகளின் வர்த்தகத் தொடர்புத் திறமையை அதிகரிக்கும்" நோக்கில் பிரிட்டிஷ் கவுன்சில் (British Council) மற்றும் எல்காட் நிறுவனம் இணைந்து சென்னையில் கருத்தரங்கு ஒன்றினை நடத்தின. இக்கருத்தரங்கில் 27 கல்லூரிகளிலிருந்து 40 பேராசிரியர்கள் கலந்து கொண்டனர். இம்முயற்சியை, 15 கல்லூரிகள் தங்கள் வளாகத்தில் செயல்படுத்தத் தொடங்கியுள்ளன.

(iii) மாநிலத்திலுள்ள பொறியியல் கல்லூரிகளின் பயிற்சியாளர்களுக்கு வளர் தொழில்நுட்பத்தில் பயிற்சியளிக்க, எம்.ஐ.டி. (Massachusetts Institute of Technology)-யிலிருந்து வருகை தரும் ஆசிரியர் குழுவின் முழு ஆதரவோடு கருத்தரங்குகள் மற்றும் சிறப்புச் சொற்பொழிவுகள் நடத்த எம்ஐடி. மீடியா லேப் (MIT Media lab) உடன் எல்காட் நிறுவனம் விரைவில் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ளும்.



2002 மே 8]

(iv) மைய அரசின் தகவல் தொழில்நுட்ப அமைச்சரகமும் அமெரிக்காவின் மசாசூசெட்ஸ் இன்ஸ்டியூட் ஆஃப் டெக்னாலஜியும் (MIT) இணைந்து கூட்டு முயற்சியில் அமைந்துள்ள மீடியா லேப் ஏசியா (Media Lab Asia) என்ற அமைப்பு, சென்னையில் வட்டார சோதனைக் கூடம் ஒன்றினை அமைத்து வருகிறது. சென்னையிலுள்ள இந்திய தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் மூலம் பன்னாட்டு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அறிவுப் பூங்கா ஒன்று சென்னையில் அமைக்கப்படும். இப்பூங்காவினை அமைக்க எல்காட் நிறுவனம் உதவி புரியும்.

**(4) மின்னணு வசதி கிடைப்பதில் உள்ள இடைவெளியைக் குறைத்தல்**

இந்திய ஊரகப் பகுதிகளில் இணையவசதி அளித்தல் (SARI-Sustainable Access in Rural India) என்ற திட்டத்தின்கீழ் வயர்லஸ் தொழில் நுட்பத் திட்டம் ஒன்று மதுரை மாவட்டம், மேலூர் வட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஊரகப்பகுதிகளில் வருமானத்தைப் பெருக்கும் விதத்தில் இணைய வசதியுள்ள ஒரு கணினியை அமைத்துத் தருதல் SARI திட்டத்தின் நோக்கமாகும்.

SARI திட்டம் இவ்வாண்டு பத்து மாவட்டங்களிலும், வரும் ஆண்டுகளில் மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் பரவலாகச் செயல்படுத்தப்படும்.

இத்திட்டத்தை மாநில அளவில் எல்காட் நிறுவனமும் மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியாளர்களும் செயல்படுத்துவார்கள்.

**(5) தகவல் தொழில்நுட்ப சுற்று வட்டார மேம்பாடு**

ஆளுநர் உரையில் அறிவித்தவாறு, பழைய மகாபலிபுரம் சாலையில் திருப்போரூர் தகவல் தொழில்நுட்ப சுற்று வட்டாரத்திற்கு உலகத்தரத்தில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் அளிக்கப்படும். அறிவுசார் தொழில்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யும் நோக்கத்தை அறிவுசார் தொழில் நகரியங்கள் கொண்டிருக்கும். இந்திய தொழில்கள் கூட்டமைப்புடன் (Confederation of Indian Industry) பொது தொழில்கள் கூட்டமைப்புடன் அறிவுசார் தொழில் நகரியங்கள் மற்றும் தனியார் துறை பங்கேற்புடன் அறிவுசார் தொழில் நகரியங்கள் அமைக்கப்படும்.

**(6) இரண்டாம் நிலை நகரங்களை மேம்படுத்துதல்**

கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இரண்டாம் நிலை நகரங்களில் தகவல் தொழில் நுட்ப முதலீடுகளை

ஈர்ப்பதற்காக, உலகத்தரம் வாய்ந்த அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கு, தனி அமைப்புகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. தகவல் தொழில்நுட்பத்தில் இந்நகரங்களை முக்கியமான இடங்களாக முன்னிலைப்படுத்தி எல்காட் நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் அனைத்துக் கட்டமைப்பு வசதிகளையும் ஏற்படுத்தித் தர அரசு முடிவெடுத்துள்ளது. இந்த அனைத்து முயற்சிகளும் பொறியாளர்கள் மட்டுமல்லாது இதர படித்த இளைஞர்களுக்கும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த பணிகளில் வேலைவாய்ப்பினை அதிகரிக்கும் நோக்கத்தைக் கொண்டதாக இருக்கும்.

**(7) தகவல் தொழில் நுட்பப் பூங்காக்களை மேம்படுத்துதல்**

சென்னையில் டைடல் (TIDEL) மற்றும் எல்நெட் மென்பொருள் நகரம் (Elnet City), கோயம்புத்தூரில் டெக்ஸ்சிடி (Texcity) மென்பொருள் பூங்கா போன்ற அநேக மென்பொருள் பூங்காக்களை எல்காட் நிறுவனம் அமைக்க உதவியது. EDS, காக்னிசன்ட் டெக்னாலஜி சொலுஷன்ஸ் (Cognizant Technology Solutions) வெரிசோன் (Verizon), கம்ப்யூட்டர் அஸோஸியேட்ஸ் (Computer Associates) போன்ற உலகத்தரம் கொண்ட நிறுவனங்கள் இப்பூங்காக்களில் இடம் பெற்றுள்ளன.

**(இ) தகவல் தொடர்புத் திட்டங்கள்**

**(1) வயர்லெஸ் அமைப்புத் திட்டங்கள்**

வயர்லெஸ் பொருட்கள் உற்பத்திக்காக, பெருங்குடியில் எல்காட் தகவல் தொடர்புப் பிரிவு 1984-ல் ஆரம்பிக்கப்பட்டது. இப்பிரிவு, கிரிஸ்டல் கன்ட்ரோல்ட் டெக்னாலஜி (Crystal Controlled Technology) மற்றும் சின்தசைசர் டெக்னாலஜி (Synthesizer Technology) வயர்லெஸ் (Wireless) சாதனங்களைத் தயாரித்து இந்தியா முழுவதிலுமுள்ள பல்வேறு காவல் துறைகளுக்கு வழங்கி வருகிறது. கம்பியில்லா இணைப்புகளுக்கான ஒருங்கிணைந்த திட்டத்தைச் செயல்படுத்துவதில் இப்பிரிவு அனுபவம் பெற்றுள்ளது.

வருவாய்த் துறைக்காக, தமிழ்நாட்டில் 12 கடற்கரை மாவட்டங்களில் கேடு விளைவு நிவாரணம் மற்றும் அவசர கால மீட்புதவி போன்றவற்றிற்குக் கம்பியில்லா இணைப்பு ஏற்படுத்தித்தர எல்காட் நிறுவனம் திட்டம் ஒன்றைச் செயல்படுத்தி வருகிறது.





2001-2002ஆம் ஆண்டில் காவல், வனம் போன்ற பல்வேறு அரசுத் துறைகளுக்கு கம்பியில்லாச் சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**2. இரண்டாம் நிலை நகரங்களுக்கு இணைப்பு வசதி**

கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி ஆகிய இரண்டாம் நிலை நகரங்களில் உலகத்தரம் வாய்ந்த செயற்கைக்கோள் அடிப்படையிலான இணைப்பு வசதிகளை அளிக்க, சென்னையில் உள்ள மைய அரசின் நிறுவனமான இந்திய மென்பொருள் தொழில்நுட்பப் பூங்காவுடன் (Software Technology Parks of India) எல்காட் நிறுவனம் இணைந்து பணியாற்றி வருகிறது. இந்த இணைப்பு, இந்த நகரங்களுக்கு அளிக்கப்பட்டபின், தகவல் தொழில் நுட்ப வளர்ச்சி, மாநில முழுவதும் பரவலாகவும், சமச்சீராகவும் இருக்கும்.

**(ஈ) மின்னணு ஆளுமைத் திட்டங்கள்**

பத்திரப்பதிவு, வருவாய், கல்வி போன்ற முக்கிய பெரிய துறைகளில், மின்னணு ஆளுமை நடவடிக்கைகளில் எல்காட் நிறுவனம் ஈடுபட்டுள்ளது. மக்களுக்கு மின்னணு சேவைப் பணிகள் அளிக்கப்படவுள்ளன. இதனால் தமிழ்நாடு மின் வாரியம், மாநகராட்சி மற்றும் குடிநீர்வாரியம் ஆகியவற்றிற்குச் செலுத்த வேண்டிய தொகையை மின்னணு சேவை மையங்களில் மக்கள் எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் செலுத்தலாம்.

**(1) அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கணினிக் கல்வி**

மாநிலம் முழுவதிலும் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகளில் 11-வது மற்றும் 12-வது வகுப்புகளுக்கு கணினிக் கல்வி அளிப்பதற்காக பொது-தனியார் கூட்டுச் செயல் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தைச் செயல்படுத்தும் நிறுவனமாக, அரசு, எல்காட் நிறுவனத்தை நியமித்தது. இத்திட்டம் குத்தகை மற்றும் ஒப்பந்த அடிப்படையில் ஐந்தாண்டு காலத்திற்கு இருக்கும். இத்திட்டம் இரண்டு கட்டமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. முதல் கட்டத்தில் 666 பள்ளிகளும், இரண்டாம் கட்டத்தில் 531 பள்ளிகளும் இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன. இந்தத் திட்டத்தில் சுமார் ஒரு இலட்சம் மாணவர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். தேசிய அளவில் இத்திட்டம் ஒரு முன்மாதிரித் திட்டமாக விளங்குகிறது.

[2002 மே 8

**(2) கலை, அறிவியல், சட்டம் மற்றும் மருத்துவக் கல்லூரிகளில் கணினிக் கல்வி**

கல்லூரி மாணவர்களுக்குக் கணினி அறிவு மற்றும் இணையத் திறமை அளிக்க, மாநில முழுவதிலுமுள்ள அனைத்து அரசு கலை, அறிவியல், சட்டம் மற்றும் மருத்துவக் கல்லூரிகளில் பொது-தனியார் கூட்டுச் செயல் முறைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தைச் செயலாக்குவதற்கு எல்காட் நிறுவனம் ஒருங்கிணைப்பு நிறுவனமாக நியமிக்கப்பட்டுள்ளது.

**(i) கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்**

60 கல்லூரிகள் இத்திட்டத்திற்குள் கொண்டுவரப்பட்டுள்ளன. சுமார் 28,000 மாணவர்கள் இத்திட்டத்தின்கீழ் பயிற்சி பெற்று வருகின்றனர்.

**(ii) மருத்துவ மற்றும் பல் மருத்துவக் கல்லூரிகள்**

11 அரசு மருத்துவக் கல்லூரிகளும், ஓர் அரசு பல் மருத்துவக் கல்லூரியும் இத்திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. சுமார் 1500 மாணவர்கள் இத்திட்டத்தின்கீழ் பயிற்சி பெற்று வருகின்றனர்.

**(iii) சட்டக் கல்லூரிகள்**

5 அரசு சட்டக் கல்லூரிகள் இத்திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டன. சுமார் 400 மாணவர்கள் இத்திட்டத்தில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

**(3) ஓட்டுநருக்கு மென் தகடு, ஓட்டுநர் உரிம அட்டைகள் வழங்கும் திட்டம்**

1996ஆம் ஆண்டு முதல், 82 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள்/ பிரிவு அலுவலகங்கள் அனைத்திலும் மென் தகடு உரிம அட்டைகளை எல்காட் நிறுவனம் வழங்கி வருகிறது. இதற்காக, அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களிலும் கணினி சாதனம், தேவைப்படும் உபகரணங்கள், பணியாளர்கள் போன்ற கட்டமைப்பு வசதிகளை எல்காட் நிறுவனம் உருவாக்கியுள்ளது. இதுவரை, தமிழ்நாட்டில் 45 இலட்சம் மென் தகடு உரிம அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

**(4) போக்குவரத்துத் துறையைக் கணினிமயமாக்கல்**

போக்குவரத்துத் துறையைக் கணினிமயமாக்க அத்துறை நடவடிக்கை எடுக்கத் தொடங்கியுள்ளது. இது இரண்டு கட்டங்களாகச்



2002 மே 8]

செயல்படுத்தப்படும். முதல் கட்ட நடவடிக்கை முடிவுறும் தருவாயிலுள்ளது. கணினிமயமாக்கும் இரண்டாம் கட்டத்திற்கு எல்காட் நிறுவனம் செயல் அமைப்பு நிறுவனமாக உள்ளது.

**(5) தலைமைச் செயலகத்தில் இணையத் தொடர்பு வசதி**

தேசியத் தகவல் மையத்துடன் (National Informatics Centre) கலந்தாலோசித்து தலைமைச் செயலகத்தில் வினாடி ஒன்றுக்கு 2 மெகாபைட் திறனுடன் கூடிய இணையத் தொடர்பினை எல்காட் நிறுவனம் நிறுவியுள்ளது.

**(6) பத்திரப் பதிவுத் துறையைக் கணினிமயமாக்கல்—ஸ்டார் திட்டம்**

350 சார் பதிவாளர் அலுவலகங்கள்/ மாவட்டப் பதிவாளர் அலுவலகங்கள் படிப்படியாக கணினி மயமாக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டம் ஐந்தாண்டுகால குத்தகை மற்றும் ஒப்பந்த அடிப்படையில் எல்காட் நிறுவனத்தால் நிர்வகிக்கப்படும். மின்னணு ஆளுமை முயற்சிகளில் வெற்றிகரமான திட்டங்களில் ஒன்றாக "ஸ்டார் திட்டம்" மைய அரசினால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

**(7) பிற்பட்ட, மிகவும் பிற்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பினருக்கு கணினிப் பயிற்சி**

எல்காட் நிறுவனம் செயல் அமைப்பாளராக இருந்து, ஓராண்டு காலத்தில் 5000 பிற்பட்ட, மிகவும் பிற்பட்ட மற்றும் சீர்மரபு வகுப்பினர் மரணவர்களுக்கு பயிற்சி அளித்துள்ளது. மேலும் வரும் ஆண்டு 2000 மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கப்படும்.

**(8) மாநிலத் தலைமையிடத்திற்கும் மாவட்டத் தலைமையிடத்திற்கும் இடையே ஒளிக்காட்சி மூலம் கருத்தாய்வு செய்யும் வசதி அளித்தல்**

மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம் / தலைமைச் செயலகம் ஆகியவற்றில் இருப்பிடத்திலேயே ஒளிக்காட்சிக் கருத்தாய்வு சாதனம் மூலம் தகவல்கள் பரிமாறிக்கொள்ளும் வசதிகளும் தலைமைச் செயலகத்தில் ஸ்டுடியோ வகை ஒளிக்காட்சிக் கருத்தாய்வு சாதன வசதியும் உருவாக்கப்பட்டுள்ளன.

**(9) வருவாய்த் துறையை கணினி மயமாக்கல்**

**(i) வட்ட அலுவலகங்களில் கணினி தொடு திரை சாதனம் (Touch Screen Kiosks)**

அனைத்து மாவட்டங்களிலுமுள்ள நில அளவை மற்றும் நிலவரித் திட்டத் துறைக்காக 30 மாதிரி வட்ட அலுவலங்களில் கணினி தொடு திரை சாதனத்தை எல்காட் நிறுவனம் நிறுவியுள்ளது. இந்த சாதனத்தில் நிலப் பட்டா, பிறப்பு-இறப்பு விவரங்கள், நிலத்திற்கான வழிகாட்டு மதிப்பு போன்றவற்றை மக்கள் பார்வையிட்டு சான்றிதழ்கள்/ விவரங்களின் அச்சுப்பிரதிகளைப் பெறலாம். இச்சாதனத்தை எஞ்சியுள்ள அனைத்து வட்டங்களிலும் நிறுவுவது குறித்து அரசின் முனைப்பான பரிசீலனையில் உள்ளது.

**(ii) வட்ட அலுவலகங்களைக் கணினிமயமாக்கல்**

மாநிலம் முழுவதிலும் நிலப் பதிவுருவைக் கணினி மயமாக்குவதற்காக 206 வட்ட அலுவலகங்களுக்கும் தமிழ் மென்பொருள் உட்பட கணினி மற்றும் கணினி சார்ந்த சாதனங்கள் மற்றும் மென்பொருளை எல்காட் நிறுவனம் வழங்கி நிறுவியுள்ளது.

**(iii) உலக வழக்கிலுள்ள திட்டம் (Global Positioning System Project)**

செங்கற்பட்டு வட்டத்திலுள்ள நில அளவை மற்றும் நிலவரித் திட்டத் துறையின் நில அளவைக்காக, உலக வழக்கிலுள்ள திட்டத்தைப் பயன்படுத்தி முன் மாதிரித் திட்டம் ஒன்றை எல்காட் நிறுவனம் செயல்படுத்தி வருகிறது.

**(10) தலைமைச் செயலகத்தில் ஒருங்கிணைந்த பணிகள் டிஜிடல் இணைப்பு (Integrated Services Digital Network) மற்றும் டிஜிடல் இணைப்பகம் (Digital Exchange)**

டிஜிடல் தொலைபேசி வசதியுடன் அமைச்சர்கள் மற்றும் செயலர்களின் உள் தகவல் பரிமாற்றத்திற்கு 100 வழித்தட ISDN இணைப்பகத்தை எல்காட் நிறுவனம் நிறுவியுள்ளது. அனைத்துத் துறைகளும் தலைமைச் செயலகத்துடன் தகவல் பரிமாறிக் கொள்ளும் வசதிக்காக 1,000 வழித்தட டிஜிடல் இணைப்பகம் நிறுவப்பட்டுள்ளது.

**(11) வேளாண் பொருள் விற்பனைத் துறையைக் கணினிமயமாக்கல்**

வேளாண் பொருள் விற்பனைத் துறைக்காக, 9 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் மின்னணு விளம்பரப்பலகையுடன் கூடிய கணினி அமைப்பை நிறுவும் பணியை எல்காட் நிறுவனம்





ஏற்றுக்கொண்டுள்ளது. இதன் மூலம் விவசாயிகள் அவர்களது உற்பத்திப் பொருள்களுக்கு நல்ல விலையைப் பெறமுடியும்.

**(12) வலைத்தள வளர்ச்சி (Web Development) மற்றும் மென்பொருள் திட்டங்கள்**

சென்னையிலுள்ள தமிழ்நாடு அரசு அருங்காட்சியகத்துக்காக உலகளவில் பாராட்டுப் பெற்ற இணையத்தளம், சேலம், "சேகோசர்வ்" (Sago Serve)-க்காக இணையச் சந்தை போன்றவற்றிற்காக வலைத்தளத் திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது.

**தமிழ் இணையப் பல்கலைக்கழகம்**

உலகம் தழுவி வாழும் தமிழ் மக்கட்கும், தமிழில் ஈடுபாடு உள்ள மற்றையோர்க்கும், தமிழ் மொழியைக் கற்கவும், தமிழர் வரலாறு, கலை, இலக்கியம், பண்பாடு பற்றி அறிந்துகொள்ளவும் வேண்டிய வாய்ப்புகளை இணையம் வழியாக அளிக்கும் நோக்கத்தோடு, அரசின் நிதியுதவியுடன், தமிழ் இணையப் பல்கலைக்கழகம் ஒரு சங்கமாக 2000 ஆம் ஆண்டு மே திங்களில் பதிவு செய்யப்பட்டது.

**நோக்கம்**

தமிழ் இணையப் பல்கலைக்கழகம் பார் தழுவி வாழும் தமிழர்கட்கும் தமிழ் மொழி கற்க ஈடுபாடுள்ள மற்றையோர்க்கும், தமிழ் வரலாறு, கலை, இலக்கியம் மற்றும் பண்பாடு பற்றி அறிந்து கொள்ள விழைவோர்க்கும் வேண்டிய வாய்ப்பு வசதிகளை உருவாக்கி இணையம் வழியாக அளிக்கும் நோக்கத்தைக் கொண்டுள்ளது.

**திட்டப் பணிகள்**

(i) உலகெங்கிலுமுள்ள தமிழர்கள் மற்றும் தமிழில் ஈடுபாடுடையோர்க்கு தமிழ் மொழி, இலக்கியம் மற்றும் பண்பாடு குறித்த கல்விச் சாதனங்களை உருவாக்கி இணையம் மூலமாக அளித்தல்.

(ii) உலகின் பல நாடுகளில் வாழும் தமிழ்ச் சமுதாயத்தின் தேவைக்கேற்ப பாடத் திட்டங்களை உருவாக்கி அளித்தல் மற்றும் அவர்கள் தங்கள் பாரம்பரியத்தின் தொடர்போடு வாழத் துணை புரிதல்.

(iii) உலகு தழுவி பல நாடுகளில் வாழும் தமிழர்கள் உருவாக்கும் தமிழ்க் கல்வி அறிவுச் சாதனங்களைத் தொகுத்து அவற்றைப் பரவலாக்கும் முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளுதல்.

[2002 மே 8

(iv)தமிழ் மொழி, இலக்கியம், பண்பாடு போன்றவற்றைத் தெரிந்துகொள்ள அல்லது கற்க விரும்புபவருக்கு பாடத்திட்டங்களை வகுத்து இப்பாடங்களைக் கற்க வாய்ப்பளித்தல்; அவர்கள் கற்ற பாடங்களின் தகுதிக்கேற்ப, வரையறுக்கப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்தோருக்கு, தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் மூலமாக சான்றிதழ்/ பட்டயம் / பட்டம் வழங்க ஏற்பாடு செய்தல்.

(v) அறிவியல் மற்றும் பொறியியல் தமிழ்ப் பாடங்களை உலகத்தின் பல்வேறு பகுதிகளிலுள்ள தமிழர்களுக்கு தமிழ்க் கல்வி இணையம் மூலம் வழங்குதல்.

**கல்வித் திட்டங்கள்**

தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் கல்வித் திட்டத்தின்கீழ், அரிச்சுவடி முதல் ஆராய்ச்சி வரையிலான தமிழ்க் கல்வி, இணையம் வழியாக வழங்கப்படுகிறது. இதில் சுற்றுலாப் பயணிகளுக்குப் பயன்படும் தமிழ் உட்பட தமிழ்ப் பண்பாடு மற்றும் கலைக்கான இதர பாடப் பயிற்சிகளும் இடம் பெற்றுள்ளன.

**(i) தொடக்க நிலையில் உள்ளோர்க்கான சான்றிதழ்க் கல்வி**

தொடக்க நிலையில் உள்ளோர் தமிழ் அரிச்சுவடி முதல் கற்பதற்கான ஒரு திட்டம் சான்றிதழ் கல்வித் திட்டமாகும். இத்திட்டத்தின்கீழ், பள்ளிகளில் முதல் வகுப்பு முதல் ஆறாம் வகுப்பு வரை கற்பிக்கப்படும். தமிழ் மொழிப் பாடத்திறன்கள், அடிப்படை நிலை, இடைநிலை, மேல்நிலை என்ற மூன்று நிலைகளில் வழங்கப்படுகின்றன. இவற்றில் மழலைப் பாடல்கள், அறநெறிக் கதைகள் போன்றவையும் உள்ளடங்கும்.

பாடங்கள் அனைத்தும், பல்லூடக (Multimedia) வசதிகளைப் பயன்படுத்தி ஒலி, ஒளி, வரி, படங்கள், உரை போன்ற வடிவங்களில் தாமாகவே கற்கத் தூண்டும் வகையில் விறுவிறுப்புடன் கூடியவையாக வடிவமைக்கப்பட்டுள்ளன. கற்ற நிலை அறிந்துகொள்ள பல தன்மதிப்பீட்டுச் சோதனைகளும் கொடுக்கப்பட்டுள்ளன.

**(ii) உயர்நிலைக் கல்வித் திட்டங்கள்**

தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் உயர் கல்வித் திட்டத்தின்கீழ், தமிழ் மொழி, பண்பாடு, இலக்கியம், வரலாறு, கலை போன்றவை பற்றிய



2002 மே 8]

பாடங்கள் அறிமுக நிலை முதல் ஆய்வு நிலை வரை வழங்கப்படுகின்றன. இவை, தமிழியல் பட்டயம், தமிழியல் மேற்பட்டயம், இளநிலை (தமிழியல்), முதுநிலை (தமிழியல்) மற்றும் முனைவர் (Ph.D) வரையிலான தமிழியல் ஆய்வு என்ற பெயர்களில் வழங்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இந்தப் பட்டயங்களையும் பட்டங்களையும் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் வழங்கும்.

**(iii) பட்ட மேற்படிப்புக்கான திட்டம் கல்வி மன்றத்தின் பரிசீலனையில் உள்ளது**

**தேர்வு முறை**

கீழ்க்காணும் இருவகைகளில் தேர்வுகள் நடத்தத் திட்டமிடப் பட்டுள்ளன:—

(1) இணைய வழித் தேர்வு

(2) நேர்முகத் தேர்வு

இணைய வழித் தேர்வு, பாட ஆசிரியர்களால் இணையம் வழியாக நடத்தப்படும். மாணவர்கள், அவர்களுக்கு அருகில் உள்ள தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் கல்வி மையங்களில் இணையம் மூலமாகத் தேர்வு எழுதலாம். இணையம் மூலமாக நடத்த இயலாத பாடப்பகுதிகளுக்கு தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் உள்ளூர் தொடர்புக் கல்வி மையங்களில், அப்பல்கலைக்கழகத்தால் நியமிக்கப்பட்ட தேர்வாளர்களால் நேர்முகத் தேர்வு நடத்தப்படும்.

**மின் நூலகம்**

தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் மின் நூலகம், தமிழ் இணையப் பல்கலைக்கழக இணையப் பாடத்திட்டத்தில் சேர்ந்து பயில்வோர் மற்றும் உலகு தழுவி வாழும் தமிழர்கள் அனைவரது பயன்பாட்டிற்காகவும் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த மின் நூலகத்தில், இலக்கிய நூல்கள், அகராதிகள் மற்றும் பிற பார்வைக் கூறுகள் ஆகிய மூன்று பிரிவுகள் உள்ளன.

[2002 மே 8

நூலகப் பிரிவில், சங்க காலம் முதற்கொண்டு இன்று வரை படைக்கப்பட்டுள்ள இலக்கிய நூல்கள் அனைத்தும் கீழ்க்காணும் வகைகளில் இடம்பெறுகின்றன:—

(i) சங்கம், உரையுடன் கூடிய சங்கம் மறுவிய கால இலக்கிய நூல்கள்.

(ii) ஏற்றுக்கொள்ளத்தக்க மொழி பெயர்ப்பு நூல்கள் கொடுக்கப்படுகின்றன.

(iii) தமிழ் இலக்கிய நூல்கள் ரோமன் எழுத்து வடிவிலும் கொடுக்கப்படுகின்றன.

நூல்களின் பாடு பொருள், தேடு பொருள் ஆகியவற்றுக்கான விரிவான வசதிகளை (Subject Indexing and Search facilities) வழங்குவது இம்மின் நூலகத்தின் தனிச் சிறப்பாகும்.

அகராதிப் பிரிவில், தமிழ்-தமிழ், தமிழ்-பிறமொழிகள், பிறமொழிகள்-தமிழ் அகராதிகள், நிகண்டுகள் போன்ற பலதரப்பட்ட அகராதிகள் இடம் பெற்றுள்ளன. தற்போது, கீழ்க்காணும் அகராதிகள் இணையத் தளத்தில் இடம் பெற்றுள்ளன:—

(i) சென்னைப் பல்கலைக்கழகத்தின் பேரகராதி

(ii) சென்னைப் பல்கலைக்கழகத்தின் ஆங்கிலம்-தமிழ் அகராதி

(iii) பழனியப்பா சகோதரர்களின் பால்ஸ் (PALS) என்னும் ஆங்கிலம்-தமிழ் அகராதி

(iv) மு. சண்முகம் பிள்ளை அவர்களின் தமிழ்-தமிழ் அகராதி.

பிற பார்வைக் கூறுகள் பகுதியில் பின்வருபவை இடம் பெறுகின்றன:

(i) கலைச் சொற்கள்

(ii) தமிழ்ப் பண்பாட்டு நிகழ்வுகளின் ஒளிப்படக் காட்சிகள்

(iii) பிற தமிழ் இணையத் தளங்களுக்கு இணைப்பு

தொழில்நுட்பக் கலைச்சொல் பிரிவில் கலை, அறிவியல், பொறியியல், மருத்துவம், சட்டம், வேளாண்மை, கால் நடை, தகவல் தொழில் நுட்பம் போன்ற பல்வேறு துறைகளின் தமிழ் கலைச்சொற்கள் இடம்பெறுகின்றன. தற்போது, தேடு வசதியுடன் 2 இலட்சம் கலைச்சொற்கள் வரை வலைத்தளத்தில் இடப்பட்டுள்ளன.



2002 மே 8]

**தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் கல்வித் தொடர்பு மையங்களை அமைத்தல்**

தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் கல்வித் திட்டங்களைச் சிறந்த முறையில் நிர்வகிக்க, உலகம் முழுவதும் அதன் கல்வித் தொடர்பு மையங்களை அமைத்திட வேண்டும். இப்பணி, தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் பன்னாட்டு ஆலோசகக் குழு உறுப்பினர்களால் ஒருங்கிணைக்கப்பட்டு வருகிறது. தென் ஆப்பிரிக்கா நாட்டில் ஜோகன்ஸ்பர்க், (Johanesburg) டர்பன் (Durban), போர்ட் எலிசபெத் (Port Elizabeth), கேப் டவுன் (Cape Town) ஆகிய நான்கு இடங்களில் தமிழ் இணையப் பல்கலைக்கழக கல்வித் தொடர்பு மையங்களை அமைக்க தென் ஆப்பிரிக்கா தமிழ் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது. மொரீஷியஸில் தமிழ் இணையப் பல்கலைக்கழக கல்வித் தொடர்பு மையம் ஒன்றினை ஏற்படுத்த அப்பல்கலைக்கழகத்துடன் மொரீஷியஸ் தமிழ்ப் பண்பாட்டு மையம் ஓர் உடன்பாட்டுக் குறிப்பில் கையெழுத்திட்டுள்ளது.

**தமிழில் தகவல் தொழில் நுட்பப் பணிகள்**

தமிழ்நாடு மின்னணு நிறுவனம் ஆற்றி வந்த—தமிழில் தகவல் தொழில் நுட்பப் பணிகள் தமிழ் இணையப் பல்கலைக்கழகத்திற்கு செப்டம்பர் 2001-ல் மாற்றப்பட்டுள்ளன. தமிழில் தகவல் தொழில் நுட்பப் பணிகள் பின்வருமாறு:—

**(i) தமிழ் மென்பொருள் வளர்ச்சி நிதியை மேலாண்மை செய்தல்**

தமிழ் மென்பொருள் வளர்ச்சி நிதி மூலம் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ள ஐந்து திட்டங்கள் முடிவடையும் தருவாயில் உள்ளன. இரண்டு புதிய திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்கும் கருத்து பரிசீலனையில் உள்ளது.

**(ii) இணையத்தில் தமிழைப் பயன்படுத்துவது குறித்த ஆய்வு**

அண்ணா பல்கலைக்கழகத்தின் கணினி அறிவியல் மற்றும் பொறியியல் துறை, தமிழ் தேடு விசை (Tamil Search Engine) ஒன்றினை வடிவமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. இதற்கு, இணையத்தில் தமிழைப் பயன்படுத்துவது ஆய்வு நிதியிலிருந்து நிதி வழங்கப்பட்டுள்ளது.

[2002 மே 8

**(iii) தமிழ் மென்பொருட்களுக்குச் சான்று தருதல்**

தொடக்கத்தில் கணினித் தமிழ்ச் சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்த தமிழ் மென்பொருட்களுக்கான சான்று வழங்கும் பொறுப்பு, செப்டம்பர் 2001-ல் தமிழ் இணையப் பல்கலைக்கழகத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. தமிழ் எழுத்து உருவம், சொற்றொடர் அமைப்பு, மாற்றியமைத்தல், விசைப்பலகை, அச்சு இயந்திரங்கள் போன்றவற்றை மேம்படுத்தியுள்ள விற்பனையாளர்களின் பல தமிழ் மென்பொருட்கள் TAM/TAB (Tamil Monolingual / Tamil Bilingual) தரத்திற்கு ஈடாக உள்ளதா என சோதிக்கப்பட்டு சான்றளிக்கப்பட்டுள்ளன.



2002 மே 8]

# இணைப்பு IV

*(398 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

**மானியக் கோரிக்கை எண் 48**

**ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும் கொள்கை விளக்கக் குறிப்பு, 2002-2003**

1. இந்த மானியத்தின்கீழ் முதலாவது முக்கிய செலவினம், அரசுப் பணியாளர்கள் மற்றும் அரசு மானிய உதவி பெறுகின்ற கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் பிற பணியாளர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியப் பயன்கள் அளிப்பது தொடர்பானதாகும். இந்த மானியக் கோரிக்கையில் விடுதலைப் போராட்ட வீரர்கள் மற்றும் முன்னாள் இந்திய தேசிய இராணுவப் படை பணியாளர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் பிற பயன்கள் அளிப்பதும் அடங்கும். இந்த மாநிலத்தில் 31-12-2001 ஆம் நாள் நிலவரப்படி 4,59,874 பேர் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுகின்றனர்.

இம்மாநிலத்தில் உள்ள ஓய்வூதியம் பெறுபவர்கள், குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் குறித்த விவரம் வருமாறு:—

| | |
|---|---|
| 1. மாநில அரசு ஓய்வூதியம் பெறுபவர்கள் | 2,23,048 |
| 2. ஓய்வூதியம் பெறும் ஆசிரியர்கள் | 59,023 |
| 3. அரசுப் பணியாளர்கள் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் | 1,04,150 |
| 4. ஆசிரியர் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள். | 27,087 |
| 5. ஏனைய வகையில் ஓய்வூதியம் பெறுபவர்கள் | 46,566 |
| மொத்தம் | 4,59,874 |

**2. இக்கோரிக்கையில் கீழ்க்காணும் பெருந்தலைப்புகள் அடங்கியுள்ளன:**

| | (ரூபாய்) |
|---|---|
| 2071. ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும் | 31,75,50,06,000 |

[2002 மே 8

2235. சமூகப் பாதுகாப்பும் நலனும்—

| | | |
|---|---|---|
| 60. | ஏனைய சமூகப் பாதுகாப்பு, நலத்திட்டங்கள் | 15,86,84,000 |
| | **மொத்தம்** | **31,91,36,90,000** |

**அரசுப் பணியாளர்கள் மற்றும் அரசு மானிய உதவி பெறுகின்ற கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் பிற பணியாளர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் பிற பயன்கள்.**

3. ஓய்வு கால நன்மைகளைப் பொறுத்தமட்டில் மத்திய அரசு, அதன் பணியாளர்களுக்குப் பின்பற்றும் அதே நடைமுறைகளையே மாநில அரசும் பின்பற்றுகிறது. ஓய்வூதியம், ஆற்றிய பணிக்கான பணிக் கொடை, இறப்பு பணிக்கொடை ஆகியவற்றின் கணக்கிடும் நடைமுறை மற்றும் பணிக்கொடைக்கான உச்ச வரம்பை உயர்த்துதல் போன்ற பல்வேறு ஓய்வுகால நன்மைகளை மாநில அரசு மத்திய அரசைப் பின்பற்றி திருத்தியமைத்துள்ளது.

**4. ஓய்வூதியம்**

அரசுப் பணியாளர் ஒருவர், குறைந்தது 10 ஆண்டுகள் தகுதிப் பணிபுரிந்திருந்தால், அவர் ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர். ஓய்வு பெறும்பொழுது கடைசியாக பெற்ற மாத ஊதியத்தில் 50 விழுக்காடு அல்லது ஓய்வு பெற்ற நாளுக்கு முன்னர் கடைசி 10 மாத கால அளவில் பெற்ற சராசரி ஊதியத்தில் 50 விழுக்காடு இதில் எது அதிகமோ அந்தத் தொகையே ஓய்வூதியமாக நிர்ணயிக்கப்படுகிறது. உயரளவாக 30 ஆண்டுகள் தகுதிப்பணி புரிந்தவர்களுக்கு முழு ஓய்வூதியம் அனுமதிக்கப்படுகிறது. 30 ஆண்டுகளுக்குக் குறைவான தகுதிப்பணி உள்ளவர்களுக்கு விகிதாச்சார அடிப்படையில் ஓய்வூதியம் வழங்கப்படும். மத்திய அரசு ஓய்வூதியர்களுக்கு/குடும்ப ஓய்வூதியர்களுக்கு வழங்கியதற்கு இணையாக மாநில அரசு 1-1-1996 முதல் ஓய்வூதியத்தை /குடும்ப ஓய்வூதியத்தை மாற்றி ஆணையிட்டுள்ளது. குறைந்த அளவு ஓய்வூதியத்தை மாதமொன்றிற்கு ரூபாய் 375-லிருந்து ரூபாய் 1275-ஆக 1-1-1996 முதல் உயர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது.



2002 மே 8]

**5. பணிக்கொடை**

**(i) ஆற்றிய பணிக்கான பணிக்கொடை**

பத்து ஆண்டுகளுக்குக் குறைவாக தகுதிப் பணிபுரிந்தவர்களுக்கு, ஆற்றிய பணிக்கான பணிக்கொடை அனுமதிக்கப்படுகிறது. முடிவு பெற்ற ஒவ்வோர் ஆறுமாதப் பணிக்கும் 1/2 மாத ஊதியம் என்ற ஒரே சீரான வீதத்தில் ஆற்றிய பணிக்கான பணிக்கொடை கணக்கிடப்படுகிறது. இது ஆற்றிய பணிக்கான ஒரே நேரத்தில் வழங்குகிற ஒட்டுமொத்தத் தொகையாகும். அனுமதிக்கத்தக்க ஓய்வுகாலப் பணிக்கொடையுடன் கூடுதலாக இத்தொகை ஆற்றிய பணிக்காக வழங்கப்படுகிறது.

**(ii) இறப்புப் பணிக்கொடை**

பணியில் இருக்கும்போது மரணமடைவோர் நேர்வில் பின்வரும் வீதங்களில் இறப்புப் பணிக்கொடை அனுமதிக்கப்படுகிறது:—

| பணிக்காலம் (1) | பணிக்கொடையின் அளவு (2) |
|---|---|
| 1. ஓராண்டுக்குக் குறைவாக | இரு மடங்கு மாத ஊதியம் |
| 2. ஓராண்டு அல்லது அதற்கு அதிகமாக, ஆனால் ஐந்தாண்டுகளுக்குக் குறைவாக | ஆறு மடங்கு மாத ஊதியம் |
| 3. ஐந்தாண்டுகள் அல்லது அதற்கு அதிகமாக, ஆனால் இருபதாண்டு களுக்குக் குறைவாக | பன்னிரண்டு மடங்கு மாத ஊதியம் |
| 4. இருபதாண்டுகள் அல்லது அதற்கு அதிகமாக | அதிகபட்சம் 33 மடங்கு மாத ஊதியம் என்பதற்கு உட்பட்டு, முடிவுற்ற ஒவ்வோர் ஆறு மாதத் தகுதிப் பணிக்கும் அரைமாதச் சம்பளம். அவ்வாறு வழங்குகிற இறப்புப் பணிக்கொடை எந்த இனத்திலும் ரூ3.50 இலட்சத்திற்கு மேற்படக் கூடாது. |

### (iii) ஓய்வுகாலப் பணிக்கொடை

ஒருவர், ஐந்தாண்டும் அதற்கு மேலும் ஓய்வு ஊதியத் தகுதிபெறும் பணியை முடித்திருந்தால் அவர் ஓய்வு பெறும்போது அதிகபட்சம் 16½ மடங்கு மாத ஊதியம் என்ற அளவிற்கு உட்பட்டு, அவர் பணியாற்றி முடித்துள்ள ஒவ்வோர் ஆறுமாத தகுதிப் பணிக்கும் மாத ஊதியத்தில் நான்கில் ஒரு பங்குத் தொகை ஓய்வுகாலப் பணிக்கொடையாக வழங்கப்படுகிறது. ஓய்வுகாலப் பணிக்கொடையின் உச்சவரம்பை ரூபாய் 2.50 இலட்சத்திலிருந்து ரூபாய் 3.50 இலட்சமாக 1-1-1996 முதல் உயர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது. மேலும் 1-4-1998 அன்று அல்லது அதற்குப்பிறகு ஓய்வு பெறும் அரசு ஊழியர்களுக்கு பணிக்கொடையைக் கணக்கிடும்பொழுது அவர்கள் கடைசியாகப் பெற்ற அடிப்படைச் சம்பளம் மற்றும் அகவிலைப்படியைச் சேர்த்து கணக்கிடப்பட வேண்டும் என்றும் அரசு ஆணையிட்டுள்ளது.

## 6. குடும்ப ஓய்வூதியம்

அரசுப் பணியாளர் ஒருவர் பணியாற்றும்போதோ, ஓய்வு பெற்ற பின்னரோ இறந்து விட்டால் அவரது குடும்பம், குடும்ப ஓய்வூதியம் பெறத் தகுதியுடையதாகும். ஒருவர் பணியிலிருக்கும்போது இறந்தால் அவருடைய குடும்பம், குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்குத் தகுதி பெற அவருடைய பணிக்காலத்தில் ஓய்வூதியம் பெறத் தகுதியுடைய பதவியில் தொடர்ந்து ஓராண்டுகாலம் பணியாற்றி இருக்க வேண்டும். மேலும், அரசுப் பணியாளர் ஒருவர் தொடர்ந்து ஓராண்டு காலம் பணியாற்றுவதற்கு முன்பே பணியிலிருக்கும்போது இறந்து விடுவாரேயானால், அவருடைய குடும்பத்திற்கும் குடும்ப ஓய்வூதியம் அனுமதிக்கப்படுகிறது. ஆனால், அந்தப் பணி அல்லது பதவியில் நியமனம் செய்யப்படுவதற்கு முன் அவரை மருத்துவ அதிகாரி மருத்துவப் பரிசோதனை செய்து அரசுப் பணிக்கு அவர் தகுதியானவர் என்று அறிவித்திருக்க வேண்டும். ஓய்வு பெற்ற பின்னர் இறந்துவிட்டால் அவருடைய குடும்பம், குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்குத் தகுதிபெற, அவர் இறக்கும்போது ஓய்வூதியம் பெறுபவராக இருந்திருக்க வேண்டும். இருப்பினும் 10 ஆண்டிற்குக் குறைவாகப் பணியாற்றியிருந்து ஓய்வூதியம் பெறத் தகுதியற்றவர்களாக இருப்பவர்களைப் பொறுத்தவரை, அவர்கள் ஓய்வு பெற்ற பின்னர் இறந்து விட்டால், அவர்கள் குடும்பங்களுக்கு ஒரே வீதத்தில் அதாவது அவ்வப்போது அனுமதிக்கப்படும் குறைந்தபட்ச குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.



குறைந்தபட்ச குடும்ப ஓய்வூதியத்தை மாதமொன்றுக்கு ரூபாய் 375-லிருந்து ரூபாய் 1275-ஆக 1-1-1996 முதல் உயர்த்தி, அரசு ஆணையிட்டுள்ளது. உயர்ந்தபட்ச குடும்ப ஓய்வூதியம் உயர்ந்தபட்ச சம்பள விகிதத்தின் உயரளவில் 30 விழுக்காடாக இருக்கும்.

குடும்ப ஓய்வூதியம் விதவைக்கு/மனைவியை இழந்த கணவனுக்கு, அவர்கள் மறுமணம் செய்து கொள்ளும் வரை அல்லது இறக்கும்வரை இதில் எது முந்தியதோ அதுவரை வழங்கப்படுகிறது. அவருடைய இறப்பிற்குப் பிறகு இந்தக் குடும்ப ஓய்வூதியம் அவர்களுடைய குழந்தைகளுக்கு 25 வயது வரை அளிக்கப்படுகிறது. ஆனால் அத்தகைய மகன் அல்லது திருமணமாகாத மகள் 25 வயதை அடைந்த பிறகும்கூட பொருள் ஈட்ட அல்லது வாழ்க்கை நடத்த இயலாத அளவுக்கு மன நலக்குறைவு அல்லது மனநலமின்மையுடையவராக இருந்தாலோ, உடல் ஊனமுற்றவராக அல்லது ஏலாமையுற்றவராக இருந்தாலோ அவருக்கு வாழ்நாள் முழுவதும் குடும்ப ஓய்வூதியம் அளிக்கப்படும்.

## 7. கருணைத் தொகை வழங்குதல்

1-1-1986-க்கு முன் பணியிலிருந்து ஓய்வு பெற்று/ பணியிலிருக்கும் போது இறந்துவிட்ட, உதவித் தொகை பெறும் வருங்கால வைப்பு நிதிக்குத் தொகை செலுத்திய/ ஓய்வூதியம் இல்லாத பணியாளரமைப்பைச் சேர்ந்த மாநில அரசுப் பணியாளர்கள் மற்றும் முன்னாள் மாவட்ட கழகப் பணியாளர்களின் குடும்பங்களுக்கு (இவர்கள் குடும்ப ஓய்வூதியம் பெறத் தகுதியுடைவர்கள் அல்லர்) வழங்கப்படும் கருணைத் தொகையை மாதம் ரூபாய் 150-லிருந்து ரூபாய் 605 எனவும் அகவிலைப்படி ரூபாய் 31 எனவும் 1-11-1997 முதல் உயர்த்தி அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இவர்கள் 1-1-1998 அன்றும் மற்றும் அதன்பிறகும் வழங்கப்படும் அகவிலைப்படி உயர்வையும் பெறத் தகுதியுடைவர்கள்.

## 8. ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை மொத்தத் தொகையாக அளித்தல்

ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை ஒட்டுமொத்தமாகப் பெற ஓய்வூதியம் பெறுபவர்கள் தகுதியுடையவர் ஆவர். ஓய்வூதியம் வழங்குவதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து ஓராண்டுக்குள் விண்ணப்பிக்கப்படுமாயின், மருத்துவப் பரிசோதனை இல்லாமல் ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை மொத்தமாகப் பெற

[2002 மே 8

மாநிலக் கணக்குத் துறைத் தலைவரால் அனுமதி வழங்கப்படுகிறது. இச்சலுகை, விருப்பத்தின்பேரில் பணியிலிருந்து ஓய்வு பெறுபவர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. ஓய்வு பெற்ற நாளும், ஓய்வூதியத்தின் ஒரு பகுதியை மொத்தமாக்கிப் பெற்றுக்கொண்ட நாளும் ஒரே நாளாக இருக்குமாயின் அவ்வாறு ஓய்வு பெற்றவர் அவர் ஓய்வு பெற்ற நாளிலிருந்து 15 ஆண்டுகளுக்குப் பிறகும் அல்லது ஓய்வு பெற்ற பிறகு இரண்டாவது மாதத்திலோ அல்லது அதன் பின்னரோ ஓய்வூதியத்தில் ஒரு முழுப்பகுதியை மொத்தமாக்கிப் பெற்றிருந்தால் அவ்வாறு ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்தமாக்கிப் பெற்ற நாளிலிருந்து 15 ஆண்டுகளுக்குப் பிறகும் ஓய்வூதியத்தில் குறைக்கப்பட்ட பகுதியை மீண்டும் சேர்த்தளித்து முழுமையாக ஓய்வூதியம் வழங்கிட அரசு அனுமதியளித்துள்ளது. 1-4-1998 அன்று அல்லது அதற்குப் பிறகு ஓய்வுபெறும் அரசு ஊழியர்கள் ஓய்வூதியத்தில் மூன்றில் ஒரு பகுதி என்பதற்குப் பதிலாக 40 விழுக்காடுவரை மொத்தமாக்கிப் பெறுவதற்கு அனுமதி அளித்து அரசு ஆணையிட்டுள்ளது.

**9. ஏனைய ஓய்வு கால நன்மைகள்**

(i) ஓய்வு பெறும்போது கணக்கிலுள்ள ஈட்டிய விடுப்பிற்குப் பதிலாக, அதிகபட்சமாக 240 நாட்கள் ஈட்டிய விடுப்பை ஒப்படைப்பு செய்து விடுப்புக் காலச் சம்பளம் அனுமதிக்கப்படுகிறது.

(ii) அரைச்சம்பளத்துடன் கூடிய விடுப்பில் (Half pay Leave on Private Affairs) 90 நாட்களுக்கு மிகைப்படாமல், 50 விழுக்காடு விடுப்பினை ஒப்படைப்பு செய்து விடுப்புக் காலச் சம்பளம் பெறவும் அனுமதிக்கப்படுகிறது.

(iii) ஈட்டிய விடுப்பின் முழு அளவிற்கும் அரைச் சம்பள விடுப்புக்கும் முழு விடுப்புக் காலச் சம்பளம் வழங்கப்படுகிறது.

(iv) ஓய்வு பெறும் பணியாளருக்கு ஓய்வு பெற்ற பின்னர் தங்களுடைய சொந்த ஊருக்கு அல்லது தான் சென்று வசிக்க விழையும் ஊருக்குச் செல்வதற்கான பணிமாற்ற பயணப்படி வழங்கப்படுகிறது.

**10. ஓய்வூதியர்களுக்கு இதர பயன்கள்**

**(அ) அகவிலைப்படி**

(i) மத்திய அரசு பின்பற்றும் நடைமுறைக்கேற்ப ஆண்டிற்கு இருமுறை அதாவது ஜனவரி 1, ஜூலை 1 ஆகிய நாட்களிலிருந்து



2002 மே 8]

அகவிலைப்படி வழங்கப்படுகிறது. பணிபுரியும் பணியாளர்கள் பெறுவது போலவே, ஓய்வூதியம் பெறுபவர்களும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களும் அகவிலைப்படி தவணைத் தொகை பெறுகிறார்கள்.

(ii) மாநில அரசின் ஓய்வூதியம் பெறும் இராணுவ ஓய்வூதியதாரர்கள், மத்திய அரசின் ஓய்வூதியத் தொகை மீதான அகவிலைப்படியுடன் மாநில அரசின் அகவிலைப்படியையும் சேர்த்துப்பெற அனுமதிக்கப்படுகின்றனர்.

**(ஆ) மருத்துவப்படி**

ஓய்வூதியம் பெறுவோருக்கு/குடும்ப ஓய்வூதியம் பெறுவோருக்கு திங்களொன்றுக்கு ரூ.50 மருத்துவப்படி வழங்கப்படுகிறது.

**11. தற்காலிக ஓய்வூதியம் பெறுபவர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களும் அகவிலைப்படி மற்றும் மருத்துவப்படி பெற அனுமதிக்கப்படுகின்றனர்.**

**12. ஓய்வூதியம் பெறுவோர் நல நிதி**

தமிழ்நாடு அரசு ஓய்வூதியம் பெறுவோர் நல நிதி என்று ஒரு நிதியை ஏற்படுத்தி அதன் மூலம், சிறப்பு மருத்துவச் சிகிச்சை / அறுவைச் சிகிச்சை மேற்கொள்வதற்காக ஓய்வூதியம் பெறுவோருக்கு நிதியுதவி அளிக்கும்பொருட்டு, 1-7-1995 முதல் தமிழ்நாடு அரசு ஓய்வூதியம் பெறுவோர் நல நிதித் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

**13. ஓய்வூதியம் பெறுவோர் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டம்**

தமிழ்நாடு அரசு ஓய்வூதியம் பெறுவோர் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டத்தை 1-1-1997 முதல் தொடங்கி செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்படி, ஓய்வூதியம் பெறுவோர் இறக்கும் காலம் வரை அவர் தம் ஓய்வூதியத்திலிருந்து மாதந்தோறும் ஒரே சீராக ரூ.70 வீதம் தமிழ்நாடு அரசு ஓய்வூதியம் பெறுவோர் குடும்பப் பாதுகாப்பு நிதிக்குப் பிடித்தம் செய்யப்படுகிறது. இந்த நிதி 1-1-1998-லிருந்து செயல்படுத்தப்படுகிறது. இந்த நிதிக்கு ஓர் ஆண்டு தொகை செலுத்திய பிறகு இறக்க நேரிடும் ஓய்வூதியதாரரின் குடும்பத்திற்கு ரூ.25,000 வழங்கப்படும்.

**14. உள்ளாட்சி மன்றப் பணியாளர்கள் உட்பட அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களின் பணியாளர்களுக்கு ஓய்வூதியம்**

அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களின் பணியாளர்களுக்கும், உள்ளாட்சி மன்றப் பணியாளர்களுக்கும் மாநில அரசுப் பணியாளர்களுக்குக் கிடைப்பது போன்ற ஓய்வு காலப் பயன்கள் அனுமதிக்கப்படுகின்றன.

**15. ஓய்வூதியம் பெறுவோரின் குறை தீர்ப்புப் பிரிவு**

ஓய்வூதியம் பெறுவோரின் குறை தீர்ப்புப் பிரிவு ஒன்று நிதித் துறையில் செயல்பட்டு வருகிறது.

**16. ஓய்வூதிய இயக்ககம்**

ஓய்வூதியம் பெறுவோரின் நலனைக் கவனிக்க, ஓய்வூதிய இயக்ககம் என்னும் துறை 1—9—1994 முதல் செயல்பட்டு வருகிறது. இவ்வரசு தமிழ்நாடு அரசு ஓய்வூதியர்களுக்குரிய பல்வேறு பயன்கள் குறித்த தகவல் அடங்கிய வழிகாட்டி இணைய தளத்தினை 19—7—2001 அன்று துவக்கி வைத்துள்ளது. இந்த இணைய தளத்தை www.tn.gov.in/dop என்ற குறியீட்டின் மூலம் பார்வையிடலாம்.

**விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும் முன்னாள் இந்திய தேசிய இராணுவத்தில் பணியாற்றியவர்களுக்கும் உரிய ஓய்வூதியங்களும் ஏனைய சலுகைகளும்:**

**17.** நமது நாடு விடுதலை பெறுவதற்காக, விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்டு எண்ணற்ற இன்னல்களை அனுபவித்த தியாகிகளுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் உதவுவதில் தமிழ்நாடு அரசு மிகுந்த கருணையும், அக்கறையும் காட்டி வருகிறது. அவர்களின் நலனுக்காக, விடுதலைப் போராட்ட வீரர்கள் ஓய்வூதியம் வழங்குதல், மருத்துவ வசதி, இலவசப் பேருந்து வசதி அளித்தல், வாரிசுகளுக்கு கல்வி நிலையங்களில் சிறப்பு இட ஒதுக்கீடு, வீடுகள் ஒதுக்கீடு மற்றும் அரசு வேலைவாய்ப்புகளில் முன்னுரிமை அளித்தல் போன்ற பல திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகின்றது.

**18.** பொதுத் துறையின் 28-9-1966 நாளிட்ட அரசு ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள வரைமுறைப்படி தமிழ்நாடு அரசு விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியத் திட்டம் 01-10-1966 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்படி தேசிய விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டதற்காக மூன்று மாத காலத்திற்குக் குறையாமல் சிறையில்



அடைக்கப்பட்டவர்களும், காவல் கைதியாக இருந்தவர்களும், தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டபோது மரணமடைந்தவர்களும், துப்பாக்கிச் சூட்டிலும், காவலர் தடியடியிலும், கை, கால் இழந்து நிரந்தரமாக இயலாமை உற்றவர்களும் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்களாவர். மேலும், இந்திய தேசிய இராணுவத்தில் பணியாற்றியவர்களும், 1946 ஆம் ஆண்டு கடற்படை கலகத்தில் பங்கு கொண்டவர்களும், மதுரை சதித்திட்ட வழக்கில் சிறைத் தண்டனை பெற்றவர்களும் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்கள் என பின்னால் அறிவிக்கப்பட்டது. மேலும், சுதந்திரப் போராட்டத்தின்போது கைது வாரண்ட் பிறப்பிக்கப்பட்டு, தலைமறைவாக இருந்து சுதந்திரப் போராட்டத்தில் பங்கு கொண்டவர்களும், சொத்து பறிமுதல் செய்யப்பட்டவர்களும், அரசுப் பணியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டவர்களும், அதற்கு ஆதாரமாக நீதிமன்ற, அரசு ஆவண ஆதாரங்களைச் சமர்ப்பித்தால் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்கள் எனவும் அறிவிக்கப்பட்டது. ஓய்வூதியம் பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளில் ஒன்றான மூன்று மாத சிறைவாசம் என்பது, 01-04-1980 முதல் மூன்று வார காலம் எனக் குறைக்கப்பட்டது. இந்த ஓய்வூதியம் பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த வருமான உச்ச வரம்பு 11-03-1983 முதல் நீக்கப்பட்டது.

**19.** விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெற விரும்புபவர்கள் தாங்கள் சிறைத் துன்பம் அடைந்ததற்கு ஆதாரமாக நீதிமன்ற ஆணையின் அல்லது சிறைத் துறை ஆவணத்தின் உரிய பகுதியின் நகல் ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டும். இவை ஏதும் இல்லாத நிலையில், 1980 ஆம் ஆண்டில் அல்லது அதற்கு முந்தி செயல்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் வழங்கும் சக கைதி சான்றிதழ்கள் சிறை தண்டனை பெற்றதற்கான ஆதாரமாக 1-4-1980 முதல் ஏற்றுக்கொள்ளப்பட்டன. ஆனால் இந்த முறையில் சில குறைபாடுகள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதால், இவ்வாறு சட்டமன்ற உறுப்பினர் சக கைதி சான்று வழங்கும் முறை 1988 ஆம் ஆண்டில் திருத்தியமைக்கப்பட்டது. பொதுத் துறையின் 16-11-1988 நாளிட்ட அரசு ஆணையின்படி மாநிலம் முழுவதற்கும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட 15 சான்றாளர்களுள் எவரேனும் இருவரிடமிருந்து சக கைதி சான்று பெற்று விண்ணப்பிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. பின்பு, இந்த முறையிலும் சிரமங்கள் உள்ளன என அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதால், 7-2-1996 ஆம் நாளிட்ட

பொதுத் துறையின் அரசு ஆணையின்படி மாவட்ட ஆட்சியரைத் தலைவராகவும், மாவட்ட வருவாய் அதிகாரியை துணைத் தலைவராகவும், மூன்று பிரபல தியாகிகளை உறுப்பினர்களாகவும், இரண்டு பிரபல தியாகிகளை சான்றளிப்பவராகவும் கொண்டு மாவட்ட அளவிலான சீராய்வுக் குழு ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்கப்பட்டது. இக்குழுவின் உறுப்பினர்களாகவும், சான்றளிப்பவர்களாகவும் உள்ள தியாகிகள், மூல அரசு ஆவணங்களின் அடிப்படையில் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெற்றவராக இருத்தல் வேண்டும். விடுதலைப் போராட்ட வீரர் சிறைத் தண்டனை அடைந்த காலத்தில் 18 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும். வரையறுக்கப்பட்ட படிவத்தில் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியருக்கு ஓய்வூதியம் கோரி விண்ணப்பம் அனுப்பப்படவேண்டும். அரசால் வகுக்கப்பட்ட நெறிமுறைகளின்படி மாவட்ட சீராய்வுக் குழுவினால் இந்த விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு அரசுக்குப் பரிந்துரை செய்யப்படும்.

**20.** விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் அரசால் அவ்வப்போது உயர்த்தப்பட்டு வந்துள்ளது. இதன் விவரம் இணைப்பு ஒன்றில் கொடுக்கப்பட்டுள்ளது. இதனைத் தவிர, மத்திய அரசு ஓய்வூதியம் பெறுவோர்க்கும் மாநில அரசு ஓய்வூதியம் ரூ.500/- மாதந்தோறும் வழங்கப்படுகின்றது.

**21.** மாநில அரசின் ஓய்வூதியம் பெற்று வருகின்ற விடுதலைப் போராட்ட வீரர்கள் இறந்தால், இந்த ஓய்வூதியத் தொகையானது அவரது மனைவிக்கு / கணவருக்கு / உரிய வயதடையாத குழந்தைகளுக்குத் தொடர்ந்து வழங்கப்படுகிறது. விடுதலைப் போராட்ட வீரர்களின் மகனோ அல்லது மகளோ மனவளர்ச்சி குன்றியவராகவோ அல்லது நிரந்தர உடல் ஊனமுற்றவராகவோ இருக்க நேர்ந்தால், அவர்களது வாழ்நாள் முழுமைக்கும் தொடர்ந்து ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இந்த ஓய்வூதியத் தொகை அவ்வப்போது உயர்த்தப்பட்டு வந்துள்ளது. இதன் விவரம் இணைப்பு இரண்டில் கொடுக்கப்பட்டுள்ளது.

**22.** நாட்டின் விடுதலைப் போராட்ட இயக்கத்தில் பங்கு கொண்டு குறிப்பிடத்தக்க வகையில் பணியாற்றிய மேலோரின் பணியைப் பாராட்டி, அவர்களுக்கு அல்லது அவர்களின் வாரிசுகளுக்குச் சிறப்பு ஒட்டுமொத்த மானியமும், ஓய்வூதியமும், அவ்வப்போது அரசால் வழங்கப்படுகின்றன. சிவகங்கை மருதுபாண்டியர் சகோதரர்களின் வாரிசுதாரர்களுக்கும், வீரபாண்டிய கட்டபொம்மனின்





வாரிசுதாரர்களுக்கும் மாதம் ஒன்றிற்கு ரூ.500/- ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. அந்த வகையில், சிவகங்கை மருதுபாண்டியர் சகோதரர்களின் வாரிசுதாரர்கள் 154 பேரும், வீரபாண்டிய கட்டபொம்மனின் நேரடியான மற்றும் முதுநிலை வாரிசுதாரர்கள் 7 பேரும் தற்போது ஓய்வூதியம் பெற்று வருகின்றனர்.

**23.** விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும் அவர்களது வாரிசுகளுக்கும் வழங்கப்படும் ஏனைய சலுகைகள் பற்றிய விவரம் பின்வருமாறு:

**அ) மருத்துவ வசதிகள்**

மத்திய அரசிடமிருந்தோ அல்லது மாநில அரசிடமிருந்தோ அல்லது இரண்டு அரசுகளிடமிருந்தோ ஓய்வூதியம் பெற்று வருகின்ற அனைத்து விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும்/விதவைகளுக்கும்/ உரிய வயதடையாத குழந்தைகளுக்கும் மாதம் ஒன்றிற்கு ரூ.15/- வீதம் மருத்துவப்படி வழங்கப்படுகிறது. மேற்கூறிய விடுதலைப் போராட்ட வீரர்கள் அல்லது அவரது வாரிசுதாரர்கள் அரசு மருத்துவமனைகளில் 'அ' வகுப்பு வார்டு வசதிகளுடன் இலவச மருத்துவச் சிகிச்சை வழங்கப்படுகிறது.

**ஆ) கல்விச் சலுகைகள்**

பள்ளிகள், கல்லூரிகள், தொழில் மற்றும் தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றில் பயின்று வருகின்ற விடுதலைப் போராட்ட வீரர்களின் குழந்தைகளுக்கு / பேரன் பேத்திகளுக்கு கல்விக் கட்டணச் சலுகையும் படிப்பு உதவித் தொகைகளும் வழங்கப்படுகின்றன.

மேலும், விடுதலைப் போராட்ட வீரர்களின் குழந்தைகளுக்கு / பேரன் பேத்திகளுக்கு தொழில் / தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களில் கீழ்க் குறிப்பிட்டப்படி இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:-

1. பொறியியல் கல்லூரிகளில் 10 இடங்கள்

2. பின்வருமாறு முன்னுரிமை அடிப்படையில் மருத்துவக் கல்லூரிகளில் மூன்று இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

அ) விடுதலைப் போராட்ட வீரர்களின் குழந்தைகள்

ஆ) விடுதலைப் போராட்ட வீரர்களின் பேரன் / பேத்திகள்

3. சித்த மருத்துவ இளங்கலைப் பட்டப்படிப்பில் ஓரிடம், ஓமியோபதி மருத்துவ இளங்கலைப் பட்டப்படிப்பில் ஓரிடம்.

4. பல்தொழில் நுட்பப் பயிலகத்திலும் (பாலிடெக்னிக்) சிறப்பு கல்வி நிறுவனங்களில் ஓரிடம்.

5. தமிழ்நாட்டிலுள்ள அனைத்து சட்டக் கல்லூரிகளிலும் (முறைப்படி படிப்பு) மற்றும் டாக்டர் அம்பேத்கர் சென்னை அரசு சட்டக் கல்லூரியிலும் (மூன்றாண்டு கால மாலைநேரப் படிப்பு) 1 சதவிகித இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

6. மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனங்களில் மற்றும் அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் விடுதலைப் போராட்ட வீரர்களின் மகன்/மகள்/பேரன்/பேத்தி ஆகியோருக்கு 1 இட ஒதுக்கீடு செயயப்பட்டுள்ளது.

**இ) வீட்டு வசதி**

தமிழ் நாடு மாநில வீட்டு வசதி வாரியம் ஒதுக்கீடு செய்யும் வீடுகளில்/மனைகளில்/அடுக்கு மாடி வீடுகளில், ஆதிதிராவிடர்/பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்ட 18 சதவிகிதத்திலிருந்தும், சலவையாளர்/நாவிதர்களுக்கு ஒதுக்கப்பட்ட 5 சதவிகிதத்திலிருந்தும், மற்றும் பொதுமக்களுக்கு ஒதுக்கப்பட்ட 37 சதவிகிதத்திலிருந்தும் தலா ஒரு சதவிகிதம் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

**ஈ) போக்குவரத்து வசதி**

மத்திய மற்றும் மாநில அரசு ஓய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்கள், விடுதலைப் போராட்ட வீரர்களின் விதவைகளுக்கும், மற்றும் அவருடைய வாரிசுகளுக்கும், அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய சலுகை வழங்கப்பட்டுள்ளது.

**உ) ஈமச்சடங்குச் செலவு**

விடுதலைப் போராட்ட வீரர் இறந்து போக நேரிடும்போது, அவர்தம் ஈமச் சடங்குச் செலவுக்காக விடுதலைப் போராட்ட வீரரின் மனைவிக்கு அல்லது அவருடைய வாரிசுதாரருக்கு உதவித் தொகை ரூ. 2000/- உடனடியாக வழங்கப்பட்டு வருகிறது. மாநில அரசின்/மத்திய





அரசின் ஓய்வூதியம் அல்லது இவ்விரண்டு ஓய்வூதியங்களையும் பெறுகின்ற விடுதலைப் போராட்ட வீரர்கள் அனைவருக்கும் இது பொருந்தத் தக்கதாகும். இறந்துபோன விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில், வட்டாட்சியருக்குக் குறையாத பதவியிலுள்ள வருவாய்த் துறை அலுவலர் ஒருவர், மறைந்தவரின் உடல் மீது அரசு சார்பில் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தப்படுகிறது.

**ஊ) வேலைவாய்ப்பில் முன்னுரிமை**

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின், 4-5-1999 நாளிட்ட அரசாணையில் வேலைவாய்ப்பு அலுவலகங்களிலிருந்து அரசுத் துறைகளுக்கும், அரசு சார்ந்த நிறுவனங்களுக்கும் வேலைவாய்ப்புக்குத் தகுதியான பெயர்ப் பட்டியல் அனுப்பப்படும்பொழுது விடுதலைப் போராட்டத் தியாகிகள்/மொழிக்காவலர்கள் ஆகியோரின் சட்டப்படியான வாரிசுகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமென ஆணையிடப்பட்டுள்ளது.

**24. மத்திய அரசின் ஓய்வூதியத் திட்டம்**

மத்திய அரசு செயல்படுத்தும் இத்திட்டம் 15-08-1972 முதல் செயலில் உள்ளது. இதன்படி வழங்கப்படும் சலுகைகள் பின்வருமாறு:

அ) விடுதலைப் போராட்ட இயக்கத்தில் பங்கு கொண்டு குறைந்தபட்சம் ஆறு மாதங்கள் சிறைத்துன்பம் அனுபவித்தவர்கள் மைய அரசு சுதந்திரப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறுவதற்குத் தகுதியுடையவராகிறார்கள். அவர்கள் தங்களது சிறைத்துன்பத்திற்கு ஆதாரமாக சிறைச்சான்று சமர்ப்பிக்க வேண்டும். மேலே குறிப்பிட்டுள்ள சிறைச்சான்று இல்லாத பட்சத்தில், சம்பந்தப்பட்ட அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட "ஆவணங்கள் இல்லை" என்பதற்குரிய சான்றும், தான் சிறையிலிருந்த அதே காலத்தில் தன்னுடன் குறைந்தபட்சம் ஓராண்டு காலம் சிறைத்துன்பம் அனுபவித்தவரும் மைய அரசு ஓய்வூதியம் பெறுபவருமாகிய இருவரிடமிருந்து நிர்ணயிக்கப்பட்டுள்ள சக கைதி சான்றிதழ் படிவத்தில் பெறப்பட்ட இரு சக கைதி சான்றிதழ்கள் சமர்ப்பித்தல் வேண்டும் (அல்லது) தற்போதுள்ள அல்லது முன்னாள் சட்டமன்ற/நாடாளுமன்ற உறுப்பினர் எவரேனும் ஒருவரிடமிருந்து சான்றாளரின் சிறைத்துன்ப காலத்தையும், மனுதாரரின் சிறைத்துன்ப காலத்தையும் தெளிவாகக் குறிப்பிட்டு சக கைதி சான்றிதழ் குறிப்பிட்ட படிவத்தில் பெற வேண்டும்.

[2002 மே 8

(ஆ) ஆதி திராவிடர்/பழங்குடியினர் மற்றும் பெண் விடுதலைப் போராட்ட வீரர் ஆகியோரைப் பொறுத்தமட்டில் ஓய்வூதியம் அனுமதிக்கப்படுவதற்குச் சிறைத் தண்டனை அனுபவித்த காலம் ஆறு மாதத்திலிருந்து மூன்று மாதங்களாகக் குறைக்கப்பட்டது.

(இ) ஓய்வூதியம் பெறுவதற்கான ஆண்டு வருமான உச்ச வரம்பு ரூ.5,000 என்பது 01-08-1980 முதல் நீக்கப்பட்டது.

(ஈ) ஆறு மாதம் அல்லது அதற்கும் மேலாக தலைமறைவாக இருந்தவர்கள், ஆனால் அரசு ஆவணங்கள் கிடைக்கப் பெறாதவர்கள், இரண்டாண்டுகள் அதற்கும் மேலாக சிறைத்தண்டனை அனுபவித்துள்ள பிரபலமான விடுதலைப் போராட்ட வீரர் எவரேனும் ஒருவரிடமிருந்து குறிப்பிட்ட படிவத்தில் சக கைதி சான்றிதழ் பெற்று தக்க ஆதாரமாக சமர்ப்பிக்கலாம். மேலும், மேற்படி அரசு ஆவணங்கள் கிடைக்கவில்லை என்பதற்கான சான்றிதழ் சம்பந்தப்பட்ட அலுவலகத்திலிருந்து பெற்று சமர்ப்பிக்க வேண்டும். சான்றிதழ் அளிப்பவர் மனுதாரரின் மாவட்டத்தைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.

(உ) விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்டு 10 சவுக்கடிகள்/கசையடி அல்லது பிரம்படியை தண்டனையாகப்பெற்று ஒருவர் துன்பப்பட்டிருந்தால் அது ஆறு மாதத்திற்கு சிறைத்தண்டனை அனுபவித்ததற்கு ஈடாகக் கருதப்படும்.

(ஊ) மேலும், இந்தியாவிற்கு வெளியே நடந்த சுதந்திரப் போராட்டத்தில் பங்கு கொண்டு குறைந்தபட்சம் ஆறு மாதங்களோ அல்லது அதற்கு மேலோ சிறைத் துன்பம்/காவல் துன்பம் அனுபவித்த முன்னாள் இந்திய தேசிய இராணுவ வீரர்களும் மைய அரசு சுதந்திரப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறுவதற்கு தகுதியுடையவர்களாவர்.

(எ) விடுதலைப் போராட்ட வீரர்களுக்கான மத்திய ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதியம் அவ்வப்போது உயர்த்தப்பட்டு வந்துள்ளது. இதன் விவரம் இணைப்பு மூன்றில் கொடுக்கப்பட்டுள்ளது.

(ஏ) மத்திய விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறுபவர் இறக்க நேரிடும்போது, அவர் பெற்று வந்த மத்திய அரசு மாதாந்திர ஓய்வூதியத் தொகையான ரூபாய் 3000-த்துடன் மாநில அரசின் பங்கான ரூபாய் 500-ம் அவரது சட்டப்படியான வாரிசுதாரர்களுக்கு தொடர் ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது.



2002 மே 8]

(ஐ) மைய அரசு ஓய்வூதியதாரர்களுக்கு 01-08-2001 முதல் ஓய்வூதியத்துடன் 28 சதவிகிதம் அகவிலைப்படியாக வழங்கப்பட்டுவருகிறது.

**25. மாநில/மத்திய அரசுகளின் ஓய்வூதியங்களைப் பெறும் தமிழ் நாட்டிலுள்ள விடுதலைப் போராட்ட வீரர்கள் எண்ணிக்கை 31-03-2002 அன்றைய நிலவரப்படி வருமாறு:**

| | | |
|---|---|---|
| 1. | மாநில ஓய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்களின் எண்ணிக்கை (ரூ. 3,000+15 மருத்துவப்படி) | 1709 |
| 2. | மாநில தொடர் ஓய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்களின் வாரிசுதாரர்களின் எண்ணிக்கை (ரூ.1,500+15 மருத்துவப்படி) | 2349 |
| 3. | மைய அரசு ஓய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்களின் எண்ணிக்கை (ரூ. 3,000+15 மருத்துவப்படி) | 870 |
| 4. | மைய அரசின் தொடர் ஓய்வூதியம் பெறுவோரின் எண்ணிக்கை (ரூ.3,000+15 மருத்துவப்படி) | 1089 |
| 5. | வீரபாண்டிய கட்டபொம்மன் வழித்தோன்றல்கள் (ரூ.500 மாதம் ஒன்றுக்கு) | 7 |
| 6. | சிவகங்கை மருதுபாண்டியர் சகோதரர்களின் வழித்தோன்றல்கள் (ரூ.500 மாதம் ஒன்றுக்கு) | 154 |

**26.** இத்திட்டங்களுக்காக 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.15,54,49,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2002 மே 8

## இணைப்பு - 1

**மாநில அரசால் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதியத் தொகை விவரம்**

| வ.எண் | கால அளவு | ஓய்வூதியத் தொகை ரூபாய் |
|---|---|---|
| 1. | 01-10-1966 முதல் | 50/- |
| 2. | 15-08-1972 முதல் | 75/- |
| 3. | 01-04-1979 முதல் | 100/- |
| 4. | 25-01-1981 முதல் | 150/- |
| 5. | 10-06-1986 முதல் | 250/- |
| 6. | 01-08-1989 முதல் | 350/- |
| 7. | 01-01-1991 முதல் | 400/- |
| 8. | 01-08-1992 முதல் | 1,000/- |
| 9. | 01-09-1995 முதல் | 1,500/- |
| 10. | 15-08-1997 முதல் | 3,000/- |



2002 மே 8]

## இணைப்பு - 2

**மாநில அரசால் விடுதலைப் போராட்ட வீரர்களின் குடும்பத்தினருக்கு வழங்கப்படும் மாதாந்திர குடும்ப ஓய்வூதியத் தொகை விவரம்**

| வ.எண் | கால அளவு | ஓய்வூதியத் தொகை ரூபாய் |
|---|---|---|
| 1. | 01-10-1966 முதல் | 50/- |
| 2. | 15-08-1972 முதல் | 75/- |
| 3. | 01-04-1979 முதல் | 100/- |
| 4. | 25-01-1981 முதல் | 150/- |
| 5. | 10-06-1986 முதல் | 250/- |
| 6. | 01-08-1989 முதல் | 350/- |
| 7. | 01-01-1991 முதல் | 400/- |
| 8. | 01-08-1992 முதல் | 500/- |
| 9. | 01-09-1995 முதல் | 750/- |
| 10. | 15-08-1997 முதல் | 1,500/- |

[2002 மே 8

## இணைப்பு - 3

### விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு மத்திய அரசால் வழங்கப்படும் மாதாந்திர ஒய்வூதியத் தொகை விவரம்

| வ.எண் | கால அளவு | ஓய்வூதியத் தொகை ரூபாய் |
|---|---|---|
| 1. | 15-08-1972 முதல் | 200 |
| 2. | 01-08-1980 முதல் | 300 |
| 3. | 01-06-1985 முதல் | 500 |
| 4. | 14-11-1988 முதல் | 750 |
| 5. | 12-08-1992 முதல் | 1,000 |
| 6. | 02-10-1994 முதல் | 1,500 |
| 7 | 15-08-1997 முதல் | 3,000 |



2002 மே 8]

## இணைப்பு V

(398 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

### மானியக் கோரிக்கை எண் 2

### ஆளுநர் மற்றும் அமைச்சரவைகொள்கை விளக்கக் குறிப்பு, 2002-2003

ஆளுநர் மற்றும் அமைச்சர்களின் அலுவலக நிர்வாகம், பராமரிப்பு தொடர்பான பணிகளை பொதுத் துறை கவனிக்கிறது. அமைச்சர்களின் நியமனம் மற்றும் அமைச்சர்களுக்கு துறைகள் ஒதுக்கீடு குறித்த பணிகளையும் இத்துறை கவனிக்கிறது. மேற்கண்ட பொருட்கள் தொடர்பான வரவு செலவு திட்டத் தலைப்புகளை கோரிக்கை எண் 2 உள்ளடக்கியுள்ளது. இக்கோரிக்கையின்கீழ் உள்ள மூன்று தலைப்புகள் பின்வருமாறு:-

1. 2012 - ஆளுநர்

2. 2013 - அமைச்சரவை

3. 2052 ஏசி அமைச்சர்களின் பணியாளர்கள்

மேற்கண்ட தலைப்புகள் ஒவ்வொன்றைப் பற்றிய சிறுகுறிப்பு கீழே தரப்பட்டுள்ளது:-

**ஆளுநர்**

2. ஆளுநர் அவர்களின் சம்பளம், ஆளுநர் இல்லப் பராமரிப்பு, ஆளுநரின் செயலக மற்றும் இல்லப் பணியாளர் தொகுதி நிர்வாகச் செலவுகள் ஆகியவற்றிற்காக 2002-2003 ஆண்டிற்கு ரூ.2,62,89,000 வழங்கப்பட்டுள்ளது. ஆளுநர் சம்பந்தப்பட்ட செலவுகள் "சாட்டிய வகைகள்" என வருவதால் அவை சட்டமன்றத்தில் வாக்கெடுப்பிற்கு உட்படுத்தப்படுவதில்லை. ஆளுநர் அவர்களின் சம்பளம், படிகள் மற்றும் சிறப்புரிமைகள் 1957-ம் ஆண்டு மாநில சீரமைப்பு (ஆளுநர் படிகள் மற்றும் சிறப்புரிமைகள்) ஆணையின்படி முறைப்படுத்தப்பட்டவையாகும். நாடாளுமன்றத்தில் இதுபற்றி சட்டம் கொண்டு வருவதன் மூலம்தான் இச்செலவினங்களை மாற்ற இயலும். மாநில ஆளுநருக்கு வழங்கப்படும் மதிப்பு, மரியாதையைக் கருத்தில் கொண்டும், அரசமைப்புச் சட்ட வழிமுறைகள்படியும், இத்தலைப்பின்கீழ் வரும் சம்பளம், படிகள் மற்றும் சிறப்புரிமைகள் பற்றி சட்டமன்றத்தில்

[2002 மே 8

விவாதத்திற்கு எடுத்துக் கொள்வதில்லை என்பதும் அரசிசமைப்பு சட்டப்படி ஆளுநருக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு மற்றும் அப்பதவிக்கு அளிக்கும் மதிப்பு ஆகியவற்றுக்கு ஏற்ப, பொதுவான கருத்துகளை மட்டுமே தெரிவிப்பது என்பதும் ஒரு மரபாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

**ஆளுநரின் செயலகம்**

3. ஆளுநர் மாளிகையின் ஓர் அங்கமாக ஆளுநரின் செயலகம் செயல்படுகிறது. இந்திய ஆட்சிப்பணி நிலையில் உள்ள செயலர் தலைமையிலும், மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் துணைச் செயலர் மற்றும் கூடுதல் பணியாளர்களுடன் இச்செயலகம் இயங்கி வருகின்றது.

4. ஆளுநர் அவர்கள், தமிழகத்திலுள்ள 15 பல்கலைக்கழகங்களுக்கு வேந்தராக உள்ளார். இப்பல்கலைக்கழகங்களுக்கு துணை வேந்தர்கள் நியமனம் மற்றும் பல்கலைக்கழகங்களின் ஏனைய அமைப்புகளுக்கு நியமனங்கள் குறித்த பணிகளையும் இச்செயலகம் கவனிக்கிறது. இந்திய செஞ்சிலுவைச் சங்கம், எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம், தூய ஜான் நோயாளர் ஊர்திக் கழகம் போன்ற பல அமைப்புகளுக்கு ஆளுநர் அவர்கள் மதிப்புறு தலைவர் பதவிகளையும் வகிக்கின்றார். ஆளுநரின் செயலகம், ஆளுநருக்கும் அரசிற்கும் இடையேயான தொடர்பினைச் செயல்படுத்தும் அமைப்பாக விளங்குகிறது.

**அமைச்சரவை**

5. அமைச்சரவையில், தற்பொழுது முதலமைச்சர் உட்பட மொத்தம் 27 அமைச்சர்கள் உள்ளனர். முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களின் அலுவலகங்களுக்குத் தேவையான அறைகள், அறைகலன்கள், தொலைபேசி வசதி, மோட்டார் வாகனங்கள், எழுதுபொருட்கள் மற்றும் அலுவலகத்திற்குத் தேவையான தளவாடங்களை வழங்குவது குறித்த பணிகளை பொதுத் துறை மேற்கொள்கிறது. 2002-2003 ஆம் ஆண்டிற்கு இத்தலைப்பின் கீழ் ரூ.3,66,29,000 வழங்கப்பட்டுள்ளது. இதில் ரூ.61.90 இலட்சம் அமைச்சர்களின் சம்பளத்திற்காகவும், ரூ. 74.50 இலட்சம் பயணச் செலவுகளுக்காகவும், ரூ.229.89 இலட்சம் தொலைபேசிப் பட்டியல்கள், அறைகலன்கள், மோட்டார் வாகனங்கள் வாங்குதல் மற்றும் பராமரித்தல் மற்றும் இதர எதிர்பாராச் செலவுகளுக்காகவும் ஒதுக்கப்பட்ட தொகையும் அடங்கும்.



2002 மே 8]

6. முதலமைச்சர் செயலக மற்றும் அலுவலகப் பணியாளர்கள், அமைச்சர்களின் அலுவலகப் பணியாளர்கள் ஆகியோர்களின் சம்பளம் மற்றும் இதரப் படிகள் குறித்த செலவினங்கள் "2052 ஏசி அமைச்சர்களின் பணியாளர்கள்" என்ற தலைப்பின்கீழ் கொண்டு வரப்படுகின்றது. இத்தலைப்பின்கீழ் ரூ. 5,47,09,000 வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | கணக்குத் தலைப்பு | வரவு-செலவு 1999-2000 | வரவு-செலவு 2000-2001 | வரவு-செலவு 2001-2002 | வரவு-செலவு 2002-2003 |
|---|---|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1 | 2012—ஆளுநர் | 240 | 289 | 275 | 262 |
| 2 | 2013—அமைச்சரவை | 341 | 337 | 380 | 366 |
| 3. | 2052—ஏசி அமைச்சர்களின் பணியாளர்கள் | 379.53 | 465.51 | 537.14 | 547 |

226166
நூலகம்